
கனவு
கரையும்
நேரம்
பட்டுக்கோட்டை பிரபாகர்

கனவு கரையும் நேரம்

பட்டுக்கோட்டை பிரபாகர்

S71015

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவர அட்டவணை

நூல் தலைப்பு	:	கனவு கரையும் நேரம்
ஆசிரியர்	:	பட்டுக்கோட்டை பிரபாகர்
உரிமை	:	ஆசிரியருக்கு
மொழி	:	தமிழ்
முதற் பதிப்பு	:	ஜூன், 2004
நூலின் அளவு	:	Demy 1/8 திரவுன்
தாளின் தன்மை	:	11.6 kg. வெள்ளைத்தாள்
மொத்தப் பக்கங்கள்	:	248
அச்சு எழுத்து	:	10 புள்ளி
நூல் கட்டமைப்பு	:	சாதா அட்டை
வெளியிடுவோர்	:	அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. தொலைபேசி: 28132791
கணிப்பொறி அச்சு	:	வேலன் லேசர் சென்னை-18. ✆94441-01753
அச்சிட்டோர்	:	ஜீ.எம். கிராபிக்ஸ், சென்னை-14.

விலை: ரூ.60.00

39626
5710213

கனவு கரையும் நேரம்

உள்ளே...

கனவு கரையும் நேரம் 5

தயங்காதே 88

யாருக்கும் முகமில்லை 172

மாவட்ட மைய நூலகம்
39626
570213
சைதாப்பேட்டை, சென்னை

கனவு கரையும் நேரம்

1

பசித்த சிங்கமாக கர்ஜித்துக் கொண்டிருந்தன அலைகள். ஆயிரம் பொத்தல்களுடன் கூடிய சர்க்கஸ் கூடாரத் துணியாக கறுப்பு வானம். வாழ்க்கையின் பிரச்னைகளை ஒத்திப் போட்டுக் கொள்வதற்காக ஏராளமான குடும்பஸ்தர்கள் கடற்கரைக்கு வந்து சோளக் கதிரும், சுண்டலும், மிளகாய் பஜ்ஜியும் தின்று கொண்டிருந்தனர்.

வாழ்க்கையின் பிரச்சினைகளை ஆரம்பித்துக் கொள்வதற் காக ஏராளமான காதல் ஜோடிகள் வந்திருந்தார்கள். இருட்டுவதற்கு முன்பாக அவர்களுக்கு மத்தியில் இருந்த இடைவெளிகள் இப்போது நசுங்கிப் போயிருந்தன. பல ஜோடிகள் கருமமே கண்ணாக கருமம் செய்து கொண்டிருக்க, சில ஜோடிகள் டீஸண்ட்டாக கவர்ன்மெண்ட் ஆபீஸ் கிளார்க்குகள் போல பட்டும் படாமலும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க...

''தேவா'' என்றாள் பிரதீபா.

தேவா தன் இரண்டு கைகளையும் பின்புறமாக மணலில் ஊன்றி ஈஸிசேர் போல் சில்ஹவுட்டில் அமர்ந்திருக்க, அவன்

தலைமுடிகளை ஏர்போர்ட் கஸ்டம்ஸ் ஆபீசரைப் போல கலைத்துக் கொண்டிருந்தது காற்று.

இன்னும் ஒரு நூறு வருடத்திற்குக்கூட ஃபாஷன் போட்டியில் ஜொலித்துக் கொண்டே இருக்கப் போகிற ஜீன்ஸ் அணிந்து, பதினைந்து ரூபாய் பிளாட்பார பனியனை இன் செய்திருந்தான். இந்த மாதிரி உடைகளில் ஒரு பெருத்த சௌகரியம் என்னவென்றால்... பார்த்த மாத்திரத்தில் அவன் பணக்காரனா ஏழையா என்று சொல்லிவிட முடியாது. பொறுமையாகக் காத்திருந்து அவன் பிரிமியர் பத்மினியில் ஏறுகிறானா இல்லை பல்லவனில் தொங்குகிறானா என்று பார்க்க வேண்டும்.

நம் தேவா பல்லவ நண்பன்தான்.

ஆனால் அவன் ஒன்பது நாட்களாகத் துவைக்காத பாண்ட்டுகள். மடியில் படுத்துக் கொண்டு அவனது ட்ரிம் செய்யப்பட வேண்டிய தாடியைத் தடவிக் கொண்டிருக்கும் பிரதீபா மண்டே மாருதி, ட்யூஸ்டே டொயாட்டோ ரகம். அதென்னமோ இப்படி எக்ஸ்ட்ரீம் முரண்பாடுகளுக்கு நடுவில்தான் மன்மதன் பாணம் எய்துவிட்டு இனி அவர்கள் பாடு என்று டீ குடிக்கப் போய் விடுகிறான்.

தேவாவும், பிரதீபாவும் ரெஃப்ரிஜிரேட்டரை விட்டு வெளியில் எடுத்து வைத்த ஐஸ்க்ரீமைப் போல உருகி, உருகி காதலிக்கிறார்கள். ஏழு மாதங்களாக.

இன்னும் பேச என்னதான் மிச்சம் இருக்குமோ?

ஆனால் நிதமும் சந்தித்ததாக வேண்டும். பினாத்திக் கொண்டாக வேண்டும்.

''தேவா.''

''ம்?''

''ஐ லவ் யூ ஸோ மச்.''

''மீ டூ பிரதீபா.''

''உன்னை விட்டுப் பிரிஞ்சதுமே ஒவ்வொரு நிமிஷமும் நான் உன்னை மிஸ் பண்றேன் தேவா.''

''நான் கூட உன்னைப் பார்க்காத ஒவ்வொரு நிமிஷமும் உன்னை மிஸ்டர் பண்றேன் பிரதீபா.''

''ச்சீ!''

''நீ இப்படி ச்சீ சொல்றதுக்காகவே இந்த கடலை பேத்து உன் காலடியில வைக்கலாம் மாதிரி இருக்கு.''

''அபத்தமா உளறாதே!''

''இல்லை பிரதீபா, இப்ப நான் சொன்னது புதுக் கவிதை.''

''அப்படின்னா சரி.''

''பிரதீபா.''

''ம்?''

''பசிக்காமல், தூங்காம இப்படியே இருக்கலாம் போல இல்லை? யுகம் யுகமா?''

''பத்து மணிக்கு மேல போலீஸ்காரங்க வந்து எழுப்பி விட்டுடுவாங்க தேவா, இல்லைன்னாலும் காலையில சூரியன் வந்ததும் வேர்க்கும்.''

''நாட்டி!''

அவளின் ஒரு கை விரல்களைப் பொத்திக் கொண்டு ஒவ்வொன்றாக ஏதோ தொல் பொருள் போல ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தான் தேவா.

''ஒரு நாளைக்கு நீ தூங்கறப்ப உன் விரலை பிளேடு வச்சிக் கீறிப் பார்த்துடணும்னு இருக்கேன்.''

''அய்யோ! ஏன்?''

''உள்ளேர்ந்து ரத்தத்துக்கு பதிலா ரோஜா இதழ்களாதான் உதிரும்ங்கிறது என்னோட யூகம் அவ்வளவு மெத்துன்னு இருக்கு.''

''இதுவும் புதுக் கவிதையா?''

''இல்லை, சும்மா அபத்தமா உளறினேன்.''

''தேவா, இன்னும் எத்தனை நாளைக்கு?''

''எது?''

''இப்படி கடற்கரையிலேயும், பார்க்லயும், ஹோட்டலயும் மீட் பண்றது.''

''நாளையிலேர்ந்து சென்ட்ரல் ஸ்டேஷன்லயும், எக்மோர் ஸ்டேஷன்லயும் மீட் பண்ணிக்கலாமா? மத்தவங்களோட கம்ப்பேர் பண்ணிப் பார்த்து நீ எவ்வளவு அழகா இருக்கேன்னு சொல்ல வசதியா இருக்கும்.''

''விளையாடாதே தேவா.''

''சேச்சே இன்னும் ஆரம்பிக்கவே இல்லைம்மா.''

''சின்னச் சின்ன விளையாட்டுக்கள் போதுமா தேவா?''

''இதெல்லாம் டெஸ்ட் மேட்ச்சுக்கு முன்னாடி நெட் பிராக்டிஸ் மாதிரிதான். டெஸ்ட் மேட்ச் ஆட வேணாம்னு நானா சொல்றேன். சரின்னு சொல்லு நாளைக்கே ஒரு ரூம் புக் பண்ணிடறேன். சாமி பேர்ல இதுக்குள்ளே எத்தனை லாட்ஜ் இருக்கு தெரியுமா? என்ன? சுவரெல்லாம் மூட்டைப் பூச்சி நசுக்கி நசுக்கி ரத்தமா இருக்கும்.''

''ஏய்! எப்படி தெரியும் உனக்கு?''

''அமெரிக்கால சுதந்திர தேவி சிலை இருக்கு. உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும். போய்ப் பார்த்தமா என்ன? நாலெட்ஜ் பிரதீபா நாலெட்ஜ்!''

''பேசியே மடக்கிடறேப்பா.''

''எங்கே? இன்னும் நீ யெஸ் சொல்லலையே.''

''நெஜமா சொல்லு. நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. ஏய்! உன் நெஞ்சை!''

''என்ன சொல்லணும்?''

''உனக்கு அவசரமா?''

''பாதி யெஸ்! பாதி நோ!''

''காதலோட கிளைமாக்ஸா அது?''

''இல்லை பூச்சரத்தில நார்!''

''கல்யாணம் செய்துக்கலாம் தேவா.''

''இதில பாதி பிஸ்னெசே இல்லை, முழுக்க முழுக்க யெஸ்.''

''எப்படி பண்ணிக்கலாம்?''

''தாலி கட்டிதான்.''

''அது தெரியுது. ஊரைக் கூட்டியா, ரகசியமாவா?''

''அதை நீதான் சொல்லணும் பிரதீபா. என் சைடுல நான் யாரையும் பர்மிஷன் கேக்க வேண்டியதில்லை. இப்ப, இந்த செகண்ட் கட்டத் தயார். உன் கழுத்து தயாரா?''

''அப்பாவை வீணா பகைச்சுக்கிறதா தேவா?''

''வேணாம். அவர் பர்மிஷன் வாங்கி முறையாவே பண்ணிக்கலாம். உங்கப்பாவை நாளைக்கே நான் வந்து பார்க்கட்டுமா? 'மை டியர் ஃபாதர் இன் லா, நான் உங்க பொண்ணை முறைப்படி அம்மா ஆக்க விரும்பறேன். அதுக்காக முறைப்படி பீப்பீ, டும்டும் பண்ணிக்க விரும்புறேன். என்ன சொல்றீங்க'ன்னு கேக்கட்டுமா?''

''வேணாம் தேவா.''

''ஏன்?''

''அவர் உன்னை அவமானப் படுத்திடுவாரோன்னு நினைக்கிறேன்.''

''அப்ப நீயே கேளு, இவர் என்ன சொல்றார்னு தெரிஞ்சுக்க.''

''நிச்சயம் சம்மதிக்க மாட்டார். ஹிந்தி சினிமா அப்பா மாதிரி குதிப்பார். ''என் ஸ்டேட்டசுக்கு தான் மாப்பிள்ளை பார்ப்பேன். கல்யாணம் என் இஷ்டப்படிதான் நடக்கும்னு' டயலாக் பேசுவார்.''

''ஏன் நீயா எல்லாம் கற்பனை பண்றே, கேட்டுதான் பாரேன், 'உன் புருஷனை நீயே தேடிக்கிற உரிமை இருக்கும்மா, கேரி ஆன் பேபி'ன்னு விசாலமா ஒரு வேளை சொல்லிட்டார்ன்னா?''

''சந்தேகம்தான்.''

''பிரதீபா, நாமா யூகம் பண்ணிக்கிறதுக்கு கேட்டுடறது நல்லதில்லையா? பேசு. அவர் என்ன சொல்றார்ன்னு தெரிஞ்சுக் கலாம், அப்புறம் நாம் என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்.''

''அப்படிங்கறே?''

''யெஸ்'' என்று சிகரெட் எடுத்து உதட்டில் வைத்துக் கொள்ள, படுத்துக் கொண்டே அவள் அதைப் பற்ற வைக்க, ஒரு மைக்ரோ நெருப்புப் பொறி பறந்து அவள் மேல் விழ... அவன் அதை அவசரமாகத் தட்டி விட, தட்டி விட்ட பிறகும் கையை அவ்விடத்திலிருந்து விலக்காமல் வைத்திருக்க...

நெட் பிராக்டிஸ் துவங்கியது.

2

சன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சிஸ்.

செல்வி அனாமிகா தனது காரை நிறுத்திவிட்டு, கூலிங் கிளாஸைக் கழற்றி அதை சுழற்றிக் கொண்டே தனது

அலுவலகத்திற்கு படிகள் ஏறினாள். ஒரு நாள் இல்லை ஒரு நாள் அது அவள் கையிலிருந்து நழுவி கீழே விழுந்து உடையத்தான் போகிறது.

எல்.கே.ஜி. குழந்தையின் யூனிஃபார்ம் டைப்பில் முழங்கால் வரை அவள் அணிந்திருந்த ஸ்கர்ட் அவளுக்குக் கீழே பத்துப் படிகள் தள்ளி ஏறிக் கொண்டிருந்த இளைஞனின் இதயத்தை விட்டு விட்டுத் துடிக்க வைத்தது.

தன் அலுவலகத்திற்குள் அவள் வந்ததும் செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்த ஆல்பர்ட் அவசரமாக எழுந்து கொண்டு, ''குட் மார்னிங் மேடம்'' என்றான்.

அனாமிகா அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் தன் தனியறைக்குள் வந்து, ''வாட் நான்சென்ஸ்!'' என்றாள்.

''யெஸ் மேடம்'' என்று ஆஜரானான் ஆல்பர்ட்.

''ஏ.சி. போட்டு வைக்கலை. தேநி கிழிக்கலை. என்ன மேன் பண்றே நீ?''

''ஸாரி மேடம்.''

ஆல்பர்ட் உடனே ஏ.சி. போட்டு, தேநி கிழித்தான்.

அவனை மேலிருந்து கீழ் குறுக்கெழுத்துப் போட்டி நிரப்புபவள் போலப் பார்த்து, ''அது என்ன மேன் சட்டையில உட்கார்ந்திருக்கு பூச்சி மாதிரி!'' என்றாள்.

''இது பூச்சி இல்லை மேடம். ஊக்கு. பட்டன் போய்டுச்சி. அதான்...''

''வெக்கமா இல்லை உனக்கு?''

''அதனாலதான் மேடம் ஊக்கு மாட்டி அட்ஜஸ்ட் பண்ணி வெச்சேன்.''

''ஒரு பெரிய நிறுவனத்தில் ஒரு பெரிய லேடி டிடெக்டிவ் கிட்ட செகரெட்டரியா வேலை பார்க்கற நீ இந்த மாதிரி ஊக்கு மாட்டிக்கிட்டு திரிஞ்சா என்ன நினைப்பாங்க?''

''பட்டன் அறுந்திடுச்சி போலிருக்குன்னு நினைப்பாங்க.''

''ஸ்டாப் யுவர் கடி ஜோக்! அதுக்கு வேற ஒரு ஆசாமி இருக்கான். ஏன் ஷேவ் பண்ணலை? அதுக்கு பதில் சொல்லு.''

''தாடி வளர்க்கலாம்னு முடிவு பண்ணிருக்கேன். அதனால தான் ஷேவ் பண்ணலை மேடம்.''

''யாரைக் கேட்டு முடிவு செஞ்சே?''

''மேடம், நான் தாடியை என் மூஞ்சிலதான் வெச்சிக்கப் போறேன். அதுக்கு யாரைக் கேக்கணும்?''

''என்னைக் கேக்கணும். உனக்கு தாடி வச்சா நல்லா இருக்காது. புள்ளை பிடிக்கிறவன் மாதிரி தெரிவே. மேன். நம்ம ஆபீசுக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. இயற்கையாவே உன் முகத்தில ஒரு அசட்டுக் களை. அதை இன்னும் கோரமாக்கிக்கணுமா?''

''மேடம், நீங்க என்னை ரொம்பதான் இன்சல்ட் பண்றீங்க'' என்றவன் அனாமிகா ஒரு சிகரெட் எடுத்து தன் உதடுகளில் வைப்பதைப் பார்த்ததும், உடனே மேஜை மேல் தேடி லைட்டர் எடுத்து அதைப் பற்ற வைத்து விட்டான்.

அனாமிகா தன் கைப்பையில் இருந்து ஒரு ரூபாய் நாணயத்தை விட சற்றேப் பெரிதான ஒரு கண்ணாடியை எடுத்து அதில் தன் உதடுகளை மட்டும் பார்த்துக் கொண்டாள். லிப்ஸ்டிக் எடுத்து ஒரு முறை பூசிக் கொண்ட போது...

''மேடம், சொல்ல மறந்துட்டேன். உங்களைப் பார்க்க ஒரு ஆள் வந்தான். இவ்வளவு நேரம் உக்காந்து பல் குத்திக்கிட்டு காத்துக்கிட்டிருந்தான். கடை வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்னு போனான்'' என்று ஆல்பர்ட் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அறைக் கதவு தட்டப்பட்டது.

''நான் உள்ளே வரலாமா?'' என்று குரல் கேட்டது.

''அவனாதான் இருக்கணும்.''

''யெஸ், வாங்க'' என்ற அனாமிகா லிப்ஸ்டிக்கை கைப்பைக்குள் வைத்து விட்டு டெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்துக் கொண்டு அதில், ''ஆறரை லட்சத்துக்கும் ஏழுக்கும் என்ன பெரிசா வித்தியாசம்? சரி பரவாயில்லை. ஏழுக்கே முடிச்சிடுங்க. அப்புறம் பார்க்கலாம்'' என்று வைத்து விட்டு உள்ளே வந்தவனை உட்காரச் சொன்னாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று வந்தவனிடம் சொல்லிவிட்டு ஆல்பர்ட் பக்கம் திரும்பி, ''நீ என்ன செய்றே, இன்ஹரா கேஸ்ல ரிப்போர்ட்ஸ் டைப் பண்ணிட்டு, கமிஷனர் ஆபீஸ்லேர்ந்து ஸ்டேட்மெண்ட் கேட்டிருந்தமே அது என்ன ஆச்சின்னு கொஞ்சம் நேர்ல போய் பார்த்துட்டு வந்துடு'' என்றாள். இவன் பக்கம் திரும்பி, ''சார் என்ன சாப்பிடறீங்க?''

''தண்ணி இருந்தா போதும்'' என்றான் அடர்த்தியாக மீசை வைத்த அந்த இளைஞன். மடியில் கைப்பை ஒன்று வைத்திருந்தான்.

''நோ, ஆல்பர்ட். ஃப்ரிஜ்ஜில் என்ன கூல்ட்ரிங் இருக்குன்னு பாரு. சார் பேரென்ன?''

''அனந்தகிருஷ்ணன், ஒரு கேஸ் விஷயமா உங்களோட உதவி தேவைப்படுது.''

''முதல்ல சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்'' ஆல்பர்ட் கோல்ட் ஸ்பாட்டில் ஸ்ட்ரா போட்டு நீட்ட, அவன் வாங்கிக் குடித்துவிட்டு கர்ச்சீப் எடுத்து வாய் துடைத்துக் கொண்டான்.

''ம், சொல்லுங்க'' என்றாள் அனாமிகா.

''நாங்க இளைஞர்களா ஒரு நூறு பேர் சேர்ந்து ஒரு நல்வழி மன்றம் அஞ்சு வருஷம் முன்னாடி ஆரம்பிச்சோம்.

உறுப்பினர்கள் சந்தா காசு எல்லாம் சேர்த்து போன வருஷம் ஒரு கால் கிரவுண்டு இடம் வாங்கினோம். அப்புறமா பார்த்தா அந்த கிரவுண்டுல வில்லங்கமாய்டுச்சி. ஏற்கனவே விற்கப்பட்ட லேண்ட் அது. பிரச்னை பெரிசாகி இப்ப கோர்ட்ல கேஸ் போட்டிருக்கோம்.''

அனாமிகா கொட்டாவியை பிரமப்பட்டு தடுத்துக் கொண்டு, ''ம்?'' என்றாள்.

''இப்ப கேஸ் நடத்தறதுக்காக உங்களை மாதிரி முக்கிய மான புள்ளிங்களை நேர்ல பார்த்து உதவி கேட்டு நிதி வசூல் பண்ணிக்கிட்டிருக்கோம்'' என்றவன் தோல் பையில் இருந்து ஒரு ரசீது புத்தகம் எடுத்து, ''கண்டிப்பா ரசீது கொடுத்துரு வோம். உங்க பேருக்கு எவ்வளவு எழுதட்டும் சொல்லுங்க?''

''கொஞ்சம் கொஞ்சமாக முகம் சிவந்து கொண்டிருந்த அனாமிகா வெடித்தாள்.

''யோவ்! எந்திரிய்யா! டொனேஷன் வாங்க வந்துட்டு உனக்கு கோல்ட் ஸ்பாட் கேக்குதா?'

''இதென்னம்மா வம்பா இருக்கு. குடிங்க, குடிங்கன்னு நீங்கதானே வற்புறுத்திக் கொடுத்தீங்க.''

''நன்கொடை வாங்க வந்தேன்னு முதல்லயே சொல்றதுக்கு என்னய்யா?''

''அதான் ஒரு கேஸ் விஷயமா உங்க உதவி வேணும்னு தான் சொன்னேனே...''

''போய்யா வெளில. ஒரு நிமிஷத்துல இந்த ஆள் வெளில போகலைன்னா ஆல்பர்ட் உன்னை டிஸ்மிஸ் பண்ணி வீட்டுக்கு அனுப்பிச்சிடுவேன்.''

ஆல்பர்ட் உடனே அவசர கதியில் இயங்கி அவனை கையைப் பிடித்துக் கொண்டு வெளியேற்றி விட்டு உள்ளே வந்தான்.

''என்ன மேன் இதெல்லாம்? இந்நாளைதான் நான் வர்றவரைக்கும் வெய்ட் பண்ண வச்சிருந்தியா நீ? என்ன, ஏதுன்னு விசாரிக்கிறதில்லையா?''

''விசாரிச்சேனே மேடம். என்கிட்டயும் கேஸ் விஷயமா உதவி வேணும்னு மொட்டையாதான் சொன்னான். அவன் கோர்ட் கேசை சொல்வான்னு யாருக்குத் தெரியும்?''

அனாமிகா தன் முன் நெற்றியில் உள்ளங்கையால் இடித்துக் கொண்டு, ''உன்னைப் போய் எனக்கு அசிஸ் டெண்ட்டா வச்சிருக்கேன் பாரு, மர மண்டை!'' என்றாள்.

''சரி மேடம், நான் கமிஷனர் ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்.''

''எதுக்கு?''

''என்னமோ ஸ்டேட்மெண்ட் வாங்கிட்டு வரச் சொன்னீங்களே...''

''மர மண்டைன்னு மறுபடி நிரூபிக்கிறியே. சும்மா அந்த ஆளுக்காக நம்ம ஆபீஸ் பிஸியா இருக்கிற மாதிரி ஒரு ஆக்ட் கொடுத்தேன். எல்லாம் வேஸ்ட்.''

டெலிபோன் ஒலித்தது. எடுத்தாள்.

''ஹலோ சன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சிஸ்.''

''வணக்கம்'' என்றது ஒரு ஆண் குரல். ''ஒரு கேஸ் விஷயமா உங்க உதவி தேவைப்படுது.''

''தெரியும். நல்வழி மன்றம் ஆரம்பிச்சி இடம் வாங்கி, தகராறாகி இப்ப கேஸ் கோர்ட்ல நிக்கிது. கேஸ் நடத்த பண உதவி வேணும். அதானே? இப்படி எத்தனை பேரு கிளம்பியிருக்கீங்க நீங்க?''

''வெய்ட்! வெய்ட்! அது டிடெக்டிவ் ஏஜன்சியா இல்லை பைத்தியக்கார ஆஸ்பத்திரியா? எனக்கு ஒரு ஆள் பத்தின

தகவல் வேண்டியிருக்கு. அது சம்பந்தமா பேசினா நீங்க என்னென்னவோ உளறிக் கொட்றீங்களே?''

''ஸாரி சார். இங்கே ஒரு கன்ஃப்யூஷன். நீங்க நேர்ல வர முடியுமா?''

''நேர்ல தான் பேசியாகணும். எப்போ வரலாம்னு டைம் கேக்கலாம்னுதான் போன் செஞ்சேன்.''

''உங்க பேரென்ன சார்?''

''தாமஸ் ஆல்வா எடிசன்.''

''ஒன் மினிட் சார்'' என்ற அனாமிகா மேஜை மேல் இருக்கும் காகிதங்களை தேவையில்லாமல் சரசரக்க செய்துவிட்டு, ''யு ஆர் லக்கி சார். பத்தரை மணிக்கு சந்திக்க வேண்டிய ஒருத்தரோட அப்பாயிண்ட்மென்ட் கேன்சல் ஆகியிருக்கு. அதனால நீங்க பத்தரைக்கு வந்துடுங்க. இது கேன்சலாகலைன்னா அடுத்த வெள்ளிக் கிழமை வரைக்கும் நோ அப்பாயிண்ட்மென்ட்'' என்றாள்.

''தேங்க் காட் மேடம். அய்யோ! இப்பவே மணி பத்து இருபது ஆச்சே. நான் டாக்ஸி பிடிச்சாவது வந்துடறேன்.''

அனாமிகா போனை வைத்ததும், ''நல்லா சரளமா புழுகறிங்க மேடம்'' என்ற ஆல்பர்ட்டை முறைத்தாள், ''போய் மூஞ்சைக் கழுவிக்கிட்டாவது வாய்யா. டாக்டர்கிட்ட வந்திருக்கிற நோயாளி மாதிரிதான் தெரியறே நீ!''

ஆல்பர்ட் தன் சிரிப்பைப் பாதியில் கேன்ஸல் செய்துவிட்டுக் கடந்தான்.

3

''நிஜமாவே உங்க பேர் தாமஸ் ஆல்வா எடிசனா?'' என்றாள் அனாமிகா.

''ஆமாங்க. எங்க அப்பாவுக்கு தாமஸ் ஆல்வா எடிசனை ரொம்பப் பிடிக்கும். ஏன்னா அவர்தான் சினிமாவைக் கண்டு பிடிச்சவரு! நான் வேற தோதா ஒரு சினிமா தியேட்டர்ல பிறந்தேன். எங்கப்பா எங்கம்மாவை முதல் முதலா சந்திச்சி லவ் பண்ணினதும் சினிமா தியேட்டர்லதானாம். அதனால எனக்கு அவர் பேரை வச்சிட்டாங்க'' என்றவன் திடகாத்திர மாக இருந்தான். உருக்கினால் ஓமக்குச்சி போல மூன்று நபர்களை செய்யலாம். தொந்தி முந்திக் கொண்டிருந்தது. முகத்தில் பற்களும், விழிகளும் மட்டும் வெள்ளையாகப் பளிச்சிட்டன. அவன் தோல் நிறமா இல்லை மீசை நிறமா எது அடர்த்தி என்று போட்டி வைக்கலாம்.

''சரி. என்ன உங்க பிரச்னை?''

''உங்களுக்கு கங்காதர் தெரியுமா?''

''வெறும் காதர் தெரியும். எங்க ஆபீசுக்கு டீ கொண்டு வந்து கொடுப்பான்.''

''இவர் பெரிய தொழிலதிபர் மேடம். கங்காதர் எண்டர்பிரைசஸ்னு தேனாம்பேட்டையில நாலு மாடி கட்டடம் பார்த்ததில்லை?''

''ரெடிமேட் துணிகள் எக்ஸ்போர்ட் பண்றவரா?''

''அவரேதான். நான் அவர்கிட்ட மெய்க்காப்பாளனா வேலை பார்க்கறேன். அவர்தான் உங்க அட்ரஸ் கொடுத்து அனுப்பி வச்சார்.''

''சரி.''

''கங்காதர் சாருக்கு ஒரே ஒரு பொண்ணு. பேரு பிரதீபா. போட்டோ கொண்டாந்திருக்கேன்'' என்று எடுத்துக் கொடுத்தான் தாமஸ்.

வாங்கிப் பார்த்து விட்டு, ''சரி'' என்றாள்.

''அய்யா அந்தப் பொண்ணுக்கு ரொம்பப் பெரிய பெரிய இடத்திலே சம்பந்தம் பேசிக்கிட்டு இருக்காரு. ஆனா இந்தப் பொண்ணு யாரோ ஒருத்தனை லவ் பண்ற மாதிரி அவர் சந்தேகப் படறார். பொண்ணை ஜாடை மாடையா கேட்டுப் பார்த்துட்டார். ஆனா அது வாயைத் திறந்து சொல்ல மாட்டேங்குது.''

''அதனால?''

''பிரதீபா யாரைக் காதலிக்கிறா, அவன் யாரு, என்ன தொழில், எங்கே இருக்கான், பையன் நல்ல மாதிரிதானா இந்த மாதிரி சமாச்சாரம் எல்லாம் உங்களை விசாரிச்சிக் கொடுக்கச் சொன்னார்.''

''செஞ்சிடலாம். தெரிஞ்சிகிட்டு என்ன செய்வார்?''

''நல்ல பையன்ங்கிற மாதிரி தகவல் வந்தா அம்மா விருப்பப்படி கல்யாணம் பண்ணி வைப்பார். சும்மா பெரிய இடம்னு அவன் வேற நோக்கத்தோட சுத்தறவன்னு தகவல் வந்தா பொண்ணை கண்டிச்சி பக்குவமா எடுத்துச் சொல்லி அவனைக் கழட்டி விட்டுடுவார்.''

''விசாரிச்சிச் சொல்றேன். பிரதீபாவோட தினசரி நடவடிக்கைகள் எல்லாம் சொல்லுங்க'' என்ற அனாமிகா சும்மா நின்று சுண்டு விரலை காதுக்குள் செலுத்தி அசைத்துக் கொண்டிருந்த ஆல்பர்ட்டை முறைத்ததும் அவன் ஹோட்டல் வெய்ட்டர் போல பேப்பர், பேனா எடுத்துக் கொண்டு குறித்துக் கொள்ளத் தயாரானான்.

''பெரிய இடம். பல எடத்துக்கும் போவாங்க. குறிப்பா சொல்ல முடியாதுங்க. காலைல பீச்சுக்குப் போய் ஓடுவாங்க. சாயங்காலம் தாஜ் ஹோட்டல் நீச்சல் குளத்துக்குப் போய் நீந்துவாங்க. இது ரெண்டும் தவறாம செய்வாங்க. இதுக்கு நடுவில எங்கே போறாங்க, எங்கே வர்றாங்கன்னு தெரியாது.''

''பிரதீபாவுக்குன்னு கார் இருக்கா?''

''ரெண்டு இருக்குங்க. ஒரு மாருதி, ஒரு டொயாட்டோ.''

அந்த கார்களின் எண்களைக் கேட்டுக் குறித்துக் கொண்டாள் அனாமிகா.

''ஒரு ஆயிரம் ரூபா அட்வான்ஸ் கொடுங்க.''

''தர்றேன். செலவைப் பத்தி பிரச்சினை இல்லைன்னு சொல்லிட்டாரு. ஆனா ஒரு கண்டிஷன்.''

''என்ன?''

''அப்பாவே நம்மைப் பத்தி துப்பறியச் சொல்லிருக்காருன்னு பிரதீபாவுக்குத் தெரியக் கூடாது. தெரிஞ்சா வேதனைப்படுவாங்க. அதனால நீங்க தப்பித் தவறி கங்காதர் சாருக்கோ, பிரதீபாவுக்கோ போன் செஞ்சி விபரம் கேக்கறேன்னு எதையும் உளறிடாதீங்க'' என்ற தாமஸ் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு எழுந்து கொண்டு, ''நான் எப்போ வந்து பார்க்கட்டும்?'' என்றான்.

''ரெண்டு நாள் கழிச்சி வந்து பாருங்களேன்.''

''சரி'' புறப்படும் முன்பு தாமஸ் ஆல்பர்ட்டின் கையைக் குலுக்கிவிட்டுப் போனபோது வலித்தது.

4

ஹோட்டல் தாஜ் கொரமண்டல்.

காரை பார்க் செய்துவிட்டு பிரதீபா நீச்சல் குளத்திற்கு நடந்தாள். உடை மாற்றும் அறைக்குச் சென்று சிங்கிள் பீஸ் உடையில் வெளிப்பட்டாள். 'ஸ்லாப்ஷ்' என்று தண்ணீரில் பாய்ந்தாள்.

மீனின் லாவகத்துடன் கால்களை அசைத்து நீந்தினாள். மாலையில் ஒத்தடம் கொடுக்கும் வெளிச்சத்தை அனுப வித்துக் கொண்டே ஜில்லென்ற தண்ணீரில் நீந்துவது சுகமாக இருந்தது.

ஒரு மணி நேரம் நீந்தினாள்.

அவள் மீண்டும் உடை மாற்றும் அறைக்குச் சென்ற பிறகு தான் அவள் மீது பதித்து வைத்திருந்த பார்வையை மீட்டான் ஆல்பர்ட்.

''போதும்ப்பா விடலைப் பையா'' என்றாள் அனாமிகா.

''செம கட்டைன்னு சொல்வாங்களே, அது இதுதான் மேடம்.''

''ஜொள்ளு விடாதே மேன். ஹோட்டல் முழுக்க நனைஞ்சிடும் போலிருக்கு. வந்த காரியத்தை கவனி.''

''இப்ப என்ன செய்யணும் மேடம்?''

''அதான பார்த்தேன். சொந்தமா மூளை எப்ப வேலை பார்த்திருக்குது. இப்ப அவளோட காதலன் யாருன்னு தெரிஞ்சிக்கணும். எப்படித் தெரிஞ்சிக்கலாம்னு சொல்லு பார்க்கலாம்.''

''ஈசியான வழியா சொல்லட்டுமா?''

''சொல்லு.''

''அவளையே கேட்டுடலாம்.''

''ஆல்பர்ட், உனக்கு நீச்சல் தெரியுமா?''

''தெரியாது.''

''பிடிச்சி தள்ளிடட்டுமா?''

''அய்யோ!''

''பின்னே என்னய்யா குழந்தைத்தனமா ஐடியா சொல்றே.''

''இன்னொரு பெட்டர் ஐடியா மேடம். நேரா அவகிட்ட போறது. உங்க காதலன் லாரில அடிபட்டுட்டான். ஆஸ்பத்திரில இருக்கான், உடனே வாங்கன்னு சொல்லி நிஜமாவே ஒரு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அழைச்சிக்கிட்டுப் போறது.''

''போயி?''

''அங்கே ஆக்சிடெண்ட் ஆகி மயக்கத்தில நூத்துக் கணக்கிலே கிடப்பானுங்க. அதில எவனையாவது காட்ட வேண்டியது.''

''அப்படி காட்டினா?''

''இவன் என் காதலன் இல்லை. என் காதலன் வேற ஆள். அவன் பேர் இதுன்னு சொல்லிட மாட்டாளா?''

''இவன் என் காதலன் இல்லைன்னு மட்டும் சொல்லிட்டு அதுக்கு மேல எதுவும் சொல்லாம போய்கிட்டே இருந்தாள்னா?''

''அப்படி ஒரு பிரச்சினை இருக்கோ இதில?''

''ஆல்பர்ட், உனக்கு யோசிக்கிற கஷ்டமான வேலை எல்லாம் வேணாம். சொல்றதை செயல்படுத்தினா போதும். நான் ஏற்கனவே ஒரு ஏற்பாடு செஞ்சிட்டேன்.''

''என்ன அது?'' என்றவன் உடை மாற்றும் அறையிலிருந்து பிரதீபா வந்து நடப்பதைப் பார்த்து, ''போய்ட்டா மேடம்'' என்றான் அவசரமாக.

''பதறாதே. நம்ம காருக்குப் போகலாம் வா. அவ வண்டியை மிஸ் பண்ணாம தொடர்ந்து போ'' என்றாள் அனாமிகா.

சிறிது நேரத்தில் சாலையில் பிரதீபாவின் மாருதி காரை அனாமிகாவின் அம்பாஸிடர் சைக்கிளின் பின் சக்கரம் போல விடாமல் இடைவெளி வைத்து துரத்திக் கொண்டிருந்தது.

''எங்கே போறா அவ?'' என்றான் காரை ஓட்டியபடி ஆல்பர்ட்.

''அவ காதலனைப் பார்க்கத்தான்'' என்றாள் பின் சீட்டில் அமர்ந்திருந்த அனாமிகா.

''எப்படிச் சொல்றீங்க?''

''அதான் ஏற்பாடு பண்ணிருக்கேன்னு சொன்னேனே.''

''என்ன ஏற்பாடு?''

''எல்லா வித்தையையும் கத்துக் கொடுத்துட்டா நீ தனியா போய் லைம் லைட் டிடெக்டிவ் ஏஜன்சின்னு ஏதாச்சும் போட்டியா ஆரம்பிச்சுடுவே மேன்!''

''என் திறமை மேல இவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கீங்களே, தேங்க்ஸ் மேடம்.''

''நெகிழ்ந்தது போதும். அவ காரை மிஸ் பண்ணிடாதே.''

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்த ஒரு சிறிய தெருவுக்குள் நுழைந்து ஒரு ஓரமாக காரை நிறுத்தி இறங்கினாள் பிரதீபா. நடக்கத் துவங்கினாள்.

ஒரு குறிப்பிட்ட வீட்டின் சைடில் இருந்த படிகளில் ஏறி மாடிக்கு வந்து கதவைத் தட்டினாள் படபடப்பாக.

சில வினாடிகளில் இடுப்பில் லுங்கியுடன் கதவைத் திறந்த தேவா, ''ஹாய் பிரதீபா. வா உள்ளே. இன்னைக்கு மீட் பண்றதாவே நமக்கு ப்ரோக்ராம் இல்லையே. இதென்ன சர்ப்ரைஸ் விசிட்?'' என்றவன் அறையில் கசாமுசாவென்று இருந்த உடைகளை, புத்தகங்களை அப்புறப் படுத்தினான்.

பிரதீபா இடுப்பில் கைகளை வைத்து அவனை செல்லமாக முறைத்து, ''உனக்கு விளையாட்டா இருக்கா தேவா? ஸ்விம்மிங் பூல்லேர்ந்து என்னவோ ஏதோன்னு பதறியடிச்சிக்

கிட்டு வர்றேன். வீட்டுக்குப் போய் மேக்கப் கூட செஞ்சுக்கலை பார்.''

''அதான் என்னடா கொஞ்சம் அழகா தெரியறியேன்னு நினைச்சேன்.''

''விளையாடினது போதும். சொல்லு. எதுக்கு இவ்வளவு அவசரமா வரச் சொன்னே?''

''எனக்கு எதுவும் புரியலை. நான் எப்போ உன்னை வரச் சொன்னேன்?''

''பின்னே இந்த சீட்டை என் கார் ஸ்டியரிங்ல சொருகி வச்சது யாரு?''

பிரதீபா தன் கைப்பையில் இருந்து எடுத்து நீட்டின சீட்டை அவன் வாங்கிப் பார்க்க, அதில் 'என்னை உடனே சந்திக்கவும் - உன் காதலன்' என்று ஆங்கிலத்தில் டைப் செய்யப் பட்டிருந்தது.

''யாரோ உன்கிட்ட விளையாடியிருக்காங்க பிரதீபா. இந்த மாதிரி உன் கார்ல வைக்கச் சொல்லி நான் யார்கிட்டயும் சீட்டு கொடுத்தனுப்பலை. உன்கிட்டே பேசணும்னா நான் உன் வீட்டுக்குப் போன் பண்ணி பேசிட மாட்டேனா?''

''இப்படியெல்லாம் கூட விளையாடுவாங்களா தேவா?''

''விளையாடியிருக்காங்களே. சரி, வந்தது வந்தே. உக்காரு. டீ போட்டுத் தர்றேன். சாப்பிட்டுப் போ.''

''வேற என்னென்ன போடுவே?''

''தபால் போடுவேன். தப்பு பண்ணா சத்தம் போடுவேன்.''

''அய்யோ! அறுக்காதே!''

தேவா போட்டுக் கொடுத்த டீயைக் குடித்துவிட்டு எழுந்து கொண்டாள்.

''என்ன அவசரம்? இரேன். பேசிட்டிருக்கலாம்.''

''வேணாம் டேஞ்சர். திடீர்னு மழை வந்துடலாம்.''

''வந்தா என்ன? கார்லதானே வந்தே?''

''அதுக்கில்லை. நீ உடனே என்னை சாப்பிடற மாதிரி பார்ப்பே. அப்புறம் 'ஹம் தும் ஏக் கம்ரே மே பந்த் ஹோ...' பாடி முடிச்சி... வேணாம்ப்பா! டேஞ்சர்!''

''ஏய்! நில்லு ராஸ்கல்! எனக்கு ஒண்ணு தெரிஞ்சாகணும். உனக்கு என் மேல நம்பிக்கை இல்லையா? உன் மேல நம்பிக்கை இல்லையா?''

''நம்ம வயசு மேல நம்பிக்கையில்லை.''

''அப்படி ஏதாச்சும் ஒண்ணு நடந்துட்டாதான் என்ன பிரதிபா?''

''கேக்க மாட்டே? உனக்கென்ன! காட்டிக் கொடுக்கற அடையாளத்தை ஆண்டவன் எங்களுக்கில்ல வெச்சிருக்கார்! கல்யாண மேடையில வயத்தைத் தள்ளிக்கிட்டு வந்து நான் உக்காந்தா நல்லாவா இருக்கும்? யோசிச்சுப் பாரு!''

''சரி. அப்பாக்கிட்ட பேசினியா?''

''ம்கூம்.''

''ஏன்?''

''பயமா இருக்கு. எப்படி ஆரம்பிக்கிறதுன்னே தெரியலை.''

''சொல்லித் தரட்டுமா? டாடி, டாடி நான் சின்ன வயசுல சாக்லேட் கேட்டேன். நீங்க வாங்கித் தந்தீங்க. பெரியவளாகி புடவை கேட்டேன். நீங்க வாங்கித் தந்தீங்க.

இப்போ ஆசையா ஒண்ணு கேப்பேன். மறுக்காம வாங்கித் தருவீங்களா டாடின்னு ஆரம்பி. எப்படி டயலாக்?''

''சொத்தை! வரட்டுமா கண்ணா? குட்நைட்'' அவன் கன்னத்தில் தட்டி விட்டு அவள் புறப்பட்டாள்.

தன் காரில் ஏறிப் புறப்பட, ஆல்பர்ட்டும் தன் காரை ஸ்டார்ட் செய்ய...

''முட்டாள்! நீ எதுக்குப் புறப்படறே? ஆஃப் பண்ணு! அவளை ஃபாலோ செய்ய வேணாம். அது போய்ட்டு வந்த வீட்லதான் அவளோட காதலன் இருக்கான். அவனைப் பத்தி விஷயங்களைத் தெரிஞ்சிக்கிட்டுப் போகலாம்'' என்று காரை விட்டு இறங்கினாள் அனாமிகா.

5

''ம், படி. இதுவரைக்கும் அவனைப் பத்தி என்ன என்ன தகவல்கள் சேகரிச்சிருக்கோம்?'' என்றாள் அனாமிகா ரிவால்விங் நாற்காலியில் மெல்ல அசைந்தபடி.

ஆல்பர்ட் எழுதி வைத்திருந்த காகிதம் பார்த்து படிக்கத் துவங்கினான்:

''அவன் பேர் தேவராஜ். தேவான்னு கூப்பிடுவாங்க. அந்த மாடி போர்ஷன்ல அவன் மட்டும்தான் தங்கியிருக்கான். அதுக்கு வாடகை இருநூத்தம்பது ரூபா. பக்கத்துல ஒரு மெஸ்சுல சாப்பிடறான். அவனுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். வேளாங்கன்னில தன் மூத்த மகனோட அவங்க இருக்காங்க. தேவா இங்கே சூர்யா குளிர் பானங்கள் கம்பெனில சேல்ஸ் டிவிஷன்ல சூபர்வைசரா வேலை பார்க்கிறான். ஆயிரத்தி அறநூறு ரூபா சம்பளம். ஆபீஸ் கிண்டில இருக்கு. இவன் பஸ்சுல போறான். பஸ்சுல வர்றான்.''

''ரைட், இதெல்லாம் சாதாரண விபரங்கள், அந்த தாமஸ் கூட இதை எல்லாம் சேகரிச்சிருக்க முடியும் ஆல்பர்ட். தேவா

எப்படிப்பட்டவன், அவன் என்ன நோக்கத்தோட பிரதீபா கிட்ட பழகறான், இதுதான் நாம முக்கியமா தெரிஞ்சிக்க வேண்டிய விபரங்கள்.''

''ஆமாம் மேடம்.''

''இதை எப்படித் தெரிஞ்சுக்கலாம்?''

''நீங்களே சொல்லிடுங்க மேடம்.''

''சொல்றேன். இப்போ அவனுடைய தினசரி நடவடிக்கைகளை குறிச்சியே, அதைப் பார்த்து சொல்லு பார்ப்போம், காலைல எந்திரிச்சதும் என்ன செய்வான்?''

''லுங்கி அவுந்திருந்தா சரியா கட்டிக்குவான்.''

அனாமிகா பேப்பர் வெய்ட்டை எடுத்து ஆல்பர்ட் மேல் வீசுவதற்காக ஓங்கினாள், ''ஒழுங்கா படி மேன்! உன்கிட்ட உருப்படியா இருக்கிறது பல்லுதான். அதையும் உடைச்சிடுவேன். கிண்டலா?''

''ஸாரி மேடம். எனக்கு அதிகம். உங்களுக்குக் குறைச்சல்.''

''என்னது?''

''நகைச்சுவை உணர்ச்சி.''

''அப்படீங்களா? எனக்கு அதிகம். உனக்கு குறைச்சல்.''

''என்னது?''

''மூளை! அதுக்கென்ன பண்றது? சொல்லு மேன்.''

''காலைல தேவா தன் வீட்டு மொட்டை மாடில நின்னு எக்ஸர்சைஸ் பண்றான் ஒரு மணி நேரம். அப்புறம் குளிச்சி ஆபீஸ் போறான். இல்லைன்னா மைலாப்பூர்ல இருக்கிற ஒரு ஸ்டேடியத்தில பேஸ்கட் பால் பிராக்டிஸ் பண்ணுவான், ராத்திரி பத்து மணிக்கெல்லாம் லைட்டை அணைச்சிட்டுப் படுத்துடுவான்.''

''ரைட், இப்பப் பாரு'' என்று டெலிபோன் டைரக்டரியைப் பிரித்து தேவாவின் அலுவலக எண்ணைத் தேடிப் பிடித்து போன் செய்தாள் அனாமிகா.

''மிஸ்டர் தேவா இருக்காரா? சூபர்வைசர்'' என்றாள். காத்திருந்தாள். ஆல்பர்ட் நகம் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான்.

''ஹலோ நான் தேவா பேசறேன்.''

''ஹல்லோ சார்'' என்றாள் உற்சாகமாக, ''என் பேரு ஷர்மிலி. நான் உங்கக்கூட கொஞ்சம் தனியா பேசணும். எப்ப சந்திக்கலாம்? எங்க சந்திக்கலாம்?''

''என்ன விஷயமா சந்திக்கணும் மேடம்.''

''போன்ல சொல்ற விஷயமில்லை இது. நேர்லதான் சொல்லணும். உங்க ஆபீஸ் எனக்குத் தெரியும். என்கிட்ட கார் இருக்கு. இன்னிக்கு ஈவினிங் உங்க ஆபீஸ் வாசல்ல வெய்ட் பண்ணட்டுமா? எத்தனை மணிக்கு வரட்டும் சார்?'' அனாமிகா ஒவ்வொரு வார்த்தையையும் பன்னீரில் குளிப்பாட்டி, தேனில் தோய்த்து, கிளியின் கொஞ்சலாய் வெளிப்படுத்தினாள்.

''ஆறு மணிக்கு வாங்க.''

''தேங்க் யூ'' வைத்தாள்.

''ஆறு மணிக்கு நாம் அவனை சந்திக்கிறப்ப என்ன பேசறோம்?'' என்றான் ஆல்பர்ட்.

''சந்திக்கப் போறது நாம் இல்லை, நான் மட்டும்தான்.''

''மீட் பண்ணி?''

''மீட் பண்ணிட்டு அப்புறம் சொல்றேன்'' என்றாள் அனாமிகா.

★ ★ ★

மாலை ஆறு மணிக்கு கிண்டியில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் இருந்த சூர்யா குளிர் பானங்கள் நிறுவனத்தின் விற்பனைப் பகுதிக்கான அலுவலக வாசலில் தன் காரில் ஒரு பொக்கேயுடன் காத்திருந்தாள் அனாமிகா.

அவளின் அலங்காரத்தில் வழக்கத்தைவிட அதிகமான அலட்டல் இருந்தது. இமை சிப்பிகளுக்கு டார்க் ஷேட் செய்து மெலிதாக கன்னங்களில் ரூஜ் தடவி, கறுப்பு உள்ளாடை பளிச்சென்று தெரியும்படியான மெல்லிசான வெள்ளை ஜாக்கெட் அணிந்து, வெள்ளை நிற சேலையில் அபாய கரமான லோ ஹிப்பில் கட்டியிருந்தாள். அந்தத் தெரு மொத்தமும் நுகரும்படி செண்ட் போட்டிருந்தாள்.

தேவா தன் அலுவலகத்தை விட்டு வெளியே வந்ததும், ''ஹாய்'' என்று கையசைத்து அழைத்தாள். அவன் அருகில் வந்து தயங்க, ''நான்தான் போன்ல பேசின ஷர்மிலி'' என்றாள். பொக்கேயை நீட்டினாள்.

''என்ன, சொல்லுங்க?'' இது எதுக்கு?''

''இங்கேயேவா? இப்படியே நின்னுக்கிட்டா? கமான். போய்கிட்டே பேசலாம் வாங்க. முதல் சந்திப்புல நான் யாருக்கும் பொக்கே தர்றது வழக்கம்.''

''சரி என்ன மேட்டர்னு நீங்க சொல்லிடுங்களேன். எனக்கு வேற ஒரு வேலை இருக்கு.'

''அய்யோ! பிகு பண்ணாம வாங்க சார். உங்களை நான் ஒண்ணும் கடிச்சி தின்னுட மாட்டேன்'' என்றவள் அவனுக்காக முன் பக்கக் கதவைத் திறந்து பிடிக்க, அதற்கு மேல் மறுப்பதை அநாகரிகமாகக் கருதின தேவா ஏறிக் கொண்டான்.

அனாமிகா டிரைவிங் சீட்டில் அமர்ந்து ஓட்டத் துவங்கினாள்.

''என்ன, சொல்லுங்க?''

''ஏன் இவ்வளவு அவசரப்படறீங்க? என்னை நான் இன்னும் முழுசா அறிமுகப் படுத்திக்கலையே. பேர் ஷர்மிலி. வயசு இருபத்தி ஒண்ணு. என்ன அநியாயம் பாருங்க சார், இன்னும் ஒரு தடவை கூட கல்யாணம் செய்துக்கலை. இன்னும் ஒரு தடவை கூட காதலிக்கலை. சிரிக்க மாட்டீங்களா? ஏதாச்சும் கோபமான மூட்ல இருக்கீங்களா?''

''இல்லை.''

''எங்கப்பா ராஜ்குமார் ஒரு ஹிந்தி சினிமா புரட்யூஸர். எங்களுக்கு இந்தியாவில உள்ள எல்லா ஹில் ஸ்டேஷன்ஸ் லியும் பங்களா இருக்கு. நான் பரத நாட்டியம் கத்துக்கறதுக் காக மெட்ராஸ்ல உள்ள பங்களால தனியா இருக்கேன். பங்களா மைலாப்பூர்ல இருக்கு. நீங்க பேஸ்கட் பால் விளையாடுவீங்களே கிரவுண்டு அதுக்குப் பக்கத்துல இருக்கு.''

அவளை ஒரு தரம் ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தான்.

''உங்களை இன்னிக்கு இவ்வளவு பக்கத்துல பார்க்கறேன், ஆனா தூரத்திலேர்ந்து பைனாகுலர்ஸ் வழியா எத்தனை நூறு தடவை பார்த்திருக்கேன் தெரியுமா? உங்களை சந்திக்கணும், பேசணும்னு ரொம்ப நாளா தவிப்பு. இன்னிக்குத்தான் துணிச்சல் வந்திச்சி'' என்று அவனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு ''தேவா, ஐ லவ் யூ. லவ் யூ ஸோ மச்'' என்றாள்.

''கொஞ்சம் காரை ஓரமா நிப்பாட்றிங்களா, ப்ளீஸ்'' என்றான் தேவா.

கார் நிறுத்தப் பட்டதும், ''உங்க மனசில சலனம் ஏற்பட நான் மறைமுகமா காரணமா இருந்திருந்தா மன்னிக்கணும்.

நீங்களா ஆசையை வளர்த்துக்கிட்டதுக்கு நான் பொறுப்பில்லை. உங்க காதலை நான் ஏத்துக்க முடியாது'' என்றான்.

''ஏன்? நான் அழகா இல்லையா?''

''அதில்லை. நான் ஏற்கனவே பிரதீபான்னு ஒரு பொண்ணை உயிருக்குயிரா நேசிக்கிறேன். சீக்கிரத்தில் நாங்க கல்யாணம் செய்துக்கப் போறோம்.''

அதிர்ச்சியடைந்தது போல நடித்த அனாமிகா, ''ஸாரி, உங்க நிலைமை புரியாம நான்... ஐம் ரியலி ஸாரி. அதிகப்பிரசங்கித்தனமா பேசியிருந்தா மன்னிச்சிருங்க. உங்களுக்கு என்னோட வாழ்த்துக்கள்'' என்றாள்.

தேவா காரை விட்டு இறங்கியதும் கையசைத்துவிட்டு ஸ்டார்ட் செய்தாள் அனாமிகா.

★ ★ ★

சிந்தனையோடு நடந்த தேவாவை, ''சார், ஒரு நிமிஷம்'' என்று அழைத்து நிறுத்தினான் ஆல்பர்ட்.

அவனை அடையாளம் புரியாமல் நின்றான் தேவா.

''நீங்க தேவா, சூர்யா குளிர் பானங்கள் கம்பெனில சேல்ஸ் சூப்ரவைசரா வொர்க் பண்றிங்க. கரெக்ட்டா?'' என்றான் ஆல்பர்ட்.

''ஆமாம், நீங்க யாரு?''

''உங்களுக்கு வேண்டியவன்தான். உக்காந்து பேசுவமே, வாங்க. இந்த ஹோட்டல்ல காபி சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்.''

அருகில் இருந்த ஹோட்டலின் குளிர் அறையில் இருவரும் அமர்ந்து, காபி சொல்ல பேரரை விலக்கிய பிறகு, ''என் பேர் ஆனந்த். வாழ்க்கைல சுலபமா முன்னேற உங்களுக்கு ஒரு

வழி சொல்லித் தர்றதுக்காக தேடி வந்திருக்கேன்'' என்றான் ஆல்பர்ட்.

''புரியலை.''

''நானும் உங்களை மாதிரிதான் இன்னொரு முதலாளி கிட்டே வேலை பார்க்கறேன் அவர் யாருன்னு கேக்காதிங்க. அவர் சார்பாதான் நான் உங்களை சந்திச்சிருக்கேன். எங்க முதலாளிக்கு உங்க உதவி தேவைப்படுது. அதை நீங்க செய்து கொடுத்தா அவருக்கும் லாபம். உங்களுக்கும் லாபம்.''

''தெளிவா சொல்லுங்க. என்ன உதவி?''

''தேவா சார், இன்னைக்கு குளிர் பானங்கள் மார்க்கெட்ல உங்க சூர்யா பிராண்ட் ட்ரிங்ஸ் சக்கை போடு போட்டுக் கிட்டிருக்கு, நீங்க தயாரிக்கிற எட்டு வகை ட்ரிங்கும் நல்ல சேல்ஸ். காரணம் மத்த ட்ரிங்சை விட உங்க கம்பெனி ட்ரிங்ஸ் ரொம்ப டேஸ்ட்டா இருக்கிறதுதான்.''

''ஆமாம். அதான் உண்மை.''

''உங்க கம்பெனி பானங்களோட தயாரிப்பு ஃபார்முலா இருக்கு பாருங்க. அது உங்க கம்பெனில எங்கே வச்சிருக்காங்கன்னு நாங்க தெரிஞ்சிகிட்டாச்சு. சொல்றோம். நீங்க அதிலேர்ந்து ஒரு ஜெராக்ஸ் காப்பி எடுத்து எங்களுக்குக் கொடுத்தால் போதும். ஒரு ஃபார்முலாவுக்கு இருபத்தி அஞ்சாயிரம் தர்றோம். மொத்தம் எட்டு ஃபார்முலா, ரெண்டு லட்சம்! உழைக்காம, லாட்டரி சீட்டு வாங்காம ஒரே ராத்திரில லட்சாதிபதியாகலாம். என்ன சொல்றீங்க?''

சட்டென்று எழுந்து கொண்டான் தேவா.

''உங்களோட சேர்ந்து உட்கார்ந்து காபி சாப்பிடறதுகூட பாவம்னு நினைக்கிறேன்.''

''இருங்க, ஏன் ரேட் கம்மியா இருக்குன்னு ஃபீல் பண்றீங்களா?''

கோடி கோடியா கொட்டிக் கொடுத்தாலும் நம்பிக்கை துரோகம் மட்டும் செய்ய மாட்டேன். அதுக்கு வேற ஆளைப் பாருங்க.''

''தேவா, அவசரப் படாதீங்க.''

''இதுக்கு மேல எதாவது பேசினா உங்களை நான் போலீஸ்ல ஹேண்ட் ஓவர் பண்ண வேண்டியதா வரும். என்னை என்ன வியாபாரப் பொருள்னு நினைச்சீங்களா?''

கோபமாக நடந்து சென்றான் தேவா, ஆல்பர்ட் சிரித்துக் கொண்டான். வந்த இரண்டு காபியையும் குடித்து விட்டுப் புறப்பட்டான்.

★ ★ ★

''ஸோ தேவா காசுக்கு ஆசைப்படாத ஒரு நேர்மையான பையன். அழகும், வசதியும், மயக்கற பேச்சும் வச்சி எந்தப் பொண்ணாலையும் அவனை மடக்கிட முடியாது. அவன் தன் காதல்ல ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கான்'' என்ற அனாமிகா, ''ஆல்பர்ட், நாம் சேகரிச்ச எல்லா விபரங்களையும் டைப் செஞ்சி ரெடியா வச்சிரு. அந்த தாமஸ் வந்தா கொடுக்கணும்'' என்றாள்.

6

தோட்டத்தின் புல்வெளியில் அமைக்கப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு மூன்று நாய்களுக்கும் வேலைக்காரன் நீட்டிய தட்டிலிருந்து பிஸ்கெட்டுகளை எடுத்து எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார் கங்காதர்.

மூன்று நாய்களும் தரையிலிருந்து ஐந்தடி உயரம் வரை ஜம்ப் செய்து ரொட்டிகள் தரையில் விழாமல் சாமர்த்திய மாகக் கவ்விக் கொண்டிருந்தன.

தன் அறையில் ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருந்த பிரதீபா காற்றுக்காக ஜன்னல் நிரையை ஓரமாக நகர்த்தினபோது தன் டாடி ரொட்டி வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

டாடி தன் கையால் நாய்களுக்கு ரொட்டி போடுகிறார் என்றால் அவர் மிகவும் குஷியாக இருக்கிறார் என்று பொருள்.

உடனே பிரதீபாவின் மனம் விசிலடித்தது.

சரியான சந்தர்ப்பம் இது. சொல்லி விடலாமா தேவாவைப் பற்றி?

உடனே தீர்மானித்தாள். வேகமாக படியிறங்கி தோட்டத் திற்கு வந்து, ''டாடி!'' என்று அவரின் தோளில் தொங்கிக் கொண்டபடி அருகில் அமர்ந்தாள்.

''என்ன பிரதீபா?'' என்றார் டீப்பாய் மேலிருந்த பிசினெஸ் மேகசினைக் கையில் எடுத்துக் கொண்டு.

அதை அவள் உடனே வாங்கி அதனிடத்தில் வைத்து ''அப்புறமா படிக்கலாம் டாடி. நான் முக்கியமா உங்கிட்ட ஒண்ணு சொல்லணும்'' என்றாள்.

''அப்படியா? நானும் உன்கிட்ட முக்கியமா ஒண்ணு சொல்லணுமே'' என்றாள்.

''நான் முதல்ல சொல்லிடறேனே.''

''ம்கூம். நான் சொல்லிடறேன்.''

''சரி, டாஸ் போட்டுப் பார்க்கலாமா?''

''ரைட்'' தன் மணிபர்ஸ் எடுத்து ஐம்பது பைசா நாணயம் எடுத்து அவளிடம் கொடுத்தார். ''நீயே போடு. எனக்கு பூ உனக்கு தலை. ஒக்கே?''

பிரதீபா காசை வாங்கி மேலே சுண்டி உதை உள்ளங் கையால் டப்பென்று மூடியபடி பிடித்தாள். பிறகு மெதுவாக மூடியபடி கையை விலக்க, நாணயத்தின் பூ பக்கம் தெரிந்தது.

''தோத்துட்டியா? நான்தான் சொல்லியாகணும்.'' சிரித்த கங்காதர், ''உனக்கு கல்யாணம் பண்ணலாம்னு முடிவு செஞ்சிருக்கேன் பிரதீபா'' என்றார்.

''நான் தோக்கல டாடி நானும் அதையேதான் சொல்ல வந்தேன்.''

''பம்பாய்ல விஜயராம்னு பெரிய எக்ஸ்போர்ட்டர். அவருக்கு ஒரே பையன் வாசுதேவ். பையன் கும்முன்னு சிவப்பா, லட்சணமா இருப்பான். நான் பார்த்திருக்கேன். நீ பார்க்கறக்காக தபால்ல போட்டோ அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கேன். விஜயராம் எனக்கு வியாபார ரீதியில பழக்கம். அவரே தடுதிப்புன்னு இப்படி ஒரு ஐடியாவை ப்ரப்போஸ் செய்வார்னு நான் நினைக்கலை. இத்தனைக்கும் ஒரே ஒரு தடவை தான் அவர் உன்னைப் பார்த்திருக்கார் - நம்ம கம்பெனி ஆண்டு விழா செலிபரேஷனப்போ, நான் பார்க்கணும்னு அவசியம் இல்லைன்னு வாசுதேவ் சொன்னானாம். இருந்தாலும் நான் உன் போட்டோ அனுப்பி வெச்சிருக்கேன். முதல்ல சிங்கிள் ஒக்கே சொன்னவன் போட்டோவைப் பார்த்து டபுள் ஒக்கே சொல்றானாம்.'' சிரித்த கங்காதர் அவள் முகத்தில் அந்த சிரிப்பு தொற்றிக் கொள்ளாததைப் பார்த்து, ''என்ன ஆச்சும்மா? ஏன் ஒரு மாதிரி ஆய்ட்டே?'' என்றார்.

''டாடி... வந்து... நான் ஒருத்தரை... லவ் பண்றேன்.''

கங்காதர் ஊஞ்சலின் ஆட்டத்தை சட்டென்று நிறுத்தினார்.

''உனக்கு வெளில போக, வர நான் கொடுத்த சுதந்திரம் இதுக்குத்தானா? ம்? யாரும்மா அது?''

''தேவான்னு சூர்யா கூல்ட்ரிங்ஸ் கம்பெனில சேல்ஸ் சூபர்வைசர்.''

''அதாவது... அறநூறு பேருக்கு மாச சம்பளம் கொடுக்கற எனக்கு, மாச சம்பளம் வாங்கற ஒருத்தன் மருமகன். அப்படித்தானே?''

''வாழ்க்கையில் பணம்தான் முக்கியமா டாடி?''

''இல்லைம்மா. சந்தோஷம்தான் முக்கியம்.''

''அந்த சந்தோஷம் தேவாவோட வாழறப்ப எனக்குக் கிடைக்கும்னு நான் நம்பறேன் டாடி.''

அவளையே கூர்ந்து பார்த்தார்.

''பிரதீபா, நீ உன் காதல்ல உறுதியா இருக்கியாம்மா?''

''நிச்சயமா டாடி.''

''சப்போஸ் நான் கூடாதுன்னு சொன்னாலும் ஓடிப்போய் ரகசியமா அவனைக் கல்யாணம் செய்துக்கற அளவுக்கு உறுதியா இருக்கியா?''

''அப்பா! உங்க சம்மதம் வாங்கிக் கல்யாணம் செய்துக் கணும்னுதான் ஆசைப்படறேன் டாடி.''

''இல்லைம்மா, வழக்கமா அப்படித்தானே திட்டம் போடுவாங்க. ஆசையா வளர்க்கறதுக்கும், கேக்கறதெல்லாம் வாங்கிக் கொடுக்கறதுக்கும் அப்பாக்களுக்கு இருக்கிற உரிமை கல்யாண விஷயத்துல தீர்மானிக்கிறதுல மட்டும் இல்லை.

''அப்படித்தானேம்மா?''

''தலையைக் குனிந்து அமைதியாக இருந்தாள் பிரதீபா.

''ஏம்மா, உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும்னு தானே நான் ஆசைப்படுவேன்? அந்த தேவாவை மறந்துட்டு நான் பார்த்து வச்சிருக்கிற பையனைக் கட்டிக்கக் கூடாதா பிரதீபா? நான் வாக்குக் கொடுத்துட்டேன்மா.''

''மன்னிச்சுக்கங்க டாடி. நீங்க வாக்கு மட்டும்தான் கொடுத்திங்க. நான் என் மனசையேக் கொடுத்துட்டேன். தயவு செஞ்சி என் காதலைக் கலைச்சிடாதீங்க டாடி.''

டீப்பாய் மேலிருந்த 555 பாக்கெட் எடுத்து ஒன்றை உருவி பற்ற வைத்துக் கொண்டு இரண்டு மூன்று நிமிடங்கள் அமைதியாக யோசித்தார் கங்காதர்.

பிறகு சொன்னார்:

''பிரதீபா, நாளைக்கு அந்தப் பையனை நீ அழைச்சுக்கிட்டு வாம்மா, நான் பேசிப் பார்க்கறேன். அதுக்கப்புறம் ஒரு முடிவுக்கு வரலாம்.''

''தேங்க்ஸ் டாடி'' என்று அவர் கன்னத்தைக் கிள்ளி தன் உதட்டில் வைத்துக் கொண்டாள் பிரதீபா.

அவள் எழுந்து வீட்டுக்குள் ஓட, கங்காதர் டீப்பாய் மேல் இருந்த கார்ட்லெஸ் டெலிபோனைக் கையில் எடுத்தார்.

7

அறைக்கு வந்த பிரதீபா 'ஓகோ மேகம் வந்ததோ' என்று மழையில் நனைந்து கொண்டு பாட வேண்டும் போலத் துடித்தாள்.

சூர்யா அலுவலக எண்ணை போனில் பிடித்தாள்.

''ஹாய் தேவா, இன்னிக்கு நாம் சந்திச்சேயாகணும்.''

''சந்திச்சிடலாம்.''

''ஏழு மணிக்கு உன் வீட்டுக்கு வர்றேன், ரெடியா இரு.''

''ஏழு மணி வேணாம். எட்டு மணி.''

''ஏன், என்ன வேலை உனக்கு?''

''இன்னைக்கு இளப் மெம்பர்சுக்குள்ளேயே ஒரு பேஸ்கட் பால் மேட்ச் இருக்கு. ஆபீஸ்லேர்ந்து பர்மிஷன் போட்டுட்டு ஸீக்கிரமே போய்டுவேன். ஈவினிங் அஞ்சரை டு ஏழு மேட்ச். வீட்டுக்கு வர ஏழரை ஆகிடும். அதனாலதான் எட்டு மணி சொன்னேன்.''

''ஓக்கே எட்டு மணிக்கு வர்றேன்.''

''நான் வர்றதுக்குக் கொஞ்சம் முன்னே பின்னே லேட்டானா உள்ளே வெய்ட் பண்ணு. சாலியை நாலாவது ஓட்டுக்கு அடியில செருகி வச்சிருப்பேன்.''

''சரி, நீ வந்ததும் எங்கே போகப் போறோம் தெரியுமா?''

''எங்கே?''

''சோழா ஷெரட்டன். ஒரு மாபெரும் விருந்து சாப்பிடப் போறோம். டேபிள் ரிசர்வ் பண்ணிடறேன்.''

''எதுக்கு இவ்வளவு ரகளை? போன மாசம்தானே உன் பர்த்டே முடிஞ்சது? வேற என்ன விசேஷம்?''

''சஸ்பென்ஸ். அதை ஹோட்டல்ல வச்சிதான் சொல்வேன். ஸ்வீட் எடுத்து உன் வாயில் வச்சிட்டு அதுக்கப்புறம்தான் சொல்வேன்.''

''அய்யோ! எனக்கு பி.பி. ஏத்தறியே. சொல்லிடேன் என்னன்னு?''

''மாட்டேன், நேர்ல மீட் பண்ற வரைக்கும் யோசிச்சிக்கிட்டே இரு.''

''பிரதீபா, உங்கிட்ட நானும் ஒரு சுவாரசியமான விஷயம் சொல்லணுமே.''

''என்ன?''

''நேத்து என் ஆபீசுக்கு ஷர்மிலான்னு ஒரு பொண்ணு நியூர்னு போன் செஞ்சா. மீட் பண்ணனும்ன்னு சொன்னா.

சாயங்காலம் கார் எடுத்துக்கிட்டு வந்தா. என்னடான்னு கேட்டா இவ நான் பேஸ்கட் பால் ஆடறதை பக்கத்துல இருக்கிற தன்னோட பங்களாலேர்ந்து தினம் பார்ப்பாளாம். என்னை லவ் பண்றாளாம். அப்பா ஹிந்தி சினிமா ப்ரட்யூஸர். எக்கச்சக்கமான சொத்து.''

''நிமிர் பிடிச்சி அலையறாளுங்க என்ன சொன்னே நீ?''

''இவ்வளவு தூரம் மெனக்கெட்டு வந்து சொல்றப்போ, ஆள் வேற கடைஞ்செடுத்த மாதிரி அசத்தலா இருக்கிறப்ப ஸாரின்னு எப்படி பிரதீபா சொல்ல முடியும்? சரி, நீ காதலி நம்பர் டூ வா இருந்துக்கோன்னு சொல்லிட்டேன்.''

''உதை பிச்சிடுவேன் ராஸ்கல், எல்லாம் டூப்தானே? யாரும் வரலைதானே?''

''வந்தது நிஜம். நான் சொன்னதா சொன்னது டூப்.''

''ஹே என்னதான் சொன்னே?''

''பிரதீபான்னு எனக்கு ஒரு தெய்வீகக் காதலி இருக்கான்னு சொன்னேன். உடனே அவ கண்ணைத் துடைச்சிட்டு வாழ்த்துக்கள் சொல்லிட்டுப் போய்ட்டா.''

''அய்யாவுக்கு உச்சி மண்டை குளிர்ந்திருக்குமே.''

''மண்டை மட்டுமா? ஒவ்வொரு சதுர மில்லி மீட்டர் பரப்பளவிலியும் குளிர்ச்சி.''

''ராத்திரி அந்த குளிரைக் கொஞ்சம் போக்கறேன் மை டியர் படவா.''

''ஷ்யூர்?''

''ஷ்யூர்'' என்று ரிசீவரை வைத்தாள்.

★ ★ ★

அந்த ஆஸ்பத்திரியில் இருந்து முழங்கையில் பேண்டேஜுடன் வெளியே வந்த தாமஸ் சற்றுத் தள்ளி இருந்த

ஜனமுற்றோர் டெலிபோன் பூத்தை நெருங்கினான். ஏற்கனவே பேசுவதற்காகக் காத்திருந்த இருவரோடு இவனும் காத்திருந்தான். சிறிது நேரம் கழித்து...

பூத் ஆசாமியிடம் எண் சொல்ல அவன் குறித்துக் கொண்டு சுழற்றி, ரிசீவரை இவனிடம் கொடுத்ததும், ''ஹலோ, நான் தாமஸ் பேசறேன். புறப்பட்டுக்கிட்டிருந்தேன். வழியில ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். ஒரு ஆட்டோக்காரன் இடிச்சிட்டுப் போய்ட்டான். முழங்கையில கொஞ்சம் ரத்த காயமாய்டுச்சி.''

''.....''

''இல்லை, இல்லை இதுக்காக ஒத்திப் போடறதா இல்லை. நேரா இப்ப அங்கதான் போய்கிட்டிருக்கேன்.''

''.....''

''அதில்லை. உங்களை அப்புறம் எங்கே, எப்போ சந்திக்கிறதுன்னு தெரிஞ்சுக்கத்தான் போன் செஞ்சேன்.''

''.....''

''சரி, சரி சார், ரொம்ப நல்லது.''

''.....''

''உங்களுக்கு அந்தக் கவலையே வேணாம் சார். தாமஸ் கிட்டத்தட்ட ஒரு வேலையை ஒப்படைச்சுட்டா, அது சுத்தமா நடக்குமாங்கிற சந்தேகமே உங்களுக்கு வேணாம். வச்சிடறேன்'' போனை வைத்து விட்டு காசு தந்து விட்டு நடந்தான்.

அருகில் இருந்த மெடிக்கல் ஸ்டோர்சுக்கு சென்றான்.

''ரப்பர் கிளவுஸ் வேணுங்க.''

''என்ன சைஸ்?''

''என் சைஸ்தான்.''

''எதுக்கு சார்?''

''பாத்ரூம் கழுவறதுக்கு ஆசிட் வாங்கினேன். கையில் கிளவுஸ் போட்டுக்கிட்டு ஆசிட் போடுங்கன்னு கடையில் சொன்னாங்க.''

''ஆமாம். நியாயம்தான்.''

பில் போட்டு காகிதத்தில் சுற்றி ஒரு பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். நடந்தான். அடுத்து ஒரு இரும்புக் கடைக்குச் சென்றான்.

''கம்பி வேணுங்க. ஈசியா வளையணும். அதே சமயம் ஸ்ட்ராங்காவும் இருக்கணும்.''

''இதைப் பாருங்க. கட்டிங் பிளேயரால வெட்டினாதான் துண்டாகும்.''

''ரைட்டு, இதே கொடுங்க.''

''எத்தனை அடி வேணும்?''

தாமஸ் மனதில் கணக்கு செய்துவிட்டு, ''ஒரு அஞ்சடி கொடுங்களேன். கொஞ்சம் சின்னதா சுருட்டிக் கொடுத்துடுங்க. பேண்ட் பாக்கெட்ல வச்சிக்கிற மாதிரி, பை எதுவும் எடுத்துட்டு வரலை நான்'' என்றான்.

வாங்கி மற்றொரு பாக்கெட்டில் வைத்துக் கொண்டான் தாமஸ்.

ஒரு ஆட்டோ அமர்த்திக் கொண்டான்.

''மைலாப்பூர் போப்பா.''

''மைலாப்பூர்ல எங்கே சார்?''

கச்சேரி ரோட்ல ஒரு பேஸ்கட் பால் கிரவுண்டு இருக்கு.''

''தெரியும் சார்.''

வந்து சேர்ந்த போது மணி ஏழு.

கூடைப் பந்து கிரவுண்டில் சக்தி வாய்ந்த ஒளி விளக்குகள் போடப்பட்டு வியர்க்க, வியர்க்க ஆட்டக்காரர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உட்கார்ந்தும், நின்றும் ஆட்டத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டு கை தட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவனாகச் சென்று நின்று கொண்டான் தாமஸ். அருகில் நின்றவனிடம் ஆட்டத்தின் நிலவரத்தை விசாரிக்க இன்னும் சில நிமிடங்களில் ஆட்டம் முடிந்து விடும் என்று சொல்லப்பட்டான்.

தேவா ஆட்டக்காரர்களில் ஒருவனாக சுறுசுறுப்பாகப் பந்தைக் கடத்திச் சென்று கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்தான். அவன் கைக்கு பந்து கிடைத்து விட்டால் குறி தப்பாமல் கூடைக்குள் அவன் போட்டு விடுவதால், அவனிடம் பந்து வரும்போதெல்லாம் ரசிகர்கள் வுய், வுய் என்று கூச்சலிட்டார்கள்.

ஆட்டம் ஏழரை மணிக்குத்தான் முடிந்தது.

பார்வையாளர்கள் கலையத் துவங்கினார்கள்.

விளையாடியவர்கள் மர நாற்காலியில் அமர்ந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டு துண்டெடுத்து வியர்வை துடைத்துக் கொண்டார்கள். அவர்களில் பலர் 'வரட்டுமா, அப்புறம் பார்க்கலாம்' என்று அவரவர் ஸ்கூட்டர், பைக், சைக்கிள்களில் சென்று விட...

தேவாவும் இன்னும் இரண்டு பேர்களும் மட்டும்தான் எஞ்சியிருந்தார்கள். வியர்வையில் முழுக்க தொப்பலாக நனைந்திருந்த தனது சட்டையைக் கழற்றி மற்றொரு நாற்காலியில் போட்டிருந்த தேவா, ''மணி என்னப்பா ஆச்சி?'' என்றான். சற்றுத் தள்ளி ஒரு மரத்தினடியில் நின்று சிகரெட் பிடித்துக் காத்திருந்தான் தாமஸ்.

''ஏழு நாப்பது.''

எட்டு மணிக்கு பிரதீபா வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்ததும் தேவா தான் கொண்டு வந்திருந்த சிறிய பையில் இருந்து மற்றொரு சட்டை எடுத்து அணிந்து கொண்டான். ஈர சட்டையை உள்ளேப் போட்டான். கழற்றிப் போட்டிருந்த ஷூக்களை அணிந்து கொண்டதும்... மற்ற இருவரும் எழுந்து கொண்டனர்.

''தேவா. சீ யு குட் நைட்'' இரண்டு பேரும் ஒரு பைக்கில் சென்று விட, தேவா அந்த பேகை நாற்காலி மேலேயே வைத்து விட்டு கிரவுண்டின் மூலையில் இருட்டாய் இருந்த பகுதியில் ஒளிந்து கொண்டிருந்த டாய்லெட் ரூம் நோக்கி நடக்கத் துவங்கினான்.

தாமஸ் சிகரெட்டை பாதியில் கொலை செய்து வீசிவிட்டு அதே காரியம் நிமித்தமாக தேவாவை இடைவெளி விட்டுத் தொடர்ந்தான்.

8

தேவாவின் வாக்மென் டேப்ரெக்கார்டரின் ஹெட் போன்சை காதில் மாட்டிக் கொண்டு நத்திங் பட் விண்டின் புல்லாங்குழலின் இசை ஜாலங்களில் லயித்துப் போயிருந்தாள் பிரதீபா.

கேஸட் முடிந்த பிறகுதான் கண்களைத் திறந்தாள். நேரம் ஒன்பது என்பதை உணர்ந்ததும் தூக்கிப் போட்டது.

எட்டு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு, ஒரு மணி நேரமாயிற்றே! ஏன் இன்னும் காணோம்? ஹோட்டலில் டேபிள் வேறு ரிசர்வ் செய்து வைத்திருக்கிறேனே.

தேவா பேஸ்கட் பால் விளையாடும் மைலாப்பூர் மைதானம் இருக்கும் இடம் தெரியும். இரண்டு தடவைகள் அங்கே பிக்கப் செய்திருக்கிறேன். கார்தான் இருக்கிறதே. போய் பிக்கப் செய்து கொண்டால்?

ஒப்புக்கொள்ள மாட்டார். விளையாடின வியர்வை போக குளித்தாக வேண்டும் தேவாவுக்கு. மீண்டும் இங்கேதான் வரவேண்டும். நான் காரில் போகிற சமயத்திற்குள் தேவா இங்கே வந்து விடவும் வாய்ப்பு உண்டு.

பிரதீபா மேலும் காத்திருப்பது என்று தீர்மானித்து அந்த அறையின் அலங்கோலங்களை சுத்தப்படுத்தத் துவங்கினாள். தனித் தனியாய் தொங்கின சட்டை பேண்ட்களை ஹேங்கர்களில் மாட்டி, புத்தகங்களை அடுக்கி வைத்து, ஒன்பதே முக்காலுக்கு மிகவும் கவலைப்படத் துவங்கி விட்டாள்.

ஏதோ மேட்ச் என்று சொன்னாரே. அது இன்னும் முடியவில்லையா?

பிரதீபா ஒரு காகிதம் எடுத்து எழுதினாள். 'தேவா, உனக்காக 9.45 வரை காத்திருந்து சலித்துப் புறப்படுகிறேன். மைலாப்பூர் கிரவுண்டுக்குத்தான் போகிறேன். அங்கே நீ இல்லை என்றால் நேராக என் வீட்டுக்குப் போய் விடுகிறேன். மிகவும் நேரமாகி விட்டதால் நாளைக்கு சந்திக்கலாம். நீ எத்தனை மணிக்குத் திரும்பினாலும் அருகில் எங்கிருந்தாவது என்னோடு போனில் பேசி விடு. ஓக்கே?''

அந்த சீட்டுடன் போர்ஷனுக்கு வெளியில் வந்து கதவைப் பூட்டி வழக்கமாக அவன் சாவியை செருகி வைக்கும் நான்காவது ஓட்டுக்கு அடியில் கடிதத்தையும், சாவியுடன் சேர்த்து சுருட்டி செருகி வைத்து விட்டுப் புறப்பட்டாள்.

மைலாப்பூரின் அந்த விளையாட்டுத் திடலின் வாசலில் அவள் காரை நிறுத்தினபோது உள்ளே இரண்டு போலீஸ்

ஜீப்களும், ஒரு ஆம்புலன்ஸ் வேனும் நின்று கொண்டிருக்க, ஒரே கூட்டமும், குழப்பமுமாக இருந்தது.

காரை விட்டு இறங்கி கூட்டத்தை நோக்கி நடந்த பிரதீபா எதிர்ப்பட்ட ஒருவனை நிறுத்தி, ''என்ன அங்கே?'' என்று விசாரித்தாள்.

கேட்டது பெண் என்பதால் தள்ளிக்கொண்டே வந்த தன் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு அவன் விலாவாரியாகச் சொல்ல ஆரம்பித்தான்.

''டாய்லெட் ரூம்ல வச்சி யாரோ ஒருத்தன் ஒரு ஆளை கழுத்தில கம்பியை சுத்தி நெரிச்சிக் கொலை செஞ்சிப் போட்டுட்டுப் போய்ட்டான்ம்மா. ஒரு மணி நேரம் கழிச்சு யூரின் போறதுக்காகப் போன வாட்ச்மேன் பொணத்தைப் பாத்து அவர் போலீசுக்குச் சொல்ல, அவங்க வந்து பாடியை வெளில எடுத்துக்கிட்டு இருக்காங்க.''

''செத்தது யாரு?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.''

பிரதீபா வேகமாக நடந்து அந்தக் கூட்டத்தை விலக்கி எட்டிப் பார்க்க. அப்போதுதான் கழிப்பறைக்குள்ளிருந்து ஒரு ஸ்ட்ரெட்சரில் வைத்துப் பிணத்தை வெளியில் எடுத்து வந்து ஆம்புலன்ஸ் வேனுக்கு அருகில் தரையில் வைக்க...

அந்த முகத்தைப் பார்த்ததுமே ''தேவா!'' என்று அலறிக் கொண்டு ஓடினாள் பிரதீபா.

வாட்ச்மேனை விசாரித்துக் கொண்டிருந்த இன்ஸ் பெக்டராக புரோமோஷன் ஆகியிருந்த தயாளன் அவளின் அலறலில் திரும்பிப் பார்த்தார்.

தயாளன் ஒல்லியாக இருந்தார். உயரமாக இருந்தார். கழுத்தில் மெல்லிய சங்கிலி அணிந்திருந்தார். முகத்தில்

போலீசுக்கு உரிய பிரத்யேக முரட்டுத் தனங்கள் இப்போது லேசாக வந்திருந்தன.

தயாளன் பிரதீபாவை நோக்கி வந்தார்.

பிரதீபா முகத்தில் அறைந்து கொண்டு, ''மை காட்! தேவா! தேவா!'' என்று வெடித்து அழுது கொண்டிருந்தாள்.

பிணமாகக் கிடந்த தேவாவின் கழுத்தில் சுற்றப்பட்ட மெல்லிய கம்பி அப்படியே இருந்தது.

''எக்ஸ்க்யூஸ் மி, நீ யாரும்மா? இவனைத் தெரியுமா உனக்கு?'' என்றார் தயாளன்.

''என் லவர் சார், என் பேர் பிரதீபா, தொழிலதிபர் கங்காதரோட பொண்ணு. நானும், இவரும் கல்யாணம் செய்துக்கிறதா இருந்தோம். யார் சார் இப்படிக் கொடுமை செஞ்சாங்க! அய்யோ! உயிர் இல்லையா சார்? டெட்? ஆர் யூ ஷ்யூர்? ஓ காட்!'' மீண்டும் அழத் துவங்க...

தயாளன் ஏட்டை அழைத்து, ''இவங்க அழுது முடிக்கட்டும், அப்படி உட்கார வச்சி ரிலாக்ஸ் பண்ண வைங்க, காபி ஏதாவது வாங்கிக் கொடுங்க. நான் வாட்ச்மேனை முழுசா விசாரிச்சிட்டு வந்துடறேன்'' என்றார்.

நகர்ந்து உதவி இன்ஸ்பெக்டரிடம், ''போட்டோ எடுத்தாச் சின்னா, அந்த கம்பியை கழுத்திலேர்ந்து கழட்டிட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைச்சிருங்க. கம்பி போட்டு கழுத்தை நெரிச்சி கொலை செஞ்சிருக்கான்னு பார்த்தாலே தெரியுது. ஸோ, வி டோண்ட் எக்ஸ்பெக்ட் மச் ஃப்ரம் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட். இந்தக் கேஸில அது பெரிசா ஹெல்ப் பண்ணாதுன்னுதான் நினைக்கிறேன். செத்தவனை அடையாளம் தெரிஞ்ச ஆள் கிடைச்சாச்சு. இல்லைன்னா எடுத்ததுமே கேஸ் அறுக்கும்'' என்றார்.

நடந்து கைகளைக் கட்டிக் கொண்டிருந்த வாட்ச்மேனிடம் வந்தார் தயாளன். காக்கி பேண்ட்டும், காக்கி சட்டையும் போட்டிருந்த அவன் ஒன்று தன் ஷேவிங் பாக்கியில் முள்ளு முள்ளாக தாடி வைத்திருந்தான்.

''ம், சொல்லு, தேவா கடைசியா யார் கூட பேசிட் டிருந்தான்னு சொன்னே?''

''ராமதுரை, வெங்கடேஷ்னு ரெண்டு பேர் சார், அவங்களும் பேஸ்கட் பால் ஆடறவங்கதான் கிளப் மெம்பர்ஸ்தான். மேட்ச் முடிஞ்சி எல்லாரும் கலைஞ்சதும் நான் மர நாற்காலிங்களை ஒவ்வொண்ணா மடக்கி ஆபீஸ் ரூமுக்குள்ளே கொண்டு போய் வெச்சிக்கிட்டிருந்தேன். அப்போ தேவா சார் அவங்க ரெண்டு பேர் கூடவும் பேசிக்கிட்டிருந்தாரு.''

''அப்போ மணி என்ன இருக்கும்?''

''ஏழே முக்கால் இருக்கும்.''

''சரி, அப்புறம்?''

''நான் நாலு நாற்காலிங்களை உள்ளே வச்சிட்டு வந்து பார்த்தப்ப தேவா சார் மட்டும் ஷூ போட்டுக்கிட்டிருந்தாரு, அவங்க ரெண்டு பேரும் பைக்லே புறப்பட்டுப் போனாங்க. இவரு பாத்ரூம் பக்கம் நடந்து போனாரு, அப்பறம் நான் பார்த்தது பொணமாதான் சார்.''

''அதான் எப்படி?''

''எல்லா நாற்காலிங்களையும் எடுக்கறப்ப தேவா சாரோட சின்ன பை மட்டும் ஒரு நாற்காலில இருந்துச்சி. மறந்து வச்சிட்டு வீட்டுக்குப் போய்ட்டார் போலிருக்கு, நாளைக்கு வர்றப்ப கொடுத்துக்கலாம்னு எடுத்து ஆபீஸ் ரூம்ல வச்சிட்டுப் பூட்டிட்டுப் போய் சாப்பிட்டு விட்டு வந்தேன் சார்.

ஒண்ணுக்கு போறதுக்காக பாத்ரூமுக்குப் போனா... வழியில கிடந்தார் இப்படி! எனக்கு ஒரு நிமிஷம் மார் நின்னுப் போச்சி! வெடவெடன்னு ஆய்டுச்சி! சத்தம் போட்டுட்டு ஓடினேன். அப்புறம் பக்கத்துக் கடையிலேர்ந்து உங்களுக்குப் போன் செஞ்சோம்.''

''சந்தேகத்துக்கிடமா யாரையாவது பார்த்தியா?''

''இல்லை சார்.''

''அவர் மேல யாருக்காவது பகை உண்டா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். இங்கே வந்து விளையாடுவாரு. போவாரு. இங்கே எதுவும் பிரச்சினை இல்லை. ரொம்ப நல்ல மாதிரி பழகுவார். தீபாவளி, பொங்கல்ன்னா கிளப்புலேர்ந்து எனக்கு போனஸ் கொடுப்பாங்க. இவர் தனிப்பட்ட முறையில பத்து, இருபது கொடுப்பாரு. ஒரு தடவை அவருக்கு சேராத ரெண்டு சட்டை கூட எனக்குக் கொடுத்திருக்காரு. பாவி இப்படி அநியாயமா கொன்னு போட்டிருக்கான்.''

''அந்த ராமதுரை, வெங்கடேஷ் இவங்க விலாசம் தெரியுமா?''

''அவங்களும் மெம்பர்ஸ்ன்னு சொன்னேனே. ஆபீஸ்ல புத்தகத்திலே இருக்கு சார்.''

ஆபீசில் இருந்து அந்த விலாசங்களைப் பெற்ற தயாளன் ஒரு கான்ஸ்டபிளை அழைத்து, ''ஆட்டோ பிடிச்சிகிட்டு இந்த விலாசங்களுக்குப் போய் இந்த ரெண்டு பேரையும் கையோட இங்கேயே கூட்டிக்கிட்டு வந்துடு'' என்று அனுப்பி விட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து விசும்பிக் கொண்டிருந்த பாத்ரூம் அருகில் வந்து மற்றொரு மர நாற்காலியை [illegible] போட்டுக் கொண்டு அமர்ந்தார்.

39626
5710213

தேவாவின் பிணத்தை ஏற்றிக் கொண்ட ஆம்புலன்ஸ் வேன் புறப்பட்டுச் சென்றதும், கூட்டத்தில் பாதி பேர் கலைந்திருந்தார்கள். அலுவலகத்தில் இருந்து நீளமான வயர் போட்டு அந்த இடத்திற்கு தற்காலிக பல்ப் வெளிச்சம் பரப்பிக் கொண்டிருக்க, காற்றில் அதன் அசைவுக்குத் தக்கபடி, நடப்பவர்களின் நீளமான நிழல்கள் அசைந்து கொண்டிருந்தன.

''பிரதீபா, தேவாவை உங்களுக்கு எத்தனை நாளா தெரியும்?''

''ஏழு மாசமா நாங்க காதலிக்கிறோம் சார்.''

''அவர் எங்கே இருக்கார்? என்ன பண்றார்?''

அவள் விபரமாகச் சொல்லச் சொல்ல ஏட்டு குறிப்பு எடுத்துக் கொண்டார்.

''ஸோ, அவருக்குப் பகை யாரும் இல்லைன்னு சொல்றீங்களா?''

''என்கிட்ட அப்படி யாரைப் பற்றியும் அவர் சொன்ன தில்லை. என்கிட்டயே அவர் மறைச்சிருந்தாதான் உண்டு. ஒருவேளை அவர் வேலை பார்க்கிற ஆபீஸ்ல எதாச்சும் தகராறுகள் நடந்திருக்கலாம். நாங்க கல்யாணம் பண்ணிக்க இருந்தோம் சார்.''

''ஸாரிம்மா, உங்க அப்பா அதுக்கு சம்மதிச்சுட்டாரா?''

''இன்ஃபாக்ட், எங்க காதல் விவகாரத்தை இன்னிக்கு ஈவினிங்தான் நான் என் அப்பாகிட்ட சொன்னேன். முதல்ல வருத்தப்பட்டார். அப்புறம் நாளைக்கு அவரை வீட்டுக்கு வரச் சொல்லு, பேசறேன்னு சொன்னார். அதை சொல்லத்தான் நான் அவர் வீட்ல வெய்ட் பண்ணேன். எவ்வளவு சந்தோஷமா இருந்தேன் தெரியுமா நான்! எனக்கு

நடுங்குது சார். இப்பகூட என் தேவா நோ மோர்னு என்னால நம்ப முடியலை. எனக்கு படபடப்பா வருது. பைத்தியம் பிடிச்சிடும் போலிருக்கு.''

''துணைக்கு ஆள் அனுப்பறேன். நீங்க வீட்டுக்குப் போகலாம். உங்க ஷாக் புரியுது. இந்த மனநிலையில் உங்களை கேள்வி கேட்டு தொந்தரவு பண்ண விரும்பலை. நாளைக்கு நிதானமா மேற்கொண்டு விசாரிச்சுக்கறேன். தேவாவோட அண்ணனும், அம்மாவும் வேளாங்கன்னில இருக்கிறதா சொன்னீங்களே, அட்ரஸ் தெரியுமா?

''எனக்கு அட்ரஸ் தெரியாது சார். அவர் வீட்டுல டைரில எழுதி வெச்சிருப்பார்.''

''அவரோட போர்ஷனுக்கு எப்படியும் நான் போய்தான் ஆகணும். பார்த்து வயர்லெஸ் மூலமா அங்கே ஸ்டேஷனுக்கு தகவல் சொல்லி அவங்கிட்ட பக்குவமா செய்தியை சொல்லச் சொல்லிடறேன். ராத்திரி நேரம். இப்ப போஸ்ட் மார்ட்டம் செய்யமாட்டாங்க. காலைலதான் செய்வாங்க. ஒரு பனிரெண்டு மணிக்கு மேல பாடியைக் கொடுக்க முடியும்னு நினைக்கிறேன். திஸ் ஈஸ் ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன்.''

''தேங்க் யூ சார்'' என்று எழுந்து கொண்ட பிரதீபா தன் வீட்டு விலாசம் சொல்லிவிட்டு, யாரும் துணையாக வரத் தேவையில்லை என்று நிராகரித்து விட்டு நடந்தவள் திரும்பி வந்தாள் வேகமாக, சார்!''

''என்ன?''

''நேத்து ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்ததா என்கிட்ட தேவா போன்ல சொன்னார்'' என்று துவங்கி ஷர்மிலி விவகாரத்தை தேவா சொன்னவற்றை எல்லாம் சொல்லி, ''ஒருவேளை தன் காதல் கை கூடலைங்கிற கோபத்தில அந்த பணக்காரி ஆளை விட்டு இப்படி விபரீதமா நடத்து கிட்டிருக்கலாமா சார்?'' என்றாள்.

''விசாரிச்சுடலாம், இந்த கிரவுண்டுக்குப் பக்கத்தில் உள்ள ஏதோ ஒரு பங்களா, பேர் ஷர்மிலி. அப்பா ஹிந்தி சினிமா புரொட்யூசர். இந்த தகவல்களை வச்சி உடனே விசாரிச்சிடலாம். நீங்க போங்க.''

அவளை அனுப்பிவிட்டு தயாளன் இன்னொரு கான்ஸ்டபிளிடம் அந்த விபரங்களை எல்லாம் சொல்லி, ''அப்படி இங்கே யார் இருக்கான்னு விசாரிச்சிட்டு வா. அவர்களைக் கூட்டிக்கிட்டு வர வேணாம். விசாரிச்சுட்டு மட்டும் வா'' என்று அனுப்பி வைத்தபோது சப் இன்ஸ்பெக்டர் மாலிக் பரபரப்பாய் வந்தார்.

''என்ன மாலிக்?''

''சார், ஒரு கன்ஃப்யூஷன். கழுத்தை நெரிச்சிதானே கொலை செஞ்சிருக்கான்?''

''டெஃபனெட்லி.''

''டாய்லெட்ல பாடி கிடந்த இடத்துக்குப் பக்கத்தில ரெண்டு சொட்டு ரத்தம் இருக்கு சார். இப்பதான் கவனிச்சேன். ஆனா பிணத்தில ரத்தம் வர்ற மாதிரி ஒரு சின்ன சிராய்ப்புக் காயம் கூட கிடையாது. நல்லாப் பார்த்துட்டேன்.''

''நானும் பார்த்தனே. ரத்தம் சொட்ற அளவுக்கு எந்தக் காயமும் இல்லையே. கமான், லெட் அஸ் சீ'' தயாளன் அவரோடு டாய்லெட் அறைக்கு விரைந்தார்.

அந்த டாய்லெட் அறைகளுக்கான கட்டடத்தில் மொத்தம் நான்கு தனித்தனி அறைகள் வரிசையாக இருந்தன. அந்த அறைகளுக்குப் போகும் வழியில்தான் தேவா விழுந்து கிடந்தான். அவன் உடல் இருந்த அமைப்பை சாக்பீசால் எல்லைக் கோடு கட்டியிருந்தார்கள்.

மாலிக் காட்டிய இரண்டு சொட்டு ரத்தம் தரையில் இல்லை. ஒரு பக்க சுவரில் இருந்தன. சொட்டுக்களாக

இல்லை. இரண்டு கோடுகளால் ஐந்து இன்ச் நீளத்திற்கு இறங்கி அவற்றின் கீழ் முனைகளில் சிறிய முத்துக்களாகத் திரண்டு உறைந்திருந்தது.

''தெறிச்ச மாதிரி இல்லே?'' என்ற தயாளன் அதை மிக அருகில் சென்று உற்றுப் பார்த்து, ''நோ டவுட், ரத்தம்தான். ஃபாரன்சிக் ஆசாமிங்க என்ன ஆச்சு?''

''வந்துகிட்டிருக்காங்க சார்.''

''ஞாபகமா இதை எடுத்துக்கச் சொல்லுங்க. பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்றப்ப தேவாவோட உடம்புலேர்ந்து ரத்தம் வெளியேறும் வகையில காயம் எதுவும் இருக்கான்னு உன்னிப்பா பார்த்துடச் சொல்லுங்க. தேவாவோட ரத்தம் என்ன குரூப்ன்னும் தெரிஞ்சிக்கிட்டா நல்லது.''

தயாளன் தன் ஷேவ் செய்த மோவாயைத் தடவியபடி வழிந்திருந்த இரண்டு ரத்தச் சொட்டுக்களைப் பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார்.

பிறகு டாய்லெட் கட்டடத்தை விட்டு வெளியே வந்து மூக்கைப் பொத்தியிருந்த ஒரு கையை விடுவித்துக் கொண்டார்.

''வெங்கடேஷ், ராமதுரை ரெண்டு பேரையும் அழைச்சுட்டு வரச் சொல்லி இருக்கேன். வந்தா இங்கேயே வெய்ட் பண்ணச் சொல்லுங்க. நான் தேவாவோட ட்ரிப்ளிக்கேன் வீடு வரைக்கும் போய்ட்டு வந்துடறேன். முதல் காரியமா அவன் அண்ணனுக்குத் தெரிவிச்சாகணும். நீங்க இங்கேயே இருங்க மாலிக்.''

தயாளன் ஜீப்பில் புறப்பட்டார்.

தேவா குடியிருந்த வீட்டின் சந்தில் ஜீப் திரும்பியதும் முனையிலேயே நிறுத்தி டோர் நம்பர் சொல்லி விசாரித்துக் கொண்டார்.

யாரையும் கேட்க அவசியமில்லாமல் இருந்த மாடிப்படி அமைப்பில் விடுவிடுவென்று ஏறி மேலே வந்தார். கூரையாக ஓடுகள் வேயப்பட்டிருந்தன.

பிரதீபா சொன்னபடி நான்காவது ஓட்டிற்கு அடியில் விரல் விட்டுப் பார்த்தார். காகிதத்தில் சுற்றின சாவி கிடைத்தது.

பிரதீபா தேவாவுக்கு எழுதின சிறு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். ச்சை! சற்று முன் வரை அந்தப் பெண்ணுக்கும் அவனுக்கும் மனதில் எத்தனை கனவுகள் இருந்திருக்கும்.

ஒரு சின்ன கம்பியை கழுத்தில் சுற்றி இறுக்கி, அவர்களின் அத்தனை கனவுகளையும் கரையச் செய்துவிட்டானே பாவி!

எவ்வளவுதன் துக்கமென்றாலும் மேல்தட்டுப் பெண்கள் நாகூக்காக தான் அழுவார்கள். அந்தப் பெண் பிரதீபா முகத்தில் அறைந்து கொண்டு 'தேவா! தேவா!' என்று கதறி அழுதது எப்படி உலுக்கி எடுத்தது.

சாவி போட்டு பூட்டைத் திறந்து, இரட்டைக் கதவுகளை உள்பக்கம் தள்ளி போர்ஷனுக்குள் வந்து விளக்கின் சுவிட்ச் தேடி போட்டார்.

ஒரு ஹாலும், அதனையொட்டிய சிறிய சமையலறையும் மட்டுமே போர்ஷன். கிச்சனில் ஸ்டவ்வும், சொற்பமான பாத்திரங்களும் மட்டுமே இருந்தன. அறையிலும் எக்கச் சக்கமா பொருள்கள் இல்லை.

ஒரு மரக்கட்டில், அதன் மேல் சுருட்டி வைக்கப்பட்ட மெத்தை. அறையின் குறுக்கே மூன்று கயிறுகள் கட்டி அவற்றில் துவைத்த துணிகள், துவைக்க வேண்டிய துணிகள் எல்லாம் கிடந்தன. ஒரே ஒரு மர அலமாரி. பிறகு ஒரு மேஜை, நாற்காலி, சுவரோடு ஒட்டின கதவில்லாத ஷெல்புகளில் புத்தகங்கள், தலைவலி தைலம், உடற்பயிற்சிக் கருவி ஒன்று எல்லாம் கலந்து கட்டிக் கிடந்தன.

மேஜை மேல் அழகான ஒரு பிரேமில் பிரதீபாவும், தேவாவும் அணைத்த நிலையில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

தயாளன் நாற்காலியில் அமர்ந்தார். மேஜையின் மேலிருந்த புத்தகங்களைப் புரட்டினார். பெரும்பாலும் விளையாட்டு பற்றியும், உடற்பயிற்சியும், தியானங்கள் பற்றியும் இருந்தன.

மேஜை டிராயர் பூட்டப்படாமல் இருந்தது. இழுத்துப் பார்க்க, உள்ளே எப்போதோ ஏதேதோ வாங்கியதற்கான பில்கள், மாத்திரை சீட்டுகள், கடிதங்கள் என்று குவியலாகக் கிடந்தன.

அவற்றில் இருந்து கடிதங்களை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்தார் தயாளன். அவற்றில் அனுப்புபவர் முகவரிகளை வரிசையாகப் பார்த்தார். 'வேளாங்கன்னி, சதாசிவம்' என்று முழு விலாசத்துடன் இரண்டு கடிதங்கள் இருந்தன.

இரண்டையும் படித்துப் பார்த்தார். அண்ணனும், அம்மாவும், பாசத்துடன் எழுதியிருந்தார்கள். இரண்டு கடிதங்களிலும் தேவாவை விரைவில் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி எழுதியிருந்தார்கள். உனக்கு இஷ்டப் பட்ட எந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள விரும்பினாலும் எங்களுக்குச் சம்மதம் என்று பச்சைக் கொடி காட்டியிருந்தார்கள். மற்ற கடிதங்கள் தேவாவின் சில கல்லூரி நண்பர்கள் நாமக்கல்லில் இருந்தும் நெய்வேலியில் இருந்தும் எழுதியிருந்தார்கள். ஒரு கடிதம் விடாமல் அத்தனையையும் விடுவிடுவென்று படித்துப் பார்த்தார்.

அவற்றில் விசேஷமாக எதுவும் இல்லை. கல்லூரி கால நட்பு என்பதும், படிக்கும் நல்ல விஷயங்களைப் பற்றி, பார்க்கும் சினிமாக்களைப் பற்றி மேலோட்டமாகப் பகிர்ந்து கொள்பவர்கள் என்பதும் அவற்றிலிருந்து புலப்பட்டது.

மேஜை டிராயரில் ஒரு ஒற்றை சாவி வளையத்துடன் இருந்தது.

அருகில் இருந்த மர அலமாரியின் சாவியாய்தான் இருக்க வேண்டும் என்னும் யூகத்தில் அதைத் திறந்து பார்க்க, திறந்து கொண்டது.

உள்ளே உடைகள் அடுக்கி வைத்திருந்தான். அவனது அலுவலகத்தில் இருந்து வருகிற சம்பள ஸ்டேட் மெண்ட்களை ஃபைல் செய்து வைத்திருந்தான். லைஃப் இன்ஷ்யூரன்ஸ் சர்ட்டிஃபிகேட் இருந்தது. இருபத்தையாயிரம் ரூபாய்க்குத் தன்னை இன்ஷ்யூர் செய்திருந்தான். மொத்தம் முப்பதாயிரம் ரூபாய் மதிப்பில் ஏழெட்டு பேங்க் டெபாசிட் ரசீதுகள் அவனுடைய திட்டமிடலையும், சேமிப்புணர்வையும் மௌனமாகப் பறை சாற்றின.

பேண்ட் அடுக்குக்கு அடியில் இருந்தது ஒரு டைரி.

அதை எடுத்துக் கொண்டு மீண்டும் நாற்காலியில் அமர்ந்தார் தயாளன். அது அந்த வருடத்திய டைரி. முதல் பக்கத்தில்...

'என் காதலியைக் கண்டு கொண்ட நாள் இந்த வருடத்தில் தான். என் இனிய 91! உனக்கு 91 முத்தங்கள் - தேவா' என்று எழுதப்பட்டிருந்தது.

புரட்ட, ஜனவரி மாதம் முழுக்க எதுவும் எழுதப்பட வில்லை. பிப்ரவரியில் பதினேழாம் தேதிதான் முதலாக ஏதோ எழுதியிருந்தான் படித்தார்.

'ஒரு மாதமாகப் பழகியும் இன்றைக்குத்தான் நான் தைரியம் பெற்று பிரதீபாவிடம் என் காதலை வெளிப் படுத்தினேன். பரிட்சை ஜ்வரம் உள்ளே இருந்தது. 'ச்சி! த்தூ' என்று சொல்லிவிடுவாளோ என்று ஒரு உதறல். சில நிமிடங்கள் அமைதியாக இருந்த பிரதீபா 'தேவா, நீ

முந்திக்கிட்டே இதைச் சொல்றதில' என்று சொல்லிவிட்டு ஒரு புன்னகை செய்தாள். அந்தப் புன்னகைக்கு என் ஏழு ஜென்மங்களையும் சாசனம் எழுதி வைக்கத் தயார். என் வாழ்வில் இன்று முதல் டைரி எழுதுவது என்று ஒரு புதிய பழக்கத்தைத் துவக்கியுள்ளேன். இதில் நானும், பிரதீபாவும் சந்திக்கிற அல்லது பேசுகிற நாட்களின் எங்கள் காதல் சம்பவங்களை மட்டும் எழுதப் போகிறேன்.''

தயாளன் அதன் பிறகு வேகமாக பக்கங்களைப் புரட்டிப் பார்க்க, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அதன் பிறகு தொடர்ச்சியாக கடைசி வரை எழுதி வைத்திருந்தான் தேவா.

அவ்வளவையும் படித்துப் பார்க்க நேரமின்றி டைரியின் சமீபத்திய தினங்களுக்கு வந்தார்.

இரண்டு தினங்களுக்கு முன்பு எழுதியிருந்தான் கடைசியாக.

'இன்றைக்குக் கடற்கரையில் பிரதீபாவிடம் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அவளோடு பேசும்போது மணிகள் நிமிடங்களாகப் பறக்கும். திருமணம் செய்து கொள்வது பற்றிப் பேசினோம். தன் அப்பாவைக் கேட்க பயமாக இருக்கிறது என்றாள். அவர் நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டார் என்றாள். எதற்கும் கேட்டு அவர் முடிவைத் தெரிந்து கொண்டு அதன்பிறகு தீர்மானிக்கலாம் என்று சொன்னேன். கூடியவரை பிரச்சினை இல்லாமல் இந்த திருமணம் நடந்தால் நல்லது. தன் அப்பா அந்தஸ்து பார்ப்பவர் என்றும், ஒரு பெரிய கோடீஸ்வரராகப் பார்த்து மாப்பிள்ளையை தேர்வு செய்கிறேன் பார் என்று அடிக்கடி சொல்வார் என்று சொல்லியிருக்கிறார் பிரதீபா. நிச்சயம் எதிர்க்கத்தான் போகிறார். பார்க்கலாம்.'

தயாளன் புருவம் சுருக்கி யோசித்தார்.

தேவா இதில் எழுதியிருப்பதற்கும், பிரதீபா சொன்னதற்கும் முரண்பாடு தெரிகிறதே. 'நாளைக்கு நேரில் அழைத்து வா பேசலாம்' என்று தன் அப்பா சொன்னதாகவும், அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்வதற்காகத்தான் இன்று சந்திக்க இருந்ததாகவும் பிரதீபா சொன்னாளே...

தன் காதலை சொன்ன மாத்திரத்திலேயே எப்படி அவர் ஒப்புக் கொண்டார்? அவர் குணத்தைப் பற்றி இரண்டு பேருமே கவலைப்பட்டுப் பேசியிருக்கிறார்களே.

விசாரிக்க வேண்டும்.

தயாளன் மேலும் சற்று ஆராய்ந்து பார்த்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு போலீஸ் ஜீப்புக்கு வந்தார். மீண்டும் பேஸ்கட் பால் கிரவுண்டுக்கே விடச் சொன்னார்.

9

ரா மதுரை, வெங்கடேஷ் இரண்டு பேரும் திகில் முகங்களுடன் காத்திருக்க, தயாளன் ஜீப்பில் வந்து இறங்கியதும், எழுந்து கொண்டார்கள்.

''தேவாவுக்கு பகையாளி யாராவது உண்டா?'' என்று நேரடியாக ஆரம்பித்தார் தயாளன்.

''தெரியலை சார். இங்கே அவர் விளையாட வர்றப்பதான் பழக்கம். வாங்க, போங்கன்னுதான் பேசுவோம்.''

''கடைசியா அவர் உங்க ரெண்டு பேர் கிட்டதான் பேசிட்டிருந்ததா வாட்ச்மேன் சொல்றான். என்ன பேசினீங்க?''

''நடந்து முடிஞ்ச மேட்ச்சைப் பத்திதான் பேசினோம். யார் எங்கே என்ன தப்பு செஞ்சாங்கன்னு பேசினோம். வேற எதுவும் பேசலை சார்.''

''சரி. நீங்க புறப்பட்டுப் போனப்ப தேவா மட்டும் தனியா டாய்லெட் ரூமுக்குப் போயிருக்கார். அப்பதான் கொலைகாரன் தொடர்ந்து போய் செயல்படுத்தியிருக்கான். ஆக அந்த சந்தர்ப்பத்துக்காக அவன் இங்கேயே ஏதோ ஒரு இடத்தில மறைவா நின்னு காத்துகிட்டிருந்திருக்கணும். அப்படி சந்தேகப்படற மாதிரி நீங்க யாரையாவது பார்த்தீங்களா?''

தயாளன் சொல்லிக் கொண்டு வந்தபோதே வெங்கடேஷின் முகம் பிரகாசமாகி, ''ஆமாம் சார், நான் ஒருத்தனை அதோ அந்த மரத்தடியில பார்த்தேன். சிகரெட் பிடிச்சிக்கிட்டு ரொம்ப நேரமா நின்னுகிட்டிருந்தான். நாங்க மூணு பேரும் பேசிட்டிருந்ததையேப் பார்த்துக்கிட்டிருந்த மாதிரிதான் இருந்தது'' என்றான்.

''வெரிகுட். அவன் எப்படி இருந்தான்? கொஞ்சம் நிதானமா யோசிச்சுச் சொல்லுங்க. அவசரமில்லை.''

''சார், அது அவ்வளவு வெளிச்சமில்லாத இடம். அதனால அவன் முகம், போட்ருந்த சட்டை இதெல்லாம் பத்தி எனக்குத் தெளிவா எதுவும் நினைவில் இல்லை. ஆனா உங்களுக்கு நான் சொல்ற ஒரு பாய்ண்ட் உதவலாம்னு நினைக்கிறேன்.''

''சொல்லுங்க.''

''அவனோட வலது கையில முழங்கை கிட்ட பேண்டேஜ் போட்டு சுத்தியிருந்தான். ஏதோ காயம் போலிருக்கு. ஆனா அந்த வெள்ளை பாண்டேஜையும் மீறி சிகப்பா ரத்தம் ஒரு வட்டமா பரவியிருந்திச்சி.''

தயாளன் விரைப்பானார். கொலை நிகழ்ந்த இடத்தில் தேவா கிடந்த இடத்திற்கு அருகில் சுவரில் இரண்டு சொட்டு ரத்தம்!

ரத்தக் காயத்திற்குப் போடப்பட்ட பாண்டேஜின் சந்தேகத்திற்கிடமாய் ஒரு ஆசாமி காத்திருந்திருக்கிறான் இங்கே. இவர்

சொல்கிற ஆசாமி கொலைகாரனாக இருப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன!

''வெங்கடேஷ், ரொம்ப பெரிய உதவி செஞ்சிருக்கீங்க நீங்க. இன்னும் யோசிங்க. அவன் பக்கத்துல ஸ்கூட்டரோ, பைக்கோ எதுவும் இருந்திச்சா?''

''நல்லா நினைவிருக்கு. அதெல்லாம் எதுவும் இல்லை. அவன் மட்டும்தான் தனியா நின்னுகிட்டிருந்தான்.''

''வாங்க, எந்த மரத்தடியிலன்னு எனக்குக் காமிங்க.''

நடந்து குறிப்பிட்ட ஒரு மரத்திற்கு அடியில் வந்தார்கள். அந்த இடத்தில் போதுமான வெளிச்சம் இல்லாததால் போலீஸ் ஜீப்பைக் கொண்டு வரச் சொல்லி அதன் ஹெட்லைட்சை அந்த இடத்தை நோக்கி வெளிச்சம் பாய்ச்சச் சொல்லிவிட்டு அந்த இடத்தில் தரையில் மும்முரமாகத் தேடினார்.

ஒரு சிகரெட் துண்டு கிடைத்தது. கோல்ட் ஃபிளேக் ஃபில்டர் சிகரெட் துண்டு அது. அதைத் தவிர வேறு எதுவும் சிந்தனையைத் தூண்டும் விதமாகக் கிடைக்கவில்லை.

உதவி இன்ஸ்பெக்டர் மாலிக்கை அழைத்தார்.

''நாய் வந்துகிட்டிருக்கா?''

மாலிக் தலையாட்டிவிட்டுத் திரும்பிப் பார்த்து, ''சார், அதோ வந்துகிட்டிருக்கு'' என்றார். வந்து நின்ற துப்பறியும் நாயின் வேனைப் பார்த்து.

நாயும், அதன் டிரையினரும் வர, ''மர்டர் ஸ்பாட்டுக்கு பிடிச்சிக்கிட்டுப் போங்க மாலிக்'' என்றார் தயாளன்.

தூரத்தில் இருந்த டாய்லெட் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டதும், டிரையினர் அதற்கான பயிற்சி மொழியில் உத்தரவிட்டு, நாயின் சங்கிலியின் பிடிப்பை சற்றுத் தளர்த்திக்

கொள்ள... அது பாய்ச்சலாக தயாளன் நின்று கொண்டிருந்த மரத்துக்கு வந்தது. பிறகு அந்த கிரவுண்டுக்கு வெளியே சென்று சாலையில் குறிப்பிட்ட தூரம் ஓடி நின்று விட்டது.

அது நின்று விட்ட இடத்திற்கு வந்த தயாளன் மாலிக்கிடம், ''இது பஸ் ஸ்டாப் இல்லை. பார்க்கிங் பகுதியும் இல்லை. அதாவது வந்தவன் பஸ்சில் போகலை. சொந்த வாகனத்திலயும் போகலை. ஆட்டோ, இல்லைன்னா டாக்ஸி இந்த இடத்தில பிடிச்சிருக்கணும். மாலிக், விசாரிங்க'' என்றவர் வெங்கடேஷ் சொன்ன, வந்தவன் பேண்டேஜ் போட்டிருந்த விபரத்தைச் சொன்னார், ''பத்து, பதினைஞ்சி கான்ஸ்டபிள்களை போட்டு ஒரு ஆட்டோ ஸ்டாண்ட் விடாம விசாரிக்கணும். ராத்திரி எட்டு மணிக்கு கிரவுண்ட் வாசல்ல கைல பேண்டேஜோட ஒரு ஆசாமியை சவாரி ஏத்திக்கிட்டுப் போனது யாரு? இதான் கேள்வி. அவனை எங்கே இறக்கி விட்டான்?''

''செஞ்சிடலாம் சார். முகத்தோட அடையாளம் சொன்னாக்கூட மறந்திருப்பாங்க. கைல பேண்டேஜ்ங்கிறது யாரும் பார்க்கத் தவறாத ஒரு விஷயம். மறக்காம வெச்சிருப்பாங்க'' என்றார் உற்சாகமாக மாலிக்.

10

''மே ஐ கமின்?'' கதவை லேசாகத் திறந்தபடி கேட்டார். யூனிஃபார்மில் இருந்த இன்ஸ்பெக்டர் தயாளன்.

அனாமிகாவின் ஒவ்வொரு விரலாக நெய்ல் பாலீஷ் போட்டுக் கொண்டிருந்த ஆல்பர்ட் உடனே அந்த பாட்டிலை மறைத்து வைத்தான். அனாமிகா, ''யெஸ்'' என்றாள் ஸ்டைலாக.

எதிர் நாற்காலியில் அமர்ந்த தயாளன் அவளை ஒரு வினாடி உற்றுப் பார்த்துவிட்டு, ''உங்க பேரு அனாமிகாவா இல்லை ஷர்மிலியா?'' என்றார்.

''அனாமிகா தான். ஏன் சார்?''

''பின்னே எதுக்காக ஷர்மிலான்னு தேவாகிட்ட நாடகம்?''

அனாமிகா எச்சில் விழுங்கினாள். பிறகு சுதாரித்துக் கொண்டாள்.

''அதெல்லாம் எங்க புரொஃபஷனல் விஷயங்கள். நீங்க எதுக்கு வந்திருக்கீங்க? அதைச் சொல்லுங்க?''

''உங்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சுகிட்டுப் போய் விசாரிக்கலாமான்னு வந்தேன்.''

அனாமிகா முகம் சிவந்தாள், ''வாட்? யு மின் அரெஸ்ட்?''

''அரெஸ்ட் இல்லை. விசாரணை! தேவைப்பட்டா அரெஸ்ட்! ஒரு கொலைக்கு நீங்க காரணமா இருக்கலாம்னு நாங்க சந்தேகப் படறோம்!''

''நான்சென்ஸ்! சார், நான் டிடெக்டிவ் ஏஜன்சி நடத்திக் கிட்டிருக்கோம். பல குற்றவாளிகளை கண்டுபிடிச்சிருக் கோமேயொழிய... கொலையாவது! நாங்களாவது! ஜோக்! சிரிச்சே ஆக வேண்டிய ஜோக்!''

''மிஸ் அனாமிகா. பீ சீரியஸ். தேவா கொலை செய்யப் பட்டதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''தேவா கொலை செய்யப்பட்டாரா?'' என்றான் ஆல்பர்ட். இலவச இணைப்பாக ஆச்சரியத்தை முகத்தில் சேர்த்துக் கொண்டு,

மேஜை மீது கிடந்த அன்றைய தின செய்தித்தாளை எடுத்த தயாளன் அதன் மூன்றாம் பக்கத்தைப் புரட்டி மடக்கி தேவா கொலை பற்றி வந்த செய்திப் பகுதியை அவள் பக்கம் திருப்பி

வைக்க, அனாமிகா அதை வரிவரியாய் வாய்விட்டு வாசித்து முடித்து, ''மை காட்'' என்றாள்.

''தேவாவோட காதலி பிரதீபாகிட்ட தேவா தன்னை ஷர்மிலாங்கிற பொண்ணு திடீர்னு கார்ல வந்து சந்திச்சு காதலிக்கிறதா சொன்ன விபரத்தைச் சொல்லி இருக்கார். அந்த ஷர்மிலி தனக்கு தேவா கிடைக்காத ஆத்திரத்தில ஆள் வச்சி கொலை செய்திருக்கலாம்னு பிரதீபா நினைக்கிறாங்க. பேஸ்கட் பால் மைதானத்தை சுத்தி உள்ள அத்தனை பங்களாவிலேயும் விசாரிச்சுட்டோம். ஷர்மிலான்னு யாரும் இல்லை. தேவாவோட ஆபீஸ்ல இன்னைக்கு விசாரிச்சப்ப ஈவினிங் ஆபீஸ் முடிஞ்சி ஒரு கார்ல ஒரு பொண்ணோட தேவா போனதை பார்த்த நண்பர் ஒருவர் கார் நம்பரையே மனப்பாடம் செய்திருந்து சொன்னார். அதுக்கப்புறம் நான் உங்ககிட்ட வர்றதுக்கு ரொம்ப நேரமாகலை. டெல் மி, எதுக்காக ஷர்மிலி வேஷம்? இந்த கொலையில உங்க பங்கு என்ன?'' என்றார் தயாளன்.

''சார், இந்த கேசில இவ்வளவு சிக்கல் இருக்கும்னு தெரியாமப் போச்சே. சார், பிரதீபாவோட அப்பா கங்காதர் தன்னோட ஆள் ஒருத்தனை எங்க ஏஜன்சிக்கு அனுப்பியிருந் தார். அவன் பேர் தாமஸ். பிரதீபா ஒரு பையனை காதலிக்கிறா. அவன் யாரு, எப்படிப்பட்டவன்னு விசாரிச்சிச் சொல் லணும்னு கேட்டுக்கிட்டான். கல்யாணம் நிச்சயமான பொண்ணைப் பத்தியோ, மாப்பிள்ளையைப் பத்தியோ இப்படி தகவல் விசாரிக்கச் சொல்லி எங்களை மாதிரி ஏஜன்சிகளுக்கு நிறைய பேர் வர்றதுண்டு சார்.''

''தெரியும், மேல சொல்லுங்க.''

அனாமிகா அந்த தகவல்களைத் திரட்டுவதற்காகத் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் சொல்லி முடித்து, ''தேவாவை கொலை செய்வான்னு எனக்கு எப்படி சார் தெரியும்?'' என்றாள்.

''சரி தாமஸ் அட்ரஸ் என்ன?''

''தரலை, அவன் கங்காதர் கிட்ட மெய்க்காப்பாளனா இருக்கிறதா சொன்னான். ரெண்டாயிரம் சார்ஜ் பண்ணேன். அட்வான்ஸ் ஆயிரம் கொடுத்துட்டு, தகவல் வாங்கிக் கிட்டப்ப மிச்ச பணத்தைக் கொடுத்தான்.''

''தேவாவைப் பத்தி நீங்க கொடுத்த ரிப்போர்ட்டோட காப்பி கொடுங்க.''

அனாமிகா திரும்பி ஆல்பர்ட்டைப் பார்க்க, அவன் சென்று பீரோ திறந்து ஃபைல் எடுத்து வந்து புரட்டி டேக் நீக்கி எடுத்துக் கொடுக்க, தயாளன் அதை நிதானமாகப் படித்துப் பார்த்தார்.

''தன் அப்பா தன் காதலனைப் பத்தி விசாரிக்கச் சொல்லியிருக்கிறது தெரிஞ்சா பிரதீபா வருத்தப்படுவாங்க. அதனால நீங்க விசாரிக்கிறது பிரதீபாவுக்குத் தெரியக் கூடாதுன்னு தாமஸ் சொன்னான்.''

''ஐ.சி! ஆக.. தன் மகள்கிட்ட காதலை ஆதரிக்கிற மாதிரி ஒரு நாடகம் ஆடிட்டு கங்காதர் தன் ஆளை அனுப்பி உங்க மூலமா தேவாவைப் பத்தி முழுக்க தெரிஞ்சிகிட்டு அவனை தீர்த்துக் கட்ட ஏற்பாடு செய்திருக்கணும்'' என்றார் தயாளன்.

''ஆமாம் சார். இது அநியாயம், போய் அவரை உடனே கைது செய்ங்க சார்.''

''அப்படி எல்லாம் உடனே எதுவும் செஞ்சிட முடியாதுங்க. தனக்கு இதைப் பத்தி எதுவுமே தெரியாதும்பார். அந்த தாமசைப் பிடிக்கலாம். அவனை விசாரிச்சுட்டுதான் அவர்கிட்ட போகணும். உங்க போனை நான் யூஸ் பண்ணிக்கிறேன்.'' என்று ரிசீவர் எடுத்து எண்கள் சுற்றினார்.

''ஹலோ பிரதீபா பேசறேன்.''

''நான் இன்ஸ்பெக்டர் தயாளன் பேசறேன். நீங்க கொஞ்சம் ஸ்டேஷன் வரைக்கும் வந்தா தேவலாம். கொஞ்சம் பேசணும் மேடம்.''

''வர்றேன் சார். கொன்னவனைப் பிடிச்சிட்டீங்களா?''

''நெருங்கிட்டோம். பிடிச்சிடலாம். ஒரே ஒரு கேள்வி. இன்னிக்கு உங்க வீட்டுக்கு தாமஸ் வேலைக்கு வந்திருக்கானா?''

''தாமஸ்?''

''உங்கப்பாவோட மெய்க்காப்பாளன் தாமஸ்!''

''அவன் வேலையை விட்டு நின்னு ஒரு வருஷத்துக்கு மேல ஆச்சே சார்!''

''அப்படியா? சரி. ஸ்டேஷனுக்கு வாங்க நேர்ல பேசலாம்'' ரிசீவரை வைத்த தயாளன் சற்றே குழப்பமுற்றார். எதிரே அனாமிகாவைப் பார்த்தார்.

''தாமசை உங்களால அடையாளம் காட்ட முடியுமா?''

''தாராளமா'' என்று அனாமிகாவும் ஆல்பர்ட்டும் ஒரே நேரத்தில் சொல்ல, உடனே அனாமிகா ஆல்பர்ட்டை முறைத்தாள்.

''இது சம்பந்தமா கங்காதர் நேரடியா போன்ல பேசவே இல்லைதானே?''

''ஆமாம். பேசலை சார்?''

''நீங்களும் நடுவில அவரை காண்டாக்ட் செய்யலை?''

''இல்லை. தாமஸ் சொன்னான் கங்காதரை நாங்க இது விஷயமா காண்டாக்ட் பண்ணக் கூடாது. தன்னை காண்டாக்ட் பண்றதுக்கும் எந்த அட்ரசும் கொடுக்கலை. அவனே நேர்ல வந்து தெரிஞ்சுக்கிடறேன்னு சொன்னான்.''

''உங்களுக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் வரலையா? சரியான அட்ரஸ் எதுவும் தராமல் ஒருத்தன் ஒரு ஆசாமியைப் பத்தி விசாரிக்க சொல்லியிருக்கான். அவன் நேர்மையான ஆள் தானா, நல்ல நோக்கத்தோடதான் வந்திருக்கான்னு நீங்க யோசிச்சிருக்கணும் மேடம்!''

''நியாயம்தான். பிரதீபாவுக்கு இந்த விசாரணை விசயம் தெரியக் கூடாதுன்னு அவன் சொன்ன காரணம் ஏத்துக்கற மாதிரி இருந்ததால எனக்குச் சந்தேகம் எதுவும் தோணலை. ஏதோ ஒரு வகையில ஒரு கொலை நடக்க உதவி செஞ்சிருக்கோம்னு நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு.''

''இப்ப வருத்தப் படறதால மார்ச்சுவரில இருந்து தேவா எந்திருச்சி வந்துடப் போறதில்லை மேடம். அந்த தாமஸ் கங்காதர் பேரைப் பயன்படுத்திருக்கான்னு நினைக்கிறேன். முதல்ல தாமசைப் பிடிச்சாகணும். அவன் இங்கே வந்தப்ப யாருக்காச்சும் போன் செஞ்சானா? தன்னைப் பத்தி தகவல் எதாச்சும் சொன்னானா?''

''இல்லை சார்., ஆள் கறுப்பா இருந்தான். முகம் நல்லா ஞாபகம் இருக்கு. வேற எந்தத் தகவலும் அவனைப் பத்தி தர முடியாம இருக்கோம்.''

''சரி நான் சப் இன்ஸ்பெக்டரை அனுப்பறேன். அவரோட போங்க. பழைய கிரிமினல் போட்டோஸ் எல்லாம் காட்டச் சொல்றேன். அதில அவன் இருக்கானான்னு பார்த்துச் சொல்லுங்க'' என்று தயாளன் எழுந்து கொண்டார்.

11

''உங்க வீட்ல ஒரு வருஷத்துக்கு முன்னாடி வேலை பார்த்த தாமசைப் பத்தி சொல்லுங்க'' என்றார் தயாளன்

மின்சார விசிறியின் சுழற்சி வேகத்தை அதிகப்படுத்தி விட்டு வந்து அமர்ந்து.

பிரதீபா முந்தைய தின அழுகையின் விளைவாக கையோடு கைக்குட்டை வைத்திருந்து அதை ஒருமுறை மூக்கின் மேல் உபயோகப்படுத்திவிட்டு, ''சார், அவன் ஒரு மாதிரியான முரட்டு ஆசாமி. அப்பாவுக்கு இடது கை மாதிரி கூடவே இருந்தான். அவனைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது. பிசினஸ்ல பல பிராப்ளம் இருக்கும்மா. அதனால ஒரு பாதுகாப்புக்காக அவனை கூடவே வச்சிருக்கிறேன்னு அப்பா சொன்னார். ஆனா அவன் அப்பாவோட பேரை மிஸ்யூஸ் பண்ண ஆரம்பிச்சான். பல பேர் கிட்ட மிரட்டி காசு வாங்க ஆரம்பிச்சான். அப்பாவுக்கு இது தெரிஞ்சதும் அவனை கழட்டி விட்டாரு. இது நடந்து ஒரு வருஷத்துக்கு மேல இருக்கும் சார்'' என்றாள்.

''தாமஸ் எங்கே குடியிருந்தான்னு தெரியுமா?''

''எங்க வீட்டு அவுட் ஹவுஸ்லதான் குடியிருந்தான். அப்புறம் காலி பண்ணிட்டுப் போய்ட்டான்.''

''அப்புறம் அவன் எங்கே இருக்கான்னு தெரியாதா?''

''தெரியாது சார். அதுக்கப்புறம் அவனை நான் பார்க்கவே இல்லை.''

''பிரதீபா, இந்தக் கொலையை தாமஸ் செய்திருக்கலாம்ன்னு நான் நினைக்கிறேன். ஆனால் கொலைப் பழி உங்கப்பா மேல விழணும்ங்கற மாதிரி யாரோ அவனை நிறமையா தயார்படுத்தியிருக்காங்க. ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்சில முதல்ல அவன் தேவாவைப் பத்தின விபரங்களை சேகரிக்கச் சொல்லி இருக்கான். கங்காதர் அனுப்பி வைச்சதா சொல்லிருக்கான்.''

''மைகாட்! என் டாடியா? சேச்சே! தாமசுக்கும் அவருக்கும் கடுமையான வாக்குவாதம் எல்லாம் வந்து போய்யா

வாய்யான்வெல்லாம் அவன் எங்கப்பாவை திட்டிட்டுப் போனான் சார்.''

''பிரதீபா, இதுவரைக்கும் தேவாவை அவருக்குப் பிடிக்காத யாரோ ஒரு பகையாள் கொலை செஞ்சிருக்கான்னு தான் கோணம் வச்சிருந்தேன். அது இல்லை. உங்கப் பாவையோ இல்லை உங்களையோ தேவாவைக் கொலை செய்றதன் மூலமா பழி வாங்கறது ஒருத்தர் நோக்கம். அவர் உங்கப்பாகிட்டேர்ந்து விலகின தாமசைத் தேடிப் பிடிச்சி அழகா திட்டம் போட்டுக் கொடுத்துப் பழி வாங்கியிருக்கார். அந்த ஒருத்தர் யார்? அதான் இப்ப கேள்வி?''

''தாமசைப் பிடிச்சிட்டா விடை கிடைக்கும் சார்.''

''அது ஒரு பக்கம் நடந்துகிட்டிருக்கு. உங்களுக்கு பர்சனலா எதாச்சும் பகை உண்டா பிரதீபா? யோசிங்க.''

''எனக்கா? எனக்கு என்ன சார் பகை? எங்கப்பாவுக்கு இருக்கலாம். வியாபாரத்தில சில பகை இருக்கிறதா அவரே சொல்லியிருக்கார். அதுக்காக பாதுகாப்புக்கு லைசென்சோட துப்பாக்கிகூட வச்சிருக்கார்.''

நாற்காலியை பின் தள்ளி எழுந்து கொண்ட தயாளன், ''அப்ப உங்க அப்பாவையே கேட்டுடலாம்'' என்றார்.

★ ★ ★

தயாளன் விபரமாகச் சொன்னதும் உதடுகள் துடிக்க உஷ்ணமானார் கங்காதர். ''தாமஸா?'' அந்த ராஸ்க்கலா? வேலில போன ஒணான எடுத்து மடியில கட்டிக்கிட்ட கதையா அவனுக்கு நான் நிறைய சலுகைகள் கொடுத்தேன். அதை எனக்கு எதிராகவே பயன்படுத்தத் துவங்கினான். வெட்டி விட்டேன். இருங்க வர்றேன். மகேந்திரா!''

அவரின் அழைப்புக்கு வந்து நின்றான் யூனிஃபார்மில் இருந்த டிரைவர் மகேந்திரன்.

''தாமஸ் நம்பகிட்டேர்ந்து போனதுக்கப்புறம் நடுவில ஒரு தடவை அவனைப் பார்த்ததா சொன்னியே, எங்கே பார்த்தே? சார் கிட்டச் சொல்லு.''

மகேந்திரன் தயங்கினான். நெளிந்தான்.

''பரவாயில்லை சொல்லு.''

''ஒரு சாராயக் கடையில பார்த்தேன் சார். என்னடா பண்றேன்னு கேட்டேன். மாமா வேலை பார்க்கறேன். பல பேருக்கு இல்லை. ஒரே ஒரு ஆளுக்கு மட்டும்னு சொன்னான். அது யார்ன்னு சொல்லலை. பெரிய மனுஷன்னு சொன்னான். அந்த ஆளுக்கு தேவைப்படறப்பல்லாம் தினுசு தினுசா குட்டிகளை சப்ளை பண்ணுவேன். ஆயிரக்கணக்குல காசு தருவார். அவர் ஒரு ஆளை வெட்டிட்டு வாடான்னு சொன்னா வெட்டிட்டு வருவேன்னு சொன்னான் சார்,'' என்றான் மகேந்திரன்.

''சரி, அவன் எங்கே தங்கியிருக்கான்னு கேட்டியா?''

''திருவான்மியூர்ல ஏதோ ஒரு மாவு மில்லு பேர் சொன்னான் நினைவு இல்லை. அந்த மில்லுக்கு பின்னாடி ஒரு வீட்ல இருக்கிறதா சொன்னான். அந்த மாவு மில்லுக்குத்தான் போன் வரும். உனக்கேதாவது எப்பவாவது தேவைப்பட்டா போன் பண்ணு ஏற்பாடு பண்றேன்னு சொன்னான். ஆளை வுடுப்பான்னு நான் வந்துட்டேன்.''

தயாளன் மனதில் குறித்துக் கொண்டார்.

திருவான்மியூர். மாவு மில். போன் உள்ள மாவு மில்! சுலபமாகப் பிடித்து விடலாம்.

''சார், உங்களுக்கு எதிரா உங்களை இந்தக் கொலைல மாட்டி விடற நோக்கத்தோட யார் செயல்பட்டிருப்பாங்கன்னு உங்களால யூகமா யாரையாவது சொல்ல முடியுமா?''

கங்காதர் யோசித்தார்.

''சார், நான் என் தொழிலைப் பொருத்தவரைக்கும் கொஞ்சம் கண்டிப்பான ஆசாமி. முதல்ல நாங்க நாலு பேர் கூட்டா சேர்ந்து பிசினெஸ் செஞ்சோம். கொள்கை தகராறு அடிக்கடி வரும். நான்தான் மேனேஜிங் பார்ட்னர். சேல்ஸ் கம்மியா இருந்தாலும் பரவாயில்லை. கடன் மட்டும் கொடுக்கக் கூடாதுங்கறது என் பாலிசி. மூணு பார்ட்னர் சுக்கும் இது பிடிக்காது. கடன் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாத்தான் பிசினஸ் இம்ப்ரூவ் ஆகும்னு வாதாடினாங்க. சரின்னு அவங்க சொன்னபடி ஏஜண்ட்சுக்கு கடன் கொடுத்ததிலே ஒரே வருஷத்துல வசூலாக வேண்டிய கடன் ஏழரை லட்சம் ஆய்டுச்சி. மேனேஜிங் பார்ட்னர்ங்கிற முறையில சரியான பார்ட்டி பார்த்து கடன் தராததால அந்த கடனுக்கெல்லாம் நான்தான் பொறுப்புன்னு குற்றம் சாட்டினாங்க. எனக்கு கோபம் வந்து பைசா சுத்தமா கணக்கு பார்த்து விலகிட்டேன். தனியா தொழில் ஆரம்பிச்சேன். அன்லையிலேர்ந்து அவங்க மூணு பேருக்கும் நான் எதிரி மாதிரி ஆய்ட்டேன். அவங்களும் தனித்தனியாக பிரிஞ்சி வேற வேற தொழில் செய்றாங்க. ஆனா என் தொழிலை எப்படி கவுக்கலாம், எப்படி எல்லாம் தொந்தரவு தரலாம். யார் யாருக்கெல்லாம் மொட்டை பெட்டிஷன் போடலாம்னு கூட்டா யோசிச்சி சதி பண்ணுவாங்க. இன்னைக்கும் இது தொடருது. அந்த மூணு பேரைத் தவிர வேறு எனக்குப் பகை இல்லை சார்.''

''அவங்க யாரு?''

''சொக்கநாதன், விஸ்வமூர்த்தி, பாலசிங்கம்'' என்றவர். அவர்கள் இப்போது செய்யும் தொழில் விபரங்களைச் சொல்ல தயாளன் குறிப்பு எடுத்துக் கொண்டார்.

''இந்த மூணு பேர்ல பெண்கள் விஷயத்தில யார் வீக்?''

''அவங்க பர்சனல் லைஃப் எனக்குத் தெரியாது சார். ஸாரி. அனாவசியமா ஒருத்தரை தப்புச் சொல்லக் கூடாது. ஆனா ஒண்ணு. தேவா கொலையில இவங்க யாராச்சும் சம்மந்தப் பட்டிருக்கிறதா நீங்க உறுதியா சொன்னா, சட்டம் அவங்களுக்கு தண்டனை கொடுக்கற வரைக்கும் நான் சும்மா இருக்கப் போறதில்லை. ஐ ஹாவ் பிஸ்டல்! பொறுமையோட எல்லை சார் இது. என் மேல பகைன்னா என் பொண்ணு என்ன செஞ்சா? அவ ஃப்யூச்சரே போய்டுச்சே சார். அவ உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுத்து அந்தப் பையனை அழைச்சிட்டு வாம்மான்னு நான் சொன்னேன் சார். பாருங்க! நேத்திலேர்ந்து சாப்பிடலை. இப்படி மோசமான நிலையிலே என் பொண்ணை நான் பார்த்ததே இல்லை'' என்ற கங்கா தருக்கு கண்கள் கலங்கியது.

''சார், நான் உங்களை அப்புறம் மறுபடி சந்திக்கறேன்'' என்று புறப்பட்டார் இன்ஸ்பெக்டர் தயாளன்.

12

திருவான்மியூரில் போன் வைத்துள்ள மாவு மில்களை எல்லாம் முதலில் ஒரு பட்டியல் எடுத்துக் கொண்டார் தயாளன். ஒவ்வொரு மில்லாகப் போன் செய்து, ''உங்க மில்லுக்குப் பின்னாடி வீட்ல குடியிருக்கிற தாமசைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?'' என்றார்.

''அப்படி இங்கே யாருமில்லையே சார்'' என்றார் ஒருவர்.

''தாமஸா? ராங் நம்பர்'' என்றார் ஒருவர்.

''போய் விசாரிச்சோம். இங்கே தாமஸ்னு யாருமில்லை யாமே'' என்றார் ஒருவர்.

நான்காவதாக சாரதா மாவு மில்லின் எண்ணைத் தொடர்பு கொண்டபோது, ''வீடு பூட்டியிருக்கு சார். வெளியே போயிருக்கார் போலிருக்கு'' என்றார்கள்.

தயாளன் உடனே அந்த சாரதா மாவு மில்லின் விலாசத் திற்கு வந்தார். கல்லாவில் இருந்தவனிடம் முதலில் உள்ளே ஓடும் மெஷினின் சத்தத்தைக் கொஞ்ச நேரம் நிறுத்தச் சொல்லிவிட்டு, ''தாமஸ் வீட்டைக் காமிங்க, ஒரு விசாரணை'' என்றார்.

அந்த ஆள் பதறிப்போய் மேஜையைப் பூட்டிக் கொண்டு, ''சார், எங்களை எதுவும் தப்பா நினைக்காதீங்க சார். அவன் சரியான பொறுக்கி, ரவுடி. எங்களைக் கேக்காம எல்லோருக் கும் எங்க மில்லோட போன் நம்பரைக் கொடுத்துட்டான். யாராச்சும் அவனுக்குப் போன் செஞ்சா நாங்க போய் இவனை கூப்பிட்டுச் சொல்லியாகணும். இல்லைன்னா கலாட்டா பண்ணுவான். குடலை உருவிடுவேன்னு மிரட்டுவான். அவ னுக்கு பயந்து வேற வழி இல்லாம போன் வந்தா கூப்புடு வோம். அவனை இந்த இடத்தை விட்டு எப்படியாவது மாத்திட்டா உங்களுக்குப் புண்ணியமா போகும் சார்.''

''கவலைப்படாதீங்க. அவன் இந்த இடத்திலேர்ந்து ஜெயிலுக்குப் போகப் போறான் வாங்க. அவனை எப்பப் பார்த்தீங்க கடைசியா?''

''ரெண்டு, மூணு நாளாச்சு சார். நாலு நாளா அவனுக்கு போன் எதுவும் வரலை சார்.''

இரண்டு பேரும் பின்புறம் இருந்த வரிசையான ஓட்டு வீடுகளை நோக்கி நடக்க, ''வழக்கமா அவனுக்கு யார், யாரு போன் செய்வாங்க?'' என்றார்.

''போன் செய்றவங்க அவங்க பேரைச் சொல்றதில்லை சார். தாமசைக் கூப்பிடுங்கன்னு மட்டும் சொல்வாங்க. இவன் வந்து பேசுவான்.''

''இவன் வந்து என்ன பேசுவான்?''

''வேறென்ன? பொம்பளை வியாபாரம் சார்! அவளை இங்கே அனுப்பி வைக்கிறேன். இவளை அங்கே அனுப்பி வைக்கிறேன்னு பேசுவான். மில்லுல பொம்பளைங்க மாவு அரைச்சிக்கிட்டு இருப்பாங்க. இவன் அதைப்பத்தியெல்லாம் கவலைப்படாம பேசுவான். எனக்கு ஆத்திரமா வரும். ஆனா எதுவும் செய்ய முடியாது. நாலு நாளைக்கு ஒரு தடவை ஒரு பெரிய மனிதன் போன் செய்வார் சார். குரல் கம்பீரமாக இருக்கும். அவர் பேசினா மட்டும் இவன் போன்ல ரொம்பப் பணிவா, மரியாதையா பேசுவான்.''

''அவர் யாருன்னு தெரியாதா?''

''தெரியாது சார். பேசறவங்க நாங்க யார் எடுத்தாலும் பேரைச் சொல்ல மாட்டாங்க.''

அந்த ஆள் கதவில் பூட்டு போட்டிருந்த ஓட்டு வீட்டைச் சுட்டிக் காட்டி, ''இந்த வீடுதான் சார். அவன் மட்டும்தான் இருக்கான். வீட்ல அதிகம் இருக்க மாட்டான். இருந்தா சதா சாராயம் குடிச்சி மல்லாந்து கிடப்பான். தொழிலில் உள்ள பொம்பளை பிள்ளைங்க வந்து போகும்'' என்றான்.

தயாளன் பக்கத்து வீடுகளில் விசாரிக்க இரண்டு தினங் களாக வீடு பூட்டியே இருப்பதாகவும், தாமஸ் வீடு திரும்ப வில்லை என்றும் சொன்னார்கள்.

தயாளன் அந்த பூட்டை ஒரு இரும்பு கம்பியால் நெளித்து திறந்து உள்ளே வந்தார். அதிர்ந்தார்.

அந்த வீடு குப்பையும், கிழிந்த காகிதங்களுமாக... காலியாக இருந்தது. ஒரு சட்டையோ, பெட்டியோ, பாத்திரமோ, நாற்காலியோ எதுவும் இல்லை.

தாமஸ் புத்திசாலித்தனமாக வீட்டை முன்கூட்டியே காலி செய்து வேறு இடத்திற்குக் குடி பெயர்ந்து விட்டு கொலையில்

இறங்கியிருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிய... தயாளனுக்கு லேசாக ஒரு அவமானம் எழுந்தது!

அந்த வீட்டில் கிடந்த ஏராளமான குப்பைக் காகிதங்களை, கிழித்து எறியப்பட்டவற்றை, எல்லாம் பொறுக்கி ஒரு இடத்தில் வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாக ஆராய்ந்தார்.

கசங்கின ஒரு காகிதத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு செலவுக் கணக்கு அவரைக் கவர்ந்தது.

கங்காதர் தனது வியாபார பார்ட்னர்களின் பெயர்களைச் சொன்னபோது விஸ்வமூர்த்தி என்று குறிப்பிட்டார்.

இந்தக் கணக்கில் விஸ்வமூர்த்தி வருகிறது.

டிரைவரிடம் தாமஸ் தான் ஒரு பெரிய மனிதனுக்கு பெண்கள் சப்ளை செய்வதாகச் சொல்லியிருக்கிறான். அதை இந்த மாவு மில்காரனும் உறுதிப் படுத்துகிறான்.

ஆக விஸ்வமூர்த்தியிடம் தான் தாமஸ் வேலை பார்க்க வேண்டும். விஸ்வமூர்த்தியின் ஏற்பாட்டின்படிதான் தாமஸ் வீட்டை காலி செய்துவிட்டு, கங்காதர் பெயரில் சந்தேகம் வரும்படி செயல்பட்டு கொலை செய்துவிட்டுத் தலைமறை வாகி இருக்க வேண்டும்.

இதெல்லாம் யூகம்தான். எப்படி நிரூபிக்கப் போகிறேன்? ஆதாரம் என்ன இருக்கிறது? இந்த கணக்கெழுதின சீட்டை எல்லாம் வைத்துக் கொண்டு அரெஸ்ட் வாரண்ட் கேட்க முடியாது. மாஜிஸ்திரேட் வாயால் மட்டும் சிரிக்க மாட்டார்!

தாமஸ்! அவனைப் பிடித்தாக வேண்டும்! அவன் வாயால் உண்மைகளை வரவழைக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் விஸ்வமூர்த்தியை நெருங்க முடியும்.

தயாளன் மற்ற காகிதங்களையும் அலசிவிட்டு, வீட்டை முன்போலப் பூட்டிவிட்டுப் புறப்பட்டார்.

தயாளன் தன் வீட்டில் ஈஸி சேரில் சாய்ந்தபடி யோசனையில் இருந்தார். ஒரே ஒரு இழுப்பு இழுத்துவிட்டு அவர் ஆஷ்ட்ரேயில் வைத்திருந்த சிகரெட், ஒரு இஞ்ச் நீளத்திற்கு சாம்பல் கவசம் அணியத் துவங்கியிருக்க...

சப்-இன்ஸ்பெக்டர் மாலிக் பைக்கை நிறுத்தி உள்ளே வந்தார்.

"குட் ஈவினிங் சார்."

"உக்காருங்க மாலிக்! எதாச்சும் பிரேக் கிடைச்சிருக்கா?"

மாலிக் கையோடு கொண்டு வந்திருந்த - தேவாவின் அறையில் இருந்து தயாளன் எடுத்து வந்து தந்திருந்த - டைரியை எடுத்தார்.

"சார் நீங்க சொன்ன மாதிரி இந்த டைரியை ஒரு தேதிகூட விடாம எல்லாம் படிச்சேன் சார். இதில ரெண்டு மாசத்துக்கு முன்னாடி ஒரு நாள் தேவா எழுதியிருக்கிற மேட்டர்ல ஒரு மோடிவ் கிடைக்கிற மாதிரி படுது."

"அப்படியா? என்ன அது? அப்படியே படிங்க."

மாலிக் டைரியின் குறிப்பிட்ட பக்கத்தைப் படித்தார்.

"இன்றைக்கு பிரதீபா முகம் வாட்டமாக இருந்தது. காரணம் கேட்டபோது ஒரு சம்பவத்தை விவரித்தாள். இன்று காலையில் அவள் வீட்டிற்கு அவள் அப்பாவின் பழைய வியாபார பார்ட்னர் விஸ்வமூர்த்தியும் அவர் மகன் ஜோஷியும் வந்தார்களாம். பழைய பகை காரணமாக அவள் அப்பாவுக்கும் விஸ்வமூர்த்திக்கும் பேச்சு வார்த்தை கூட இல்லாத நிலையில் விஸ்வமூர்த்தி வீடு தேடி வந்தது ஒரே

ஆச்சரியமாய் இருந்ததாம், கங்காதரிடம். விஸ்வமூர்த்தி பகையை மறந்துவிடச் சொன்னாராம். ஜோஷி ஒரு திருமண வரவேற்பில் பிரதீபாவைப் பார்த்தானாம். அவளை மிகவும் பிடித்து விட்டதாம். திருமணம் செய்ய ஆசைப்பட்டு அப்பாவிடம் சொன்னானாம். விஸ்வமூர்த்தி பகைக் குடும்பம் என்று சொல்லியும் பிடிவாதம் பிடிக்கவே அவன் ஆசையை நிறைவேற்ற எல்லா பகையையும் மறந்து சம்பந்தம் பேச வந்ததாக விஸ்வமூர்த்தி கூறினாராம். ஆனால் பிரதீபா வின் அப்பா பழைய சம்பவங்களை மறப்பதாக இல்லை. அலட்சியப்படுத்தி கடுமையான வார்த்தைகளால் திட்டி விட்டாராம். 'உன் பொண்ணு கல்யாணம் எப்படி நடக்குது பார்த்துடறேன்' என்று சவால் விடுவது போல சுத்திவிட்டு விஸ்வமூர்த்தி சென்றாராம். அதனால் பிரதீபாவுக்குக் கவலையாம். 'அசட்டுப் பெண்ணே அமெரிக்க இராணுவமே எதிர்த்து வந்தாலும் நம்மை யாராலும் பிரிக்க முடியாது' என்று நான் ஆறுதல் சொன்னேன்.''

மாலிக் படித்து முடிக்க தயாளன், ''வெரிகுட் விஸ்வ மூர்த்தி கங்காதருக்கு எதிரா ஏன் செயல்பட்டார்ங்கிறதுக்கான காரணம் இப்போ கச்சிதமா கிடைச்சிடுச்சி'' என்றார்.

''யெஸ் சார். தன் பையனுக்கு பெண் தராத கங்காதரைப் பழி வாங்கணும்னு நினைச்சிருக்கார். பிரதீபா யாரையோ காதலிக்கிற விஷயம் விஸ்வமூர்த்தி காதுக்கு வந்திருக்கு. முந்தி கங்காதர்கிட்ட வேலை பார்த்த தாமஸ் இப்போ தனக்கு பொண்ணுங்களை சப்ளை செய்துகிட்டிருக்கிறதால அவனை வச்சி தேவாவை கொலை செய்ய தீர்மானிச்சிருக்கார்.''

''சரி. எல்லாம் பொருத்தமா இருக்கு. இதையெல்லாம் எப்படி நிரூபிக்கிறது? விஸ்வமூர்த்தி தாமஸோட திட்டம் போட்டதை எப்படி ஆதாரப் பூர்வமா பிரசண்ட் பண்றது? தாமஸ் கிடைச்சாதான் முடியும்.''

''சாதாரணமா விஸ்வமூர்த்தியை சந்திச்சி விசாரிச்சா என்ன சார்? அவர் ரியாக்ஷன் என்னன்னு தெரிஞ்சுக் கலாமே.''

''நானும் இதை யோசிச்சேன். நம்மகிட்ட தாமசும் இல்லை. சரியான ஆதாரமும் இல்லை. அதனால நிச்சயமா மறுப்பார். அதுவுமில்லாம அலர்ட் ஆகிடுவார். தாமஸ் ஒருவேளை அவர் கண்ட்ரோல்ல எங்கயாவது தலைமறைவா இருக்கலாம். அவனை இன்னும் பாதுகாப்பா இடம் மாத்திடு வார். அதனால நாம் அவரை சந்தேகப் படறோம்ங்கிறதை வெளில காட்டிக்க வேணாம்னு நினைக்கிறேன். விஸ்வ மூர்த்தியோட டெலிபோனை ஒட்டுக் கேட்டு டேப் செய்ய ஏற்பாடு செஞ்சிருக்கேன்.''

தயாளன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, டெலிபோன் ஒலித்தது.

''ஹலோ தயாளன் ஸ்பீக்கிங்.''

''சார், நான் ஸ்டேஷன்லேர்ந்து ஏட்டு பேசறேன். நம்ம கான்ஸ்டபிள் சுப்பிரமணி ஒரு ஆட்டோ டிரைவரை ஸ்டேஷனுக்கு அழைச்சிக்கிட்டு வந்திருக்கார். அந்த ஆட்டோ டிரைவர் தான் தாமசை திருவான்மியூர்லேர்ந்து மைலாப்பூர் பேஸ்கட் பால் கிரவுண்டுக்கு அன்னிக்கு ராத்திரி கொண்டு வந்து விட்டிருக்கான் சார்.''

''வெரிகுட்'' என்று உற்சாகமாக எழுந்து கொண்ட தயாளன், ''அங்கேயே அந்த டிரைவரை வச்சிருங்க. நான் இதோ வந்துட்டேன்'' என்று ரிசீவரை வைத்துவிட்டு யூனிஃபார்ம் அணியத் துவங்கினார் தயாளன்.

''தாமஸ் கிடைச்சிடுவான்னு நினைக்கிறேன்'' என்று புறப்பட்டார்.

★ ★ ★

அந்த ஆட்டோ டிரைவர் ஒல்லியாக வெடவெடவென்று இருந்தான். நெற்றியில் விபூதி வைத்திருந்தான். பதினைந்து தினங்களுக்கு முன்னர் அவன் மொட்டையடித்திருக்க வேண்டும். விளைவாக முள்ளு முள்ளாக தலை முடியிருந்தது.

''நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லுப்பா, முந்தா நாள் சாயங்காலம் வலது கைல பாண்டேஜ் போட்ருந்த கறுப்பான ஒரு ஆளை மைலாப்பூர் கிரவுண்ட் வாசல்ல இறக்கி விட்டியா?'' என்றார் தயாளன்.

''ஆமாம் சார்.''

''எங்கே ஏத்தினே?''

''திருவான்மியூர்ல சார்.''

''அவன் கைல என்ன வச்சிருந்தான்?''

''கைல எதுவும் இல்லை சார்.''

''தனியா வந்தானா? யார்கிட்டயாவது பேசிட்டு பிரிஞ்சு வந்தானா?''

''தனியாதான் சார் வந்தான். திருவான்மியூர்ல ஓர் இரும்புக் கடை வாசல்ல நான் வண்டியை நிறுத்தி வெச்சிருந்தேன். வந்தான். மைலாப்பூர் போகணும்னான். எங்கேன்னேன். இடத்தைச் சொன்னான். ஏத்திக்கிட்டுப் போனேன். ரெண்டு ரூபா மீட்டருக்கு மேல நான் கேக்காமயே கொடுத்துட்டு இறங்கிக்கிட்டான். நான் போய்ட்டேன்.''

''அவன் இறங்கிக்கிட்டப்ப எத்தனை மணி இருக்கும்?''

''ஏழு மணி இருக்கும் சார். அப்பகூட கிரவுண்டுல மேட்ச் ஏதோ நடந்துகிட்டிருந்திச்சி, கூட்டமா இருந்திச்சி.''

''சரி. வழில அவன் உன்கூட எதுவும் பேசினானா?''

''பேசினான் சார்.''

''என்ன பேசினான்?''

''கொஞ்சம் பார்த்து நிதானமாவே ஓட்டுப்பா. இப்பதான் ஒரு ஆட்டோக்காரன் இடிச்சிட்டுப் போய்ட்டான். கட்டு போட்டுக்கிட்டு வர்றேன்னு சொன்னான். வேற எதுவும் பேசலை சார்.''

''ரைட்டு. என்னோட வா. திருவான்மியூர்ல அவன் எந்த இடத்தில உன் ஆட்டோல ஏறினான்னு காட்டு.''

''சரி சார்.''

அவனையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு திருவான்மியூருக்கு வந்து குறிப்பிட்ட இரும்புக் கடை வாசலில் இறங்கினதும், ''மாலிக் இந்த கடையில விசாரிங்க'' என்று விட்டு தயாளன் அந்த தெருவில் வேறு என்ன என்ன கடைகள் இருக்கின்றன என்று பார்த்தார்.

இரண்டு நிமிடங்களில் மாலிக் வந்தார்.

''சார், அவன் இந்தக் கடையிலதான் கம்பி வாங்கியிருக்கான். கைல பேண்டேஜ் போட்டவன்னு சொல்லிக் கேட்ட தால ஞாபகமா சொல்றாங்க. கம்பி வளையவும் செய்யணும், ஸ்ட்ராங்காவும் இருக்கணும்னு சொல்லிக் கேட்டானாம். பேண்ட் பாக்கெட்டுக்குள்ள வைக்கிற மாதிரி சுருட்டிக் கொடுக்கச் சொல்லி வாங்கி வெச்சிக்கிட்டு பில்லை அங்கேயே கிழிச்சிப் போட்டுட்டுப் போய்ட்டானாம். அவனைப் பத்தி வேற எதுவும் தெரியாதுன்னு சொல்றாங்க.''

''இருக்கட்டும். வாங்க, இந்தப் பக்கம் கொஞ்ச தூரம் நடக்கலாம். ஆட்டோ டிரைவர்கிட்ட இப்பதான் கைக்கு கட்டு போட்டுகிட்டு வர்றேன்னு சொல்லி இருக்கான். அதனால பக்கத்தில எதாச்சும் ஆஸ்பத்திரி இருக்...''

தன் வாக்கியத்தை சொல்லி முடிப்பதற்குள் தயாளன் தூரத்தில் கூட்டல் குறி சின்னத்துடன் 'அன்பு கிளினிக்' என்ற போர்டைப் பார்த்தார்.

'வாங்க, மாலிக் அங்கே விசாரிக்கலாம்.''

இருவரும் அந்த ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்கள்.

கிளினிக் நடுத்தரமாக இருந்தாலும், சுவர்களில் எல்லாம் வால் பேப்பர் ஒட்டி மிக நீட்டாக இருந்தது. ரிசப்ஷன் மேஜையில் அமர்ந்திருந்த பெண் சில பேருக்கு டோக்கன் வழங்கிக் கொண்டிருக்க, தயாளன் போய் நின்றதும் புன்னகைத்து, ''யெஸ் சார்?'' என்றாள்.

''முந்தா நாள் சாயங்காலம் தாமஸ்ன்னு ஒரு ஆசாமிக்கு வலது முழங்கையில் உங்க ஆஸ்பத்திரில கட்டு போடப் பட்டதான்னு தெரியணும்.''

''அவர் இங்கே அட்மிட் ஆகியிருந்தாரா சார்?''

''இல்லை. அவுட் பேஷண்ட்டா வந்து கட்டு போட்டுக் கிட்டுப் போயிருக்கார். ஒரு ஆட்டோ மோதின சின்ன விபத்தில காயமாகி வந்துருக்கார்.''

''ஒன் மினிட் சார்.''

அந்தப் பெண் ஒரு நோட்டுப் புத்தகத்தைப் புரட்டி அதில் முந்தா நாள் தேதியில் பார்த்துக் கொண்டே வந்து, ''ஆமாம் சார். தாமஸ்! இதோ பேர் இருக்கே. இங்கேதான் சிகிச்சை கொடுத்திருக்கோம். ஐ ரிமெம்பர் நவ். சாயங்காலம் ஆறு மணி இருக்கும் அவர் வந்தப்ப. கறுப்பா இருந்தார். நான்தான் பத்து ரூபா வாங்கி ரெஜிஸ்டர் பண்ணேன். வலது முழங்கையிலதான். ரத்தக் காயம்தான். ஆனா டாக்டர் பார்க்க வேண்டிய அளவுக்கு இல்லை. அதனால ரத்னாங்கிற நர்சை விட்டே ட்ரீட் பண்ணி அனுப்பிச்சேன்'' என்றாள்.

''அவன் அட்ரஸ் நோட் பண்ணலையா?''

''இங்கே அட்மிட் ஆகறதா இருந்தா அதெல்லாம் கேப்போம். இல்லைன்னா பேர் போட்டு ரசீது போடறதுக்காக பேர் மட்டும்தான் கேப்போம்.''

''அவன் வேற ஏதாவது பேசினானா?''

''என்கிட்ட காயம், கட்டு போடணும்னு சொன்னான். அவ்வளவுதான்.''

''அவனுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்த அந்த நர்சுகிட்ட எதாவது அவன் பேசியிருக்கலாம். அவங்களை கொஞ்சம் கூப்புட முடியுமா?''

''ரத்னா சிஸ்டர் இன்னைக்கு லீவு சார். நாளைக்குதான் வருவாங்க. சார், நான் உங்களுக்கு இன்னொரு தகவல் தர முடியும்.''

''சொல்லுங்க.''

''கட்டு போட்டுக்கிட்டு போறப்ப ஒரு போன் செய் யணும்ன்னு என்கிட்ட பர்மிஷன் கேட்டான். இங்கே அனுமதிக்கிறதில்லை, வாசல்லயே ஒரு ஊனமுற்றோர் பப்ளிக் பூத் இருக்கு, அங்க போய்ப் பேசுங்கன்னு சொன்னேன்.''

''தேங்க் யூ. தேங்க் யூ வெரி மச்.''

வாசலில் இருந்த பூத்திற்கு வந்தார்கள்.

''உங்க பூத்ல இருந்து பேசப்படற எல்லா நம்பர்களையும் குறிச்சுக்கற பழக்கமுண்டில்லையா?'' என்றார் தயாளன்.

''ஆமாம் சார். முதல்ல நம்பர் கேட்டு குறிச்சி நான்தான் டயல் செஞ்சி பார்ட்டிகிட்ட கொடுப்பேன்'' என்றான் இளைஞன்.

''முந்தா நாள் சாயங்காலம் ஆறு மணிக்கு மேல இந்த ஆஸ்பத்திரிலேர்ந்து வலது கைல ஒரு கட்டோட வந்து கறுப்பான ஒரு ஆளு வந்து உங்க பூத்லேர்ந்து பேசிருக்காரு. அது என்ன நம்பர்னு தெரியணும்.''

அவன் புத்தகத்தைப் புரட்டினான், ''கரெக்டா சொல்ல முடியாது சார். நான் எட்டு மணி வரைக்கும் பூத் வெச்சிருப்பேன். இதோ இந்த நம்பர்லேர்ந்து சாயங்காலம் அஞ்சு மணிக்கு நான் வந்து உக்காந்தப்போ பேச ஆரம்பிச்சிருக்காங்க. அது வரைக்கும் என் மச்சான் இருந்தான். இந்த நம்பர்கள்ல அவன் பேசினது எந்த நம்பர்னு எப்படி சார் சொல்ல முடியும்?'' என்றான்.

அவன் காட்டிய எண்ணில் இருந்து கடைசி எண் வரை இருபதுக்கும் மேற்பட்ட எண்கள் குறிக்கப் பட்டிருந்தன. யோசித்தார் தயாளன்.

''மாலிக், இந்த நம்பர்ஸ் அத்தனையையும் குறிச்சுக்கங்க சொல்றேன்.''

குறித்துக் கொண்டார் மாலிக்.

''வாங்க, ஸ்டேஷனுக்குப் போகலாம்.''

ஸ்டேஷன் வந்ததும், ''டைரக்டரி என்கொயரியைக் கூப்பிட்டு இந்த நம்பர்க்கு உரிய விலாசங்களை விசாரிச்சி எழுதிக்கங்க'' என்றார்.

அரை மணி நேரத்தில் அத்தனை விலாசங்களும் கிடைக்க, அவற்றில் ஒரு விலாசமாக விஸ்வமூர்த்தியின் விலாசம் இருந்தது.

தயாளன் எழுந்து கொண்டார்.

''இது ஒரு சாலிடான ஆதாரம் மாலிக். தாமஸ் விஸ்வ மூர்த்தியோட போன்ல பேசியிருக்கான். இப்போ நாம விஸ்வ மூர்த்தியை கொஞ்சம் தெம்போட சந்திக்கலாம்'' என்றார்.

14

தனது ஏற்றுமதி நிறுவனத்தின் அலுவலகத்தின் தனியறையில் இருந்த விஸ்வமூர்த்தியை கதவு திறந்து, ''எக்ஸ்க்யூஸ் மி'' என்றுவிட்டு உள்ளே வந்த தயாளன் புன்னகைத்தார்.

''யெஸ். உங்களுக்கு என்ன வேணும்?''

''முதல்ல விசாரணைக்காக நீங்க வேணும்! அப்புறம் தாமஸ் எங்கே தலைமறைவா இருக்கான்ங்கிற கேள்விக்கு பதில் வேணும்.''

''தாமஸ்? என்ன சொல்றீங்க? எனக்கு எதுவும் புரியலை.''

''தாமஸ் தெரியாது தாமஸ்? உங்க பழைய பார்ட்னர் கங்காதர் கிட்ட ஒரு வருஷம் முன்னாடி வேலை பார்த்தவன். இப்போ தன் தொழிலை மாத்திக்கிட்டு மாமாவாய்ட்டவன். உங்களுக்கு அப்பப்ப பொண்ணுங்களை சப்ளை பண்றவன் தெரியாது?''

விஸ்வமூர்த்தி முகம் கறுத்துப் போனார்.

''அது... அது... என்னோட பர்சனல் விஷயம்.''

''அதுக்காக உங்களுக்குப் பிடிக்காதவங்களை கொலை செய்யச் சொல்வீங்க. நாங்க கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கைப் பார்த்துக்கிட்டிருக்க முடியுமா?''

''கொலையா? என்ன கொலை!''

''பாவம் சார்! உங்களுக்கு சுமாராதான் நடிப்பு வருது. கங்காதரோட பொண்ணு பிரதீபாவை உங்க பையன் ஜோஷி ஆசைப்பட்டானா? அதுக்காக நீங்க பகையைக் கூட மறந்து பொண்ணு கேட்டீங்களா? அப்போ கங்காதர் அலட்சியப் படுத்தி அவமானப்படுத்தி அனுப்பிச்சாரா? அதனால நீங்க பிரதீபாவோட காதலன் தேவாவை தாமஸ் மூலமா கொலை செஞ்சீங்களா? அதனால நான் இங்கே வந்தனா?''

''நோ! பொண்ணு கேட்டது உண்மை. நான் தாமசை விட்டு யாரையும் கொலை செய்யச் சொல்லலை. தாமஸ் எனக்கு அஃப்கோர்ஸ் பொண்ணுங்க அனுப்புவான். அது உண்மை.''

''பாதி ஒப்புக்குவீங்க இங்கே. மீதியை ஸ்டேஷன்ல விசாரணைக்கப்புறம் ஒப்புக்குவீங்களா? வாங்க! சகலத்துக்கும் ஆதாரம் வச்சிருக்கோம். வாங்க போகலாம். அரெஸ்ட் வாரண்ட் இந்தாங்க. படிச்சிப் பார்த்துட்டு சட்டுன்னு புறப்படுங்க.''

தயாளன் பாக்கெட்டிலிருந்து வாரண்ட் எடுத்துக் காட்ட, முகம் வெளிறினார் விஸ்வமூர்த்தி.

''அய்யோ! நான் சொல்றதை நம்பங்க.''

''ஸ்டேஷனுக்குப் போனதும் நம்புறோம். வாங்க'' என்றார் தயாளன்.

★ ★ ★

பிரதீபாவுக்கு போன் செய்தார் தயாளன்.

''விஸ்வமூர்த்தியை கைது செஞ்சிட்டோம். தாமசை ரொம்ப தீவிரமா தேடிக்கிட்டிருக்கோம். அவனையும் பிடிச்சிடுவோம் கூடிய சீக்கிரத்தில.''

''அப்படியா?''

''ஆமாம். உங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணத்தான் கூப்பிட்டேன். அப்பா கிட்ட விபரம் சொல்லுங்க. கோர்ட்ல கேஸ் நடக்கிறப்ப போலீஸ் தரப்பு சாட்சிகள்ல ஒருத்தரா அவரையும் ஆஜர்படுத்த வேண்டியிருக்கும்.''

''சொல்றேன் சார். நீங்க யாருக்கு என்ன தண்டனை வாங்கிக் கொடுத்து என்ன சார்? என் தேவா எனக்கு இல்லாமப் போயாச்சு!''

''தைரியமா இருங்க ப்ளீஸ்...''

ரிசீவரை வைத்த தயாளன் மாலிக்கை அழைத்தார்.

''என்ன சொல்றார் விஸ்வமூர்த்தி?''

''தான் பொண்ணு கேட்டு அவமானப்பட்டு ரோஷமாகத்தினதை ஒத்துக்கறார். தாமஸ், தனக்கு பொண்ணுங்க சமாச்சாரத்துல அறிமுகம் உண்டுங்கிறதை ஒப்புக்கறார். ஆனா தேவாவை கொலை செய்ய நான் அவனை ஏவலைன்னு மறுபடி மறுபடி மறுக்கறார் சார்'' என்றார் மாலிக்.

தயாளன் யோசனையாகத் தன் தாடையைத் தடவினார். ஒலித்த டெலிபோனை எடுத்துத் தன் பெயரைச் சொன்னார்.

''சார், திருவான்மியூர் அன்பு கிளினிக்லேர்ந்து நர்ஸ் ரத்னா பேசறேன். நேத்து கிளினிக் வந்து தாமஸ் பத்தி விசாரிச்சிங்களாம். என்னைப் போன் செய்யச் சொல்லியிருந்தீங்களாம் அதான் செஞ்சேன்.''

''அதாவதும்மா அந்த தாமஸ் உங்ககிட்ட கட்டுப் போட்டுக்கிட்டது உங்களுக்கு நல்லா ஞாபகம் இருக்குதானே?''

''இருக்கு சார்.''

''அவனை நாங்க தேடிக்கிட்டிருக்கோம். அவனைப் பத்தி ஏதாவது ஒரு சின்ன க்ளூ கிடைக்காதான்னு தான் விசாரிக்கறோம். உங்ககிட்ட அவன் எதாவது பேசினானா?''

''சார், அது ரொம்ப சின்ன காயம் சார். டிங்சர் தடவி விட்டேன். தேவைப்பட்டா ஒரு பிளாஸ்திரி போட்டுக்கிட்டாப் போதும்னு சொன்னேன். அவர் பிடிவாதமா பேண்டேஜ் போடணும்னு சொன்னார். நான் தேவையில்லைன்னு சொல்லியும் வற்புறுத்தினார். சரின்னு போட்டா, நல்லா பெரிய பாண்டேஜாப் போடுங்க. இதைக் காமிச்சி என் காதலியை கொஞ்ச நேரம் அதிர்ச்சியடைய வைக்கணும்னு சொன்னார். சரின்னு நான் தேவையே இல்லாத அந்த சின்ன காயத்துக்குப் பெரிய பேண்டேஜாப் போட்டு விட்டேன்.''

''அந்தக் காதலி யாருன்னு எதுவும் சொன்னானா?''

''இல்லை சார். அது எதுவும் சொல்லலை.''

மேலும் விசாரித்து விட்டுப் போனை வைத்த தயாளன் யோசித்தார். மாலிக்கைப் பார்த்தார். பேசிய விபரம் சொன்னார்.

''மாலிக்! இந்த கேஸ் முழுக்க ஒரு அற்புதமான சதிப் பின்னலோன்னு ஒரு சந்தேகம் எனக்கு வந்திருக்கு இப்போ. நான் சொல்ற ஒரு காரியத்தை நீங்க உடனே செய்ங்க'' என்ற தயாளன் அவர் செய்ய வேண்டிய காரியத்தை விவரித்தார்.

15

இன்ஸ்பெக்டர் தயாளன் உற்சாகமான குரலில் டெலிபோனில் பேசினார்.

''மிஸ்டர் கங்காதர் ப்ளீஸ்...''

''ஸ்பீக்கிங்!''

''ஒரு குட் நியூஸ் சார். தாமசை நாங்க கைது செய்துட்டோம். ஆனா அவன் எதுவும் பேச முடியாம மயக்கமான நிலைமையில இருக்கான். ஆஸ்பத்திரில சேர்த்திருக்கோம். அவன் தாமஸ்தானான்னே ஒரு சின்ன டவுட் இருக்கு. கொஞ்ச நேரத்தில சப்-இன்ஸ்பெக்டர் மாலிக் உங்க வீட்டுக்கு வருவார். கொஞ்சம் சிரமம் பார்க்காம அவரோட வந்து தாமசை நீங்க அடையாளம் காட்டணும் சார்.''

''செய்றேனே...''

''தேங்க் யூ சார்'' என்று வைத்தார் தயாளன்.

★ ★ ★

இன்ஸ்பெக்டர் தயாளனும், மாலிக்கும் மற்றும் சில கான்ஸ்டபிள்களும் ஒரு ஜீப்பில் கங்காதர் பங்களாவிற்கு வந்து இறங்கினார்கள். உள்ளே வந்தார்கள்.

''என்ன இவ்வளவு பேர் வந்திருக்கீங்க?'' என்றார் கங்காதர்.

''பெரிய மனுஷங்களைக் கைது செய்ய நிறைய பேர் வந்தாதான் சார் பந்தாவா இருக்கும்'' என்றார் தயாளன்.

கங்காதர் முகம் வெளிற... அருகிலிருந்த பிரதீபா அதிர்ச்சியுற்றாள்.

''என்ன சார்? மறுக்கப் போறீங்களா? தாமசை நீங்களே செட்டப் பண்ணி தேவாவை கொலை செய்ய வச்சி அந்தப் பழியை விஸ்வமூர்த்தி மேல ரொம்ப அழகா திசை திருப்பினதை எல்லாம் மறுக்கப் போறீங்களா?''

''இல்லை... நானாவது... வந்து...''

''ஸாரி சார். நான் உங்களுக்குப் போன் செஞ்சப்ப தாமசை அரெஸ்ட் செய்யலை. ஆனா இப்போ அரெஸ்ட் செய்தாச்சு. அவனைத் தட்டித் தட்டி விசாரிச்சாச்சு. அவன் எல்லாம் சொல்லியாச்சு. எனக்கு ஆரம்பத்திலேர்ந்தே உங்க மேல சந்தேகம் இருந்தது. ஆனா அது விஸ்வமூர்த்தி மேல மாறிடுச்சு. நீங்க உங்க டிரைவர் மூலமா மாத்திட்டீங்க. தாமஸ் வீட்ல வேணும்னே ஒரு செலவுக் கணக்குக் குறிப்பைக் கசக்கிப் போட்டு என் கவனத்தைத் திருப்பிட்டீங்க.''

''அய்யோ! எனக்கு எதுவுமே புரியலை'' என்றாள் பிரதீபா.

''தெளிவா சொல்றேன்ம்மா பிரதீபா'' என்றார் தயாளன்.

''உங்க அப்பா பம்பாய் வியாபாரி பையனுக்கு உன்னைக் கல்யாணம் செய்துத் தர வாக்கு கொடுத்துட்டார். அதனால வியாபார ரீதியாவும் நிறைய நன்மை இருந்தது. அப்போதான் நீ தேவாவை லவ் பண்ற மேட்டர் லேசா தெரிய வந்திச்சி. அந்த சந்தர்ப்பத்தில தான் விஸ்வமூர்த்தி பொண்ணு கேட்டு வந்து அவமானப்பட்டுப் போனார். உன் காதலையும் துண்டிக்

கணும். விஸ்வமூர்த்தி மேல உள்ள பழைய பகையையும் தீர்த்துக்கணும். என்ன செய்யலாம்னு யோசிச்சார்.

தன்கிட்ட ஒரு வருஷம் முன்னாடி வேலை பார்த்த தாமஸ் இப்ப விஸ்வமூர்த்தியோட சைடுல இருக்கான்னு டிரைவர் மகேந்திரன் மூலமா தெரிஞ்சுக்கிட்டார். தாமசை வரவழைச்சார். ரகசியமா பேசினார். தாமஸ் தேவாவை கொலை செய்யணும். அந்தக் கொலையை செய்யச் சொன்னது விஸ்வமூர்த்தின்னு நிரூபணமாகணும். அது மாதிரி செஞ்சுட்டு தலைமறைவா போய்ட்டா ரெண்டு லட்சம் தர்றேன்னார். தாமஸ் பணம்னா பறக்கறவன். நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி செய்றேன்னுட்டான். நாளைக்கு கொலை நடந்தப்புறம் போலீசுக்கு முதல் சந்தேகம் தன் மேல வந்து அப்புறம் அது விலகணும்னு நினைச்சார் உங்கப்பா.''

''அதனால டிடெக்டிவ் ஏஜன்சில இவர் பேரையே சொல்லச் சொன்னார். வீட்டைக் காலி பண்ணச் சொன்னார். மாவுமில் பின்னாடி வீடுன்னு தன் டிரைவர் விட்டே என்கிட்ட சொல்லச் சொன்னார். அங்கேப் போனா அந்த செலவுக் கணக்கு சீட்டு கிடைக்க வெச்சார். இதெல்லாம் விட பெரிய பிளான் என்னான்னா, வேணுமின்னே சின்னதா கையில காயம் செஞ்சுக்கிட்டு அதுக்குக் கட்டு போட்டுக்கிட்டு அங்கங்கே விசாரிச்சா விடை கிடைக்கிற மாதிரி க்ளூ விட்டு விட்டு டெலிபோன் பூத்லேர்ந்து விஸ்வமூர்த்தி நம்பரைக் கூப்பிட்டு ஆட்டோல தேவையில்லாம தகவல் சொல்லிட்டான் தாமஸ். கைல கட்டுன்னா யாரும் அடையாளம் மறக்க மாட்டாங்க. போலீஸ் விசாரணையில் நூல் பிடிச்ச மாதிரி டப்பு, டப்புன்னு ஒவ்வொருத்தரா விபரம் சொல்லி அந்த விஸ்வமூர்த்தியோட போன்ல பேசினதை தெரிய வைக்க அத்தனை ஏற்பாடு.''

''ஆனா தாமஸ் ஒரு விஷயத்தில சறுக்கிட்டான். சின்ன காயத்துக்குப் பெரிய கட்டு போடச் சொன்னான். அதுதான்

என்னை சந்தேகப்பட வச்சது. விஸ்வமூர்த்தியும் எல்லாம் ஒத்துக்கிட்டார். ஆனால் கொலைக்குக் காரணம்தான் இல்லேன்னு மறுபடி மறுபடி மறுத்தார். ஆக அப்பதான் நான் கங்காதரை சந்தேகப் பட்டேன். உடனே அவரோட டெலிபோனை டேப் பண்ண ஏற்பாடுசெஞ்சிட்டு தாமசை பிடிச்சிட்டோம்னு பொய் தகவல் கொடுத்தேன். தாமஸ் இவர் திட்டப்படி பெங்களூர்ல லாட்ஜ் எடுத்துத் தங்கியிருக்கான். இவருக்குப் பயம் வந்து போன்ல பெங்களூர்ல இருக்கிற அவனோட பேசி நிஜமாவே அவனைக் கைது செஞ்சிட்டாங்களான்னு தெரிஞ்சுக்கப் பார்த்தார். அந்த பேச்சை டேப் செஞ்சி, பெங்களூர் போலீசுக்குத் தகவல் தந்து தாமசைப் பிடிச்சி இங்கே கொண்டாந்துட்டோம். அவன் எல்லாம் கக்கிட்டான்.''

கங்காதர் தலை குனிந்து மௌனமாக நிற்க...

அவரைச் சுட்டு எரிப்பதைப் போல பார்த்தாள் பிரதீபா.

''டாடி! உங்களை டாடின்னு சொல்லவே வெக்கமா இருக்கு! உங்க சுயநலத்துக்காக என் தேவாவை கொலை செஞ்சிட்டீங்களே! டாடி! என் கனவை எல்லாம் கலைச்சிட்டீங்களே டாடி!''

''என்னை மன்னிச்சிடும்மா'' என்றார் கங்காதர் கண்கள் கலங்க.

''நோ! உங்களுக்கு மன்னிப்பே கிடையாது!'' என்ற பிரதீபா குலுங்கி அழத் துவங்க, கங்காதர் மௌனமாக கைகளை நீட்டி விலங்கை ஏற்றுக் கொண்டு அவர்களோடு நடந்தார்.

இன்ஸ்பெக்டர் தயாளன் அழுது கொண்டிருக்கும் பிரதீபாவைப் பரிவுடன் பார்த்தார். ''தைரியமா இரும்மா பிரதீபா'' என்றார்.

&

தயங்காதே

இன்னும் விழித்துக் கொள்ளாமல் தூக்கக் கலக்கத்துடன் கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தது 172 சதுரகிலோ மீட்டர்கள் பரப்பளவு கொண்ட, ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்றும் தமிழில் சென்னை என்றும் அழைக்கப்படுகிற தமிழகத்தின் தலைநகரம்.

மின்சார, தொலைபேசிக் கம்பிகள் சேகரித்து வைத்திருந்த பனித்துளிகளைத் திரட்டி முத்துக்கள் சிந்திக் கொண்டிருந்தன. கரைத்து வைத்த மாட்டுத் தீவனம் போல கலங்கலாக இருந்தது கிழக்கு வானம். இன்னும் சில நட்சத்திரங்கள் பிரியாவிடை பெற்றுக் கொண்டிருக்க, கடற்கரையை நோக்கி மீனவப் படகுகள் திரும்பிக் கொண்டிருந்தன. புளி போட்டு பளபளப்பாக தேய்க்கப்பட்ட பாய்லர்களுக்கு குங்குமமிட்டு, ஊதுபத்தி கொளுத்தி டீ வியாபாரம் துவங்கப்பட்டிருந்தது.

''எந்திரி ராஜாத்தி'' என்று நைட்டியில் குப்புறப்படுத்து தலையணையை அணைத்துக் கொண்டிருந்தவளை தட்டுவதற்கு வாகான இடத்தில் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தாள் அவள் அம்மா.

ராஜாத்தி புரண்டு ஒற்றைக் கண்ணால் பார்த்து, ''மம்மி, இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேன். ப்ளீஸ்மா'' என்றாள்.

''மணி அஞ்சாகுது. நீ ஜாகிங் போக வேணாமா?''

''இன்னிக்கு லீவு விட்டுடலாம்மா. ப்ளீஸ்மா...''

''அதெல்லாம் முடியாது. மாப்பிள்ளை உன்னை கிண்டல் செஞ்சது மறந்து போச்சா? கல்யாணமேடையில் உட்கார்றதுக்குள்ளே அஞ்சி கிலோ எடை குறைச்சி காமிக்கிறேன்னு சபதம் செஞ்சது நீயா, நானா?''

ராஜாத்தி விருட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''அதானே'' என்றாள்.

அம்மா சிரித்துக் கொண்டு அறையை விட்டுப் போனாள்.

ராஜாத்தியை தூங்கி எழுந்த முகத்தோடு வர்ணித்தால் நன்றாக இருக்காது. வேண்டாம். விட்டு விடலாம்.பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

ராஜாத்தி பாத்ரூம் சென்று பல் விளக்கி, உடை களைந்து, ஓடுவதற்கான ஜாகிங் சூட் அணிந்தாள். கேன்வாஸ் ஷூ அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

வாசலில் அவள் அப்பா அவளின் சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் டாடி. நீங்க போய் என் சைக்கிளை துடைக்கலாமா?''

''துடைச்சா என்ன? போய்ட்டு வா. இன்னிக்கு ஈவினிங் வெளில எந்த புரோக்ராமும் வச்சிக்காதே.''

''ஏன் டாடி?''

''பாரீஸ் வரைக்கும் போய் மேரேஜுக்கு இன்விடேஷன் கார்ட்ஸ் செலக்ட் பண்ணி வாங்கிட்டு வந்துடலாம்.''

''போங்க டாடி. இன்னும் ஒரு மாசமிருக்கே.''

ராஜாத்தி சைக்கிளை ஸ்டாண்ட் எடுத்து ஓட்டத் துவங்கினாள்.

அந்த பங்களாவின் வாசலில் நியூஸ் பேப்பர்கள் கேரியரில் பிதுங்க, சைக்கிளை நிறுத்தின ஆசாமி கிரில் கேட் வழியாக ஒரு பேப்பரை சுருட்டி உள்ளே வீச... ஒரு நாய் ஓடிவந்து பேப்பரைக் கவ்விக் கொண்டு உள்ளே ஓடியதைப் பார்த்துக் கொண்டே சைக்கிளை மிதித்தாள் ராஜாத்தி.

சுவர்களில் நள்ளிரவில் ஒட்டப்பட்ட புதிய போஸ்டர்களில் நடிகர், நடிகைகள் அடுத்த நாள் நள்ளிரவு வரை தான் அங்கே சிரித்துக் கொண்டிருக்கப் போகிறோம் என்பதை அறியாமல் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜாத்தி பெசண்ட் நகரின் கடற்கரையோர சாலையின் ஓரமாக சைக்கிளை நிறுத்திப் பூட்டிக் கொண்டாள். இருட்டு விலக நினைத்தாலும் அதைப் பிடிவாதமாக இழுத்து நிறுத்தியிருந்த பனி. ஆயின்மென்ட் போட்டுக் கொண்ட கண்களால் பார்ப்பது போல காட்சிகள் தெளிவற்று கலங்கியிருந்தன.

சாந்தோம் பீச்சில் போல இங்கே அதிகாலையில் ஓடுபவர்களும், நடப்பவர்களும் எண்ணிக்கையில் குறைவு. ராஜாத்தி காலை ஐந்தரை மணிக்கு சைக்கிளில் வந்து ஆறரை மணி வரை மணல் வெளியில் மெதுவாக ஓடிவிட்டுத் திரும்புவாள். அந்த நேரத்தில் அவள் அதிகம் போனால் ஏழெட்டு பேர்களைத்தான் பார்த்திருக்கிறாள். இவள் புறப்படும் போது நிறைய பேர் வர ஆரம்பித்திருப்பார்கள். நிறைய பேர்கள் ஓடும் போது ஓடினால் கொஞ்சம் கூச்சமாக இருக்கும் அவளுக்கு.

கவனிக்கப்படுவாள். ஒரு பெண் ஓடும் போது இயற்கையிலேயே கவர்ச்சி அதிகரிக்கிற உடலமைப்புகள்.

அதிலும் ராஜாத்தி சாதாரண பெண்களைவிட சற்று அதிக புஷ்டி. பள்ளி நாட்களில் இருந்தே அப்படித்தான்.

கல்லூரியில் இவளுக்கு டபுள்டெக்கர் என்று தனி நாமகரணம் சூட்டியிருந்தார்கள். அலுவலகத்தில் பாரதி இவளை ஆண்ட்டி பன் (அங்கிள் பன்னுக்கு எதிர்பதமாம்) என்பாள்.

பெண் பார்த்துப் பிடித்துப் போனதும் மாப்பிள்ளை ராஜேஸ்வரன் அவளைத் தனியாக சந்தித்துப் பேச வேண்டும் என்று சொன்ன போது...

ராஜாத்திக்கு கை, கால்கள் வெடவெடா.

''ராஜாத்தி, எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு. உன் முகம் ரொம்ப ஸாஃப்ட்டா. அழகா இருக்கு. ஆனா உடம்புதான் கொஞ்சம் பிடிப்பா இருக்கு. அதை காரணம் சொல்லி நிராகரிக்க எனக்கு விருப்பமில்லை. நினைச்சா முடியாதது இல்லை. உடம்பை குறைக்கிறது நம்ம கைல நிச்சயமா இருக்கு. முயற்சி பண்ணு. கல்யாணத்துக்கு அப்புறம் நான் உனக்கு நிறைய எக்ஸர்சைஸஸ் சொல்லித் தர்றேன்'' என்று அவன் சொன்னதும்.

ராஜாத்திக்கு சந்தோஷம், ரோஷம் இரண்டும் சேர்ந்து வந்தது.

''ஏதோ அலட்சியமா இருந்துட்டேன். நீங்க வேணும்னா பாருங்க. கல்யாணத்துக்கு முன்னாடி அஞ்சி கிலோ எடை குறைச்சிக் காமிக்கிறேன்'' என்றாள்.

''தட் ஈஸ் த ஸ்பிரிட்'' என்று ராஜேஸ்வரன் சிரித்தான்.

மறுநாளே ஜாகிங் சூட், கான்வாஸ் ஷூ என்று சகலமும் வாங்கி, மூலையில் தூக்கிப் போட்டிருந்த சைக்கிளை ரிப்பேர் செய்து முழு தீவிரமாக இறங்கி விட்டாள் ராஜாத்தி.

காலையில் சைக்ளிங் மற்றும் ஜாகிங், மாலையில் தோழியின் வீட்டு நீச்சல் குளத்தில் ஸ்விம்மிங் என்று

படுதீவிரம். மழை வந்து வெளியே போக முடியாமல் போனால் வீட்டிற்குள்ளேயே ஸ்கிப்பிங்.

ராஜாத்தி மெதுவாக மணல்வெளியில் ஓடத் துவங்கினாள். உயரத் தூக்கி ரப்பர் பாண்ட் போட்டிருந்த அவளின் குதிரைவால் இடவலமாக ஆடத் துவங்கியது.

ஓடிக் கொண்டிருந்த ராஜாத்தியை அந்த முனகல் ஒலி நிறுத்தியது. நின்றாள். நிசப்தம். தூரத்து கடல் அலைகளின் சப்தம் மட்டுமே கேட்டது. குழம்பினாள். சற்று முன் ஒரு முனகல் சப்தம் கேட்டதே. ஆனின் முனகல் ஒலி. வேதனையில் வரும் வலி தாங்காத முனகல் ஒலி.

எங்கிருந்து? யார்?

சுற்றிலும் பனித்திரையை ஊடுறுவி பார்வையை ஓட்டினாள் ராஜாத்தி.

சற்றுத் தூரத்தில் ஒரு ஆசாமி மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருப்பது மட்டும் தெரிந்தது. அந்த பைக் மணல்வெளியில் வளைந்து, வளைந்து சென்று சாலையில் ஏறி காணாமல் போனது. இவளுக்குப் புரியவில்லை.

மீண்டும் ஓடத் துவங்கிய போது, மறுபடி முனகல் ஒலி!

இந்த முறை கொஞ்சம் தூக்கலாய் கேட்டது.

சற்றுத் தூரத்தில் இருந்த வெள்ளைக்காரன் காலத்தில் எழுப்பப்பட்டிருந்த நினைவு மண்டபத்தின் அருகிலிருந்து தான் முனகல் ஒலி வருவது இப்போது புரிந்தது.

ராஜாத்தி அந்த சிறிய மண்டபம் நோக்கி விரைந்தாள்.

அதன் மறுபக்கத்தில் மணலில் குப்புறக் கிடந்த அந்த இளைஞனிடமிருந்து தான் முனகல் வந்து கொண்டிருந்தது.

அவன் அருகில் முன்பக்கமாக வந்து பார்த்து, தோளைத் தொட்டு மெதுவாகப் புரட்டி, அதிர்ந்தாள் ராஜாத்தி.

அவனது வயிற்றில் பொத்தல் போட்டு இறங்கியிருந்த அந்தக் கத்தியின் கைப்பிடி பகுதி மட்டும் வெளியே தெரிய... ரத்தம் பொங்கிப் பொங்கி சட்டையை நனைத்து மணலில் பரவிக் கொண்டிருந்தது.

அய்யோ! என்ன இது! இந்தக் கத்திக் குத்து இப்போது தான் மிக சில நிமிடங்களுக்கு முன்பு தான் நடந்திருக்க வேண்டும். இவன் யார்? குத்தினவன் யார்? மணல்வெளியில் வளைத்து வளைத்து மோட்டார் பைக் ஓட்டிக் கொண்டு சென்றவனா? இப்போது என்ன செய்வது?

வரிசையாக கேள்விகள் கொத்தின.

உதவிக்கு யாரையாவது அழைக்கலாம் என்று சுற்றிலும். திரும்பிப் பார்த்தாள். பனி இன்னும் விலகாததால் சற்று தூரத்திற்குப் பிறகு யாராவது ஆசாமிகள் இருக்கிறார்களா என்பதே சரியாய் தெரியவில்லை.

முதலில் இந்த இளைஞனை பிழைக்க வைக்க முயற்சி செய்ய வேண்டும். ரத்தத்தை நிறுத்த வேண்டும். மிக உடனே ஒரு நல்ல ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்.

கத்தி மேல் கைரேகை இருக்கலாம். தன்னிடம் கைக் குட்டை எதுவும் இல்லாததால் ராஜாத்தி அந்த இளைஞனின் கறுப்புப் பேண்ட் பாக்கெட்டுகளுக்குள் கைவிட்டுத் தேடினாள். இல்லை.

உடனே தனது கேன்வாஸ் ஷூவைக் கழற்றி விட்டு வெள்ளை சாக்சை உருவினாள். அதை கத்தியின் கைப்பிடி மேல் போட்டு அவன் உடம்பில் இருந்து மெதுவாக உருவி எடுத்து, கழற்றின ஷூவுக்குள் வைத்தாள். மற்றொரு காலின் சாக்சை உருவி அதைக் கொண்டு ரத்த காயத்தின் மேல் பொத்தி வைத்து அடக்கிக் கொண்டே, "யாராச்சும் வாங்க! உதவி! உதவி! யாராச்சும் வாங்க" என்று கத்தத் துவங்கினாள்.

யாரும் வருவதாக இல்லை.

அந்த இளைஞன் அரை கண்களால் ஒரு முறை பார்த்தான். வாயைத் திறந்து வெளியே தள்ளி தவித்தான். தாகம் என்கிறானா இல்லை வேறு ஏதாவது சொல்ல விரும்பு கிறானா என்பது புரியவில்லை.

''என்ன?'' என்றாள்.

அவனால் எதுவும் பேச முடியவில்லை. விழிக்கோளங்கள் அடிக்கடி மேலே செருகிக் கொண்டு மிரண்டன.

'அய்யோ! இவனுக்கு உடனடி சிகிச்சை தேவை!'

ராஜாத்தி வேகமாக மணல்வெளியைத் தாண்டி சாலையை நோக்கி ஓட்டமாக வந்தாள்.

அப்போதுதான் ஒரு பியட் கார் வந்து நின்று அதிலிருந்து வெள்ளை ஷர்ட்சும், வெள்ளை பனியனுமாய் ஒரு நடுத்தர வயதுக்காரர் இறங்கினார்.

காரில் சிகப்பு கூட்டல் குறி ஸ்டிக்கர் ஒட்டப்பட் டிருப்பதைப் பார்த்த ராஜாத்தி மலர்ந்து போய் அவரிடம் ஓடி வந்து மூச்சு வாங்கினாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ, நீங்க டாக்டரா?''

''ஆமாம் என்ன விஷயம்?''

''மை குட்னெஸ். வாங்க டாக்டர், உதவுங்க. அங்கே ஒரு ஆள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கான்.''

அவரின் பதிலைக் கூட தெரிந்து கொள்ளாமல் திரும்பவும், அவனை நோக்கி அவள் ஓட, டாக்டரும் இணையாக ஓடிக்கொண்டே, ''காக்கா வலிப்பா?'' என்றார்.

''இல்லை. கத்திக்குத்து. ஜஸ்ட் இப்ப தான் யாரோ குத்திட்டு ஓடியிருக்கான்.''

ஓடிக் கொண்டிருந்த டாக்டர் உடனே நின்று விட்டார்.

''ஏன் டாக்டர்? வாங்க. அவனுக்கு உயிர் இருக்கு.''

''இது போலீஸ் கேஸ்.''

''ஆமாம். அதுக்காக? ஒன் மேன் ஈஸ் டையிங் டாக்டர்.''

''நமக்குப் புரியுது. போலீஸ்ல குடாய்வாங்கம்மா. பேசாம பக்கத்திலே போன் எங்கே இருக்குன்னு தேடி போன் பண்ணி சொல்லிடறது பெட்டர்.''

''என்ன டாக்டர் இது? முதல்ல போனைத் தேடணும். அப்புறம் அவங்க வந்து சேரணும். அதுக்கப்புறம் அவனைத் தூக்கிட்டுப் போய் ட்ரீட்மெண்ட் தரணும். அது வரைக்கும் அவனுக்கு உயிர் இருக்கும்னு என்ன நிச்சயம்? கமான் டாக்டர். நல்ல நேரத்தில் நீங்க காரோட வந்திருக்கீங்க. ரெண்டு பேருமா தூக்கி உங்க கார்ல போட்டு உங்க கிளினிக் குக்கு கொண்டு போகலாம். முதல் உதவி செய்யுங்க. உங்க கிளினிக்குக்கு போனதுமே போலீசுக்குச் சொல்லிடலாம்.''

''பிராப்ளம்ஸ் வரும்னு பார்க்கிறேன்''அப்படியும் தயங்கினார் டாக்டர்.

''ஒரு உயிர் எவ்வளவு காஸ்ட்லின்னு உங்களுக்கு நான் சொல்லித் தர வேண்டிய அவசியமில்லை டாக்டர். தயங்காதீங்க தப்பில்லை. ப்ளீஸ், வாங்க.''

டாக்டர் பெருமூச்சுடன் முடிவெடுத்து அவளுடன் மீண்டும் ஓடத் துவங்கினார்.

மடங்கி அமர்ந்து அவன் கையைப் பிடித்துப் பார்த்து, ''பல்ஸ் ட்ராப் ஆகிட்டு இருக்கு. ஏராளமா ரத்தம் சேதமாய்டுச்சி. ட்ரை பண்ணிப் பார்க்கலாம்'' என்றார்.

இரண்டு பேருமாக சேர்ந்து அவளைத் தூக்கிக் கொண்டு காருக்கு விரைந்தார்கள். காரின் பின் இருக்கையில் அவனைப்

படுக்க வைத்து விட்டுத் தானும் அமர்ந்து கொண்டாள் ராஜாத்தி. அவன் இப்போது முனகல் எதுவுமின்றி மயக்கத்தில் இருந்தான்.

டாக்டர் ட்ரைவிங் சீட்டில் அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டார்.

2

தேவமாலினி டிரெஸ்சிங் மேஜை முன்னால் அமர்ந்து மேக்கப் செய்து கொண்டிருந்தாள். லூசான நைட்டி அணிந்திருந்தாள். இமைகளுக்கு நீலமும், பச்சையும் கலந்து பிரஷ் செய்து கொண்டு இமை முடிகளை குத்திட்டிகளாக்கும் லைனர் போட்டுக் கொண்டாள்.

டச்சப் மற்றும் உதவிப் பெண்மணி தாரிணி மர பீரோவின் ஸ்லைடிங் கதவைத் தள்ளி, ''எந்தப் புடவைக்கா கட்டிக்கப் போறீங்க?'' என்றாள்.

மரத்தில் இலைகள் போல வரிசை வரிசையாய் ஹேங்கர்களில் மாட்டின புடவைகள் தொங்கின.

''மைசூர் சில்க்ல மிலிட்ரி க்ரீன்ல ஒண்ணு எடுத்தோமே, அதை எடுத்து வை. டிபன் ரெடியாய்டுச்சான்னு பாரு.''

தாரணி சொல்லப்பட்ட புடவையையும், ஜாக்கெட்டையும் எடுத்து வந்து கட்டிலின் மேல் வைத்து விட்டு கதவை ஓசையின்றி சாத்திவிட்டு வெளியே சென்றாள்.

தேவமாலினி கன்னங்களில் ரூஜ் போட்டுக் கொள்ளும் போது நேற்று ஒரு வார இதழில் அவளைப் பற்றி எழுதப் பட்டிருந்த செய்தி நினைவிற்கு வந்தது.

'முன்பெல்லாம் நடிகை தேவமாலினி மேக்கப் விஷயத் தில் அதிகம் அக்கறை செலுத்துவதில்லை. பொது இடங்

களுக்கும், விழாக்களுக்கும் மிக சாதாரணமாக மேக்கப் எதுவுமின்றி வருவார். 'தன் இளமை ததும்பும் அழகான முகத்திற்கு செயற்கை பொருள்கள் எதுவும் தேவையில்லை' என்று ஒரு பேட்டியின் போது சொல்லியிருந்தார். ஆனால் இப்போதெல்லாம் அவரின் போக்கு தலைகீழாக மாறி விட்டது. வீட்டைவிட்டு வெளியே வருவதாய் இருந்தால் கல்யாணப் பெண்ணைப் போல தூக்கியடிக்கும்படியாக மேக்கப் போட்டுக் கொண்டு வருகிறார். காரணம் கேட்ட போது தேவமாலினி சிரித்து மழுப்பினார். ஆனால் நமது சினிமா நிருபரின் யூகம் என்னவென்றால் தனக்கு வயதாகிக் கொண்டிருப்பதை மறைக்கவும், புதிது புதிதாக வந்து சாந்தித்துக் கொண்டிருக்கும் புதிய இளம் நடிகைகளுக்கு சமமாக தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் தான் இந்த அலங்காரமெல்லாம் என்கிறார்.

நேற்று படித்த போது உடனே மிளகாய் கடித்த கோபம் வந்தது.

ஆனால் அந்தரங்கத்தில் தனியாய் யோசித்த போது உண்மையைத் தானே எழுதியிருக்கிறார்கள் என்று இருந்தது.

முப்பத்தி ஒன்று என்பது சினிமாவைப் பொறுத்தவரை ரிட்டயர்மெண்ட் வயது. வெளியே சொல்லக் கூடாது. மாட்டார்கள். பிறந்த நாள் கொண்டாடுவதை தவிர்க்க வேண்டும். மீறி கொண்டாடினால் ஒரே ஒரு மெழுகு வர்த்திதான் செருக வேண்டும்.

பேட்டிகளின் போது மிக எச்சரிக்கை தேவை.

''எழுபத்தி அஞ்சில நான் சினிமா சான்சுக்காக அலைஞ்ச போது முதல் வாய்ப்பு வந்தது. அப்போ நான் காலேஜில முதல் வருஷம் படிச்சிட்டிருந்தேன்'' என்றெல்லாம் உளறக் கூடாது.

புத்திசாலி நிருபன் கால்குலேட்டர் இல்லாமல் கணக்குப் போடுவான். இப்போது வருடம் 91. அறிமுகமானது

எழுபத்தியைந்து. ஆக பதினாறு வருடம்.காலேஜில் முதல் வருடம் படிக்க பதினாறு வயது தேவை. கூட்டினால் முப்பத்தி இரண்டு. உடனே கிசுகிசுவாக எழுதிவிடுவான். 'நடிகை தேவமாலினியின் உண்மையான வயது ஒரு மனிதனின் பற்களின் எண்ணிக்கையாம்.'

ஆகவே பேசும் போது வருடங்களை குறிப்பிடக் கூடாது. அந்தக் காலத்தில் என்று பின்னோக்கின நினைவுகளே கூடாது. எனது எதிர்கால திட்டம் என்ன, நாளைக்கு என்ன செய்யப் போகிறேன் என்றே பேச வேண்டும்.

இதெல்லாம் தேவமாலினிக்கு அவளைவிட மூத்த, தற் சமயம் சினிமாவால் புறக்கணிக்கப்பட்டு ஃபைனான்சியராக மாறிவிட்ட ஒரு நடிகை சொன்ன அனுபவ ஆலோசனைகள்.

தேவமாலினி அவற்றை எல்லாம் தவறாமல் தன் சொந்த சரக்கையும் சேர்த்துக் கடைபிடித்து வருகிறாள்.

தேவமாலினியைப் பொறுத்தவரை முகத்தில் மட்டும் தான் லேசான முதிர்ச்சி வந்திருக்கிறது. எக்ஸர்சைஸ், ஸ்விம்மிங், டயட் கண்ட்ரோல் என்று உடம்பை சிக்கென்று வைத்துக் கொண்டிருப்பதால் அவ்வப்போது கதாநாயகியாக புக் ஆகிவிடுகிறாள்.

ஆனால் ஐந்து வருடங்களுக்கு முன்பு இருந்த பரபரப்பு எதுவும் இப்போது கிடையாது.

ஒரே வாரத்தில் ஒன்பது வார இதழ்களின் அட்டைகளிலும் தேவமாலினியே சிரித்த காலம் உண்டு. ஒரே நாளில் மூன்று படங்களின் ஷூட்டிங்குகளில் கலந்து கொண்டிருக்கிறாள்.

''ஸாரி சார். நீங்க சொல்ற கதை நல்லா தான் இருக்கு. பணமும் அதிகம் தர்றேன்னு சொல்றீங்க. ஆனா இன்னும் மூணு வருஷத்துக்கு கிட்டே வராதீங்க. நான் படுத்து தூங்கி பல மாசமாச்சி. ஷாட் இடைவெளிகள்ல உக்காந்துகிட்டே அரை, அரை மணி நேரம் தூங்கறதோட சரி.''

இப்படி நிர்தாட்சண்யமாக போனில் பேசியதெல்லாம் உண்டு.

ஆனால் அதே தேவமாலினி அதே தயாரிப்பாளரிடம் போன வாரம் பேசின உரையாடல்.

''என்ன சார், என்னை எல்லாம் மறந்துட்டீங்களா? ஒரே நேரத்தில் மூணு படம் பூஜை போடறீங்களாமே. இப்போ நான் ஒரு படத்தை ஒப்புக்கிட்டா அதை முடிச்சுட்டு தான் அடுத்த படம் ஒப்புக்கறேன். புதுசு புதுசா பல பேர் வந்து கேக்கறாங்க. தரமான, நல்ல பேனர்ல மட்டும் தான் செய்யணும்ன்னு தான் உங்களை கூப்புட்டேன். நாப்பது நாள், அம்பது நாள் மொத்தமா டேட்ஸ் அட்ஜஸ்ட் பண்ணித் தர முடியும் சார். ரைட்டர் கிட்ட பேசிட்டு சொல்லுங்க.''

அந்தத் தயாரிப்பாளர் போனை வைத்து விட்டு அருகில் இருந்த தன் நண்பர்களிடம் சிரித்தபடி, ''ஒரு படம் முடிச்சுட்டு தான் அடுத்த படமாம். பாலிசி பாருங்க! இப்ப சீந்த ஆள் இல்லை. சிங்கப்பூர், துபாய்ன்னு கலை நிகழ்ச்சி போய்ட்டு வர்றா. மொத்தமா கால்ஷீட் தர்றாளாம். ஒரு காலத்துல இவ...'' அதற்கு மேல் அவர் பேச்சில் அச்சில் வரக்கூடிய வார்த்தைகள் இல்லை.

தேவமாலினி மேக்கப் முடித்துக் கொண்டு தாரிணி எடுத்து வைத்த புடவையைக் கட்டிக் கொண்டாள். கைப்பை எடுத்துக் கொண்டாள். அறையை விட்டு வெளியே வந்தாள்.

டைனிங் ஹாலில் தாரிணி பரிமாற லைட்டாக டிபன் சாப்பிட்டு விட்டு தனது மாருதி காரில் அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்யும் முன்பாக அருகில் வைத்திருந்த அந்தத் திரைப்படத்தின் பூஜை அழைப்பைப் பிரித்து எந்த ஸ்டுடியோவில் என்று பார்த்துக் கொண்டாள்.

காரை சீராக ஓட்டத் துவங்கினாள்.

இதைப் பற்றிக் கூட துணுக்குச் செய்தி வந்து விட்டது.

'தேவமாலினி சொந்தப்படம் எடுத்து ஏராளமான நஷ்டம் ஏற்பட்ட பிறகு மூன்று கார்களில் இரண்டை விற்று விட்டார். இப்போது ஒரே ஒரு மாருதி மட்டுமே வைத்திருக்கிறார். அதற்கும் டிரைவரை நிறுத்திவிட்டு அவரே தான் ஓட்டி வருகிறார்.'

கார் கோடம்பாக்கம் பாலத்தில் ஏறி ஆற்காடு ரோட்டில் விரைய, வழியெங்கும் சுவர்களில் போஸ்டர்களில் கவனித்துக் கொண்டே வந்தாள்.

ஒன்றில் கூட அவள் முகம் இல்லை.

இப்போது படத்திற்குப் படம் புதுமுக நடிகைகள் வருகிறார்கள். நாலில் இரண்டு பேர் தேறி விடுகிறார்கள். சில வருடங்களுக்கு முன்பு எந்தப் பக்கம் திரும்பினாலும் என் முகம் தான் தென்படும்.

ச்சே! என்ன ஒரு நிரந்தரமில்லாத புகழ்!

தேவமாலினி பெருமூச்சு விட்டபடி பிரசாத் ஸ்டுடியோவின் ரெக்கார்டிங் தியேட்டருக்கு முன்பாக ஏராளமான கார்களுக்கருகில் இடம் தேடி நிறுத்தி இறங்கிக் கொண்டாள்.

பந்தல்' போட்டு ஜிகினா தோரணங்கள் கட்டப் பட்டிருந்தன. புதிய படத்தின் பெயரை பெரிய அளவில் எழுதி கட்-அவுட் வைத்திருந்தார்கள். வருபவர்களை வரவேற்றுக் காற்றுத் தடுப்புப் பொத்தல்களுடன் வெள்ளை பேனர்கள் அசைந்தன.

தேவமாலினிக்கு முன்பாக உள்ளே நுழைந்த ஒரு புதிய நடிகையின் மேல் வீடியோ கேமிரா அதிக நேரம் தங்கியிருந்ததையும், தன் பக்கம் ஒரே வினாடியில் கடந்து விட்டு பின்னால் வருபவருக்குத் தாவிவிட்டதையும் கவனித்தாள்.

''வாங்கம்மா'' தயாரிப்பாளர் அழைத்துவிட்டு அமர்வதற்கு நாற்காலி காட்டினார். காட்டிய இடம் ஐந்தாவது வரிசையில் இருந்தது.

முதல் வரிசையில் சினிமா என்றால் என்னவென்றே தெரியாத முந்தா நாள் கோடம்பாக்கத்தில் கால் வைத்து நேற்றைக்கு நட்சத்திரங்களாகிவிட்ட இரண்டு புதிய இளம் நடிகைகள் கால் மேல் கால் போட்டமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

தேவமாலினி தன் நாற்காலியில் அமர்ந்தாள். அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த தன்னை விட மூத்த, அம்மா பாத்திரங்களில் நடிக்கும் நடிகைக்கு வணக்கம் வைத்தாள்.

''இந்தப் படத்தில் நீ நடிக்கிறியா? உன் போட்டோ [illegible] கார்டுல இருந்திச்சே.''

''ஆமாம் நடிக்கிறேன்.''

''மாலா தானே கதாநாயகி?''

''ஆமாம்.''

''அப்ப நீ? கதையில ரெண்டு கதாநாயகிகளா?''

''இல்லைம்மா. ஹீரோவுக்கு அக்கா.''

''அக்காவா?''

அந்த 'அக்காவா?'வில் 'அடப்பாவமே!' இருந்தது. 'நீயும் நம்ம ஏரியாவுக்கு வந்துட்டியா?' இருந்தது. 'அப்படியாவது நடிச்சி தான் ஆகணுமா?' இருந்தது.

''கதாநாயகியா இல்லாம நடிக்கிறது இதான் முதல் படமா?''

''ஆமாம். அந்த அக்கா பாத்திரம் கதை பூரா வருது. பவர்ஃபுல் பாத்திரம். கிளைமாக்சே என்னை வச்சி தான் இருக்கு. அதனால ஒப்புக்கிட்டேன்.''

39626
57/0213

"அது சரிதான்."

மாநில அமைச்சர் ஒருவர் வந்து குத்துவிளக்கு ஏற்றி வைக்க அதன் பிறகு பூஜை விஸ்தாரமாகத் துவங்கியது.

கூட்டத்தின் நடுவில் பெரிய பரபரப்பு ஏற்படுத்தி காரில் இருந்து இறங்கி வந்தான் படத்தில் கதாநாயகனாக நடிக்கும் இளங்கோ.

இளங்கோவைப் பார்த்ததும் தேவமாலினியின் முகம் பிரகாசமானது.

என்ன ஒரு அசர வைக்கும் பர்ஸனாலிட்டி! இதே இளங்கோ வுடன் ஒரு மலையாளப் படத்தில் நடித்திருக்கிறார் தேவமாலினி.

இவளும், அவனும் கல்லூரி மாணவர்கள் கல்லூரியில் போராட்டத்தை மையமாக வைத்து காதலே இல்லாத கதை.

அப்போது இளங்கோ சதைப் பிடிப்பே இல்லாமல், ஒட்டிய கன்னங்களுடன் இருப்பான். ஏராளமான திட்டுக் களை வாங்குவான்.

அவன் வளர்ச்சியை பத்திரிகைகளில் படித்ததோடு சரி. அவன் படங்களை வீடியோவில் பார்த்ததோடு சரி. இணைந்து அதற்குப் பிறகு நடிக்க வாய்ப்பே இல்லாததால் சந்திக்கவே இல்லை.

இந்தப் படத்தில் இளங்கோவுக்கு அக்கா பாத்திரம் என்பதால் தான் தேவமாலினி நடிக்கவே ஒப்புக் கொண்டாள். மலையாளப் படத்தில் இணைந்து நடித்த போதே அவன் மேல் ஒரு மாதிரியான மோகம் இருந்தது.

தயாரிப்பாளர் இளங்கோவுக்கு மாலை போட்டார். அடுத்து கதாநாயகியாக நடிக்கும் மாலாவிற்கு மாலை. பிறகு மைக்கில் தேவமாலினியை அழைத்தார்.

தேவமாலினி நடந்து மேடைக்கு வந்து மாலை பெற்றுக் கொண்டு திரும்பி இளங்கோவைப் பார்க்க...

"மை காட்! இந்த மேக்கப்பில் பத்து வயசை தொலைச்சுட்டிங்க" என்றான் அவன் ரகசியமாக.

புகைப்படத்திற்கு அனைவரும் வரிசையாக நின்றபோது...

"தேவமாலினி, நீங்க இந்த படத்தில் நடிக்கிறீங்கன்னு கேள்விப்பட்டதும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரி யுமா? உங்ககூட எவ்வளவு பேச வேண்டியிருக்கு தெரி யுமா?" என்று இளங்கோ சொன்னபோது, நேத்துப் பூத்த ஒரு பருவ மங்கையின் மனதில் அடிக்கும் பட்டாம் பூச்சித் துடிப்பு தேவமாலினியின் மனதில் இருந்தது.

"பேசலாம் இளங்கோ, பேசலாம்" என்றாள் தடுக்க முடியாத புன்னகையுடன்.

3

டாக்டர் நடேசனின் தனியார் மருத்துவமனையில் அந்த இளைஞன் ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் செல்லப் பட்ட பத்தாவது வினாடி இறந்து போனான்.

மாட்டின கிளவுஸ்களைக் களைந்து வெளியே வந்து உதட்டைப் பிதுக்கினார் அவர். "மைகாட்!" என்றாள் ராஜாத்தி.

சற்று நேரத்தில் போலீஸ் ஜீப் வந்து இன்ஸ்பெக்டர் சித்திரவேல் விபரங்களைக் கேட்டுக் கொண்டு முகம் சிவக்கக் கத்தத் துவங்கினார்.

"என்ன மேடம் நினைச்சுட்டீங்க நீங்க? பாடியைத் தொட்டுத் தூக்கிட்டு வர்றதுக்கு நீங்க யார்? உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?"

"ஸாரி சார். நாங்க தூக்கிட்டு வந்தப்போ அவன் உயிரோடு இருந்தான். இங்கே வந்ததும் தான் இறந்தான்."

''இருக்கட்டும். எங்களுக்கு இன்ஃபார்ம் செய்யாம எப்படி நீங்க செயல்படலாம்? உங்களுக்கு ரூல்ஸ் தெரியுமா? படிச்சவங்க தானே?''

''கத்திக் குத்து நடந்த இடம் கடற்கரை பக்கத்திலே போல் எதுவும் இல்லை. அவனோ உயிருக்குப் போராடிக்கிட்டு இருந்தான். அவன் உயிரைக் காப்பாத்த முடியுமான்னுதான் முயற்சி செஞ்சோம்.''

''முடிஞ்சதா?''

''இல்லை. அதுவேற ஆனா முயற்சி செஞ்சதே தப்பா?''

''ஸின் ஆஃப் கிரைம் கலைஞ்க போச்சே?''

''கத்தி மேல உள்ள கைரேகை அழியாம துணி போட்டு எடுத்து வந்தேன். இங்கே ரெஃபிரிஜிரேட்டர்ல வச்சிருக்கோம்.''

''குழப்பத்தில் ஒரு புத்திசாலித்தனம்! லெட் மீ சீ த பாடி.''

தனியாக ஒரு அறையில் வைக்கப்பட்டு வெள்ளைத் துணி போட்டு மூடி வைக்கப்பட்டிருந்த அவன் உடலுக்கு அருகில் சித்ரவேல், ராஜாத்தி, நடேசன் வந்தார்கள்.

''இவன் யார்ன்னு தெரியுமா?''

''தெரியாது ஸார்.''

''எதாச்சும் பேசினானா?''

''இல்லை சார்.''

''எப்படிப் பார்த்தீங்க?''

ராஜாத்தி தான் பார்த்ததை, செயல்பட்டதை விவரித்து, ''டாக்டர் கூட தயங்கினார். நான் தான் மனிதாபிமானம் முக்கியம்னு சொல்லி வற்புறுத்தினேன்'' என்று முடித்தாள்.

''பைக்கில் போனவன் தான் குத்தினானா?''

''குத்தியதை நான் பார்க்கலை சார். நான் பார்த்தப்ப பைக் போய்கிட்டு இருந்திச்சி. கத்திக் குத்திலேர்ந்து புது ரத்தம் வந்துகிட்டிருந்தது. கத்தியும் வேற யாரு மில்லை. அதனால அவனா தான் இருக்கணும்னு நினைச்சேன்.''

''என்ன பைக் அது?''

''ஏகப்பட்ட சத்தம். 100 சி.சி. நிச்சயமா இல்லை.''

''நம்பர் எதுவும் தெரிஞ்சுதா?''

''பனி சார்! பைக்கே ஏதோ கனவில் போன மாதிரி தான் பார்த்தேன்.''

''அவன் என்ன கலர் சட்டை போட்டிருந்தான்.''

''கறுப்பு இல்லைன்னா நீலம்.''

''ஆர் யூ ஷ்யூர். இவன் எதுவுமே பேசலையா?''

''இல்லை. ஆனா ஏதோ பேச முயற்சி செஞ்ச மாதிரி இருந்தது. அதுக்குள்ளே மயக்கமாயிட்டான். இங்கே வந்து நினைவு திரும்பாமலேயே இறந்துட்டான்.''

சித்திரவேல் அந்த வெள்ளைத் துணியை முழுவதுமாக நீக்கி, ஆபரேஷனுக்கு தயார் படுத்தப்பட்டவன் என்பதால் நிர்வாணமாக இருப்பதைப் பார்த்து, இடுப்பு வரையில் போர்த்தினார்.

''அவனோட சட்டை, பேண்ட் எங்கே?''

தனியாக எடுத்து வைத்திருந்ததை நர்ஸ் கொடுத்தாள்.

பேண்ட்டின் மூன்று பாக்கெட்டுகளிலும் எதுவும் இல்லை. ரத்தக் கறையுடன் இருந்த சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டு இருந்ததை எல்லாம் வெளியில் எடுத்தார் அவை.

1. மூன்று இருபது ரூபாய் நோட்டுக்கள், ஒரு பத்து ரூபாய் நோட்டு, ஒரு ஐந்து ரூபாய், இரண்டு இரண்டு ரூபாய்கள். சில்லரை நாணயங்கள் 1.75 மதிப்பில் இருந்தன.

2. பான்பராக் பாக்குப் பொட்டலம் பிரித்து பாதி காலியாகி, மீதி மடித்து வைக்கப்பட்டிருந்தது.

3. பல்லவன் பஸ் டிக்கெட் ஒன்று 1.00 ரூபாய்க்கு.

4. ஒரு தொலைபேசி எண் எழுதிய துண்டுச் சீட்டு. அதில் பெயர் எதுவும் இல்லை. வெறும் போன் நம்பர் மட்டும் இருந்தது.

5. ஒரு காட்ரேஜ் ஷேவிங் கிரிம் வாங்கினதற்கான பில், அந்தக் கடைப் பெயர் லஸ் சர்ச் ரோடு விலாசத்துடன் அச்சாகியிருந்தது.

6. சிறிய குறிப்பு நோட்டு. புதியது. அதில் முதல் பக்கத்தில் 'முருகன் துணை' என்று எழுதியிருந்தது. இரண்டாம் பக்கத்தில் 'பதினாலாம் தேதி மாலை நான்கு மணிக்கு கிரிஜாவை சந்திக்க வேண்டும். பதினாறாம் தேதி காலை பத்து மணிக்கு உங்கள் ஜூனியர் அலுவலகம் போக வேண்டும்' என்று எழுதப்பட்டிருந்தது. மற்ற பக்கங்களில் எதுவும் இல்லை.

இன்ஸ்பெக்டர் சித்திரவேல் பெருமூச்சு விட்டார்.

''இந்த கேஸ் டபாய்க்கப் போகுது. ஆள் ஐடெண்டிஃபை கேனுஷக்கே தினறனும்னு நினைக்கிறேன். வெளிநாட்ல அடையாள அட்டை இல்லாம ஒருத்தன் ரோட்ல நடக்கறதில்லை. பாக்கெட்ல நம்ம அட்ரஸ் எப்பவும் வச்சிருக்கணும்னு ஒரு நல்ல பழக்கத்தை நம்ம ஜனங்க எப்போதான் உணர்ந்து செயல்படுத்துவாங்களோ'' என்று தனியாகப் பேசிக் கொண்டார்.

தன் தொப்பியைக் கழற்றி விசிறிக் கொண்டார்.

''காலங்கார்த்தாலே கடற்கரையில் வச்சி கொலை! இவன் தனியா வந்தானா? அந்த பைக்குக்காரனும் இவனும் சேர்ந்து வந்தானுங்களா? சேர்ந்து வந்திருந்தா அறிமுகமான ஆசாமி! முதல்ல இவன் யாருன்னு தெரியணும். ஏம்மா நர்சு, உடம்புல பச்சை கிச்சை குத்திக்கிட்டிருக்கானா?''

மறுபடி வெள்ளைத் துணியை விலக்கி பிணத்தின் புஜத்தில் பார்த்து மூடினார்.

ராஜாத்தி கலங்கிப் போய் நின்று கொண்டிருந்தாள்.

ஏதோ சொல்ல வந்தானே! மரண முனையில் தவித்தானே! இன்னும் உடனடியாக முதலுதவி கொடுக்கப்பட்டிருந்தால் பிழைப்பானோ? பாவம்! இருபத்தைந்து வயது தான் இருக்கும். வளர்ந்து இளைஞனாக இருபத்தைந்து வருடங்கள். 9,125 பொறுமையான நாட்கள்! ஆனால் பிணமாவதற்கு எடுத்துக் கொண்ட காலம்... சில நிமிடங்கள்!

''அந்தக் கத்தி எங்கே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று ரெஃபிரிஜிரேட்டர் திறந்து காட்ட, கையில் எடுத்துப் பார்த்து, ''இதென்ன ஸாக்ஸ்? இவனோடதா?''

''இல்லை சார். என்னோடது. கைரேகை அழிஞ்சிடாம வயத்திலேர்ந்து பிடுங்கினேன். கர்சீப் இல்லை. அவசரத்துக்கு ஸாக்ஸ் கழட்டி...''

''நீ என்னோட வர வேண்டியிருக்கும்மா. அந்த இடத்தைக் காமிக்கணும்.''

''வர்றேன் சார்'' என்றாள் ராஜாத்தி.

''டாக்டர், உங்க ரூம்ல போன் இருக்கா?''

அவரைத் தொடர்ந்தார்கள்.

டாக்டர் அறையில் இருந்த போனை எடுத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்து முதலில் டிபார்ட்மெண்டில் உயர் அதிகாரிக்கு விபரங்களைத் தெரிவித்துவிட்டு பிறகு ஒன்பது முறை, யெஸ் சார், யெஸ் சார்' சொல்லிவிட்டு வைத்தார்.

அடுத்து டெலிபோன் டைரக்டரி என்கொயரியை அழைத்து, அந்த இளைஞனின் சட்டையில் இருந்த பெயரில்லாத தொலைபேசி எண்ணைச் சொல்லி, அதற்குண்டான விலாசம் கேட்டுக் காத்திருந்தார்.

''ம்... சொல்லுங்க.'' டாக்டர் ஒரு பேடையும், பேனாவையும் நீட்ட, வாங்கி, சொல்லப்பட்டதை திரும்ப சொல்லிக் கொண்டே எழுதிக் கொண்டார். ''ஸ்வர்ணப்ரியா புரொடக்ஷன்ஸ், நைன், ஃபர்ஸ்ட் மெயின் ரோடு, கஸ்தூரிபா நகர், அடையாறு. தேங்க் யூ.''

பிறகு அந்த எண்ணுக்கு டயல் செய்தார்.

''ஹலோ ஸ்வர்ணப்ரியா புரொடக்ஷன்ஸ்.''

''நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் சித்திரவேல் பேசறேன். ஒரு மர்டர் கேஸ். கொலையான ஆசாமி பாக்கெட்ல உங்க போன் நம்பர் இருந்திச்சி. அவன் கறுப்பு பேண்ட்டும், கட்டம் போட்ட முழுக்கை சட்டையும் போட்ருக்கான். ஆள் யாருன்னு தெரியலை. உங்க போன் நம்பர் இருந்ததால கூப்புட்டேன். எனி ஐடியா?''

''புரியலையே சார். இங்கே நடிக்கிறதுக்கு சான்ஸ் கேட்டு நிறைய பேர் வருவாங்க. பத்து நாள் கழிச்சி போன் பண்ணுங்கன்னு சொல்வோம். அதில யாராவது நம்பர் குறிச்சிக்கிட்டுப் போயிருக்கலாம். பேர் சொன்னா யோசிக்கலாம்.''

''பேர் கூடத் தெரியலைங்க.''

''என்ன வயசிருக்கும்?''

''இருபத்தி நாலு, இருபத்தி அஞ்சி இருக்கலாம். மாநிறம், சுருள் முடி. அடர்த்தியான மீசை.''

''புரியலைங்களே சார்.''

''பேசறது யாரு?''

''இங்கே ஆபீஸ்ல உள்ளவன். பொண்ணுசாமின்னு பேரு.''

''உங்க ஆபீசுக்கு வர்றவங்க எல்லாம் முதல்ல உங்களைத் தான் சந்திப்பாங்களா?''

''ஆமாம்...''

''ஒரு உதவி செய்யணும் நீங்க.''

''சொல்லுங்க சார்.''

''வண்டி அனுப்பறேன். அதில புறப்பட்டு வாங்க பாடியை நேர்ல பார்த்து அடையாளம் புரியுதான்னு யோசிங்க உடனே திரும்பிடலாம். உங்க ஆபீஸ்ல விடச் சொல்றேன்.''

''சரி சார்.''

''தேங்க்ஸ். உங்களை மாதிரி கொஞ்சம் பேர் தான் எங்களுக்கு ஒத்துழைப்பு தர்றதுக்கு ஆர்வப்படறாங்க. மறுபடி தேங்க்ஸ்.''

போனை வைத்தார்.

''அந்த ஆசாமி வந்து பார்த்துட்டு போய்டட்டும். அதுக்கப் புறம் பாடியை ஜி.ஹெச்சுக்கு மாத்திடறேன். அதுக்குள்ளே கொலை நடந்த ஸ்பாட்டுக்குப் போய்ட்டு வந்துடலாம். வர்றீங்களா மேடம்?''

''நானும் உங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தர ஆர்வப் படறேன் சார்'' என்றாள் ராஜாத்தி உணர்ச்சிப்பூர்வமாக.

அந்த நட்சத்திர ஹோட்டலின் ஹெல்த் கிளப்பில் எக்ஸர்சைஸ் முடித்துக் கொண்டு கைப்பையுடனும், கார் சாவியுடனும் வெளியேறின போது ஹோட்டலின் முதல் மாடி வராந்தாவில் நின்று கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த இளங்கோவைப் பார்த்தாள். பூரித்தாள், தேவமாலினி.

அவனும் பார்த்து விட்டான்.

''ஹாய்!'' என்று இவள் கையசைக்க, அவனும் கையசைத்தான்.

''இரு மேலே வருகிறேன்'' என்று இவள் கை ஜாடை காட்டி விட்டு லிஃப்டில் முதல் மாடிக்கு வந்ததும் அவன் இவளின் இரண்டு கைகளையும் ஆர்வமாகப் பற்றிக் கொண்டு, ''ஹல்லோ தேவமாலினி, எங்கே இப்படி?'' என்றான்.

''இந்த ஹோட்டல் ஹெல்த் கிளப்பில நான் மெம்பர். ரெகுலரா வருவேன். நீங்க எங்கே இங்கே? எனி அஃபையர்'' கண்ணடித்தாள்.

''ச்சீ! பகல்லயா?''

''அப்ப ராத்திரில உண்டா கண்ணா?''

''சேச்சே! நான் யோக்யன் தெரியுமா?''

''தெரியுமே, திருவனந்தபுரம் ஷூட்டிங்ல பார்த்ததுமே, அந்த ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் பேர் என்ன மேகலாவா?''

''அய்யோ! அய்யோ! குப்பையை கிளறாதீங்க சிஸ்டர்!''

''சிஸ்டரா? பல்லை உடைப்பேன்.''

''பின்னே மேடமா?''

''இளங்கோ, என்னை வயசாக்கிடாதே.''

''வயசாக்கறதா? அது நான் எப்படிங்க? இன்னும் நீங்க...?''

''நாட்டி!'' என்று அவன் கன்னத்தைக் கிள்ளினாள்.

''சும்மா உங்களுக்கு கோபமூட்டத்தான் சிஸ்டர்ன்னு சொன்னேன். உங்களை நினைச்சி ஜொள்ளு விட்டுக்கிட்டு இருக்கிற உங்க லட்சோப லட்ச ரசிகர்கள்ல நானும் ஒருத்தன்.''

''கிண்டலா?''

''அய்யோ! சத்தியம்! மூணு வருஷம் உங்க போட்டோவை நான் பர்சில வச்சிக்கிட்டு அலைஞ்சிருக்கேன். தெரியுமா?''

''அப்புறம் ஆளை மாத்தியாச்சா?''

''இல்லை. பர்ஸ் தொலைஞ்சி போச்சு. வாங்க, நான் தான் ரூம் போட்ருக்கேன். உக்காந்து பேசலாம். அவசரமா போக வேண்டியதில்லையே?''

''என்ன அவசரமா இருந்தாலும் இளங்கோவுக்காக எல்லாத்தையும் கேன்சல் பண்ணிடலாம்'' என்று சிரித்தாள் தேவமாலினி.

இரண்டு பேரும் அகலமான அந்த ஆடம்பர அறைக்கு வந்து அருகருகே நாற்காலிகளை அமைத்துக் கொண்டு அமர்ந்ததும்.

''எனிதிங் யு வாண்ட் டு மன்ச்?'' என்று இண்டர்காம் எடுத்தான்.

''முந்திரிப் பருப்பு'' என்றாள்.

''விஸ்கி சாப்பிடறப்போ கொறிச்சா இன்னும் ஜோரா இருக்கும்.''

''அதையும் தான் சொல்றது.''

''ர்ர்ரியலி! தேங்க் யூ தேவமாலினி! கம்பெனி இல்லாம போரடிச்சிட்டிருந்தேன். படம் ஒண்ணு தயாரிக்கிறேன். தெரியுமில்லே?'' என்றவன் போனில் அறை எண் சொல்லி ஒரு பாட்டில் வெளிநாட்டு விஸ்கியும் இரண்டு பிளேட்கள் முந்திரியும் ஆர்டர் செய்துவிட்டுத் தொடர்ந்தான். ''இன்னைக்கு எனக்கு ஷூட்டிங் ஒண்ணு கேன்சல்ட். சரின்னு ரூம் போட்டு டிஸ்கஷன் வச்சிக்கலாமேன்னு ஏற்பாடு செஞ்சேன். டைரக்டர் ஏ.வி.எம்.ல ஒரு ஷூட்டிங் முடிச்சிட்டு மத்தியானம் மூணு மணிக்கு வர்றேன்னார். மணி பதினொண்ணு தானே ஆகுது. வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்டலமான்னு நினைச்சிட்டிருந்தேன். உங்களைப் பார்த்துட்டேன் தாங்க் காட்.''

''எதுக்கு கடவுளுக்கு நன்றி?''

''தனியா தண்ணியடிக்கிறது போர். தண்ணியடிச்சா எனக்குப் பேசணும். மனசு விட்டு ஏதாச்சும் பேசணும். கண்ணாடிட்டயா பேச முடியும்? அட்லிஸ்ட் உம் கொட்றதுக்காவது ஒரு ஆள் வேணாம்?''

''வெல். இன்னைக்கு நீங்க மனசு விட்டுப் பேசப் போறீங்க. நான் கேக்கப் போறேன்.''

''அது சரி. நானும் பார்த்துக்கிட்டிருக்கேன். அதென்னது நீங்க, வாங்கன்னு பேசிக்கிட்டு, நான் சின்னப் பையன். நீங்க வாடா, போடான்னு கூட சொல்லலாம். எவ்வளவு சீனியர் நீங்க.''

தேவமாலினி சிரித்தாள். ''என்ன மிஞ்சிப் போனா ரெண்டு வயசு நான் மூப்பா இருப்பேன். என்ன இருந்தாலும் ஆம்பளை இல்லையா?''

''போச்சுடா! சினிமாவில நடிச்சு நடிச்சு வாழ்க்கையிலயும் டயலாக்கா? எனக்கு போலித்தனம் பிடிக்கமாட்டேங்குது.

இப்ப 'தேவமாலினி, நீங்க செக்ஸியா வெறியேத்தற மாதிரி சிக்குன்னு இருக்கீங்க'ன்னு சொல்லணும்னு தோணினா அதை சொல்லிடணும்.''

கால் மேல் கால் அணிந்து கேட்டாள்!

''தோணுதா அப்படி?''

மௌனமாகி அவள் முகத்தைப் பார்த்தான்.

''அதான் சொன்னேனே, விளையாட்டுக்கில்லை. நிஜமா நான் உங்க வெறி பிடிச்ச ரசிகன். பிலீவ் மீ. அன்னைக்கு பூஜையில் சந்திச்சதுமே - அன்னிக்கு மனசு பூரா உக்காந்து கிட்டு கலைய மாட்டேன்னு அடம் பண்ணிட்டீங்க நீங்க. ராத்திரி தூங்க ரொம்ப நேரமாச்சு.''

''இது மட்டும் டயலாக்கில்லாம என்னவாம்?''

குனிந்து, நிமிர்ந்து சிரித்தாள் தேவமாலினி.

''எதில அடிச்சி சத்தியம் செய்யட்டும்?'' அவள் கையை எடுத்து அதன் மேல் தன் கையைப் பொத்தி, ''போதுமா?'' என்றான்.

அப்படியே இழுத்து அவன் கையை தன் மார்பின் மேல் அவள் வைத்துக் கொள்ள, உடனே விலக்கி பொய்யாய் மயங்கியவள் போல பாவனை செய்து, ''தவுஸண்ட் வோட்ஸ் கரண்ட் அடிச்ச மாதிரி இருக்கு. சீரியஸா சொல்றேன். இண்டஸ்ட்ரியில உடம்பை உங்களை மாதிரி யாரும் மெய்ன் டெய்ன் செய்யலை. ஒரு இடத்திலயும் தேவைக்கதிகமா ஃப்ளெஷ் இல்லை. ஒண்ணு, ரெண்டு படங்கள் கவுந்தாலும் இன்னிக்கும் நீங்க ஃபீல்டுல நிக்க இந்த சீரான உடம்புதான் காரணம். எத்தனை பேர் புதுசு புதுசா வந்தாலும் உங்க மேல ரசிகர்களுக்கு உள்ள க்ரேஸ் தனி. அன்னிக்கு ஒரு சலூன்ல பார்த்தேன்.''

கதவைத் தட்டி அனுமதி பெற்று சேவகன் போனில் சொன்னதை கொண்டு வைத்து விலகியதும், எடுத்து கிளாஸ்களில் ஊற்றியபடி...

''என்ன சொல்லிட்டிருந்தேன்? யெஸ் சலூன்! உங்க போட்டோ கத்திரிச்சி ஒட்டியிருந்தான். அதில ஒரு முக்கியமான இடத்தில் கிழிஞ்சிருந்தது. என்னப்பா அதுன்னு கேட்டேன். முடி வெட்டிக்க வந்தவன்ல ஒருத்தன் பாய்ஞ்சிட்டானாம். பல் பட்டு கிழிஞ்சிடுச்சாம். டெர்ரிஃபிக்! இல்லை! தப்பித் தவறி அவன் உங்களை நேர்ல சந்திச்சா என்ன ஆகும்?''

''ச்சீ!'' என்று அவன் கன்னத்தில் தட்டினாள்.

தேவமாலினி எழுந்து சென்று ரெஃப்ரிஜிரேட்டர் திறந்து குளிர்பானமும், ஐஸ் கட்டிகளும் எடுத்து வந்தாள். அவன் விஸ்கி ஊற்ற இவள் அளவு கேட்டு கலந்து ஐஸ் க்யூப்ஸ் போட்டாள்.

மெல்ல மோதிக் கொண்டு பருகத் துவங்க, இவள் உடனே சரசரவென்று முடித்துவிட்டு வைத்தாள்.

''திருவனந்தபுரத்தில் வெறும் லெமன் ஜூஸ் மட்டும் குடிச்சி இந்த வாடைக்கே மூக்கைப் பொத்திக்கிட்டதா ஞாபகம்'' என்றான் இளங்கோ.

''பத்து வருஷம் நடுவில ஓடிடுச்சி இளங்கோ.''

''டெய்லியா?''

''சேச்சே! ரொம்ப சந்தோஷமா இருக்கிறப்போ. இல்லை ரொம்ப துக்கமா இருக்கிறப்போ.''

''இப்போ ரெண்டாவது வகையா?''

''சே! முதல் வகை!''

''ரியலி? யு லைக் மை கம்பெனி?''

முடித்து விட்டு மீண்டும் நிரப்பினான். ஒரு சிகரெட் ''எக்ஸ்க்யூஸ் மீ'' பற்ற வைத்துக் கொண்டு, ''கேட்டனே, யு லைக் மை கம்பெனி?''

''கம்பெனி எல்லாம் இல்லை. ஐ லைக் யு. உன்னோட எனர்ஜெடிக் துடிப்பு இருக்கு பாரு! யூத்துக்கு உரிய துள்ளல்! பேச்சில் உள்ள இன்ட்டெலிஜென்ஸ்! நாம சந்திச்சக்கலையே ஒழிய - உன்னை பத்திரிகையிலே பார்க்கிறப்ப, சினிமால பார்க்கிறப்ப சந்தோஷமா இருக்கும். உன் படங்கள் ஒண்ணு விடாம கலெக்ஷன்ஸ் வெச்சிருக்கேன், யு நோ.''

''த்ரில்லிங் டு ஹியர்! லட்சோப லட்ச ரசிகர்களோட கனவுக்கன்னி என்னை ரசிக்கிறதா? சப் கொஸ்டின் கனவுக் கன்னியா? கனவுக் காரிகையா? ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்கு.''

அவன் கன்னத்தை விள்ளலாகப் பிடித்து உலுக்கி, ''இதானே வேணாங்கிறது? என் கேள்விக்கு உண்மையா பதில் சொல்லு. நானும் உண்மையா பதில் சொல்றேன்'' என்றாள் சேலையின் தலைப்பு நழுவுவதைப் பொருட் படுத்தாமல்.

''ரெண்டு பெக்குக்கு அப்புறம் நீங்க உதைச்சிக் கேட்டாக் கூட பொய் வராது. கேளுங்க தேவமாலினி.''

''நீ பேச்சிலரா?''

''ப்பூ! இவ்வளவு தானா? நீங்களே சொல்லுங்க. இருக்க முடியுமா?''

''சிரமம்.''

''ரொம்ப லிமிட்டட். அலையறதில்லை. மனசு அல்லாடறப்ப... அப்பப்ப!''

''மனசு எப்ப அல்லாடும்?''

''அதுக்கு டைம் டேபிளா இருக்கு? எப்பவேணா அல்லாடும்! இப்பக்கூட அல்லாடிக்கிட்டுதான் இருக்கு.''

சரக்கென்று நிரை இழுத்தது போல ஒரு அமைதி வந்து விழுந்தது. தேவமாலினியின் சேலை தலைப்பு முற்றிலும் விலகி கைகளில் விழுந்திருக்க, லேசான தள்ளாட்டத்துடன் எழுந்து இரண்டு கைகளையும் விரித்தபடி அவனைப் பார்த்து, ''இளங்கோ'' என்றாள்.

அந்த வார்த்தையில் உஷ்ணம், ஏக்கம், அழைப்பு மூன்றும் நீக்கமற கலந்திருக்க... இளங்கோ அவளை சுட்டுவிடப் போகிறதேயென்று சிகரெட்டை அணைத்துவிட்டு அப்புற மாக அவளை அணைத்துக் கொண்டான்.

மிக அருகிலேயே கட்டில் இருந்தது.

5

பெசண்ட் நகர் கடற்கரைக்கு இன்ஸ்பெக்டர் சித்திர வேலும், சில கான்ஸ்டபிள்களும், ராஜாத்தியும் வந்து சேர்ந்த போது வெயில் சுள்ளென்று அடிக்கத் துவங்கியிருந்தது. கடலுக்கு ஜரிகை ஆடை அணிவித்திருந்தான் சூரியன்.

அந்த இளைஞன் கத்திக் குத்துப்பட்டுக் கீழே கிடந்த அந்த நினைவு மண்டபத்தின் அருகில் ராஜாத்தி நிறுத்தச் சொன்ன இடத்தில் ஜீப் நின்றது.

''இந்த இடம் தான் சார்.''

ராஜாத்தி காட்டின இடத்தில் மணலில் கட்டி கட்டியாக இரத்தம் உறைந்து போயிருந்தது.

''ரோட்லேர்ந்து இவ்வளவு தூரம் தள்ளி ஏன் வந்தானுங்க?'' தொப்பியை எடுத்துவிட்டு தலையை சொறிந்தார் சித்திரவேல்.

''கத்தினாலும் அலை சத்தத்தில் மங்கிடட்டும்னு இருக்கலாம்'' என்ற ராஜாத்தியை 'அட! பரவாயில்லையே' என்பது போலப் பார்த்தார்.

கான்ஸ்டபிள்கள் உத்தரவின்படி அருகில் நடந்து குனிந்து தடயம் சாட்சியம் ஏதாவது தென்படுகிறதாவென்று தேடினார்கள்.

அந்த மண்டபத்தில் ஏறி நின்று பார்த்தார்.

நாலு சினிமாவில் ஒன்று தப்பாமல் இடம் பெற்று விடும் அந்தக் கடற்கரை மண்டபத்தில் காதல் கிறுக்கல்கள் நிறைய இருந்தன. கரித்துண்டு, பால்பாய்ண்ட் பேனா, பென்சில் என்று சகலத்திலும் எழுதியிருந்தார்கள்.

பரணி, ஐ லவ் யூ - தாமோதரன் - நித்யா - ரவிசங்கர் லவ்ஸ் கார்த்திகா - சோமு, விஜயன், ராஜேந்திரன் - பெருந்துறை - பார்வதி - உன்னுடைய - என் - எதுவும் எழுத விரும்பாத சிலர் கஜூரஹோவை படமாக வரைய முயற்சி செய்து பாகங்களைத் தப்பாமல் குறித்திருந்தார்கள்.

''என்னய்யா, ஒரு மோட்டார் பைக் தடம் எதுவும் இருக்கா?''

''இல்ல சார். காத்துல மணல் பறக்குறதால அழிஞ் சிருக்கும்.''

சித்திரவேல் அந்த ரத்தக் கட்டிகள் அருகாமையில் ஷூ கால்களால் மணலை நிரடி நிரடிப் பார்த்தார். ''நோ சான்ஸ்'' என்று உதடுகளைப் பிதுக்கிக் கொண்டார். ராஜாத்தியிடம், ''ஏம்மா, உனக்கு கத்தினது கேட்டதா?''

''இல்லை சார். முனகல் கேட்டுத் தான் வந்தேன்.''

''கிட்டத்தட்ட நாலு இஞ்ச் இறங்கியிருக்கு. வாய்விட்டு அலறியிருப்பான். கேக்கலைன்னா வாயைப் பொத்திக்கிட்டு

குத்தியிருக்கணும் அவன். நீ இங்கே ஓடினப்போ வேற யாரையும் பார்க்கலை தானே?''

''பைக்கில போறவனைப் பார்த்தனே.''

''அவனைத் தவிர...?''

''ம்கூம்... யாருமில்லை சார். அகஸ்மாத்தா டாக்டர் ஓடறதுக்காக வந்தார்.''

அப்புறம் ராஜாத்தியிடம் விலாசம் வாங்கிக் கொண்டு அவளைப் போகச் சொன்னார் சித்திரவேல்.

''ஐ ம் வெரி க்யூரியஸ் சார். அவனைக் கண்டுபிடிச் சிட்டாங்கன்னு நான் உங்களுக்கு அப்புறமா போன் செஞ்சி விசாரிச்சா தொந்தரவா நினைப்பீங்களா?'' என்றாள்.

சற்றே சிரித்துவிட்டு, ''எல்லோரும் விட்டாப் போதும்னு ஓடுவாங்க. நீ இவ்வளவு ஆர்வம் காமிக்கிறயே. தாராளமா போன் செய்ம்மா'' என்றார்.

நிறுத்தின இடத்தில் அப்படியே இருந்த தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு ராஜாத்தி சென்றதும், சித்திரவேல் அந்த இடத்தில் ஒரு கான்ஸ்டபிளை நிறுத்திவிட்டு மறுபடி டாக்டர் நடேசனின் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்வர்ணப்ரியா புரொடக்ஷன்சில் இருந்து பொண்ணுசாமி வந்தார். வந்தவரை சித்திரவேல் அழைத்துச் சென்று பிணத்தைக் காட்டினார்.

''பாருங்க. இந்த ஆசாமி உங்க கம்பெனிக்கு வந்திருக் கானா? தெரிஞ்சவனா?''

அவர் ஆழ்ந்து பார்த்து, உதட்டைப் பிதுக்கித் தலையை இட, வலமாக அசைத்து விட்டு இடுப்பிலிருந்து மூக்குப் பொடி எடுத்து சர்ரென்று ஏற்றிக் கொண்டு, ''அப்ப வர்றேன்'' என்று சென்று விட்டார்.

கொஞ்ச நேரத்தில் எஸ்.பி. மருது வந்த போது சித்திரவேல் சல்யூட் அடித்தார். இவர் விவரம் சொல்லச் சொல்ல தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, ''இன்னும் ஆள் யாருன்னே தெரிஞ்சுக்காம இருக்கீங்களே'' என்றார்.

''போன் நம்பர் வச்சி ஒரு சினிமா கம்பெனின்னு கண்டுபிடிச்சி அவங்களை காண்டாக்ட் பண்ணி வரவழைச்சி பார்த்துட்டேன் சார். அவங்களுக்கு தெரியலை சார்.''

''பாக்கெட்ல வேற என்னென்னவோ இருக்கு துன்னிங்களே...''

''ஒவ்வொண்ணா அடுத்து விசாரிக்கணும் சார். ஷேவிங் கிரீம் வாங்கிருக்கான் நேத்து தேதியில மைலாப்பூர்ல. அந்த கடையில விசாரிக்கணும். குறிப்பு நோட்ல உங்கள் ஜூனியர் அலுவலகம் போகணும்னு எழுதியிருக்கான். அங்கே விசாரிக்கணும். இதோ பாருங்க.''

சித்திரவேல் எடுத்துக்காட்ட, ''டூ இட் இம்மீடியட்லி, என்ன ஆபீஸ் அது?'' என்றார் எஸ்.பி.

''விசாரிச்சுட்டேன் சார். உங்கள் ஜூனியர்ங்கிறது ஒரு பத்திரிகை. மாத பத்திரிகை. ஒரு புத்தகம் வாங்கி விலாசமும், போன் நம்பரும் குறிச்சி வச்சிட்டேன்.''

''போன் செஞ்சீங்களா?''

''பண்ணிட்டேன் சார். பதில் இல்லை. பத்து மணிக்கு மேல் தான் திறப்பாங்க போலிருக்கு. இதே அடையாறு தான். பாடியை போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப்பிச்சிட்டு போய் நேர்லயே பார்த்துடறேன் சார்.''

''கடற்கரைக்கு நாய் அழைச்சிட்டுப் போய் பார்த்துட லாமா?'' ப்ளட் ஸ்டெய்ன் இருக்குன்னிங்களே...''

''இருக்கு. ஆனா கொலைகாரன் பைக்கில் போயிருக் கான்.''

''அதை உறுதியான முடிவா எடுத்துக்க முடியாது. நாய் ஏற்பாடு பண்ணிடலாம்னு தான் நினைக்கிறேன்'' என்றார் எஸ்.பி.

மேலும் பல குறிப்புகள், உத்தரவுகள் கொடுத்துவிட்டு அவர் புறப்பட்டுச் சென்றதும், சித்திரவேல் பெருமூச்சு விட்டார்.

ஆம்புலன்ஸ் வந்ததும் ஒரு கான்ஸ்டபிளை துணைக்கு வைத்து பிணத்தை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். உதவி இன்ஸ்பெக்டரை போன் செய்து அழைத்து அவன் உடைகள், கத்தி முதலியவற்றை ஒப்படைத்து ஸ்டேஷனில் கொண்டு சென்று வைக்கச் சொன்னார்.

டாக்டர் நடேசனுக்கு நன்றி சொல்லி எழுதி வாங்கின ஸ்டேட்மெண்ட்டுடன் புறப்படும் முன்பாக மீண்டும் ஒருமுறை போன் செய்தார்.

''ஹலோ உங்கள் ஜூனியர்'' என்றார்கள்.

''பேசறது யாரு?''

''இங்கே மாரிமுத்துன்னு மேனேஜர் பேசறேன்.''

''நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் சித்திரவேல் பேசறேன். ஒரு என்கொயரி இருக்கு. உங்க உதவி வேணும். நான் உடனே நேர்ல வர்றேன்'' என்று வைத்து விட்டுப் புறப்பட்டார்.

6

ஷாட் இடைவெளியில் நாற்காலியில் அமர்ந்திருந்தாள் தேவமாலினி. இளங்கோவுடன் நடிக்கும் 'இது புதிய நேரம்' படத்தின் அன்றைய படப்பிடிப்பில் இளங்கோவுக்கு காட்சி இல்லை என்பதால் வரவில்லை. அதுவே அவளுக்கு போரடித்தது. இளங்கோவுடன் ஏற்பட்டுள்ள புதுப்பிக்கப் பட்ட உறவை நினைத்தாள்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு துவங்கிய இந்த நாற்பது நாட்களும் எவ்வளவு சுகமான வசந்த நாட்கள்!

அன்றைய ஹோட்டல் சந்திப்புக்குப் பிறகு இளங்கோவுடன் ஏற்பட்டுள்ள நட்பின் நெருக்கமே தனி. நட்பா? ச்சே! அந்த வார்த்தையை இங்கே உபயோகிக்க முடியுமா?

பின்னே? நானும், இளங்கோவும் காதலிக்கிறோமா?

சிரிப்பாக இருக்கிறது. அப்படிச் சொல்லிப் பார்க்க, ஆனால் உண்மை அதுதான். லைட் வெளிச்சமில்லாமல், காமிராவின் முன்னிலை இல்லாமல் நாங்கள் காதலித்துக் கொண்டிருக்கிறோம்.

வொய் நாட்? நானும் பெண் தானே? ஆனால் இத்தனை நாட்களாக எனக்குள் ஒரு சந்தேகம் இருந்தது. சினிமாவில் அல்லாமல், சம்பளத்திற்காக இல்லாமல் ஒரு ஆளைப் பார்த்ததும் கிளர்ச்சி, புத்துணர்ச்சி, மயக்கம், கிறக்கம் இதெல்லாம் எனக்கு ஏற்படுமா என்று.

ஏற்படுகிறதே! எந்தத் தயக்கமும் இல்லாமல், எதிர்ப்போ மறுப்போ இல்லாமல் எங்களுக்குள் சங்கமம் நிகழ்ந்திருந்த போதிலும், அதன் பிறகு அந்தச் சங்கமம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தொடர்கதையான போதிலும் (விடுமுறை ஏற்காடு எக்ஸ்பிரஸ் கூப்பேயிலும்... ச்சீ!) எனக்கு அவன் மேலும், அவனுக்கு என் மேலும் உள்ள கவர்ச்சியோ, ஆசையோ கொஞ்சமும் குறையவில்லை.

மாறாக அது மடங்கு மடங்காக அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது.

உரிமை கிடைக்கும் வரை கொஞ்சம் சமுதாயத்திற்கும் சில துணிச்சல்கார பத்திரிகையாளர்களுக்கும் பயப்பட வேண்டி யிருக்கிறது.

ஆனால் தாரணியை இரண்டாம் காட்சிக்கு அனுப்பி வைத்துவிட்டுக் காத்திருக்க, இளங்கோ முகத்தை மூடும் ஹெல்மெட் அணிந்து பைக் எடுத்துக் கொண்டு என் வீட்டிற்கு வர...

போன தடவையோ அதற்கு முதல் தடவையோ தான் ஆரம்பித்தேன்.

''இளங்கோ...''

''ம்...'' என்றவனின் உஷ்ண மூச்சு என் கழுத்தில்.

''கொஞ்சம் சும்மா இரேன்.''

''ஏன்?''

''முக்கியமா பேசணும்.''

''நீ பாட்டுக்கு பேசு தேவா.''

இப்போது நீங்க, வாங்க கழன்று போய் விட்டது.

''அக்கறையோட நீ கேக்கணும்.''

''காதுக்கு இங்கே ஒண்ணும் வேலையில்லை பேசு. அதுபாட்டுக்குக் கேட்டுக்கும்.''

அவன் கைகள் என்னை கவனம் செலுத்திப் பேச விடாமல் செய்து கொண்டிருக்க, ''ப்ளீஸ் இளங்கோ, ஒரு பத்து நிமிஷம் இடைவேளை நான் எங்கே போய்ட்டேன்.''

இளங்கோ கைகளைக் கட்டிக் கொண்டான். ''சரி, என்ன சொல்லு.''

''ரெண்டு மாசத்துக்கு முன்னாடி நான் தற்கொலை செய்துக்கலாம்ன்னு யோசிச்சிட்டு இருந்தேன்னு சொன்னா நம்புவியா இளங்கோ?''

''நம்ப மாட்டேன்.''

''நிஜம் இளங்கோ. எனக்கு ஏகப்பட்ட சிக்கல்கள். இந்த பங்களா இப்போ கடன்ல இருக்கு தெரியுமா? இதை இப்போ வித்தா அசல், வட்டிக்கு சரியாப் போய்டும்.''

''ரியலி? சொந்தப்படம் எடுத்ததில உனக்கு ஏகப்பட்ட நஷ்டம்னு கேள்விப்பட்டேன். ஆனா இந்த அளவுக்கா?''

''எடுத்ததோட நிறுத்தியிருக்கலாம், தப்புக் கணக்குப் போட்டுட்டேன். சிட்டி, கோயமுத்தூர் இரண்டு ஏரியாவும் நானே டிஸ்ட்ரிபியூட் செஞ்சேன். படம் ஏழு நாள் தான் ஓடிச்சி. ரெண்டாவது வாரம்னு போஸ்ட்டர் அடிச்சதை எடைக்குத் தான் போட்டோம். செமத்தியா கடிச்சிடுச்சி இளங்கோ. எக்கச்சக்க டென்ஷன்! தினம் போன் அடிச்சாலே உதறல்! பத்திரிகைக்காரங்களை நிமிர்ந்து பார்க்க முடியலை. ஒரு மாசம் நான் வீட்டை விட்டே வரலை. ஏதாச்சும் மனசுக்கு மாற்றம் வேணும்னு கலைவிழால கலந்துக்க சிங்கப்பூர்ல போயிட்டு வந்தேன்.''

இளங்கோ இதையெல்லாம் எதற்காக இப்போது சொல்கிறாய் என்பது போல் என்னைப் பார்த்து ஒரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு புகையை போர்வைக்குள் ஊதினான்.

''அது மட்டுமில்லை. கேரளாவில் இருக்கிற என்னோட ஒரே ஆதரவான அம்மா செத்துப் போனாங்க. சினிமாவைப் பொறுத்த வரைக்கும் என்னோட நாலு படங்கள் வரிசையா தோல்வி. அதனால மார்க்கெட் சரிஞ்சி போய் 'இருபத்தஞ்சி. தான் தருவேன், பண்றீங்களான்னு ஒரு புரொட்யூசர் என்னை எகத்தாளமா கேக்கிற நிலைமை. இந்த நிலைமையில தான் மறுபடி நாம் சந்திச்சோம். திருவனந்தபுரத்தில அப்போ நமக்குள்ளே இருந்த புரிபடாத அன்புக்கு இப்போ அர்த்தம் புரிஞ்சுபோச்சு. இளங்கோ, இப்போ நான் என்னோட எல்லா

ரணங்களையும் மறந்து இருக்கேன்னா அதுக்குக் காரணம் நீ தான்'' என்ற போது என் கண்களில் கண்ணீர் துளிகள் முகாமிட்டனவோ?

என்னை லேசாக அணைத்துக் கொண்டு, ''வாட் டார்லிங், நீ இவ்வளவு சென்சிடிவா?'' என்றான்.

''இளங்கோ, ஐ லவ் யூன்னு சொன்னா சிரிப்பியா?''

''சேச்சே! எல்லா சினிமா பத்திரிகையிலும் எழுதிட்டாங்க.''

''என்ன? கொஞ்ச நாளா நான் எதையும் படிக்கிறதில்லை.''

''அவங்க பாஷையில எழுதியிருக்காங்க.''

''அதான் என்ன?''

''வேணாம், சொன்னா வருத்தப்படுவே.''

''பரவால்லை சொல்லு இளங்கோ.''

''நடிகை தேவமாலினிக்கு தன்னை விட இளம் வயதுள்ள கதாநாயக நடிகர்கள் என்றால் மிகவும் பிடிக்கும். இப்போது இவரின் வலையில் விழுந்துள்ள ஹீரோ இளங்கோ! இரண்டு பேரையும் ஜோடியாக பல இடங்களில் பார்க்க முடிகிறது. ஹீரோவின் மேல் தேவமாலினிக்கு உள்ள கவர்ச்சி தீரும் வரை இந்த தற்காலிக இணைப்புத் தொடருமாம்!'' என்றான் இளங்கோ.

''பார்த்தியா, நேர்மை இல்லாம எப்படி எல்லாம் எழுதறானுங்க! இளங்கோ! என்னைப் பாரு. இது தற்காலிக இணைப்பா?''

''சேச்சே!''

''நான் உனக்கு வலை வீசினேனா?''

''அப்படியே வீசியிருந்தாலும், அந்த வலையில விழ நான் தயாராக இருந்தேன்.''

''எனக்கு இந்த மாய வாழ்க்கை அலுத்துப் போச்சு.''

''ஸோ...''

''உன்னோட நடிக்கிறதை கடைசி படமா வச்சிக்கலாமான்னு யோசிக்கிறேன்.''

''அப்புறம்?''

''எனக்கு ஒரு புதுமுகம் தேவைப்படுது இளங்கோ. ஒரு குடும்பப் பொண்ணா, சமையல், குழந்தை, புருஷனோட தேவைகள்னு கவனிச்சிக்கிட்டு மற்ற டென்ஷன்கள் எதுவும் இல்லாத ஒரு இல்லற வாழ்க்கைக்காக நான் ஏங்கறேன் இளங்கோ. நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''இந்த நடு ராத்திரிலயா?''

''ஜோக் அடிக்காதே இளங்கோ. யு லவ் மீ. இல்லையா?''

''ஷ்யூர்.''

''நான் உன்னைவிட ரெண்டு வருஷம் மூத்தவ. அதனால உனக்கு காம்ப்ளெக்ஸ் எதுவும் இருக்கா இளங்கோ?''

''சேச்சே! நெவர், கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா எனக்கு இதெல்லாம் சொல்லிக் கொடுத்ததே ரெண்டு, மூணு என் வயசுக்கு மீறின பொண்ணுங்க தான்.''

''வேணாம். பழசை பேச வேணாம்.''

''ஏன் தேவா? எதை நாம பேசாம விட்டு வச்சோம்? நமக்குள்ள நாடகமே வேணாம். நானும் புது மாப்பிள்ளை இல்லை. நீயும் புதுப் பொண்ணு இல்லை. நாலு வருஷம் முன்னாடி தயாரிப்பாளர் ஒருத்தர் உன்னை தன் விருகம் பாக்கம் பங்களாவிலேயே கொஞ்ச நாள் வச்சிருந்ததெல்லாம் எனக்குத் தெரியும். சொல்லு, உண்டா, இல்லையா?''

''அது எதுக்கு இப்போ? வாழ்க்கையில கசப்பான பக்கங்களில் அதுவும் ஒண்ணு. அவர் எனக்கு தரவேண்டிய

நாலரை லட்சம் பாக்கியை வசூலிக்க எப்படியெல்லாமோ போராட வேண்டியிருந்திச்சி.''

''அவர் உன்னை கல்யாணமே பண்ணிக்க இருந்ததா படிச்ச நினைவு.''

''சேச்சே! இல்லைப்பா. அவருக்கு ஏற்கனவே பொண்டாட்டி உண்டு.''

''அது தான் தூக்கு மாட்டி தற்கொலை செய்துகிச்சே.''

''அதோட எனக்கும் அவருக்கும் விவகாரம் விட்டுப் போச்சு. ஏன்ப்பா இப்ப அந்த பழைய குப்பை எல்லாம்? இன்னைக்கு என் மனசு பூரா நீ மட்டும்தான் இருக்கே. கல்யாணத்துக்கப்புறம் இனி நாம எப்படி இருக்கணும்னு பேசிக்கலாம். பிரமாதமான பல வெற்றிகளுக்காக அந்தரங்கமான சில தோல்விகள் எல்லாரோட வாழ்க்கையிலும் உண்டு. தோல்வியோட வகைகள் தான் வித்தியாசப்படும். ஆரம்பிச்ச கேள்விக்கு இன்னும் பதில் வரலை உன்கிட்டேர்ந்து.''

''என்ன?''

''நாம கல்யாணம் செய்துக்கலாமா?''

''நான் தமிழ்ச் சினிமாவில மூணாவது, நாலாவது இடத்திலதான் வர முடிஞ்சிருக்கு. முதல் இடத்துக்கு வரணும்னு ரொம்ப போராடிக்கிட்டிருக்கேன்னு உனக்கேத் தெரியும். இப்ப பதினாலு படம் இருக்கு. கதை கேக்காம ஒப்புக்கிறதில்லை. மேக்கப்புல அக்கறை காமிக்கிறேன். கடுமையா உழைக்கிறேன். இப்ப கல்யாணம் செய்துக்கிறது என்னோட கான்சென்ட்ரேஷனை கலைச்சுடுமேன்னு நினைக்கிறேன். கொஞ்ச நாள் வெய்ட் பண்ணக் கூடாதா?''

நான் உடனே அவன் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டு, ''இது போதும் இளங்கோ. கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டியே. இதுபோதும். எத்தனை வருஷம் வேணாலும் வெய்ட் பண்ணுவேன் நான்.''

அருகில் இருந்த அவன் வாட்ச்சை எடுத்துப் பார்த்து விட்டு, ''பத்து நிமிஷம் இடைவேளைன்னு சொல்லிவிட்டு இருபத்தஞ்சி நிமிஷம் அநியாயமா வேஸ்ட் பண்ணிட்டோம்'' என்று விட்டு என்னை அணைத்துக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டுத் துவங்கினான்.

''ஹலோ... என்ன கற்பனை?'' என்று குரல் கேட்டு கலைந்தாள் தேவமாலினி.

புன்னகையுடன் நின்று கொண்டிருந்த அந்த பத்திரிகை நிருபரைப் பார்த்து, ''வாங்க மன்மதன். பார்த்து நாளாச்சி. தம்பி, ஒரு சேர் கொண்டாந்து இப்படிப் போடு'' என்றாள்.

கொண்டு வந்து போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்து கொண்ட மன்மதன் கமுக்கமாக சிரித்து அமைதியாக இருந்தான்.

தேவமாலினிக்கு எல்லா நிருபர்களையும் விட மன்மதனை மிகவும் பிடிக்கும். நல்ல அறிவுக் கூர்மை. எந்த சப்ஜெக்ட்டைப் பற்றியும் விரிவாகப் பேசுவான். புண்படுத்தும்படி கேள்விகள் வராது. பேட்டியை அர்த்தம் மாற்றி திரித்து எழுதமாட்டான். விமரிசனம் செய்வான். அதில் முகத்தாட்சண்யம் இருக்காது. சிறப்பாகப் பட்டால் ஓகோ என்பான். பிடிக்கவில்லை என்றால் 'ச்சீ, தூ!' என்று விடுவான். நிறைய முன்னேற்றக் குறிப்புகள் சொல்வான்.

தேவமாலினிக்கு தனியாக பி.ஆர்.ஓ. என்று யாரும் இல்லை. ஆகவே பத்திரிகையாளர்களை சந்திப்பது, சிறிய பார்ட்டிகள் கொடுப்பது என்றால் மன்மதனை அழைத்து பொறுப்புக்களை ஒப்படைத்து விடுவாள். அவன் கச்சிதமாக எல்லா ஏற்பாடுகளையும் முடிப்பான். நடுவில் காசு சுரண்டும் பழக்கமில்லாமல் பைசா சுத்தமாக கணக்குக் கொடுப்பான்.

தேவமாலினி பிரியப்பட்டு பணம் கொடுத்தாலும் மறுத்து விடுவான். தான் எழுதும் கட்டுரைகள், பேட்டிகளுக்கு பத்திரிகைகளில் தருகிற தொகை போதுமானது என்பான். சிங்கப்பூர்ல இருந்து அவனுக்காக இவள் வாங்கி வந்து தந்த டி.ஷர்ட்டைக் கூட மறுத்து விட்டவன்.

தேவமாலினி அவனை வெறும் ரிப்போர்ட்டராக நினைப்பதில்லை. அதற்கு மேல் ஒரு நல்ல நண்பனாக, ஒரு நல்ல ஆலோசகராக, ஒரு புதிய படக் கம்பெனி இவளை அணுகும் போது மன்மதனை அழைத்து 'பார்ட்டி எப்படி?' என்று கேட்பாள். ஒரு வித்தியாசமான கேரக்டரில் அவள் நடிக்கப் போவதாக இருந்தால், அதே டைப் கேரக்டர்கள் உள்ள படங்களின் கேஸட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து விடுவான்.

தேவமாலினி இவனிடம் மட்டும் ஓரளவு தனது வெளிவேஷம் கலைத்து கொஞ்சம் பலவீனங்களையும் பகிர்ந்து கொண்டிருக்கிறாள்.

''என்ன இப்படி கமுக்கமா சிரிக்கிறீங்க?'' என்றாள் தேவமாலினி.

''ஒண்ணுமில்லையே.''

''அப்படின்னா ஏதோ இருக்குன்னு அர்த்தம்.''

''இண்டஸ்ட்ரில உங்க பேச்சு தான் இப்போ.''

''அப்படியா? என்ன பேசறாங்க?''

''கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களாமே.''

''இது பேட்டியா, பர்சனல் கேள்வியா மன்மதன்?''

''எவ்வளவு பேசினாலும் எதை எதை போடலாம்ன்னு கடைசியா உங்களைக் கேக்காம நான் எழுதியிருக்கேனா எப்பவாவது?''

''இல்லை. அதனால தான் உங்ககிட்ட மட்டும் எனக்கு மனசு விட்டுப் பேசப் பிடிக்கும். இப்ப சொல்றதை வெளியிட்டுட வேணாம். யெஸ். நான் கல்யாணம் பண்ணிக் கிறதா இருக்கேன். சீக்கிரம் ரெண்டு பேருமா சேர்ந்து பிரஸ் மீட் வெச்சி அறிவிப்போம்.''

''இளங்கோ தானே?''

''உங்களுக்குத் தெரியாம நாங்க சுவாசிக்கக் கூட முடி யாதே. அவர் தான். என்ன மன்மதன் நினைக்கிறீங்க? என் முடிவு சரியா? ஒரு ஸ்டேஜ்ல நானும் செட்டில் ஆக வேணாமா?''

''நிச்சயமா. வரிசையா உங்களுக்கு எவ்வளவு கஷ்டங் கள்ன்னு எனக்குத் தெரியும். மத்தவங்களை விட அதிகமாவே தெரியும். நிச்சயமா நான் ரொம்ப சந்தோஷப்படறேன்.''

''உதவி இயக்குனர் வந்து, ''ஷாட் ரெடி. வாங்க'' என்றதும் தேவமாலினியோடு மன்மதனும் எழுந்து கொண்டான்.

''புறப்பட்டாச்சா?''

''அடுத்த ஃப்ளோர்ல ரஜினி இருக்கார். பிரேக்ல பேட்டி தர்றேன்னு சொல்லிருக்கார். மிஸ் பண்ணிடக்கூடாது. உங்களை நான் அப்புறமா சந்திக்கிறேன் மேடம்'' மன்மதன் நடந்தான். நினைத்துக் கொண்டு திரும்பி வந்து, ''இப்ப பேசினதை எழுதிட மாட்டேன்'' என்று விட்டுச் சென்றான்.

7

உங்கள் ஜூனியர் பத்திரிகை அலுவலகத்தில் இன்ஸ் பெக்டர் சித்திரவேலுக்கு லட்டு போன்ற தகவலைக் கொடுத்தார்கள்.

தான் வந்த நோக்கத்தை சுருக்கமாகச் சொல்லி, ''பதினாறாம் தேதி காலை பத்து மணிக்கு உங்கள் ஜூனியர் அலுவலகம் போக வேண்டும் அப்படின்னு அவனோட குறிப்பு நோட்ல எழுதியிருந்ததாலதான் நான் உங்ககிட்ட வந்தேன்'' என்று இவர் சொன்னதும்...

மேனேஜர் ஒரு டைரியைப் புரட்டிப் பார்த்து, ''பதினாறாம் தேதி காலைல தங்கராசுவை வரச் சொல்லியிருக்கோம். செத்துப்போன ஆசாமி மாநிறமா? சுருள் முடியா?'' என்றார்.

''அய்யோ! ஆமாம்.''

''அப்படின்னா தங்கராசு தானா? அடப்பாவமே!''

''யார் தங்கராசு?''

''ஃப்ரீலான்ஸ் ஜர்னலிஸ்ட் பத்து, பதினைந்து பத்திரிகைகள்ல எழுதறவர். கூப்பிட்டு இந்த மாதிரி பெண் போலீஸ்காரங்க பத்தி பேட்டி கண்டு எழுதுங்க, கோல்டன் பீச்சுக்கு வர்ற காதலர்களை பேட்டி கண்டு எழுதுங்கன்னு அசைன்மெண்ட் கொடுத்தா, ரெண்டு நாள்ல செய்தி எழுதிக் கொண்டாந்துடுவாரு. அடடா! அவருக்கு அப்படி என்ன பகை சார்?''

''இப்ப தான் ஆளே யாருன்னு தெரிஞ்சிருக்கு. இனிமே தான் பகை என்னன்னு கண்டுபிடிக்கணும்.''

''எதுக்கும் அவரோட போட்டோ காமிக்கிறேன். கொஞ்சம் சரி பார்த்துடுங்க சார். வேற ஆளா இருந்தா நல்லது.''

''மை குட்னெஸ்! தங்கராசுவோட போட்டோ உங்ககிட்ட இருக்கா?''

''ரெண்டு மூணு போஸில இருக்கு சார். ரெண்டு தடவை பேட்டிக் கட்டுரையோட அவர் போட்டோவும் போட்டிருக்கோம்.''

மேனேஜர் புகைப்படங்கள் என்று எழுதின ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டு தேடத் துவங்கினார்.

எடுத்தார். கொடுத்தார். பதைப்புடன் காத்திருந்தார்.

''இவன் தான் இவனே தான்'' என்று சொன்னதும் முகம் சோர்ந்து போனார். ''அப்போ! தங்கராசு இவன் விலாசமும் நீங்க வெச்சிருப்பீங்களே?''

''தாராளமா மைலாப்பூர் கச்சேரி ரோட்ல ஒரு சின்ன தனி வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்தார். நல்லா சிரிச்சுப் பழகுவார்.''

எடுத்துக் கொடுத்த விலாசத்தை தனி காகிதத்தில் குறித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர். ''கல்யாணமானவரா?'' என்றார்.

''இல்லை. சீக்கிரத்திலே பண்ணிக்கப் போறதா சொன்னார். யாரையோ லவ் பண்றதா கூட சொல்லிட்டிருந்தார்.''

இன்ஸ்பெக்டருக்கு தங்கராசுவின் குறிப்பு நோட்டில் 'பதினாலாம் தேதி மாலை நான்கு மணிக்கு கிரிஜாவை சந்திக்க வேண்டும்' என்று அவன் எழுதியிருந்தது நினைவிற்கு வந்தது. ஒரு வேளை...

''அந்தப் பொண்ணு பேரு கிரிஜாவா?''

''பேரெல்லாம் தெரியாது சார்.''

''அந்தப் பொண்ணைப் பத்தி வேற ஏதாவது தகவல் தெரியுமா?''

''அந்தப் பொண்ணு ஏதோ ஒரு பெரிய ஹோட்டல்ல ரிசப்ஷனிஸ்ட்டுன்னு சொன்னார். வேற தகவல் தெரியாது.''

''தங்கராசுவுக்கு நெருக்கமான ஃபிரண்டு யாரு?''

''அதெல்லாம் தெரியாது சார்.''

''அவர் எந்த எந்த பத்திரிகைகளுக்காக வேலை பார்க்கிறார்?''

''குமுதம், கல்கி, குங்குமம், விகடன்லேர்ந்து எல்லா பத்திரிகைகளுக்கும் வேலை பார்ப்பார். அவங்க கூப்புட்டும் வொர்க் கொடுப்பாங்க. இவரா எழுதிட்டுப் போய் பரிசீலனைக்கும் கொடுப்பார்.''

நிறைய தகவல்கள் கொடுத்திருக்கீங்க. ரொம்ப தேங்க்ஸ். அவசியப்பட்டா மறுபடி வர்றேன்.''

சித்திரவேல் புறப்படும் முன்பாக தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்தார்.

★ ★ ★

மைலாப்பூர், கச்சேரி ரோட்டில் சற்று லஸ் கார்னர் சந்தடிகள் கடந்து ஒரு சந்துக்குள் பதுங்கியிருந்தது அந்த தனி ஓட்டு வீடு. இரண்டு பக்கங்களிலும் மாடி வீடுகள் இருந்தன.

தங்கராசுவின் வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது.

அருகில் ஒரு டெய்லர் கடை இருந்தது. சித்திரவேல் அவரிடம் சென்றதும் ஸ்டூலை வேஸ்ட் துணியால் துடைத்துப் போட்டார்.

''இந்த வீட்ல இருக்கிற தங்கராசுவைப் பார்க்க வந்தேன். வீடு பூட்டியிருக்குதே.''

''அந்தப் பையன் எப்ப வெளில போவான், எப்ப திரும்பி வருவான்னு சொல்ல முடியாதுங்க சார். பத்திரிகைகள்ல எழுதற பையன். பல ஜோலி, தப்பு, தண்டா எதுக்கும் போறதில்லை. என்ன விஷயம் சார்?''

''ஒரு பத்திரிகை விஷயமா தான் பார்க்கணும். அந்த வீட்ல தங்கராசு மட்டும் தான் தனியா தங்கியிருக்காரா?''

''ஆமாங்க சார்.''

''அப்பா, அம்மால்லாம்?''

''இறந்து போய்ட்டதா சொன்னாருங்க. சொந்த ஊரு பாபநாசம். அங்கே ஒரு அண்ணன் மெடிக்கல் ஷாப் வச்சிருக்கார். எப்பவாவது வந்து போவார்.''

''தங்கராசு தினமும் உங்க கடைக்கு வருவாரா?''

''ஆமாம். நான் ஒரு புத்தகப் பைத்தியம். மாசம் இருநூறு ரூபா வரைக்கும் செலவு பண்றேன். எல்லா புஸ்தகமும் வாங்கிடுவேன். அதனால தினம் ஒருஅரை மணி நேரமாவது நம்ம கடையில உக்காந்து பேசிட்டு, புத்தகங்களைப் புரட்டிட்டுதான் போவார். வீட்டுக்கு எடுத்துட்டுப் போய்ட்டு மெதுவாக கொடுங்கள்ளாலும் கேக்க மாட்டாரு.''

''போக, வர வண்டி ஏதாச்சும் வச்சிருக்காரா?''

''ம்கூம். பஸ் பிடிச்சிதான் போவாரு. ஏதாச்சும் அவசரம்னா ஆட்டோ பிடிச்சி போவாரு.''

''சமீபத்தில யாரோடவாவது தகராறு ஏற்பட்டுதா அவருக்கு?''

''அப்படியெல்லாம் எதுவும் தெரியலையே. இருந்தா என்கிட்ட சொல்லியிருப்பாரே.''

''அவர் கிரிஜான்னு ஒரு பொண்ணை காதலிக்கிறது உங்களுக்குத் தெரியுமா?''

டெய்லர் ஏதோ முதலிரவு அறைக்குள் நுழைந்த புதுப் பெண்ணைப் போல் இந்தக் கேள்விக்கு ஏகமாய் வெட்கப்பட்டு, ''தெரியும் சார்'' என்றார். ''ஒரு தடவை அந்தப் பொண்ணு வீட்டுக்கு வந்துட்டுப் போச்சு.''

''அந்தப் பொண்ணு எந்த ஹோட்டல்ல ரிசப்ஷனிஸ்ட்டா வேலை பார்க்குது?''

''ராதாகிருஷ்ணா ரோட்ல புதுசா கட்டியிருக்காங்களே, அதென்னது... டாப் சிடி?''

''ஆமாம். ஹோட்டல் டாப் சிடி அதிலயா?''

''ஆமாம்.''

''தங்கராசுவுக்கு நெருக்கமான ஃபிரண்டு யாரு?''

''நாலஞ்சு பேரு அவரைப் பார்க்க வருவாங்க. எல்லோரும் இவரை மாதிரி பத்திரிகைல எழுதறவங்க. அவங்க பேரெல்லாம் எனக்குத் தெரியாது. தினம் சாயங்காலம் அஞ்சு மணிக்கு கூடுவாங்க. நடந்து நாகேஸ்வரராவ் பார்க்குக்குப் போய் உக்காந்து பேசுவாங்க. பேசுவாங்க... அப்படிப் பேசுவாங்க... ராத்திரி ஒம்போது, பத்துன்னு தான் வீடு திரும்புவார் தங்கராசு.''

அதற்குமேல் உண்மையை மறைப்பது அநியாயம் என்று பட்டதால் சித்திரவேல் அன்று அதிகாலை தங்கராசு கொலை செய்யப்பட்டிருப்பதைச் சொல்ல... அந்த டெய்லர் துடித்துப் போய் விட்டார். உடனே கண்கள் பொங்கி விட்டன.

''ஒரு சுத்தியல் இருந்தா கொடுங்க.''

சித்திரவேல் வாங்கி தங்கராசுவின் வீட்டின் பூட்டைத் தட்ட, நான்காவது தட்டலிலேயே லொடக்கென்று கழன்று கொண்டுவிட்டது.

ஒரு சின்ன ஹால். வலது புறம் சமையலறை. இடது புறம் ஒரு படுக்கையறை. பின்புறம் பாத்ரூம் அவ்வளவே வீடு.

சமையலறையின் கொஞ்சமான பாத்திரங்கள் இருந்தன. ஹாலில் வயர் பின்னின மூன்று மடக்கு நாற்காலிகள் தவிர வேறு எதுவும் இல்லை.

படுக்கையறை கதவைத் தள்ளித் திறந்தாலும் அதிர்ந்து போனார் சித்திரவேல்.

அந்த அறை முற்றிலும் கலைத்துப் போடப்பட்டிருந்தது. குறும்புக்கார முரட்டுக் குழந்தையிடம் கிடைத்த பொம்மை

போல கந்தர்வ கோலமாக அறையெங்கும் புத்தகங்கள் கலைத்து விசிறப்பட்டு, மேஜையின் டிராயர்கள் இழுத்துப் போடப்பட்டு, அலமாரி, சூட்கேஸ் எல்லாம் திறந்து போடப்பட்டு...

யாரோ எதையோ அவசரமாக, கோபமாக தேடியிருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புரிந்தது.

அறையின் மூலையில் ஏழெட்டு ஆடியோ கேஸட்டுகள் காலால் மிதித்து உடைக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றின் உள்ளே இருந்த டேப்புகள் முழுக்க வெளியே இழுத்துப் போடப்பட்டு எரிக்கப்பட்டிருப்பதன் அடையாளம் தெரிந்தது. இரண்டு இஞ்ச் நீளத்திற்கு தீக்கு தப்பிய ஒரே ஒரு டேப் துண்டு சாம்பலுக்கு மத்தியில் கிடந்தது.

போலீஸ் நாய் கொலை நடந்த இடத்திற்கு வருவதற்கு முன்பு இந்த அறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று தீர்மானித்தார் சித்திரவேல்.

8

இளங்கோவின் பங்களாவில் முப்பத்தி நான்கு பத்திரிகை நிருபர்கள் அவனது அழைப்பின் பேரில் கூடியிருந்தார்கள். எல்லோருக்கும் ஒரு கிலோ ஸ்வீட் பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டு கொண்டிருந்தன.

க்ரீம் நிற சூட்டில் இருந்தான் இளங்கோ.

புகைப்படக்காரர்கள் மாறி மாறி அவனை படமெடுத்து முடித்த பிறகு, கனைத்துக் கொண்டு துவங்கினான்.

டியர் ஃபிரண்ட்ஸ், உங்களை எல்லாம் வரச் சொன்னது ஒரு சந்தோஷமான செய்தியை சொல்றதுக்காக. சஸ்பென்ஸ் வேணாம். நான் கல்யாணம் செய்துக்கப் போறேன்.''

உடனே பேசி வைத்துக் கொண்டதைப் போல கை தட்டினார்கள்.

''இன்னும் ஒரு வருஷம் கழிச்சி பண்ணிக்கலாம்னு தான் இருந்தேன். ஆனா என்னோட பேரண்ட்ஸ் வற்புறுத்தறதாலே இப்பவே பண்ணிக்க தீர்மானிச்சேன். என் வருங்கால மனைவி பேரு ரீனா சகாதேவன்.''

பத்திரிகையாளர்களில் ஒருவனாக அமர்ந்திருந்த மன்மதன் திடுக்கிட்டான்.

''எந்த ஊர் அவங்க?'' ஒரு நிருபர் கேட்டார்.

''டெல்லி. அவங்க ஃபாதருக்கு செகரெட்ரியேட்ல நல்ல உத்தியோகம்.''

''இது காதல் திருமணமா?''

''இல்லை. பெற்றோர் பார்த்து ஏற்பாடு செஞ்சது.''

''நீங்க பொண்ணை பார்த்திங்களா?''

''போன வாரம் போய் பார்த்தேன். பிடிச்சிருந்தது. தனியா அரை மணி நேரம் மனசு விட்டுப் பேசினேன். என் சம்மதத்தை தெரிவிச்சிட்டேன்.''

''தனிமையில என்ன பேசினிங்க?''

''சினிமாக்காரன் பழுத்த மரம் மாதிரி. நிறைய கல்லடி வரும். அதை எல்லாம் சகிச்சுக்கணும். பத்திரிகைகள்ல உண்மையும் வரும். பொய்யும் வரும். அதுக்கெல்லாம் கவலைப்படக் கூடாது. ஒரு நடிகனுக்கு நேரம் காலம் இல்லை, ஓய்வு குறைவு, வீட்டை அதிகமா கவனிக்க முடியாது. இதை எல்லாம் அனுசரிச்சுப் போகணும்னு சொன்னேன்.''

மன்மதனுக்கு மனதைப் பிசைந்தது.

தேவமாலினி இவனை நேசிப்பதாகவும், திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் மனம் விட்டுச் சொன்னாரே. பல்டியடித்து விட்டானே.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றான் மன்மதன்.

''யெஸ்'' என்றான் இளங்கோ.

''தயவு செஞ்சி என் கேள்விக்காக நீங்க வருத்தப் படக்கூடாது.''

''பரவால்லை, கேளுங்க.''

''நீங்களும் நடிகை தேவமாலினியும் காதலிக்கிறதா சமீபகாலமா நிறைய செய்திகள் வந்ததே...''

''வதந்திகள்னு சொல்லுங்க. நானோ, தேவமாலினியோ எங்க வாயால ஏதாவது சொல்லியிருக்கோமா? நாங்க நல்ல ஃப்ரண்ட்ஸ், சொல்லப் போனா என்னைவிட அவங்க சீனியர். அவங்களை நான் காதலிக்கிறதாவது! நான்சென்ஸ்!''

''உங்க ரெண்டு பேரையும் இணைஞ்சி பல விழாக்களில்! ஹோட்டல்களில் எங்களில் பல பேர் பார்த்திருக்கோமே!''

''அதனால? சினிமால ஒரு ஆணும், பெண்ணும் நட்பா பழகறது இயல்பு தானே? சிரிச்சிப் பேசினா லவ்வாகி விடுமா? கொஞ்ச நாளைக்கு முன்னால என்னையும் வேற ஒரு நடிகையையும் இணைச்சி எழுதினாங்க. இப்ப தேவமாலினியோட இணைச்சி எழுதிக்கிட்டு இருக்காங்க தட்ஸ் ஆல்.''

''நீங்க இதுவரைக்கும் மறுக்காம இருந்தீங்களே...''

''என்னைப் பத்தி எழுதப்படற தவறான செய்திகளை எல்லாம் நான் மறுக்கறதுன்னு ஆரம்பிச்சா. தினம் எனக்கு அதுக்கே பாதி நேரம் தேவைப்படும். அதான் இப்போ மறுத்துட்டேனே, வெல், பிரண்ட்ஸ், அடுத்த வாரம்

சென்னையில் எங்க கல்யாண நிச்சயதார்த்தம் நடக்கப் போகுது எல்லாரும் கண்டிப்பா கலந்துக்கணும்னு இப்பவே இன்வைட் பண்றேன். கார்டு தனியா அனுப்பறேன்.''

மன்மதன் ஏதோ தனக்கே பெரிய ஏமாற்றம் ஏற்பட்டு விட்டதைப் போல உணர்ந்தான்.

'மிஸ் ரீனாவோட போட்டோ கிடைக்குமா?''

''அடுத்த வாரம் நிச்சயதார்த்தத்தப்போ எடுத்துக்கங் களேன்.''

சற்று நேரத்தில் வணக்கம் வைத்து விட்டு இளங்கோ மாடிக்குச் சென்றுவிட, எல்லா பத்திரிகையாளர்களும், மொபெட், ஸ்கூட்டர் என்று கிளப்பிக் கொண்டு புறப் பட்டார்கள்.

மன்மதன் அருகாமை பொது தொலைபேசிக்கு வந்தான்.

''ஹலோ, தேவமாலினி இருக்காங்களா?''

''இல்லை. நீங்க யாரு?''

''தாரிணி, நான் மன்மதன். மேடம் நிஜமா இல்லையா?''

''இருக்காங்க. ஒரு நிமிஷம்.''

மன்மதன் பதட்டமாக நகம் கடித்துத் துப்பினான்.

''ஹலோ மன்மதன், குட் மார்னிங்'' என்றாள் தேவமாலினி.

''உங்களுக்குத் தான் பேட்மார்னிங். விஷயம் தெரியுமா?''

''என்ன விஷயம்.''

''இளங்கோ வீட்ல பிரஸ் மீட். அது முடிஞ்சி மனசு பதைச்சுப் போய் பேசறேன் நான். விஷயம் உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா...?''

''என்ன விஷயம்? புரியலையே!''

''இளங்கோ கல்யாணம் பண்ணிக்கப் போறாராம். பொண்ணு நீங்க இல்லை. டில்லி பொண்ணு. அவரோட பேரண்ட்ஸ் பார்த்தது. அடுத்த வாரம் நிச்சயதார்த்தம்.''

''நோ! விளையாடாதீங்க மன்மதன்.''

''இல்லைங்க'' என்று விரிவாக சொன்னான். தான் மடக்கி மடக்கி கேட்டதை, அதற்கு அவன் சொன்ன பதில்களை, ''ஏமாந்துட்டீங்க மேடம். இளங்கோவை ரொம்பதான் நம்பிட்டீங்க. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் சொல்லிட லாம்னுதான் கூப்பிட்டேன். ரிலாக்ஸ், பதறாம இருங்க. சாயங்காலம் நேர்ல பார்க்கறேன்.''

மன்மதன் போனை வைத்தான்.

★ ★ ★

தேவமாலினி போனை எடுத்தாள்.

''ஹலோ, நான் தேவமாலினி பேசறேன். இளங்கோ கூட பேசணும்'' என்றாள் கூடாக.

''அண்ணன் இல்லைங்கம்மா.''

''அண்ணன் இருப்பார் பாரு. பத்திரிகைக்காரங்களுக்கு பேட்டி கொடுத்த களைப்புல ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருப்பாரு.''

சில வினாடிகள் கழித்து...

''ஹலோ இளங்கோ...''

''இளங்கோ, நான் கேள்விப்பட்டது உண்மையா?''

''என்ன கேள்விப்பட்டீங்க?''

''யாரோ டெல்லிப் பொண்ணை கல்யாணம் செய்துக்கப் போறதா...''

''ஆமாங்க.''

''என்ன திடீர்னு வாங்க, போங்க! என்ன ஆச்சு? என்ன விளையாட்டு இதெல்லாம்? பத்திரிகைக்காரங்களை கூப் புட்டு சொல்லி... என்ன விதமான ஃபன் இது?''

''ஃபன் எதுவும் இல்லைங்க. மேரேஜ் பண்ணிக்கப் போறது நிஜம்.''

''இளங்கோ! அப்போ... நாம பழகினது?''

''என்னங்க தேவமாலினி, என்ன பழகிட்டோம்?''

''இளங்கோ! நீங்க என்னை காதலிக்கலை?''

''ச்சே! ஜோக் அடிக்காதீங்க மேடம்?''

''எனக்கு துரோகம் பண்ணாதீங்க இளங்கோ. என்னால தாங்க முடியாது. நான் ஏற்கெனவே நொந்து போனவ. என்னால இவ்வளவு பெரிய அதிர்ச்சியை தாங்க முடியாது. நான் நேர்ல வர்றேன்.''

''வேணாம். நேர்ல எல்லாம் வரவேணாம். அவசிய மில்லை. வீணா சத்தம் போட்டு எனர்ஜியை வேஸ்ட் பண்ணாதீங்க. உங்க வயசையும், என் வயசையும் நினைச்சுப் பாருங்க. காதல், கிதல்னு வெளில பேசாதீங்க. சிரிப்பாங்க. அஃப்கோர்ஸ், வி ஹேட் சம் நைஸ் மொமெண்ட்ஸ். ம்யூச்சுவலா தேங்க்ஸ் சொல்லிக்கலாம். என் கல்யாணத்துக்கு நீங்க வரணும். ஆசீர்வதிக்கணும். போனை வச்சிடறேன்.''

எதிர்முனை வெட்டப்பட்டதும், தொப்பென்று சோபா வில் விழுந்தாள் தேவமாலினி! மயக்கம் வந்தது.

இளங்கோ! உன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன். எத்தனை நம்பியிருந்தேன். எத்தனை கனவுகள்! எத்தனை எதிர்பார்ப்புகள்! எப்படி வாழப் போகிறோம் என்று ஆயிரம் கற்பனைகள்! திட்டங்கள்! சீட்டுக்கட்டு மாளிகையைக் கலைப்பதை போல - ஒரே ஊதலில் எல்லாவற்றையும் கலைத்து விட்டாயே!

இளங்கோ! கடைசியில் நீயும் சுயநலமி தானா? பத்தில் ஒருவன் தானா? உனக்கும் என் உடல்தான் தேவைப்பட்டதா?

தேவமாலினி மௌனமாக எழுந்து தன் அறைக்குச் சென்றாள். சின்ன கப்போர்டைத் திறந்தாள். தூக்கம் வராமல் தவிக்கும் பொழுதுகளில் உபயோகிக்கும் மாத்திரை சோவை எடுத்தாள். திறந்து உள்ளங்கையில் கொட்டினாள். பத்து, பதினைந்து மாத்திரைகள் விழுந்தன. தண்ணீர் எடுத்து அத்தனையையும் வாயில் போட்டு விழுங்கினாள். கட்டிலில் படுத்துக் கொண்டாள். விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

9

இன்ஸ்பெக்டர் சித்திரவேல் அருகில் இருந்த டிபார்ட்மெண்டல் ஸ்டோர்சின் போனை உபயோகித்து துப்பறியும் நாய்க்கு சொல்லிவிட்டு அது வரும் வரை அந்த தங்கராசுவின் அறையில் ஆராய்ந்தார்.

அவனின் அண்ணனின் முகவரி மிக சுலபமாகக் கிடைத்தது.

ராதா மெடிக்கல்ஸ், பாபநாசம் என்று போன் நம்பரோடு, உரிமையாளரின் பெயரோடு காலண்டர் தொங்கியது.

தனியாக குறித்துக் கொண்டு ஏட்டைக் கூப்பிட்டார். பக்கத்து போனில் இருந்து பதட்டமில்லாமல், நிதானமாக, பக்குவமாக சாவுச் செய்தியை தெரிவிக்கச் சொல்லி அனுப்பினார்.

கீழே சிதறிக் கிடந்த காகிதங்களைப் பொறுக்கி ஆராய்ந் தார். பல பத்திரிகைகள் கடிதம் எழுதியிருந்தன. அவற்றுக்கு தங்க ராசு எழுதின பதில்களின் கார்பன் பிரதிகளும் கிடைத்தன.

மேஜை மேல் ஒரு கடிதம் உறையிலிடப்பட்டு இன்னும் போஸ்ட் செய்யப்படாமல் இருந்தது. கடிதம் மேல் மிஸ்.

கிரிஜா, ஹோட்டல் டாப் சிடி என்று முகவரியும் எழுதப் பட்டிருந்தது. 'ஃப்ரம் உன் தங்கராஜ்' என்று எழுதியிருந்தது.

அந்தக் கவர் இன்னும் ஒட்டப்படாமல் இருந்ததால், சித்திரவேல் உள்ளே இருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தார்.

அதில் நேற்றைய தேதி இருந்தது. படித்தார்.

டியர் கிரிஜா,

நேரிலும், போனிலும் எவ்வளவு தான் நாம் பேசினாலும் என் மனசை முற்றிலும் வெளிப்படுத்த எனக்கு கடிதங்களே சிறந்த தூதுவர்களாகப் பயன்படுகின்றன.

இந்த ஆறு மாதத்தில் நமது நேசம் மேலும் மேலும் வலுப்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இதுவரை உன்னிடம் சொல்லாத ஒன்றை நான் சொல்லப் போகிறேன்.

விரைவில் நான் மிகமிக பிரபலமடையப் போகிறேன். என்னைப் பற்றி எல்லோரும் பேசப் போகிறார்கள். அப்படி ஒரு பரபரப்பான கட்டுரைத் தொடரை ஒரு பிரபலமான வார இதழில் நான் எழுதப் போகிறேன்.

அத்தக் கட்டுரைக்கான ஆதாரங்கள் அத்தனையும் என்னிடம் உள்ளன. வார இதழ் ஆசிரியர் இந்த கட்டுரை தொடர்பாக எனக்கு முழு பாதுகாப்பு தருவதாக உறுதி கொடுத்துள்ளார்.

கட்டுரை வெளிவரத் துவங்கியதும் எனக்கு சில எதிர்ப்பு கள் ஏற்படலாம். சில பகை உருவாகலாம். அதனால் நான் சில மாதங்களுக்கு தலைமறைவாக இருக்கவும் நேரிடலாம்.

திடீரென்று உனக்கு அதிர்ச்சி தரக்கூடாதென்பதற்காகவே இந்தக் கடிதத்தில் இதையெல்லாம் குறிப்பிடுகின்றேன். நேரில் சந்திக்கும் போது விரிவாகச் சொல்கிறேன்.

இப்படிக்கு

உன் தங்கராஜ்.

சித்திரவேலுக்கு இப்போது கொலைக்கான காரணம் புரியத் துவங்கியது. அறை கலைக்கப்பட்டுள்ளது. ஆடியோ கேஸட்டுகள் எரிக்கப்பட்டுள்ளன.

எனில்...

தங்கராஜ் ஏதோ ஒரு பரபரப்பான அரசியல் ஊழல் விவகாரங்களைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அதைத் தான் கட்டுரை தொடராக்க நினைத்து இருக்கிறான். இது அறிந்து எதிரிகள் முந்திக் கொண்டு செயல்பட்டிருக்கிறார்கள். அவனை கொலை செய்து, ஆதாரங்களையும் அழித்திருக் கிறார்கள்.

அந்த அறையில் மேலும் ஆராய்ந்தார்.

நிறைய ஆங்கில, தமிழ் புத்தகங்கள் இருந்தன. அவற்றை யெல்லாம் உதறிப் பார்த்தார். அவன் பத்திரிகைகளுக்கு அனுப்பிய பேட்டிக் கட்டுரைகள், துணுக்குகளின் ஜெராக்ஸ் பிரதிகளை ஃபைல் செய்திருந்தான்.

மேஜை டிராயரில் டேப்ரெக்கார்டர் இருந்தது. அதற்குள் கேஸட் எதுவும் இல்லை. நிறைய பேனாக்கள் இருந்தன.

நிறைய விசிட்டிங் கார்டுகள் அதற்கான ஒரு ஆல்பத்தில் செருகி வைக்கப்பட்டிருந்தன.

அந்த ஆல்பத்தில் எழுத்தாளர்கள், ஓவியர்கள், அரசியல் வாதிகள், சினிமா டைரக்டர்கள், நடிகர்கள், நடிகைகள் என்று நிறைய பேரின் விசிட்டிங் கார்டுகள் இருந்தன.

ஒரு கான்ஸ்டபிள் உள்ளே வந்து, ''சார், நாய் வந்திருக்கு. ஷீலா'' என்றார்.

ஷீலா தனது டிரைனருடன் வீட்டுக்குள் வந்தது.

அந்த அறைக்குள் அதை அனுப்ப அது சுற்றிலும் பார்த்தது. முகர்ந்தது. விருட்டென்று அறையை விட்டு வெளியே

வந்தது.வீட்டை விட்டு வெளியேற, அதன் டிரைனருடன் சித்திரவேலுவும் தொடர்ந்தார்.

அந்த வீட்டிற்கு பத்து வீடு தள்ளி இருந்த பிரிட்டிஷ் பேக்கரிக்கு வந்தது. நின்றது. பிறகு வெளியே ஓடியது. சாலையில் சிறிது தூரம் ஓடிவிட்டு நின்றுவிட்டது.

அந்தக் கடை முதலாளி இளைஞரிடம் சித்திரவேல் விசாரிக்கத் துவங்கினார்.

''காலைல எத்தனை மணிக்கு கடை திறப்பீங்க?''

''ஏழு மணிக்கெல்லாம் திறந்துடுவோம்.''

''கொஞ்சம் யோசனை பண்ணி சொல்லுங்க. காலைல வித்தியாசமா யாராச்சும் சந்தேகப்படும்படியா உங்க கடைக்கு வந்தாங்களா? பத்தாவது வீட்ல உள்ள ரிப்போர்ட்டர் தங்கராசு கொலை செய்யப்பட்டிருக்கார். பக்கத்து பக்கத்தில விசாரிச்சதில காலைல அஞ்சு மணிக்கு ஒரு ஆள் பைக்குல வந்ததாவும் அவனோட தங்கராசு புறப்பட்டுப் போனதாவும் சொல்றாங்க. அதுக்கப்புறம் தான் அவன் வீடு கலைக்கப் பட்டிருக்கணும். நாய் உங்க கடைக்கு வந்ததால, அந்த ஆசாமி உங்க கடைக்கு வந்திருக்கணும்.''

''இருங்க சார். நீங்க பைக்குன்னு சொன்னதால ஞாபகத்துக்கு வருது. காலைல நான் கடை திறந்து பத்து நிமிஷத்தில புல்லட்ல ஒருத்தன் வந்தான். எங்க கடை வாசல்ல அடைச்சபடி நிப்பாடிட்டு நடந்தான்.

'''ஜனங்க கடைக்கு வந்து, போக இடைஞ்சலா இருக்கும். கொஞ்சம் தள்ளி நிறுத்துங்க'ன்னு சொன்னேன். 'பத்து நிமிஷத்தில வந்துடுவேன்'னு அலட்சியமா சொல்லிட்டு தங்கராசு வீட்டுப் பக்கமா போனான். அதே மாதிரி பத்து நிமிஷத்தில திரும்பிட்டான். என் கடைக்கு வந்து ஒரு போன் செய்துக்கறேன்னு சொன்னான்.''

''வெரிகுட். என்ன பேசினான்?''

''அதை நான் கவனிக்கலை சார். குசுகுசுன்னு ரகசியமா சுருக்கமா பேசிட்டு வச்சிட்டான். போய்ட்டான்.''

''அவன் எப்படி இருந்தான்?''

''கொஞ்சம் குண்டா இருந்தான். டார்க் புளூ கலர் பிளையன் முழுக்கை சட்டை போட்டிருந்தான். கழுத்தில தடியா ஒரு தங்க செயின் பத்து பவுனுக்கு குறையாது. கையில பிரேஸ்லெட் போட்ருந்தான். பணக்கார பையன் மாதிரிதான் இருந்தான்.

''புல்லட் நம்பர் கவனிச்சீங்களா?''

''இல்லையே சார்.''

அவன் தான்! அதிகாலையில் தங்கராசுவை கொலை செய்தவன் அவன்தான். ராஜாத்தி பைக்கில் பார்த்தது அவனைத்தான். நீல நிற சட்டை என்று சொன்னாளே. கொலை செய்து விட்டு இங்கு வந்து கேஸட் டேப்புகளை எரித்து இருக்கிறான்.

யார் அவன்?

அந்த டேப்புகளில் இருந்த ரகசியம் என்ன?

சித்திரவேல் கடையில் இருந்த அந்த பட்டன் டைப் டெலிபோனைப் பார்த்துக் கொண்டே யோசித்தார். ஒரு நப்பாசையில் கேட்டார்.

''காலையில அவன் போன் பண்ணி பேசிட்டுப் போனதுக்கப்பறம் நீங்க இந்த போனை உபயோகிச்சீங்களா?''

''மூணு, நாலு கால் வந்தது. ஆனா நான் யாருக்கும் போன் செய்யலை. தேவை இல்லாததால செய்யலை.''

சித்திரவேல் முகத்தில் ரத்தம் பாய உற்சாகமானார்.

மை குட்னெஸ்! இந்த பட்டன் டைப் டெலிபோனில் ஒரு அற்புதமான வசதி உள்ளது. கடைசியாக பேசப்பட்ட டெலிபோன் எண்ணை இதன் ஞாபக அடுக்கு பதிவு செய்து வைத்திருக்கும். எண்களுக்குக் கீழே கடைசியாக உள்ள கட்டம் குறியிட்ட பட்டனை அழுத்தினால் போதும் கடைசியாகப் பேசப்பட்ட எண்ணை அதுவே மீண்டும் டயல் செய்து தரும்.

காலையில் வந்த ஆசாமி இந்தப் போனில் பேசிவிட்டுச் சென்ற பிறகு இவர்கள் இதை உபயோகிக்கவில்லை என்பதால், இப்போது ரிசீவர் எடுத்து மெமரி பட்டனை மட்டும் அழுத்தினால் போதும்.

அவன் எந்த எண்ணில் பேசினானோ, அதே எண் டயல் செய்யப்படும்.

சித்திரவேல் பேனா, பேப்பர் எடுத்து வைத்துக் கொண்டு ரிசீவரை எடுத்து, அதன் மெமரி பட்டனை அழுத்த டயல் சத்தத்திற்குப் பிறகு, எதிர்முனையில் ரிங் செல்லும் சப்தம் பிறகு எதிர்முனை ரிசீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ" என்று மட்டும் ஒரு ஆண் குரல் கேட்டது.

"குட் மார்னிங் சார். டெலிபோன்ஸ் விஜிலென்ஸ் ஆபீஸ்லேர்ந்து பேசறோம். ஒரு செக்கிங். உங்க போன் நம்பர் என்ன?" என்றார் சித்திரவேல்.

"ஃபோர் - ஒன் - எய்ட் - செவன் - எய்ட் - ஃபோர்."

"போன் யார் பேர்ல இருக்கு?"

"டி.பரமேஸ்வரிங்கிற பேர்ல இருக்கு. அவங்க இறந்துட்டாங்க. இப்போ பேர் மாற்றம் கேட்டு அப்ளை பண்ணிருக்கோம்."

"அட்ரஸ் சொல்லுங்க சார்."

"நம்பர் பத்து, இருபத்தெட்டாவது குறுக்குத் தெரு, இந்திரா நகர், அடையாறு, மெட்ராஸ் - இருபது."

"தேங்க் யூ சார் உங்க பேர் என்ன சார்?"

"தேவதத்தன்."

"ஓக்கே சார் வச்சிடுங்க" என்று வைத்தார்.

மை காட்! எத்தனை தகவல்கள்! இந்த தேவதத்தன் யார்? விசாரிக்க வேண்டும். கொலை செய்த நீல சட்டை இவரோடு தான் போனில் பேசியிருப்பதால் இந்த கொலையில் இவருக்கு நிச்சயம் தொடர்பிருக்கிறது.

எந்த வகையில்?

கேஸட்டில் இருந்த விஷயம் என்ன?

அடுத்ததாக தங்கராசுவின் காதலி கிரிஜாவை சந்திக்க வேண்டும்.

அதற்கும் முன்னால்... மீண்டும் போன் எடுத்து ஸ்டேஷனில் இருந்து உதவி இன்ஸ்பெக்டரை அழைத்தார்.

"ஒரு அடையாறு அட்ரஸ் தர்றேன். அந்த வீட்ல தேவதத்தன்னு ஒருத்தர் பேசினார். அந்த வீட்ல வேற யார் யார் இருக்காங்க? அவர் யாரு? இந்த விவரங்களை எல்லாம் நீங்க உடனே சேகரிச்சுட்டு ஸ்டேஷனுக்கு வாங்க."

சித்திரவேல் சுறுசுறுப்பானார்.

10

பெரியகுளத்தில் நடைபெற்ற அந்த வெளிப்புற படப்பிடிப்பை முழுக்க கவனித்து ரிப்போர்ட் செய்வதற்காக படப்பிடிப்பு குழுவினரோடு வந்திருந்த மன்மதன் மதிய உணவு இடைவேளையின் போது ஷூட்டிங் ஸ்பாட்டை விட்டு விலகி கடைத் தெருவிற்கு வந்தான்.

நெஞ்செரிச்சலுக்காக ஒரு கடையில் சோடா வாங்கிக் குடித்த போது, அருகில் தொங்க விட்டிருந்த பில் போஸ்ட்டில் 'நடிகை தேவமாலினி தற்கொலை முயற்சி! ஆஸ்பத்திரியில் அனுமதி' என்று கொட்டை எழுத்துக்களில் போடப் பட்டிருந்ததைப் பார்த்துப் பதறினான்.

உடனே பேப்பர் வாங்கி படித்தான்.

'பிரபல நடிகை தேவமாலினி இன்று காலை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஏராளமான தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டு நினைவில்லாமல் கிடந்ததைப் பார்த்த உதவிப் பெண்மணி தகவல் சொல்ல, உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு அவரின் உடல் நிலை தேறி வருகிறது. அபாயக் கட்டத்தை தாண்டி விட்டதாகவும், இனி கவலைப்பட வேண்டியதில்லை எனவும் சிகிச்சையளித்த பெரிய டாக்டர் கூறினார்.

மயக்கம் தெளிந்த நடிகை தேவமாலினி எந்தப் பத்திரிகையாளர்களையும் சந்திக்க விரும்பவில்லை அவரை விசாரித்து விட்டு வெளியே வந்த போலீஸ் உயர் அதிகாரி நிருபர்களிடம் தெரிவித்ததாவது...

'நடிகை தேவமாலினி தற்கொலை முயற்சி எதுவும் செய்யவில்லை. உடல் அசதி அதிகமாக இருந்ததால் வழக்கமாக போட்டுக் கொள்ளும் இரண்டு மாத்திரைகளுக்கு பதிலாக நான்கு மாத்திரைகள் உட்கொண்டுவிட்டு உறங்கி உள்ளார். அதைத் தவறாக நினைத்து ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்கள்.''

டாக்டர் சொன்னதற்கும், காவல் அதிகாரி சொன்னதற்கும் உள்ள முரண்பாட்டை வாசகர்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள் எனக் கருதுகிறோம்.

இந்த சம்பவம் குறித்து நமது பத்திரிகையின் சிறப்பு நிருபரின் அபிப்ராயத்தைக் கேட்டோம். 'சமீபத்தில் நடிகர் இளங்கோவிடம் தேவமாலினி நெருக்கமாக, அன்பாக பழகி வந்தார். இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூட சில இதழ்களில் செய்தி வந்தன. ஆனால் இளங்கோ தனது பெற்றோர் பார்த்த பெண்ணை மணமுடிக்க முடிவு செய்துள்ளார். அந்த ஏமாற்றம் காரணமாக தேவமாலினி இந்த கோழைத்தனமான முடிவுக்கு வந்திருக்கலாம்' என்று அவர் கருத்து தெரிவித்தார்.

உடனே மன்மதன் சென்னைக்கு பஸ் விசாரித்தான்.

★ ★ ★

தேவமாலினி தனது வீட்டின் மொட்டை மாடியில் போடப்பட்டிருந்த சிறிய ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். கைகளைக் கட்டியிருந்தாள். தூரத்து வானத்தை அவள் கண்கள் வெறித்துக் கொண்டிருந்தன.

தாரிணி அவள் அருகில் வந்து நான்கு வகை மாத்திரை களைக் கிழித்து தண்ணீர் டம்ளருடன் அவளிடம் நீட்டினாள்.

வாங்கி மாத்திரைகளை உற்றுப் பார்த்தாள்.

''ஏன் தாரிணி கலாட்டா பண்ணி என்னை ஆஸ்பத்திரில சேர்த்துக் காப்பாத்தினே. அப்படியே விட்டிருக்கலாமில்லே? எந்தத் துக்கமும் இல்லாம நிம்மதியா தூங்கிட்டு இருப் பேனே. இப்ப பாரு மறுபடி எல்லாத்தையும் மனசு யோசிக்குது. வலிக்குது.''

''அம்மா, உங்களுக்கு யோசனை சொல்ல எனக்குப் பத்தாது. ஆனா செத்துப் போய்ட்டா எல்லாம் சரியாய்ப் போய்டாதும்மா. எந்தப் பிரச்சனையா இருந்தாலும் வாழ ணும். உங்களுக்கு இப்ப நேரம் சரியில்லை. மறுபடி அது

சரியாகலாம். மாத்திரையைச் சாப்பிடுங்கம்மா. கொஞ்ச நாள் ஊட்டி, கொடைக்கானல்லு எங்கேயாவது போய் தங்கிட்டு வாங்கம்மா.''

மாத்திரைகளை முழுங்கினாள் தேவமாலினி.

காலி டம்ளருடன் கீழே சென்ற தாரிணி சில நிமிடங்களில் மீண்டும் மொட்டை மாடிக்கு வந்து, ''மன்மதன் வந்திருக்கார். என்ன சொல்லி அனுப்பட்டும்?''

''அனுப்ப வேணாம் தாரிணி. என் மேல அக்கறை வெச்சிருக்கிற ஒரே ஜீவன் அவர் தான். வரச் சொல்லு.''

சில நிமிடங்களில் மன்மதன் தன் வழக்கமான ஜோல்னாப் பையுடன் வந்தான். அமைதியாக ஊஞ்சலுக்கு எதிரில் இருந்த தனி நாற்காலியில் அமர்ந்திருந்தான். கைகளைக் கட்டிக் கொண்டு அமைதியாகப் பார்த்தான்.

''என்னங்க. அப்படிப் பார்க்கறீங்க? இவ ஏன் பிழைச்சான்னா?''

''ஏன் அப்படிக் கோழைத்தனமா முடிவெடுத்தீங்க?''

''என்னால தாங்க முடியலை மன்மதன். வரிசையா தோல்விகள் எல்லா திசையிலேர்ந்தும் தாக்கினா எப்படித் தாங்க முடியும்? அலையில தத்தளிச்சப்போ கலங்கரை விளக்கமா இளங்கோவை நினைச்சேன். என் ரணம் எல்லாத்தையும் ஆத்திக்கிட்டு எவ்வளவு உற்சாகமானேன் தெரியுமா? இளங்கோ என்னை நல்லா பயன்படுத்திட்டு தூக்கி எறிஞ்சுட்டான் மன்மதன். இதில் ரகசியம் எதுவும் இல்லை. உங்கிட்ட சொல்ல எனக்கு வெட்கமும் இல்லை. தட் பாஸ்டர்ட் லவ்ட் மை பாடி ஒன்லி!''

''அதை நீங்க எதிர்பார்த்திருக்கணும். அதிகமா நம்பிட்டீங்க.''

''சர்க்கரை தடவிப் பேசினான் மன்மதன். என் கற்பு போச்சேன்னு நான் கலங்கலை. அது போறது புதுசில்லை. என் மனசை குப்பை மாதிரி மிதிச்சிட்டான் பாருங்க, அதான் என்னால தங்க முடியலை.''

''விடுங்க. அதை எல்லாம் பேசாதீங்க. இப்ப உடம்பு எப்படி இருக்கு?''

''ஒண்ணுமில்லை. சரியாப் போச்சி.''

''நல்லா ஓய்வெடுங்க. அவசரப்பட்டு எந்த முடிவும் இனிமே எடுக்காதீங்க.''

''இல்லை. அவசரமில்லாம நான் ஒரு முடிவு எடுத்துட்டேன் மன்மதன். என் வாழ்க்கை ரகசியங்களை எல்லாம் பொதுமக்கள்கிட்ட பகிர்ந்துக்கப் போறேன்.''

''புரியலை...''

''நான் சுயசரிதம் எழுதப் போறேன். பேர் கூட வச்சிட்டேன். 'உள்ளது உள்ளபடி!' எப்படி இருக்கு தலைப்பு? தலைப்புப் படியே ஒரு பிட்கூட பொய் இல்லாம உண்மையா சொல்லப் போறேன். மன்மதன் நீங்க தான் இதை எழுதப் போறீங்க. எந்த பத்திரிகையில வேணும்னாலும் எழுதுங்க. நான் சொல்றேன். டேப் பண்ணிக்கங்க. கட்டுரைத் தொடரா எழுதுங்க. என் பிறப்புலேர்ந்து ஆரம்பிச்சி சொல்றேன். நான் இந்தத் துறைக்கு வந்த பின்னணி - அதுக்காக நான் கொடுத்த விலைகள்! என்னை அந்த அந்த ஸ்டேஜில் பயன்படுத்திக்கிட்டவங்க... எல்லாம் சொல்றேன். மாத்தாம மறைக்காம சொல்றேன். நிறைய பயங்கரமான நீங்க நினைச்சிப் பார்க்க முடியாத செய்திகளை எல்லாம் சொல்லப் போறேன் மன்மதன். என் கண் முன்னாடி முன் நடந்த அநியாயங்கள், அநீதிகள், குள்ளநரித்தனமான காரியங்

கள் எல்லாம். எல்லாம் கடைசியா நான் இளங்கோவை நேசிச்சது, அவனோட பல தடவை படுக்கையை பகிர்ந்துகிட்டது. கடைசியா அவன் எனக்கு நம்பிக்கைத் துரோகம் செஞ்சது. அதனால நான் தற்கொலை முயற்சி செய்தது வரைக்கும் சொல்றேன்'' என்றாள் தேவமாலினி படபடப்பாக.

''எதுக்காக இது?'' என்றான் மன்மதன்.

''இந்தத் துறையில புதுசா நுழைய நினைக்கிறவங்களுக்கு ஒரு எச்சரிக்கை! கைடு! குறிப்புப் புத்தகம்! மன்மதன். இந்தக் கட்டுரைத் தொடரை நீங்க மன்மதன்ங்கிற உங்க புனைப் பெயர்ல எழுதினாலும் சரி - இல்லை தங்கராசுங்கிற உண்மைப் பெயர்ல எழுதினாலும் சரி. இந்தக் கட்டுரைத் தொடர் உங்களை எங்கேயோ கொண்டு போகப் போகுது. என்ன எதிர்ப்பு வந்தாலும் நான் சொல்றதை வெளியிட்டுடுங்க. நாளைக்குக் காலையில நாலஞ்சு ஆடியோ காஸட் வாங்கிட்டு வந்துடுங்க. சொல்றேன். டேப் செய்துக்கங்க'' என்றாள் தேவமாலினி உணர்ச்சிப்பூர்வமாக.

மன்மதன் என்னும் தங்கராசு மௌனமாகத் தலையசைத்தான்.

11

ஹோட்டல் டாப் சிடி கார் பார்க்கிங் பகுதியில் மட்டும் நூறு வீடுகள் கட்டலாம் போல இருந்தது.

ரிசப்ஷன் என்பது ஒரு பெரிய திரையரங்கம் அளவில் இருந்தது. அங்கே இருந்த எட்டு, ஒன்பது பெண்களில் யார் கிரிஜாவாக இருக்கக் கூடும் என்று ஒரு கணம் யூகித்துப் பார்த்தார் சித்திரவேல்.

பிறகு அந்த யூகத்தை கைவிட்டுச் சென்று, ''மன்னிக்கவும், செல்வி கிரிஜா இங்கே யார்?'' என்று கேட்டார்.

''ஒன் மினிட் சார்'' என்றவள் திரும்பி லெட்ஜரில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த சுரிதார் அணிந்த பெண்ணை, ''கிரிஜா, யு ஹேவ் எ விசிட்டர்'' என்றாள்.

கிரிஜா மாநிறமாக இருந்தாலும், லட்சணமாக இருந்தாள். கூந்தலை யு கட் செய்து பாண்ட் போட்டிருந்தாள். யூனிஃபாமில் ஒரு இன்ஸ்பெக்டரை அவள் ஒரு விசிட்டராக சந்தித்திருக்க வாய்ப்பில்லை என்பதால் சற்றே வியப்புடன் மேஜைக்கு அந்தப் பக்கம் அவருக்கு எதிராக வந்து, ''என்னைப் பார்க்கவா வந்திங்க சார்?'' என்றாள்.

''ஆமாம். ஒரு பத்து நிமிஷம் தனியா பேசணுமே.''

கவுண்ட்டரை விட்டு வெளியே வந்தாள். அங்கே ஹாலில் ஏராளமான ஸோபா செட்டுகள் போடப்பட்டிருக்க, அவற்றில் ஒன்றில் அவரை அமரச் சொல்லி அருகில் அமர்ந்து கொண்டாள்.

சித்திரவேலுக்கு எப்படித் துவங்குவது என்று தயக்கமாக இருந்தது. உன் காதலன் இறந்து விட்டான் என்பது மிக பாதிப்புத் தரக்கூடிய செய்தி. அதைச் சொன்ன பிறகு அவளின் மனநிலை பாதிக்கப்படும். அப்புறம் எந்த கேள்விகளையும் கேட்க முடியாது. அதனால் உடனே சொல்ல வேண்டாம்.

''மேடம், ஒரு சின்ன விசாரணை. கொஞ்சம் ஒத்துழைங்க. என்கிட்டே எதையும் மறைக்க வேணாம், நீங்களும், ஜர்னலிஸ்ட் தங்கராசுவும் லவ் பண்றீங்க இல்லையா?''

''அதெப்படி உங்களுக்கு...?''

''தெரியும்... இந்த லெட்டர் பாருங்க. தங்கராசு உங்களுக்காக எழுதி போஸ்ட் செய்யாம வச்சிருக்கார். படிங்க.''

அந்த கடிதத்தைப் படித்துப் பார்த்ததும், ''இப்ப அவர் எங்கே இருக்கார்?'' என்றாள் கலவரத்துடன்.

''அவர் இப்போ ஆபத்தான நிலையில் இருக்கார். விவரமா சொல்ல முடியாத நிலைமை. அவர் எழுதப் போற இந்தக் கட்டுரைப் பத்தி உங்களுக்கு ஏதாவது விவரம் தெரியுமா?''

''நேத்து மத்தியானம் தங்கராசு போன் செஞ்சார் எனக்கு. அப்போ இந்த லெட்டர் பத்தி சொன்னார்.''

''என்ன சொன்னார்?''

''உனக்கு ஒரு லெட்டர் எழுதி வெச்சிருக்கேன், நாளைக்குப் போஸ்ட் பண்றேன்னு சொன்னாரு. லெட்டர்ல என்ன எழுதியிருக்கீங்கன்னு கேட்டேன். படிச்சிப் பார்த்துக் கன்னு சொல்லிட்டாரு.''

''அப்புறம்?''

''வேற இதைப் பத்தி எதுவும் பேசலை சார்.''

''வேற என்ன பேசினிங்க?''

''இன்னைக்கு சந்திக்கலாமான்னு கேட்டேன். பதினாலு அன்னைக்கு சந்திக்கலாம்னு சொன்னார். இன்னிக்கு என்ன வேலைன்னு கேட்டேன். பரணி வார இதழ் ஆசிரியரை அவரோட வீட்ல சந்திச்சிப் பேசணும்னு சொன்னாரு.''

''அதாவது போன் பேசின மாதிரி ஈவினிங் சந்திக் கலைன்னு சொன்னாரு?''

''ஆமாம்.''

பரணி! முன்னணி வார இதழ்களில் ஒன்று. துவங்கப்பட்டு ஐந்து வருடங்களில் வாசகர்கள் மத்தியில் அமோகமான வரவேற்பைப் பெற்றுவிட்ட இதழ்! பரபரப்பான உண்மைத் தொடர்களுக்குப் பெயர் போன இதழ்!

ஒரு பத்திரிகை ஆசிரியரை பத்திரிகை அலுவலகத்தில் சந்திப்பதில் நியாயம் இருக்கிறது. வீட்டில் சென்று சந்திப்பது ரகசியமான விஷயமாக இருக்க வேண்டும்.

தங்கராசு குறிப்பிட்டுள்ள பரபரப்பான கட்டுரைத் தொடர் பரணி இதழில் எழுத இருக்கலாம். பரணி ஆசிரியரை சந்தித்தால் அது என்ன வகை தொடர் என்பதும், கேஸட்டில் இருந்த விஷயம் என்ன என்பதும் புரிந்து விடும்.

கிரிஜாவிடம் மேலும் விசாரித்து விட்டு, அவளின் விலாசம் பெற்றுக் கொண்டு பிறகு, ''மேடம், உங்களுக்கு அதிர்ச்சியான தகவல் தர்றதுக்கு ஸாரி. மனசை திடப்படுத்திக்கங்க. உங்க காதலர் தங்கராசு இன்னைக்கு காலையில கத்திக்குத்துப் பட்டு இறந்து போய்ட்டார். இப்போ கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில மார்ச்சுவரில பாடி இருக்கு. பாபநாசத்தில இருக்கிற அவர் அண்ணனுக்கு தகவல் கொடுத்திருக்கோம். அவர்கிட்ட பாடியை ஒப்படைச் சுட்டோம். நீங்க அவர் முகத்தைப் பார்க்கணும்னா நான் ஏற்பாடு செய்றேன்'' என்றார்.

விக்கித்து நின்றாள் கிரிஜா.

அவளுக்குப் பொறுமையாக ஆறுதல் சொல்லிவிட்டு புறப்பட்டார்.

12

ஒலித்த போனை படுக்கையில் படுத்துக் கை நீட்டி எடுத்தாள் தேவமாலினி.

''ஹலோ தேவமாலினி பேசறேன்.''

''தேவா, நான் இளங்கோ பேசறேன்.''

ஆச்சரியப்பட்டாள். ஆச்சரியம் மறைத்து, ''என்ன?''

''என்னை நீ மன்னிக்கணும். தேவா நான் உன்னை ரொம்ப அலட்சியப்படுத்திட்டேன். நீ தற்கொலை வரைக்கும் போவேன்னு எதிர்பார்க்கலை. பேப்பர்ல சேதி படிச்சதும் பளார்ன்னு மனசில அறைஞ்சது. உன்னோட அன்பு உண்மையானதுன்னு உறைச்சது. உன்கிட்டே மன்னிப்பு கேக்கணும். மனசு விட்டுப் பேசணும். என் அவசர முடிவுகளை மறு பரிசீலனை செய்யணும். என்ன பதில் இல்லை?''

தேவமாலினியால் தன் காதுகளை நம்பவே முடியவில்லை.

''இளங்கோ தானா பேசறது?''

''உணர்ந்து பேசறேன் தேவா. அவசரப்பட்டு என்னை உதறிடாதே. ஐ லவ் யூ. நாம் சந்திக்கணும். பேசணும். இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு ஹோட்டல் சாணக்யா - காட்டேஜ் நம்பர் செவன் ஜீரோ செவன் வர்றியா? வரணும். ப்ளீஸ்... நான் உனக்காகக் காத்துக்கிட்டிருப்பேன்.''

''வர்றேன் இளங்கோ, கண்டிப்பா வர்றேன். நான் எதிர் பார்க்கவே இல்லை. இன்ப அதிர்ச்சி இது. இப்படி நீ மனசு மாறுவேன்னு நான் நினைக்கவே இல்லை. வர்றேன்ப்பா. எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா எனக்கு?''

போனை வைத்தாள் தேவமாலினி.

புது ரத்தம் பாய்ந்தது போலிருந்தது. இளங்கோ மனம் மாறுவான் என்பது கனவிலும் அவள் எதிர்பாராத ஒன்று.

என்ன ஒரு அவசரக்காரி நான்! வாழ்க்கை எல்லாம் முடிஞ்சு போனது போல நான்கு நாட்களாக தினம் மன்மதனை வரச் சொல்லி எல்லா அசிங்கமான கன்ராவிக் கதைகளை எல்லாம் ஆவேசத்தோடு கொட்டி விட்டேனே.

மன்மதனை உடனே அழைத்து அந்தக் கட்டுரைத் தொடர் எதுவும் எழுத வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும்.

டெலிபோன் புத்தகத்தில் மன்மதனுக்கு பி.பி. போன் நம்பர் தேடினாள்.

விக்ரம்! இவன் மன்மதனின் தோழன். மன்மதன் குடியிருக்கும் மைலாப்பூரிலேயே இவனுக்கு வீடு. ஏதாவது அவசரச் செய்தி என்றால் இவனுக்குப் போன் செய்தால் போதும். உடனே தன் காரை எடுத்துச் சென்று மன்மதனிடம் சொல்லிவிடுவான். விக்ரம் எண்ணுக்குப் போன் செய்தாள் தேவமாலினி.

''ஹலோ விக்ரம் ஸ்பீக்கிங்.''

''நான் நடிகை தேவமாலினி பேசறேன். உங்க ஃபிரண்டு மன்மதனுக்கு ரொம்ப அவசரமான ஒரு தகவல் சொல்லணுமே.''

''இதோ இங்கே தான் இருக்கான். செஸ் விளையாடிக்கிட்டு இருக்கோம். பேசுங்க.''

''ஹலோ தங்கராசு பேசறேன்.''

''மன்மதன்னு சொன்னாதான் எனக்கு மனசில பதியது. தங்கராசுன்னு சொன்னா வேற யாரோ மாதிரி தெரியுது. அப்புறம்... நம் சுயசரிதை மொத்தம் எத்தனை கேஸட்ஸ் வந்தது?''

''ஆறு கேஸட்ஸ் முழுக்க இருக்கு. இனிமே தான் எழுத ஆரம்பிக்கணும்.''

''வேணாம். அதை எழுத வேணாம். நீங்க என்ன செய்றீங்க. காலையில அந்த ஆறு கேஸட்டையும் கொண்டாந்து என்கிட்ட ஒப்படைச்சிடுங்க. அதை எல்லாம் எரிச்சிடலாம். வேணாம். அது வெளிவர வேணாம்.''

''என்னங்க இது திடீர்ன்னு? நான் பத்திரிகை ஆபீஸ்ல கூட பேசி 'ஓகே' சொல்லிட்டாங்க.''

''காரணம் சொன்னா நீங்களே வேணாம்ன்னு சொல்லிடுவீங்க.''

''என்னது?''

''இளங்கோ மனசு மாறிட்டார். நான் தற்கொலைக்கு முயற்சி செஞ்சது அவர் மனசை மாத்திடுச்சி. இப்பத்தான் போன் செஞ்சார். மன்னிப்புக் கேட்டார். நாங்க இன்னிக்கு ராத்திரி சந்திக்கப் போறோம். மனசு விட்டுப் பேசப் போறோம். பழையபடி ராசியாகற சூழ்நிலையில இந்தக் கட்டுரை தேவையா?''

''யோசிக்க வேண்டிய விஷயம்.''

''யோசிக்கவே வேணாம். நான் தேவையில்லைன்னு முடிவு பண்ணிட்டேன். நாளைக்குக் காலையில நீங்க கேஸட்டைக் கொண்டாந்துடுங்க. விவரமாய்ப் பேசலாம்'' என்று போனை வைத்தாள் தேவமாலினி.

லலாலா, லலாலா என்று பாடினாள். அறை பூரா சின்னக் குழந்தையைப் போல ஓடினாள். கண்ணாடியில் தெரிந்த தேவமாலினியின் கன்னத்தைத் தட்டி, ''எப்படியோ நீ சாதிச்சிட்டே தேவமாலினி'' என்றாள்.

இரவு இளங்கோவை சந்திக்க என்ன உடை என்று இப்போதே தேர்வு செய்து எடுத்து வைத்தாள்.

★ ★ ★

இரவு பத்து மணி.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் இருந்த ஹோட்டல் சாணக்யாவின் காட்டேஜ்கள் முக்கியக் கட்டடத்திற்குப் பின்புறம் இருந்தன. அதற்குத் தனியாக சிமெண்ட் சாலை சென்றது.

ஏற்கனவே பலமுறை வந்துள்ள காட்டேஜ் என்பதால், தனது மாருதியை இயல்பாகச் செலுத்தி குறிப்பிட்ட

காட்டேஜின் போர்ட்டிகோவில் செருகி நிறுத்தினாள் தேவமாலினி.

வாசலில் ஒரே ஒரு பைக் மட்டும் இருந்தது. இளங்கோவின் கார் இல்லை. காரை வைத்து அடையாளம் தெரிந்து கொள்வார்கள் என்பதால் இளங்கோ தன் காரில் வந்திருக்க மாட்டான் என்று நினைத்துக் கொண்டாள்.

காட்டேஜின் வாசல் கதவு திறந்திருந்தது. உள்ளே வந்தாள். மேற்கத்திய சங்கீதம் உரக்கக் கேட்டுக் கொண்டிருந்தது.

காட்டேஜின் ஹாலில் இருந்த ஸோபாவில் அமர்ந்திருந்த அந்த வாட்ட சாட்டமான இளைஞன் இவளைப் பார்த்ததும் உடனே பவ்யமாக எழுந்து கொண்டான்.

''வாங்க மேடம். உக்காருங்க. நான் மனோஜ். இளங்கோவோட ஃபிரண்டு. அவனும் நானும் இணைஞ்சி தான் அடுத்த படம் தயாரிக்கிறோம். ரெண்டு பேரும் தான் இங்கே வந்தோம். நீங்க வரப்போறதா சொன்னான். கவலைப் படாதீங்க. பத்து நிமிஷத்தில நான் கழண்டுக்குவேன். உக்காருங்க.''

எதிரே அமர்ந்தாள் தேவமாலினி. ''இளங்கோ எங்கே?''

''பாத்ரும்ல இருக்கான்'' என்று அவன் சொன்ன பிறகு தான் பாத்ரூமில் இருந்து மெலிதான தண்ணீர் சத்தம் கேட்பது உறைத்தது.

அழைப்பு மணி ஒலித்தது. மனோஜ் எழுந்து சென்று பார்த்துவிட்டு மூன்று லைம் ஜூஸ் நிரம்பின கிளாஸ்களுடன் திரும்பினான்.

எடுத்து டீப்பாய் மேல் வைத்துவிட்டு...

''அவன் மெதுவா வரட்டும். எடுத்துக்கங்க மேடம். சொன்னான். தன் யோசனையை மாத்தி உங்களையே

கல்யாணம் செய்துக்கப் போறதா இப்பத் தான் சொல்லிட் டிருந்தான். என் வாழ்த்துக்கள்'' என்று கூறிவிட்டு ஒரு கிளாஸை எடுத்துப் பருகினான்.

''தேங்க்ஸ்'' என்ற தேவமாலினி தன் கிளாசை எடுத்து இயல்பாகப் பருகிவிட்டு வைத்து, ''உங்களை நான் இதுக்கு முன்னாடி சந்திச்சதே இல்லை.''

''இல்லை. ஆனா என் குரலை ஈவினிங் சந்திச்சிங்க'' என்றான் மனோ.

''புரியலை.''

''போன் பண்ணி உங்களை இந்த ரூமுக்கு வரச் சொன்னதே நான்தான் தேவமாலினி இளங்கோ மட்டு மில்லை. ரஜினி, கமல், நம்பியார் எல்லாரோட குரல்லயும் நான் பேசுவேன். எந்திரிச்சி பாருங்க. தள்ளாடுதா? நீங்க குடிச்ச லெமன் ஜூஸ்ல இருபது தூக்க மாத்திரை கரைச்சிருக்கேன்!''

''என்ன!'' அதிர்ந்தாள். ''யார் நீ? இளங்கோ!'' கத்தினாள்.

''முட்டாள்! பாத்ரூம்ல சும்மா டேப் திறந்து வெச்சிருக் கேன். இந்த காட்டேஜ் உன் பேர்ல தான் புக் பண்ணியிருக்கேன். வாசல்ல உன் கார் நிக்குது. நாளைக்குக் காலையில உன்னை பொணமா எடுப்பாங்க. முதல் முறை வீட்டில் தற்கொலை முயற்சி மேற்கொண்டபோது அதை சரியாக செயல்படுத்து முன் ஆஸ்பத்திரியில் சேர்த்துக் காப்பாற்றி விட்டபடியால் இந்த முறை ஹோட்டலில் அறை எடுத்து செயல்படுத்தி விட்டார்ன்னு நாளைக்குப் பேப்பர்ல எழுதப் போறாங்க.''

லேசான அயர்ச்சியும் தள்ளாட்டமும், மயக்கமும் அவளுக்கு இப்போது சேர்ந்திருக்க, ''ஏண்டா பாவி நீ? ஏன்?'' என்றாள் தினறலாக.

''நான் அம்பு. எய்தவன் வேற ஆள். நீ ஏதோ சுயசரிதை எழுதப் போறியாமே. எல்லாத்தையும் உள்ளது உள்ளபடி கொட்டியிருக்கியாமே. அதுக்கான தண்டனையாம் இது. எனக்கு என்ன தெரியும்? எனக்கு உரிய கூலிக் கொடுத் துட்டாங்க. எனக்கு இன்னொரு வேலை கூட கொடுத் திருக்காங்க. உன்னை மாதிரியே அந்த பத்திரிகை நிருபர் தங்கராசை தந்திரமா பேசி தனியா அழைச்சிக்கிட்டுப் போய் தீர்க்கணும். அவன் வீட்ல உள்ள நீ பேசின ஆறு ஆடியோ கேஸட்ல உள்ள டேப்பை நெருப்பு வச்சிக் கொளுத்தணும். இதுக்கெல்லாம் தனித்தனி ரேட் பேசிருக்கேன். வரட்டுமா?''

தேவமாலினி மயக்கத்தின் முழு ஆதிக்கத்தில் விழுந்து சரிந்தாள்.

மனோஜ் தன் கைரேகைகளை அங்கங்கேத் துடைத்து விட்டு வெளியே வந்து தனது புல்லட்டில் புறப்பட்டான்.

13

பரணி வார இதழின் அலுவலகம் அமிஞ்சிக் கரையில் இருந்தது. தனது விசிட்டிங் கார்டைக் கொடுத்தனுப்பி விட்டுக் காத்திருந்தார் இன்ஸ்பெக்டர் சித்திரவேல்.

அந்த ஹாலில் இருபது பேர்களுக்கும் மேல் தனித்தனி மேஜை போட்டுக் கொண்டு வேலை செய்து கொண் டிருந்தார்கள்.

''உங்களை வரச் சொன்னார் சார்'' என்று பியூன் வந்து சொன்னதும், சித்திரவேல் அந்த குளிரூட்டப்பட்ட அறைக்குள் நுழைந்தார்.

விசாலமான மேஜைக்கு அந்தப் பக்கம் உயர்ந்த வகை சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த பரணி இதழின் ஆசிரியர்

மோகனகுமார் சில்க் ஜிப்பா அணிந்து, நெற்றியில் குங்குமம் வைத்திருந்தார்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட சித்திரவேல் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

''இன்னிக்குக் காலையில ஜர்னலிஸ்ட் தங்கராசு மர்மமான முறையில கொலை செய்யப்பட்டிருக்கார்.''

''மை காட்!'' நெற்றியைப் பிடித்துக் கொண்டு அதிர்ந்தார்.

''அவரோட வீடு முழுக்க கலைச்சிப் போடப்பட்டிருக்கு. சில ஆடியோ கேஸட்டுகள் உடைக்கப்பட்டு டேப்புகள் எரிக்கப்பட்டிருக்கு. எங்களுக்குக் கிடைச்ச சில தடயங்களிலேர்ந்து தங்கராசு உங்க பத்திரிகையில ஒரு பரபரப்பான கட்டுரைத் தொடர் எழுத இருந்தார்ன்னு புரியுது. அது சம்பந்தமா உங்களை நேத்து ஈவினிங் கூட வீட்ல சந்திச்சிப் பேசியிருக்கார். அந்தக் கட்டுரை எழுத நீங்க அவருக்கு முழுப் பாதுகாப்புத் தர்றதா உறுதி சொல்லியிருக்கீங்க. இதெல்லாம் உண்மையா?''

''எல்லாம் உண்மை தான்'' தலையை அசைத்து ஆமோதித்தார்.

''அந்த கேஸட்டுகள்ல அவர் எழுத இருந்த கட்டுரைத் தொடர் சம்பந்தமான ஆதாரங்களோ, விஷயங்களோ இருக்கணும்ங்கிறது என் யூகம் அந்தக் கட்டுரைத் தொடர் வெளிவந்தா தனக்குப் பாதிப்பு உண்டாகும்ன்னு நினைச்ச யாரோதான் இந்தக் கொலையைச் செய்திருக்கணும் சரியா?''

''நூறு சதவிகிதம் சரி சார்.''

''ரைட். இப்போ விபரமா சொல்லுங்க. தங்கராசு எழுத இருந்த கட்டுரைத் தொடர் என்ன?''

மோகனகுமார் பெருமூச்சு விட்டார்.

''முந்தா நாள் ராத்திரி ஹோட்டல் சாணக்யால தற்கொலை செய்துகிட்டு இறந்து போனதா நடிகை தேவமாலினியோட செய்தி வந்ததே. நேத்து நடிகர், நடிகையர் ஊர்வலமா போய் எரிச்சாங்களே, அந்த தேவமாலினி தன்னோட வாழ்க்கையை உள்ளது உள்ளபடி கட்டுரைத் தொடரா எழுத இருந்தாங்க சார். தங்கராசு அவங்களுக்கு ரொம்பப் பிடிச்ச ஜர்னலிஸ்ட். முதல் தற்கொலை முயற்சிக்குப் பிறகு ரொம்ப அப்செட் ஆகியிருந்த தேவமாலினி இப்படி உண்மைகளை பொதுமக்களுக்குச் சொல்றதுன்னு தீர்மானிச்சி அதன்படி தங்கராசு நாலு நாள் தொடர்ந்து போய் அவங்க பேசுவதை எல்லாம் ஆறு கேஸட்களில் பதிவு செஞ்சார்.''

சித்திரவேலுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாய் இருந்தது. குறுக்கே எதுவும் பேசாமல் மோகனகுமாரைப் பேச விட்டார்.

''தங்கராசு என்கிட்ட வந்தார். அந்த கட்டுரைத் தொடரை வெளியிடத் தயாரான்னு கேட்டார். அந்த கேஸட்டுகள்ல தேவமாலினியோட முன் வாழ்க்கை அந்தரங்கங்கள் அப்பட்டமாக இருக்கிறதா சொன்னார். அதைத் தவிர போலீஸ் டிபார்ட்மெண்ட்டை மண்டையைப் பிச்சுக்க வைக்கப் போற சில பயங்கரமான செய்திகளும் இருக்கிறதா சொன்னார். கொஞ்சம் பயமா இருக்கிறதாகவும் சொன்னார். முழு பாதுகாப்பு தர்றேன். தைரியமா எழுதுங்கன்னு நான் சொன்னேன். முதல் நாலு வாரத்துக்கான மேட்டரை எழுதிக் கொண்டு வாங்க. உடனே விளம்பரம் எதுவும் வைக்காம ஆரம்பிச்சிடலாம்ன்னு சொன்னேன்.''

''அப்புறம்.''

''நேத்து தேவமாலினி தற்கொலை செய்தியைப் படிச்சிட்டு எனக்குப் போன் செஞ்சார் தங்கராசு. அதில் சில மர்மங்கள் இருக்குது. அது தற்கொலையா இருக்க முடியாதுன்னார்.

ஈவினிங் வீட்டுக்கு வாங்க, பேசலாம்னு சொன்னேன். நேத்து ஈவினிங் என் வீட்டுக்கு வந்தார். விரக்தியில இருந்த தேவமாலினி முந்தாநாள் ஈவினிங் இவருக்குப் போன் செய்து பேசினாங்களாம். அந்த கட்டுரைத் தொடர் எழுத வேணாம், கேஸட்டுகளை கொண்டு வந்து ஒப்படைச்சிடுங்கன்னு சொன்னாங்களாம்.''

''ஏன்?''

''நடிகர் இளங்கோ காதல் தோல்வி விவகாரத்துல தான் தேவமாலினி மனசொடிஞ்சி போனாங்க. அந்த இளங்கோ போன் செஞ்சி உன் உண்மையான அன்பைப் புரிஞ்சுக்கலை, ஸாரி, நேரில் பேசலாம்னு சொன்னானாம். இன்னிக்கு ராத்திரி நாங்க நேர்ல சந்திச்சு மனசு விட்டுப் பேசப் போறோம். இந்தச் சூழ்நிலையில அந்தக் கட்டுரை வேணாம்னு சொன்னாங்களாம்.''

''வாட் நான்சென்ஸ்! அப்படிச் சொன்னவங்க எதுக்காக மறுபடி தற்கொலை முயற்சியில ஈடுபடணும்?''

''அதான் தங்கராசுவோட கேள்வி. நேர்ல சந்திக்கலாம்னு ஹோட்டல் சாணக்யாவுக்கு வரவழைச்சி அந்த இளங்கோ தான் வற்புறுத்தி தூக்க மாத்திரைகளை குடிக்க வைச்சிருக் கணும்னு தங்கராசு அபிப்பிராயப்பட்டார்.''

''தேவமாலிவியோடக் கேசைப் பொறுத்தவரை இன்ஸ்பெக்டர் நியூட்டன் விசாரிக்கிறார். தற்கொலைன்னு அறிவிச்சிட்டாங்க. ஆனா சில டவுட்ஸ் இருக்குன்னு சொன்னாங்க. நேத்தே தங்கராசுவை அழைச்சுக்கிட்டு நீங்க எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு வந்திருக்கலாம் சார்.''

''இன்னைக்கு வர்றதா இருந்தோம் சார்.''

''ஆக, தேவமாலினி சாவுக்கும், தங்கராசு சாவுக்கும் நெருங்கின சம்பந்தம் இருக்கு. தேவமாலினியும் சாமர்த்

தியமா கொலை செய்யப்பட்டிருக்கலாம்னு இப்ப நினைக்கத் தோணுது. அந்த ஆடியோ கேஸட்ஸ் அழிக்கப்பட்டது எங்களுக்கு ஒரு பலவீனம்.''

மோகனகுமார் கையசைத்து மறுத்தார்.

''கவலைப்படாதீங்க சார். நான் சொன்ன ஒரு யோசனைப் படி தங்கராசு அந்த கேஸட்டை பத்திரப்படுத்தி வெச் சிருக்கார்.''

''என்ன சொல்றீங்க?''

''விவகாரமான விஷயங்கள் அந்த கேஸட்ஸ்ல இருக்கிற தால முதல் காரியமா அந்த கேஸட்ஸ் எல்லாத்தையும் வேற கேஸட்ஸ்ல காப்பி எடுத்து யாராச்சும் நம்பிக்கைக்குரியவங்க கிட்ட கொடுத்து பத்திரப்படுத்திடுங்கன்னு சொன்னேன். அதுப்படி காப்பி எடுத்துக் கொடுத்து வச்சிட்டேன்னு சொன்னார்.''

பிரகாசமான சித்திரவேல் ''யார்கிட்டே?'' என்றார்.

''அதை என்கிட்டே சொல்லலை.''

முகம் வாடிப்போக, ''என்ன சார்!'' என்றார். ''தங்க ராசுவுக்கு தன் காதலி கிரிஜாவை விட நெருக்கமானவங்க யாரா இருக்க முடியும்? ஆனா அவங்களை விசாரிச்சுட்டேன். தனக்கு இந்த விவகாரமே தெரியாதுன்னு சொல்றாங்க.''

மேலும் விசாரித்துவிட்டு சற்றே சோர்வுடன் புறப் பட்டார் சித்திரவேல். தேவமாலினி வழக்கை விசாரிக்கும் நியூட்டனை சென்று சந்திச்சு கடகடவென்று எல்லா வற்றையும் கொட்டினபோது, நியூட்டன் ஒரு தகவல் சொன்னார்.

''காட்டேஜ் வாசல்ல ஒரு புல்லட் பைக் நின்னுருக்கு. கொஞ்சம் புஷ்டியான மொத்தியான செயின் போட்ட,

பிரேஸ்லெட் போட்ட பணக்காரப் பையனை பார்த்ததா ஹோட்டல் ரும்பாய் சொல்றான்.''

''அவன் தான்! அவனே தான்! தங்கராசுவைக் கொலை செஞ்சதும், அவன் வீட்ல கலைச்சிப் போட்டதும் அவன் தான். ஸோ, தேவமாலினியையும் சாமர்த்தியம் செஞ்சி அவன் தான் கொலை செய்திருக்கணும்.''

நியூட்டன் தன் சீட்டை விட்டு எழுந்து கொண்டார்.

''இப்போ ரெண்டு விஷயங்கள் நமக்குத் தேவை. அந்தக் கொலைகாரன் போன் செஞ்சி பேசின தேவதத்தன் யாரு. எண்ணங்கிற விவரம் அடுத்து... அந்த காப்பி செய்யப்பட்ட கேஸட்டுகளை தங்கராசு யார்கிட்டே கொடுத்து வச்சான்னு தெரியணும். இது ரெண்டும் தெரிஞ்சா குற்றவாளியையும் பிடிக்கலாம் - குற்றங்களுக்கான ஆதாரங்களும் கிடைக்கும்.''

''சார், உதவி இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு வந்திருப்பார். அவரை தேவதத்தன் பத்தி விவரங்கள் கலெக்ட் பண்ணச் சொல்லிருந்தேன்.''

இரண்டு பேரும் ஒரே ஜீப்பில் புறப்பட்டார்கள்.

''இளங்கோ இந்த காரியத்தை செய்திருக்கலாமா?'' என்றார் சித்திரவேல்.

''மோடிவ் இருக்கு. ஆனா, அவரே நேரடியா செயல் பட்டிருப்பார்னு தோணலை. ஒரு வேளை இந்த தேவதத்தன் - அவனோட போன்ல பேசின கொலைகாரன் இவங்க எல்லாம் இளங்கோ ஏற்பாடு செஞ்ச நபர்களா இருக்கலாம். எனக்கு லேசா இளங்கோ மேல சந்தேகம் உண்டு. விசாரிச்சேன். ஒரு அவுட்டோர் ஷூட்டிங்ல கலந்துக்கிட்டு ஊட்டில நாலு நாளா தங்கியிருக்கார் இளங்கோ. பார்க்கலாம்'' என்றார் நியூட்டன்.

இரண்டு பேரும் அடையாறு போலீஸ் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்கள்.

சித்திரவேல் உத்தரவிட்ட உதவி இன்ஸ்பெக்டர் இருந்தார்.

''தேவதத்தன் பத்தி தெரிஞ்சுக்கிட்டீங்களா?''

''அவரோட ஜாதகம் மட்டும் கிடைக்கலை. மத்தபடி பூரா விவரங்களும் சேகரிச்சுட்டேன் சார். தேவதத்தன் ஒரு தமிழ் சினிமா தயாரிப்பாளர். இதுவரைக்கும் பனிரெண்டு படங்கள் தயாரிச்சிருக்கார். அவருக்குப் பிள்ளைங்க இல்லை. அவர் தயாரிச்ச பனிரெண்டு படங்களில் ஏழுல தேவமாலினி கதாநாயகி. சில வருஷங்களுக்கு முன்னால அந்த தேவமாலினியை தன்னோட விருகம்பாக்கம் பங்களால வச்சி ரகசியமா கொஞ்ச நாள் குடித்தனமே நடத்தியிருக்கார். அதே விருகம்பாக்கம் பங்களால அவரோட மனைவி பரமேஸ்வரி புடவையைக் கட்டி தூக்குல தொங்கி தற்கொலை செய்துக்கிட்டாங்க. இப்ப அந்த பங்களாவை வித்துட்டார். அடையாறு பங்களால அவரும், வேலைக்காரங்களும் மட்டும்தான் இருக்காங்க.''

திடீரென்று நினைவு வந்தவராக சித்திரவேல் ''சார்! தங்கராசு மோகனகுமார்கிட்டே அந்த கேஸட்ஸ்ல தேவமாலினியோட அந்தரங்கமான வாழ்க்கை தவிர போலீசை மண்டைய பிச்சுக்க வைக்கிற சில பயங்கரமான செய்திகளும் இருக்கிறதா சொல்லியிருக்கான்'' என்றார்.

''அந்த கேஸட்ஸ் கிடைக்கணும். போட்டு கேக்கணும். அதுக்கப்புறம் தான் இப்போ நாம அடுத்த மூவ் செய்ய முடியும்'' என்றார் நியூட்டன்.

''இருங்க சார், அந்தப் பொண்ணு கிரிஜாவை இன்னொரு தடவை விசாரிச்சிடறேன்'' என்ற சித்திரவேல் போன் செய்து, ''மிஸ் கிரிஜா, நான் இன்ஸ்பெக்டர் சித்திரவேல் பேசறேன்.

கொஞ்சம் யோசிச்சுப் பாரும்மா. தங்கராசு உன்கிட்ட ஆறு ஆடியோ கேஸட்ஸ் கொடுத்து பத்திரமா வெச்சுக்கச் சொன்னானா?'' என்றார்.

''இல்லை சார். ஒரு லெதர் பேக் தான் நாலு நாளைக்கு முன்னாடி கொடுத்து பத்திரமா வை. அப்புறம் வாங்கிக்கறேன்னு சொன்னார். கேஸட் எதுவும் தரலை சார்.''

''பேகா? அதில் என்ன இருந்திச்சி?''

''நான் பிரிச்சிப் பார்க்கலை சார்.''

''அது இப்ப எங்க இருக்கு.''

''ஹோட்டல்ல எனக்கொரு லாக்கர் இருக்கு. அதில வச்சிருக்கேன்.''

''நான் லைன்லயே இருக்கேன். அந்த பேகில என்ன இருக்குன்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லும்மா.''

சில நிமிடங்களுக்குப் பிறகு...

''சார், நீங்க சொன்ன மாதிரி அந்த பேகில ஆறு ஆடியோ கேஸட்ஸ் இருக்கு'' என்றாள் கிரிஜா.

''தேங்க் காட்! பத்திரமா வெச்சிரு. இதோ உடனே வர்றோம்'' என்று போனை வைத்துவிட்டு, ''காப்பி செய்யப் பட்ட கேஸ்ட்ஸ் கிடைச்சிடுச்சி'' என்றார் சித்திரவேல் உற்சாகமாக.

★ ★ ★

அந்த கேஸட்ஸைப் பெற்று வந்து நியூட்டனும், சித்திரவேலும் மட்டும் ஒரு தனியான அறையில் ஒவ்வொன்றாகப் போட்டுக் கேட்கத் துவங்கினார்கள்.

தேவமாலினியின் குரலில் அவளது அந்தரங்கங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. பல செய்திகள் புருவம் உயர்த்த வைத்தன. பல செய்திகள் அடடா பாவமே! என்று இருந்தன.

நான்காவது கேஸட்டில்...

''தயாரிப்பாளர் தேவதத்தனுக்கும் எனக்கும் ஒரு தவிர்க்க முடியாத பழக்கம் ஏற்பட்டது. அவரோட படங்கள்ல தொடர்ந்து எனக்கு வாய்ப்புத் தந்தார். அதனால நான் அவரை அனுசரிச்சுப் போக வேண்டியிருந்தது. நாப்பத்தஞ்சி வயசான அவர் தொந்தியும், முன்பல்லுமா இருப்பார். உடம்புலேர்ந்து சகிக்க முடியாத நாத்தம் எப்பவும் அடிக்கும். நான் சகிச்சுக்குவேன். விருகம்பாக்கம் பங்களால என்னை குடி வச்சார். சில பத்திரிகைகள் பகிரங்கமாகவே எழுதிச்சி அதைப் பத்தி அவர் அக்கறைப்படலை.

''அவர் வைஃப் பரமேஸ்வரிக்கு எங்க விவகாரம் தெரிஞ்சு போச்சு. என்னை அந்த பங்களால வாடகைக்கு குடி வச்சிருக்கிறதா பொய் சொன்னார். அவங்க கொஞ்சம் அப்பாவி. நம்பிட்டாங்க. ஷூட்டிங், டிஸ்கஷன்னு ஏதாச்சும் சொல்லிட்டு தேவதத்தன் ராத்திரி புறப்பட்டு விருகம்பாக்கம் வீட்டுக்கு வந்துடுவார். ஒரு தடவை சந்தேகப்பட்டு வேற கார் எடுத்துக்கிட்டு பரமேஸ்வரி அந்த பங்களாவுக்கு வந்துட்டாங்க. எங்களைக் கட்டில்ல வச்சிப் பார்த்துட்டாங்க. சாமி வந்த மாதிரி ஆட ஆரம்பிச்சிட்டாங்க. தேவதத்தன் சமாதானப்படுத்தப் பார்த்தார். கடைசில போராட்டம் தான். திடீர்னு அந்தம்மா சேலையைக் கழுத்தில போட்டு நெரிக்க ஆரம்பிச்சிட்டாரு. நான் விட்டுடுங்கன்னு கத்தினேன். என்னைப் பிடிச்சித் தள்ளிட்டாரு.

''கொஞ்ச நேரத்துல மூச்சுத் திணறி அந்தம்மா செத்துப் போய்ட்டாங்க. தேவதத்தன் கொஞ்சம் கூட பதட்டப்படலை. என்னைக்காச்சும் இப்படி ஆகும்னு நினைச்சேன்னார். இவளை இங்கே இதே ரூம்ல தூக்கு மாட்டிக்கிட்ட மாதிரி செட்டப் செஞ்சிடறேன். நீ முதல்ல இங்கேர்ந்து போய்டு. போலீஸ்ல நமக்கு வேண்டிய சில பேர் இருக்காங்க.

அவங்களுக்கு பணத்தை அடிச்சி இதை தற்கொலை தான்னு சாதிச்சிடறேன். ஆனா நீ மட்டும் வாயைத் திறந்துடாதே. வெளியே மூச்சு விட்டா உனக்கும் இந்த கதிதான்னு சொன்னாரு. நான் கலங்கிப் போய்ட்டேன். அங்கேர்ந்து புறப்பட்டு என் வீட்டுக்கு வந்துட்டேன். தேவதத்தன் என்கிட்ட சொன்ன மாதிரியே தன் பொண்டாட்டி கொலையை தற்கொலைன்னு ஊரை நம்ப வச்சிட்டாரு.''

டேப்பை 'பாஸ்' பட்டன் போட்டு நிறுத்தின நியூட்டன். ''போலீஸ் மண்டையைப் பிச்சிக்கப் போகுதுன்னு தங்கராசு சொன்னதுக்கு அர்த்தம் புரியுதா சித்திரவேல்! இப்போ பரமேஸ்வரி கேசைக் கூட மறுபடி தோண்டி எடுத்தாகணும். அந்த சமயம் உடந்தையா இருந்த சில அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்தாகணும்'' என்றார்.

''ஆக தேவதத்தன் இந்தக் கட்டுரைத் தொடர்ல தன் பழைய விவகாரமும் வருதுன்னு தெரிஞ்சி ஆளை வச்சி தேவ மாலினியையும் தீர்த்துட்டு, தங்கராசுவையும் தீர்த்துருக்கார். அதுக்கு இளங்கோ - தேவமாலினி காதல் விவகாரம் உதவியா இருந்திருக்கு'' - என்றார் சித்திரவேல்.

''தேவதத்தனை அரெஸ்ட் செய்ய இந்த கேஸட் போதும்! மிச்சத்தை அவர் வாயிலேருந்து வரவழைக்கலாம். வாங்க டிலே செய்ய வேணாம்.''

★ ★ ★

அடுத்த ஒரு மணி நேரத்தில் தேவதத்தனின் வீடு போலீசாரால் முற்றுகையிடப்பட்டது. தேவதத்தன் கைது செய்யப்பட்டார்.

போலீஸ் பிரத்தியேக விசாரணையில் தான் கூலிக்கு அமர்த்திய மனோஜை காட்டிக் கொடுத்து எல்லாம் ஒப்புக் கொண்டார். மனோஜும் கைது செய்யப்பட்டான்.

''என் மனைவியை கொலை செஞ்சதை கண்ணால பார்த்துட்ட தேவமாலினி. என்னைக்காவது ஒரு நாள் அவ எனக்கு எதிரா திரும்பலாம்னு ஒரு எச்சரிக்கைக்காக என் நம்பிக்கைக்குரிய ஆளை அவ வீட்ல வேலைக்கு சேர்த்துவிட்டேன். அவதான் தேவமாலினியோட உதவிப் பொண்ணு தாரணி. அப்பப்போ தேவமாலினியோட நடவடிக்கைகளைப் பத்தி எனக்கு தகவல் கொடுத்துடுவா. தேவமாலினி தன் வாழ்க்கைக் கதையை எழுதப் போறதாவும், அந்த டேப்புல கொலை பத்தி எல்லாம் சொல்லியிருக்கிற தாவும் தாரணிதான் எனக்குச் சொன்னா. உடனே நான் மனோஜை நியமிச்சேன். அவனை இளங்கோ மாதிரி பேசச் சொல்லி ஹோட்டலுக்கு வரவழைச்சி கொலை செய்ய நான் தான் ஐடியா கொடுத்தேன். அதே மாதிரி மனோஜ் தங்கராசு வீட்டுக்கு அதிகாலை போய் தேவமாலினி தற்கொலை சம்பந்தமான ரகசியமான ஒரு விஷயம் தனியா பேசணும்னு சொல்லி பெஸண்ட் நகர் கடற்கரைக்கு அழைச்சிட்டுப் போய் கொலை செஞ்சான். வீட்ல கேஸட்ஸ் தேடி கொளுத்தினான்'' என்று எல்லாவற்றையும் சில போலீஸ் மரியாதைகளுக்குப் பிறகு ஒப்புக் கொண்டார் தேவதத்தன்.

★ ★ ★

ஒலித்த போனை எடுத்தார் இன்ஸ்பெக்டர் சித்திரவேல்.

''ஹலோ, நான் ராஜாத்தி பேசறேன். கத்திக்குத்துப் பட்டவன் யாருன்னு கண்டு பிடிச்சிட்டீங்களா சார்? ஒரு ஆர்வத்தில் கேக்கறேன்.''

''அது மட்டுமில்லைம்மா. மூணு கொலைகளோட குற்றவாளிகளைப் பிடிச்சிருக்கோம். பெரிய கதைம்மா. நேர்ல வா, சொல்றேன்'' என்றார் சித்திரவேல்.

❖

யாருக்கும் முகமில்லை

1

மோட்டார் பம்ப்செட் இயங்கிக் கொண்டிருந்தது. கால் வட்டமாக அடர்த்தியான தண்ணீர் வளைந்து விழுந்து சின்னச் சின்ன கிளை வாய்க்கால்கள் வழியாக வயலுக்குப் பாய்ந்து கொண்டிருந்தது.

வயலில் நெல் நாற்றுகள் பச்சை யூனிஃபார்ம் அணிந்து காற்றின் தடவலில் சிலுசிலுவென்று சிணுங்கிக் கொண்டிருந்தது. அடுத்த வயலில் சூரியகாந்தி செடிகளில் வட்ட மஞ்சள் பூக்கள் எல்லாம் பேசி வைத்துக் கொண்டு ஒரே திசையில் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தன.

முக்கிய சாலையில் இருந்து வயலைக் குறுக்கில் கடந்து சென்று மின்சாரக் கம்பிகளின் மேல் முப்பது நாற்பது குருவிகள் பள்ளிக்கூட பிரேயர் போல வரிசையாக அமர்ந்திருந்தன.

தடதடத்து வந்து நின்ற மோட்டார் பைக்கின் சத்த அதிர்விலும், அது வெளியேற்றிய பெட்ரோலிய புகையின் தொடலிலும் சில குருவிகள் பறந்து இடம் மாற்றம் செய்து கொண்டன.

பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினார் பாண்டித் தேவர். அவருக்குப் பின்னால் அமர்ந்து வந்த மருது அவசரமாக இறங்கி உடனே குடையை விரித்து அவருக்குப் பிடித்தான்.

பாண்டித் தேவர் வெள்ளை வெளேரென்று எட்டு முழம் பாலியெஸ்டர் வேட்டி கட்டி பச்சை நிற பட்டை பெல்ட் அணிந்திருந்தார். முழுக்கை பாலியெஸ்டர் வெள்ளை சட்டை இரண்டு தோள்களிலும் ஒரு அடி நீளம் மட்டும் தொங்கும் ஒரு மடிக்கப்பட்ட கழுத்துத் துண்டு. காதோரங்கள் மட்டுமே நரைத்திருக்க, மீசையில் ஒரு முடிகூட வெள்ளை இல்லை.

பாண்டித் தேவருக்கு நாற்பத்தெட்டு வயது என்று ஊர் பெரியவரான, பஞ்சாயத்து தலைவரான அவரே சூடம் அடித்து சத்தியம் செய்தால்கூட சற்று சந்தேகத்தோடுதான் ஒப்புக் கொள்வார்கள்.

அந்த பண்ணைக்காடு கிராமத்தில் மட்டுமல்ல சுற்றுப்பட்டில் உள்ள இருபத்தேழு கிராமங்களிலும் கோயில் திருவிழாவாக இருந்தாலும் சரி, கபடிப் போட்டியாக இருந்தாலும் சரி, தேவரின் தலைமையில்தான் நிகழும்.

ஊருக்குள் போலீஸ் வருவதாக இருந்தாலும் முதலில் பாண்டித் தேவரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுத்தான் வரும். பண்ணைக்காடு கிராமத்திலிருந்து வழக்கு என்று எதுவும் அருகாமை காவல் நிலையமான அபிராமபுரம் காவல் நிலையத்திற்குப் போவதே இல்லை.

எல்லாமே பஞ்சாயத்து பைசல்தான்.

இந்த பஞ்சாயத்து சமாச்சாரத்திற்காகவே தன் வீட்டு வாசலில் பதினைந்தடி அகலத்தில் திண்ணை கட்டி சிமெண்ட் போட்டு மெழுகி வைத்திருக்கிறார்.

அங்குதான் பஞ்சாயத்து நடக்கும் என்றில்லை. பாண்டித் தேவர் எந்த இடத்தில் இருந்தாலும் அங்கே தேடிக் கொண்டு வந்து பிரச்சினைகளைச் சொல்வார்கள்.

மாந்தோப்புக்கு நடுவில் ஒடு வேய்ந்து சுற்றிலும் வெட்டி வேர் தட்டி கட்டி ஒரு ஆய்வுக்கூடம் அமைத்திருக்கிறார் தேவர். அங்கே நல்ல தேக்கில் செய்து வார்னீஷ் பூசி மெருகேற்றப்பட்ட வட்டமான மேஜையுண்டு. மேஜையைச் சுற்றிலும் ஐந்தாறு நாற்காலிகள் உண்டு.

சாயங்காலம் ஐந்து ஐந்தரைக்கெல்லாம் பாண்டித்தேவர் அங்கே வந்து உட்கார்ந்து விடுவார். பக்கத்துப் பக்கத்து கிராமங்களில் இருந்து சம அந்தஸ்து உள்ள பெரிய மனிதர்கள் காரிலும், புல்லட் பைக்கிலுமாக வந்து சேர்வார்கள்.

பிறகு ராத்திரி ஒரு மணி, இரண்டு மணிவரை சீட்டாட்டம்தான். அத்தனை பேருக்கும் இரண்டு மூன்று கேரியர்களில் கோழிக்கறி, ஆட்டுக்கறியோடு சாப்பாடு பாண்டித் தேவர் வீட்டிலிருந்து வந்து சேர்ந்துவிடும்.

அந்த மேஜை மேல் நூறு ரூபாய் நோட்டைத் தவிர வேறு நோட்டுக்களே புழங்காது. எத்தனை ஜெயித்தாலும் யாரும் மார் தட்டுவதில்லை. எத்தனை தோற்றாலும் யாரும் முகத்தைத் தொங்க விடுவதில்லை.

பாண்டித் தேவருக்கு கணீரென்று குரல். ஒரு சாதாரண வாக்கியத்தை அவர் பேசினால் அது உத்தரவு போல இருக்கும். தனி அர்த்தங்கள் தொணிக்கும்.

பாண்டித் தேவர் செருப்புக்களைக் கழற்றிப் போட்டு விட்டு வேட்டியை மடக்கிக் கட்டிக் கொண்டு வயலின் வரப்பில் நடக்கத் துவங்க, அவருக்குக் குடைபிடித்த மருது அந்த வேகத்திற்கு ஈடு கொடுக்க இயலாமல் கிட்டத்தட்ட பின்னாலேயே ஓடிக் கொண்டிருந்தான்.

ஒரு வயலில் ஒரு மாடு இறங்கி சாவகாசமாக பயிரை சாப்பிட்டுக் கொண்டிருக்க, "எங்கடா அவன் பழனி? வயல்ல மாட்டை மேய விட்டுட்டு இவன் எங்கே என்ன புடுங்கிட்டிருக்கான்?" என்றார் பாண்டித் தேவர்.

வாயைச் சுற்றி இரண்டு கைகளைக் குவித்து வைத்து, "ஏ... பழனி..." என்று கத்தினான் மருது.

"முதல்ல மாட்டை விரட்டுடா."

பாண்டித் தேவர் மோட்டார் பம்ப் செட் இருந்த சிறிய அறைக்கு அருகில் வந்து நின்று இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு தொலை தூரத்திற்கு எல்லா புறங்களிலும் பழனி தென்படுகிறானா என்றுப் பார்த்தார்.

மாட்டை விரட்டி விட்டு வந்த மருது மறுபடி, "ஏ... பழனி..." என்று கத்தினான்.

"எங்கடா போய்த் தொலைஞ்சான் இவன் இந்த நேரத்தில்?" என்றபடி திரும்பியவர் தண்ணீர் கொட்டுகிற சிறிய சிமெண்ட் தொட்டிக்கு அருகில் ஒரு பித்தளைக் குடத்தையும், துவைக்கப்பட்ட சில பெண் துணிகளையும் பார்த்தார்.

சட்டென்று திரும்பி மோட்டார் அறையைப் பார்த்தார். அதன் இரட்டைக் கதவுகள் உள்புறம் சாத்தப்பட்டிருப்பது தெரிந்தது. அந்தக் கதவு முழுமையாக இல்லாததால் கீழே இரண்டு ஜோடிகள் கால்கள் தெரிந்தன.

ஒரு ஜோடிக் கால்களில் கொலுசுதான்!

"மோட்டார் ரூமுக்குள்ளே இருக்கிற கழுதைங்க யாரா இருந்தாலும் இப்ப வெளில வந்துடணும்" என்றார் உத்தரவாக.

நடுங்கிக் கொண்டே பழனி வெளியில் வர தாவணி அணிந்த பெண் அவசரமாகத் தன் உடைகளை சரி செய்தபடி

வெளியே வந்து தலை குனிந்து நின்றாள். அவள் நெற்றிக் குங்குமம் லேசாகக் கலைந்திருந்தது.

''என்னடா இது கூத்து? அங்கே வயல்ல மாட்டை விட்டுட்டு நீ இங்கே மேய்ஞ்சிக்கிட்டிருக்கியா? யார்றா இவ?''

அவன் நடுங்கும் கைகளால் கும்பிட்டபடி திக்கிப் போனான்.

''முதலாளி, நான் பரிசம் போட்டப் பொண்ணுதாங்க. அடுத்த மாசம் கல்யாணத் தேதி வெச்சாச்சு. சும்மா ரெண்டு வார்த்தை பேசிக்கிட்டிருக்கலாமுன்னு...''

''கதவை சார்த்திட்டு ரெண்டு வார்த்தை பேசிட்டிருந்தியா? பின்னிடுவேன் ராஸ்கல்! பரிசம் போட்ட பொண்ணுன்னா படுக்க கூப்புட்டுடுவியா? ஏன்மா! அவன் ஆம்பளை! அவசரக்காரன்! உனக்கு புத்தி வேணாம்? அடுத்த மாசம் வரைக்கும் பொறுமையா இருக்க முடியாதா?''

''நான் பாட்டுக்கு குளத்துல துணி துவைச்சி எடுத்துக்கிட்டுதாங்க போயிட்டிருந்தேன். அவருதான் வற்புறுத்தி... நான் வேணாம் வேணாம்ன்னுதான் சொன்னேன்.''

''நீ போ! நான் இவன்ட்ட பேசிக்கிறேன்.''

அவள் பிழிந்த ஈரத் துணிகளைத் தோளில் போட்டுக் கொண்டு, குடத்தை எடுத்து இடுப்பில் வைத்து ஒருமுறை தன் மச்சானைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்து சென்றதும்... பொளேர் என்று பழனியை அறைந்தார் தேவர்.

''என்னை மன்னிச்சிருங்க முதலாளி. தப்பு எதுவும் நடக்கலை. சும்மா ஆசையா..''

''வாயை மூடுடா! நான் அப்பட்டமாதான் கேப்பேன். நீ பாட்டுக்கு ஜாலியா இருந்துட்டு ராத்திரியே பாம்பு கடிச்சி செத்துப் போய்ட்டா என்னடா பண்ணும் அந்தப் பொண்ணு? வேற ஒருத்தனை கட்டுமா? வயித்தை ரொப்பிகிட்டு அதைப் பெத்து வாழ்க்கை பூரா அழுதுகிட்டிருக்கணுமா? பெரியவங்க எதையும் விஷயத்தோடதான் சொல்லிருக்காங்க. போடா! போய் வேலைப் பாரு.''

பாண்டித் தேவர் வயல்முழுக்க ஒரு சுற்றி சுற்றி வந்தார். அங்கங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவுகள் சொல்லிக் கொண்டே வந்தார்.

வயல்களுக்கு நடுவில் அமைக்கப்பட்டிருந்த களத்து மேட்டில் வைக்கோல் போர் குவியலின் நிழலில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கை நீட்டினார்.

அதுவரை சுமந்து கொண்டிருந்த எவர்சில்வர் வெற்றிலை டப்பாவை மருது அவரிடம் நீட்ட, அதைத் திறந்து சீவல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு வெற்றிலையை எடுத்து சுண்ணாம்பு தடவிக் கொண்டே, ''என்னய்யா பெரிய கோணாரே, என்ன ஆச்சு பெரிய பொண்ணு கல்யாணம்? இடம் கூடி வர்ற மாதிரி இருக்கு அய்யாக்கிட்ட முத பத்திரிகை வைக்க, கூடிய சீக்கிரம் வந்துடுவேன்னு சொன்னே... ஆளைக் காணமே...''

இளநீரை சீவிக் கொண்டிருந்த பெரிய கோணார், ''இல்லைங்க முதலாளி. ஒரு அஞ்சு பவுன் தவுசல்ல இடம் கூடி வரலைங்க'' என்றார். இளநீரில் ஓட்டைப் போட்டு தென்னை ஓலையை நறுக்கி வைத்து எடுத்து வந்து தேவரிடம் நீட்டினார்.

''வெத்தலை போட்டனேய்யா. கொஞ்சம் கழிச்சு போய் கொப்பளிச்சுட்டு குடிக்கிறேன். நீ குடிடா மருது.''

''எனக்கு வேணாம்யா.''

''அட! குடிடா படவா! பையலுக்கு உத்தியோகமா?''

''ஆமாங்க. தாலுகா ஆபீசுல இளார்க்கு உத்தியோகம்.''

''அப்புறம் என்னய்யா? அஞ்சு பவுன் வித்தியாசத்துல இடத்தை விட்டுறதா? எங்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுருக் கலாமில்ல? பொண்ணுக்கு வயசேறிக்கிட்டேப் போகு துல்லே? என்ன ஆச்சு வயசு உம் பொண்ணுக்கு?''

''இருபத்தேழாச்சுங்க.''

''இத்தனை வயசு வரைக்கும் வீட்ல வெச்சிருக்கிறதா? இப்ப நம்ம பாப்பாவுக்கு பதினெட்டு வயசுதான் ஆகுது. டி.வி. பொட்டி பார்க்குது. புஸ்த்தகம் படிக்குது. அவங்கம்மா வோட வண்டி எடுத்துக்கிட்டு சினிமாவுக்குப் போவுது. தனியா சிரிச்சுக்குது. தூக்கத்துல உளறுது. புரண்டு புரண்டு படுக்குது. இதான் குறிப்பு. நாம புரிஞ்சுக்கணும். இந்த வருஷத்திலயே நான் கல்யாணம் பண்ணி வெச்சிடலாம்னு இருக்கேன். நீ என்னடான்னா இருபத்தேழு வயசாவுதுன்னு பதறாம சொல்றே.''

''பதறி என்னங்க முதலாளி ஆகப்போவுது? வசதி, வாய்ப்பு வேணாங்களா?''

''தாலுகா ஆபீஸ் பையனை அந்த அஞ்சு பவுன் போடறோம்னு சொன்னா முடிச்சுடலாமா கோணாரே?''

''ஒரு வாரத்தில் தகவல் சொல்றேன்னு நான் அவகாசம் வாங்கிருக்கேன் முதலாளி.''

''அப்புறம் என்ன? விடு. நாளைக்குக் காலையில வீட்டுக்கு வா! பணம் தர்றேன். அஞ்சு பவுனுக்கு பணம் தர்றேன். நீ திருப்பி எதுவும் தர வேணாம்.''

''அய்யா!'' நெகிழ்ந்து போனார் பெரிய கோணார். பாண்டித் தேவர் எழுந்து கொண்டார்.

2

பண்ணைக்காட்டின் எல்லை தாண்டி ஒரு கிலோ மீட்டரில் இருந்தது அந்த பழைய இடிபாடுகளுடன் கூடிய சர்ச் கட்டிடம். நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஒரு புயலில் நொறுங்கி விழுந்து சிதிலமான அந்த சர்ச் கட்டிடம் அதன் பிறகு புதுப்பிக்கப் படாமல் அங்கங்கே இடிபாடு களுக்கிடையில் சின்னச் செடிகள் எல்லாம் வளர்ந்திருக்க... மாலை நேரங்களில் ஒரு வித பயத்தைப் பார்ப்பவர்களிடத்தில் தோற்றுவிக்கும்.

பண்ணைக்காட்டிற்கு மர வண்டியில் நல்ல தண்ணீர் எடுத்து வந்து வீடுகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த ராயப்பன் இந்த சர்ச் அருகில் ஒரு விடிகாலையில் இறந்து கிடந்தான். வாயிலிருந்து ரத்தம் வழிந்திருந்தது.

சர்ச் இடிந்தபோது ஒரு பாதிரியார் அந்த இடிபாடுகளில் சிக்கி இறந்து போனதாக ஏற்கனவே ஊரில் பேசிக் கொள்வதுண்டு.

ராயப்பன் ரத்தம் கக்கி அதே சர்ச் அருகில் இறந்த சம்பவத்திற்குப் பிறகு சுற்றுப்பட்டு அத்தனை கிராமங் களிலும் ஒரு புதிய பேச்சு உலாவியது.

சர்ச்சிலேயே சதா உலாவிக் கொண்டிருக்கும் இன்னும் சாந்தியடையாத பாதிரியாரின் ஆவிதான் ராயப்பனைக் கொன்று விட்டது என்பதே பேச்சு.

அன்றிலிருந்து அந்த சர்ச் அருகில் பகல் நேரத்தில் கூட அவசர இயற்கை உந்துதல்களுக்குக்கூட யாரும் ஒதுங்குவ தில்லை.

எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட அந்த சிதிலமடைந்த சர்ச்சை நோக்கி முக்கிய சாலையில் இருந்து தனது சைக்கிளைத் திருப்புவதற்கு முன்பு சாலையில் வேறு நடமாட்டம் எதுவும் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள் செல்வி.

பாவாடை, தாவணி அணிந்து இரட்டைப் பின்னல் போட்டிருந்த செல்வி பாண்டித் தேவர் - காமாட்சியம்மாள் தம்பதியின் ஒரே புத்ரி. தேவருக்குச் சொந்தமான நாற்பது ஐம்பது ஏகரம் தேறும் அனைத்து சொத்துக்களுக்கும் ஏக வாரிசு.

அப்பா, அம்மா இருவரிடத்திலும் ஏக செல்லம்.

ஐந்தாவது வரை அந்த ஊர் பள்ளியிலேயே படிக்க வைத்தார். ஆறாவது முதல் ப்ளஸ் டூ வரை தஞ்சாவூரில் படிக்க வைத்தார். கிட்டத்தட்ட நாற்பது கிலோ மீட்டர் தினமும் காரில் அனுப்பி அப்படி படிக்க வைத்தவர் செல்வி காலேஜ் போக விரும்பியபோது...

''யம்மாடி, அஞ்சாவது, ஆறாவது தாண்டி நம்ம வம்சத்துலயே எந்த பொம்பளைப் புள்ளையும் படிச்சதில்லை. நீ ஆசைப்பட்டியேள்ளுதான் இதுவரைக்கும் படிக்க வச்சேன். இது போதும்'' என்றார் தேவர்.

''சரி. அப்படின்னா அபிராமபுரம் போய் வீணை கத்துக்கறேன். அங்கே வீணை டீச்சர் இருக்காங்க. ஐ லவ் ம்யூசிக் டாடி'' என்றாள் செல்வி கழுத்தை கட்டிக் கொண்டு.

''இந்த பாரு, இங்கிலீஷ்ல பேசினே பல்லுலயேப் போடுவேன். நம்மளை ஆள வந்தவன் விட்டுட்டுப் போன மொழியைத் தூக்கி தலையில வெச்சுக்கிட்டு ஆடாதே. உன்னை படிக்க அனுப்பிச்சது நாலு விபரம் தெரிஞ்சுக்கத்தான். கல்யாணமாகிப் போக வேண்டிய வயசு. அதென்னத்துக்கு வீணையெல்லாம்?''

''ஏங்க... அவளை காலேஜுக்கு அனுப்பமாட்டேன்னு சொல்லிட்டீங்க. ஏதோ இசை வாத்தியம் ஆசைப்பட்டு கத்துக்கனும் சொல்றா. கத்துக்கட்டுமே. கல்யாணமாகிற வரைக்கும் அவளுக்கும் பொழுது போகனுமே. இங்கேர்ந்து அபிராமபுரம் மூனு கிலோ மீட்டர் கூட கிடையாது'' என்றாள் அம்மா சிபாரிசாக.

''உன் அம்மா சொல்லிட்டா. அப்புறம் மீறி நான் வேணாம்னு சொன்னா அவ கோபத்தைப் போக்க எனக்கு ஒரு வாரம் ஆகும்.''

செல்வி காரில் அபிராமபுரம் வந்து விசாலம் டீச்சரிடம் வீணை கற்றுக் கொள்ளத் துவங்கினாள்.

அந்த விசாலம் டீச்சர் வீணை தவிர புல்லாங்குழலும் சில பேருக்கு சொல்லிக் கொடுத்தாள். அவளிடம் புல்லாங்குழல் கற்றுக் கொள்ள வந்தவன் பாலா.

அபிராமபுரத்தில் உள்ள சிறிய லைப்ரரியில் லைப்ரேரியன். லைப்ரரி கட்டிடத்துக்கு மாடியிலேயே உள்ள ஒரு சிறிய வீட்டில் தன் அம்மாவுடன் வசிப்பவன்.

இந்த செல்வியும், அந்த பாலாவும் விசாலம் டீச்சர் வீட்டில் ஒரு நாள் கோயிலுக்குப் போயிருந்த விசாலம் டீச்சர் வருவதற்காகக் காத்திருந்தார்களா...

தன் துறுதுறு வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாத பாலா அவளிடம், ''செல்வி, ரெண்டு மாசமா சொல்லனும்னு தவிக்கிறேன். நீங்க... ரொம்ப... அழகா இருக்கீங்க'' என்று சொல்லித் தொலைத்தானா...

அதற்கு அவள் ஆத்திரமாக முறைத்து 'என்கிட்ட வாலாட்டினே, ஒட்ட நறுக்கிடுவேன்' என்று சொல்லியிருக்கலாம். அதை விடுத்து இதழோரத்தில் வெட்கம் படர

தலை குனிந்து கால்விரலால் தரையில் அரை வட்டம் போட்டாளா...

அங்கே மற்றும் ஒருகாதல் ஜனனம். உடனே கிடுகிடு வளர்ச்சி.

காரில் வரும் போது டிரைவர் இருப்பது அவர்களுக்குத் தோதுப் படாததால்...

''அப்பா, இங்கே இருக்கிற அபிராமபுரத்துக்குப் போய்ட்டு வர எதுக்கு காரு? அதுக்கு பெட்ரோல் செலவு வேற. எனக்கே எனக்குன்னு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுங்கப்பா. நான் அதில போய்ட்டு வர்றேன்.''

''பாண்டித் தேவர் பொண்ணு சைக்கிள்ல போறதா?''

''உங்க கௌரவம் குறைஞ்சு போய்டுமாக்கும். சைக்கிள்ல போனா இயற்கை காத்தை சுவாசிக்கலாம்... காலுக்கும் தெம்பு. ப்ளீஸ்ப்பா.''

''என்னடி இது உன் பொண்ணு நம்ம குடும்பங்கள்ல இல்லாத புதுப்புது பழக்கம் எல்லாம் பழக ஆசைப்படறா?''

''என்ன தப்பு? இன்னும் ஒரு வருஷமோ, ரெண்டு வருஷமோ... கல்யாணம் ஆகி புருஷன் வீட்டுக்குப் போய்டப் போறா, அப்புறம் அவன் சொல்றபடி தான் கேக்கப் போறா. இங்கே இருக்கிற வரைக்கும் ஆசைப்பட்டபடி சுதந்திரமா இருக்கட்டுமே.''

''பொண்ணு எது சொன்னாலும் உடனே சிபாரிசுக்கு வந்துடறியே! சரி சரி! உனக்கு சைக்கிள் வாங்கித் தர்றேன் செல்வி. போதுமா?''

அந்த சைக்கிளில் அபிராமபுரம் வரத் துவங்கினாள்.

பாலாவும் தன் சைக்கிளில்.

இருவருமாகத் தேடி, ஆலோசித்து பிறகு கண்டுபிடித்து தீர்மானித்தார்கள் அந்த இடிந்த சர்ச்சை தங்கள் சந்திக்குமிடமாக வைத்துக் கொள்வதென்று.

எந்த நாள், எந்த நேரம் சந்திப்பது என்று துண்டுச் சீட்டில் எழுதி விசாலம் டீச்சர் வீட்டில் ரகசியமாகப் பரிமாறிக் கொண்டு, அந்த நாள் அந்த நேரம் சந்தித்து...

செல்வி தன் சைக்கிளை விட்டு இறங்கினாள். அதைத் தூக்கிக் கொண்டு இடிந்த சர்ச்சுக்கு உள்ளே சென்று ஒரு ஓரமாக வைத்தாள்.

அங்கே ஏற்கனவே இன்னொரு சைக்கிள் இருந்தது. பாலா சுவரில் சாய்ந்து அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தவன் அவளைப் பார்த்துவிட்டும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தான்.

''ஏய்! என்னைக்கூட கண்டுக்காம அப்படி என்ன எழுதிட்டிருக்கீங்க பாலா?''

செல்வி அவன் அருகில் அமர்ந்து அவன் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

'செல்வி... செல்வி... செல்வி... செல்வி...' என்று கிட்டத்தட்ட அந்த நோட்டில் பத்துப் பக்கங்கள் எழுதி பதினோராவது பக்கத்தில் எழுதிக் கொண்டிருந்தவன், ''தொள்ளாயிரத்து எழுபத்தி ரெண்டு'' என்று விட்டு பேனாவை மூடினான்.

''என்ன பாலா இது, ராம ஜெயம் மாதிரி என் பேரை எழுதி வெச்சிருக்கீங்க?''

''நீ வர்றவரைக்கும் பொழுது போகணுமே. ஆயிரம் தடவை உன் பேரை எழுதி முடிக்கிறதுக்குள்ளே நீ வந்துடறியாப் பார்க்கலாம்னு எழுத ஆரம்பிச்சேன்.

இன்னும் ஒரு நிமிஷம் லேட்டா வந்திருந்தா ஆயிரம் முடிச்சிருப்பேன்.''

''நான் வேணும்னா போய்ட்டு ஒரு நிமிஷம் கழிச்சு வரட்டுமா?''

அவள் காதைப் பிடித்து வலிக்காமல் திருகிவிட்டுப் பிறகு விடுவித்த பாலா, ''நேத்து நான் கொடுத்த லெட்டரைப் படிச்சியா?'' என்றான்.

''படிச்சேன். இனிமே இந்த மாதிரி லெட்டர் எழுதுறதெல்லாம் வேணாம் பாலா.''

''ஏன் செல்வி? வீட்ல யாராச்சும் பார்த்துட்டாங்களா?''

''இல்லை. யாரும் பார்க்காம படிக்கிறதுக்குள்ளே அவஸ்தையா இருக்கு. வீட்ல எனக்கு தனியா ரூம் எதுவும் இல்லை. எங்கம்மாவும் நானும்தான் ஒரே கட்டில்ல படுத்துக்குவோம். அப்பாவுக்கு தனி ரூம். நான் ராத்திரி அம்மா தூங்கிட்டாங்களான்னு எந்திரிச்சி எந்திரிச்சுப் பார்த்துட்டு அப்புறமா பாத்ரூமுக்குப் போய் கதவை சார்த்திக்கிட்டுப் படிச்சேன். அப்புறம் வந்து படுத்தா ரொம்ப நேரத்துக்குத் தூக்கமே வரலை. ஆனாலும் என்னை ரொம்பதான் வர்ணிச்சு எழுதியிருக்கீங்க. நான் என்ன அவ்வளவு அழகா? தோல்கூட மாநிறம்தானே பாலா?'' என்றாள் செல்வி.

''செல்வி, அழகு நிறத்தில் இல்லை. முகத்தில் இருக்கு. பழகுற விதத்தில இருக்கு. பேசற பேச்சில இருக்கு. நீ செக்கச் செவேல் சிவப்பா இருந்து இன்னும் பிரமாத அழகா இருந்து ஆனா பேச்சில் அகங்காரமும், ராங்கித்தனமும் இருந்திருந்தா எனக்கு உன்னைப் பிடிச்சிருக்குமா?''

''என்னை நீங்க லவ் பண்ணியாகணும் தலையெழுத்துன்னா பிடிச்சிருந்திருக்கும்.''

''இல்லை செல்வி. உன் கிட்ட இருக்கிற பணிவு எனக்கு ரொம்பப் பிடிக்கும். உனக்கு இருக்கிற அந்தஸ்த்தையும், பணத்தையும் நீ காட்டிக்கவே விரும்பமாட்டே. ஒரு பணக்கார வீட்டுப் பொண்ணுக்கு உண்டான கொஞ்ச அளவு நிமிர்கூட உன்கிட்டே இல்லை. அதனாலயே உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சது.''

அவனது மடியில் உரிமையுடன் தன் தலையைச் சாய்த்துக் கொண்ட செல்வி, ''என்னமோ மனசுக்குள்ளே வச்சிருந்த ஆசையை வெளியே சொல்லிக் கிட்டோம். கட்டுப்படுத்த முடியாம ரகசியமா பழகிட்டு இருக்கோம். ஆனா எனக்கு எவ்வளவு பயமா இருக்கு தெரியுமா?'' என்றாள்.

அவளது பின்னலின் முனையை நிமிண்டியபடி, ''என்ன பயம்?'' என்றான்.

''என்னைக்கு எங்கப்பாகிட்டே மாட்டிக்கப் போறோமோன்னுதான்.''

''சரி. ஒரு கற்பனைக்கு கேக்கறேன். இப்போ இந்த நிமிஷம் திடீர்னு உங்கப்பா இங்கே வந்து நிக்கிறார்னு வெச்சுக்கோ. நீ என்ன செய்வே செல்வி?''

''பயத்திலயே செத்துப் போய்டுவேன். அவர் முறைச்சுப் பார்த்தாலே எனக்கு எலும்பெல்லாம் நடுங்கும் பாலா. எப்போ சிரிப்பார், எப்போ முறைப்பார்னே தெரியாது. சரி. நீங்க சொல்லுங்க. திடீர்னு என் அப்பா வந்து நின்னா நீங்க என்ன செய்வீங்க?''

''எனக்கு என்ன பயம்? நிமிர்ந்து நின்று சொல்வேன்.''

''என்னன்னு?''

''மதிப்பிற்குரிய மாமா, உங்க மகளை நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். உங்க மகளும் ஆசைப்படறா.

இரண்டு இளம் உள்ளங்களைப் பிரிக்காதீங்க. எங்களுக்கு கல்யாணம் பண்ணி வைங்க மாமா.''

''முடியாதுன்னு சொன்னா?''

''அப்படின்னா எங்களுக்கு ரெண்டே வழிதான் இருக்கு. ஒண்ணு ரகசியமா ஓடிப்போய் திருட்டு கல்யாணம் பண்ணிக்கிறது. இன்னொன்று திடுதிப்புன்னு வீடு புகுந்து யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் செல்வி கழுத்தில் தாலி கட்றது. எது மாமா உங்களுக்கு கௌரவமா இருக்கும்னு கேப்பேன்.''

''ஏன் பாலா, நிஜமா நீங்க இவ்வளவு தைரியமா பேசுவீங்களா?''

''நிச்சயமா. நான் என்ன கொலை குத்தமா செஞ்சிட்டேன்? காதலிக்கிறது குத்தமும் இல்லை. பாவமும் இல்லை. அதிலயும் நீயும் என்னை நேசிக்கிறப்ப தைரியமா பேசறதுக்கு என்ன பயம் எனக்கு?''

''ரைட்! இதே மாதிரி டயலாக் எல்லாம் என்னைக்காச்சும் ஒரு நாள் திடீர்னு எங்கப்பா நம்மை வசமா பார்த்துட்டாதான் பேசணுமா? முறையா உங்கம்மாவை அழைச்சிகிட்டு வீட்டுக்கு வந்து பேசலாமில்லே?''

''எனக்கு பயம் இல்லை செல்வி. தயக்கம் இருக்கு. உங்கப்பா ஒரு மாதிரி டைப். நாலு பேருக்கு நியாயம் சொல்றவரு. அதே சமயம் கொஞ்சம் அடாவடித்தனமும் உள்ளவர். இதையெல்லாம் விட அந்தஸ்து பார்க்கிறவர்; தன் பொண்ணை கல்யாணம் செய்துக்க எனக்குத் தகுதி இல்லைன்னு அவர் நினைச்சி கோபப்பட்டாருன்னா... எடுத்ததுமே பிரச்சினை பூதாகரமா கிளம்பிடும். அதான் யோசனையா இருக்கு.''

''இதே யோசனையில் இன்னைக்கு ஷேவிங்கூட பண்ணலையாக்கும்? ஒரே முள்ளு முள்ளா இருக்கு பாருங்க தாடி'' என்று அவன் கன்னத்தைத் தடவினாள் செல்வி.

''தாடி குத்தாம முத்தம் கொடுக்கறதுக்கு ஒரு டெக்னிக் இருக்கு செல்வி. பார்க்கறியா?'' என்று அவள் முகத்தை நோக்கி மெதுவாகக் குனிந்தான் பாலா.

3

வீட்டின் கூடத்தில் மாட்டியிருந்த ஊஞ்சலில் கை வைத்த பனியனும், வெள்ளை லுங்கியும் அணிந்து மெதுவாக ஆடிக் கொண்டிருந்தார் பாண்டித்தேவர். கண்ணாடி அணிந்து காலை செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார்.

சற்றுத் தள்ளி மரத்தால் தடுப்பு போல பிரிக்கப்பட்ட பகுதியில் மேஜை போட்டு, கணக்குப் பிள்ளை கணேசன் நெற்றியில் விபூதி, குங்குமத்தூள் பவ்யமாக அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தான்.

வீட்டின் பின்புறம் நாயைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த மருதுவிடம் வந்தாள் வேலைக்காரி திலகம்.

திலகம் அந்த வீட்டில் இருபத்தைந்து வருடங்களாக வேலை பார்ப்பவள். அவளுக்குத் திருமணத்தை பாண்டித் தேவர் தான் நடத்தி வைத்தார். ஆனால் ஆறே மாதத்தில் அந்த அல்பாயுசுக்காரன் லாரி விபத்தில் இறந்து போக... வெற்று நெற்றியுடன் ஊர் திரும்பிய திலகம் மீண்டும் தேவர் வீட்டிலேயே வேலை பார்க்கத் துவங்கினாள்.

அதே தெருவில் சற்றுத் தள்ளி ஒரு குடிசையில் தனியாக வாழும் திலகத்திற்கு பெயரளவிற்குத்தான் அது வீடு. ஆனால்

தூங்கும் நேரம் போக வேலை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தேவர் வீட்டிலேயே இருப்பாள்.

திலகத்திற்கு செல்வி மேல் அலாதி பிரியம். தனக்கு ஒரு மகள் பிறந்திருந்தால் அவள் இந்த வயதில் இப்படித்தானே இருப்பாள் என்று மனதிற்குள் நினைத்து நினைத்து உருகிப் போவாள்.

செல்வியின் அம்மா காமாட்சி கோயிலுக்குப் போனாலும் சரி, சந்தைக்குப் போனாலும் சரி காரியதரிசி போல துணைக்கு திலகம்தான் போவாள்.

காமாட்சியும் அவளைத் தன் வீட்டு வேலைக்காரியாக நினைப்பதில்லை. தன் குடும்பத்தில் ஒருத்தியாகப் பாவித்து மனக்கஷ்டங்களை எல்லாம் உரிமையோடு கொட்டுவ துண்டு.

திலகம் மருதுவிடம் வந்து, ''உன்னைப் போய் செல்வி யோட சைக்கிளுக்கு பங்ச்சர் போட்டுட்டு வரச்சொன்னா நாயைக் குளிப்பாட்டிக்கிட்டிருக்கியா? நகரு! நான் குளிப்பாட்டிக்கிறேன். நீ போய் சைக்கிளைப்பாரு. செல்வி வீணை கிளாசுக்குப் புறப்பட்டு வந்துடும்.''

''உள்ளே ட்யூபு பெரிசா கிழிஞ்சிருக்கு. டியூபையே மாத்தணும்.''

''மாத்தேன். யாரு வேணாமுன்னது?''

''நம்மூர்ல ஏது டயரும், ட்யூபும்? வெளியூர்ல வாங்கிட்டு வந்துதான் மாத்தணும். இன்னிக்கு செல்வியை கார்ல போய்ட்டு வரச்சொல்லு.''

''சொல்றேன். ஆனா நீ நல்லா வாங்கிக் கட்டிக்கப் போறே பாரு.''

திலகம் வீட்டுக்குள் நுழைய, ஊஞ்சலாடிக் கொண்டிருந்த பாண்டித்தேவர் ''திலகம்!'' என்றதும் ஓடியே வந்து, ''அய்யா?'' என்றாள்.

''காமாட்சியைக் கூட்டிட்டு வா.''

''அய்யா, அம்மா மேலத் தெருவுல கவுண்டர் பொண்ணு வளைகாப்புக்குப் போயிருக்காங்க.''

''தெரியும். போய் கூட்டிட்டு வா'' என்றார் கடுகடுப்பாக.

''சரிங்கய்யா'' திலகம் வாசலுக்கு ஓடும்போது ஓரமாக கைகட்டி நின்று கொண்டிருந்த பெரிய கோணாரைப் பார்த்துவிட்டு ஓடினாள்.

பெரிய கோணார் சற்றே தயங்கி, ''அய்யா! நான் வேணும்னா அப்புறமா வர்றேன்'' என்று.

''நில்லுய்யா. நகரக்கூடாது நீ. இப்படி வாய்யா கணேசா.''

கணக்கு மேஜைக்கு அருகில் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்த கணேசன் அவர் அருகில் வந்து நின்றான். ஊஞ்சலின் ஆட்டத்தை நிறுத்தினார். அவனை நேராகப் பார்த்தார்.

''இன்னிக்கு காலைல தேவைப்படும், பதினைஞ்சாயிரம் தனியா எடுத்துவையின்னு நான் சொன்னேனா, இல்லையா?''

''நீங்க சொன்னீங்கய்யா. ஆனா அம்மாதான் பண மிருக்கான்னு கேட்டாங்க. இருக்குன்னு சொன்னேன். விதை நெல்லுக்கு குமரியப்பன்கிட்டே முன் பணமா பத் தாயிரம் கொடுத்து கையெழுத்து வாங்கிக்கச் சொன் னாங்க.''

''வேற ஒரு தேவைக்காக அய்யா பணம் வெச்சி வைக்கச் சொன்னாருன்னு சொன்னியா?''

''சொன்னேன்யா. இது முக்கியம். அது அப்புறம் பார்த்துக்கலாம்னு சொன்னாங்க.''

கணேசன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பட்டுப்புடவையும், கழுத்து நிறைய நகைகளுமாக வேகமாக வந்து சேர்ந்தாள் காமாட்சி.

''என்னங்க? என்ன பிரச்சனை?''

''பெரிய கோணாருக்கு அஞ்சி பவுன் வாங்கறதுக்கு பணம் தர்றேன் காலைல வீட்டுக்கு வான்னு வாக்கு கொடுத் திருந்தேன். கணேசன்கிட்ட பணத்தையும் எடுத்து வைக்கச் சொல்லியிருந்தேன். நீ அந்தப் பணத்துல விதை நெல்லுக்கு முன் பணம் கொடுக்கச் சொல்லிருக்கே. இப்ப எனக்கு பதினைஞ்சாயிரம் வேணும். எடுத்துக் கொடு.''

காமாட்சி லியர்த்துப் போனாள்.

''நாளைக்கு டவுன்ல இருக்கிற பாங்கிலேர்ந்து பணம் எடுத்துக் கொடுத்துடவாங்க.''

''நான் கோணாருக்கு பணம் தர்றதா சொன்னது இன்னைக்கு!''

பெரிய கோணார் சூழ்நிலையின் தர்மசங்கடத்தை உணர்ந்து, ''முதலாளி, எனக்கு ஒண்ணும் அவசர மில்லைங்கய்யா. நாளைக்கே வந்து வாங்கிக்கறேனே...'' என்றார்.

''நீ வாயை மூடுய்யா. பாண்டித்தேவர் ஒரு வார்த்தை சொன்னா சொன்னதுதான். சால்ஜாப்பே கிடையாது. வார்த்தை மாறினதே இல்லை. இன்னைக்கும் மாறக்கூடாது'' என்ற பாண்டித்தேவர் எழுந்து நேராக காமாட்சியிடம் வந்தார். அவள் முகந்தை கோபமாக முறைத்தார்.

''என்னை மன்னிச்சிக்குங்க'' என்றாள் குரல் நடுங்க.

''உன் கழுத்துல போட்டிருக்கிற நகைகள்ல எது அஞ்சு பவுன் இருக்குமோ அதைக் கழட்டி கோணார்கிட்ட கொடுத்துடு'' என்று கூறி விட்டு விருட்டென்று வேகமாக வெளியேறி நடந்தார் பாண்டித்தேவர்.

4

கட்டிலில் குப்புறப் படுத்திருந்தாள் செல்வி. கையில் புத்தகம் வைத்திருந்தாள். ஆனால் வெகு நேரமாக பக்கம் புரட்டாமல் புத்தகத்திற்குள் வைத்திருக்கும் பாலாவின் புகைப்படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கால்கள் தானாக ஆடிக் கொண்டிருக்க, பாலாவின் புகைப்படத்தைப் பார்க்கும்போதே அவளுக்குள் ஒரு குறுகுறுப்பு வந்து உட்கார்ந்தது.

பாலாவின் கன்னத்தை நிமிண்டினாள். மனதிற்குள் பேசினாள்.

போக்கிரி! உள் தாவணிக்குள் எட்டுக்கால் பூச்சி ஓடியதைப் பார்த்தேன் என்று சொல்லி என்னைப் பதற வைத்து தாவணியை அவசரமாக உருவி உதற வைத்து, நான் தவிக்கையில் சிரித்து உன்னை இப்படி பார்க்கத்தான் பொய் சொன்னேன் என்று சொல்லி என் கையால் குட்டு வாங்கிக் கொண்ட குறும்புப் பையா! அதென்ன உன்னை நேரில் பார்க்கும்போதெல்லாம் தரை மேல் மெத்தையிட்டு அதன் மேல் நடப்பது போல உணர்கிறேன்? ஏன் அப்படி?

நீ என்ன பேசுகிறாய் என்று புரிய வேண்டியதில்லை. நீ லேசாகத் தலையசைத்துப் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே ஒரு ஆனந்தம் இருக்கிறதே பாலா.

பாலா, இப்போதெல்லாம் என்னை நீ அடிக்கடி உஷ்ணமூச்சுகள் விட வைக்கிறாய். ஏக்கக் கனவுகள் காண வைக்கிறாய்.

நேற்று நள்ளிரவு தூக்கத்தில் என்னை எழுப்பினாள் அம்மா.

"'அய்யோ! போதும், விடு'ன்னு சொன்னியே, என்னடி கனவு அப்படி?" என்று கேட்டாள்.

மலர் மஞ்சத்தில் என் எலும்புகள் நொறுங்கும் வித்தில் நீ அணைத்துக் கொள்வதாகக் கனவு என்று அம்மாவிடம் சொல்லவா முடியும்?

பாலா, இப்படி திருட்டுத்தனமாக நம் காதலை வளர்த்துக் கொண்டிருக்கிறோமே... இந்த சுகம் எப்போது நிரந்தரமாகப் போகிறது? எப்போது ஊரறிய உரிமையோடு கைகோர்த்து நடக்கப் போகிறோம்?

"யாரு செல்வி அது?"

குரல் கேட்டு அவசரமாகப் புத்தகத்தை மூடினாள் செல்வி.

கையில் பால் டம்ளருடன் நின்றாள் திலகம்.

"என்ன கேட்டே திலகம்? கவனிக்கலை. புத்தகம் படிச்சிக்கிட்டிருந்தேன்."

"பால் சாப்பிடும்மா" பால் டம்ளரை நீட்டினாள் திலகம். வாங்கி செல்வி மடமடவென்று குடித்துவிட்டு காலி டம்ளரைத் தந்தாள்.

அதை வாங்கிக் கொண்டு, "ம், சொல்லும்மா, யார் அது?"

"என்ன கேக்கறே நீ?"

"புஸ்தகத்துக்குள்ளே நீ ஒரு போட்டோ வெச்சிப் பார்த்துக்கிட்டிருந்தியே அந்தப் பையன் யாருன்னு கேட்டேன்."

செல்வி திடுக்கிட்டாள். இனி மறைக்க முடியாது என்று பட்டது.

"திலகம், கதவை சாத்திட்டு வந்து இப்படி உக்காரு. சொல்றேன்."

திலகம் அறையின் கதவை சாத்திவிட்டு வந்து நின்றாள்.

"சொல்லு."

"திலகம், நீ அப்பாகிட்டேயோ, அம்மாகிட்டேயோ எக்காரணத்தைக் கொண்டும் சொல்லிடக்கூடாது. அவர் பேரு பாலா. அபிராமபுரத்தில லைப்ரரியனாக இருக்கார். நான் வீணை கத்துக்கப் போற அதே டீச்சர்கிட்ட அவர் புல்லாங்குழல் கத்துக்க வருவார். சாதாரணமா சிரிச்சிப் பேச ஆரம்பிச்சோம். இப்போ நாங்க ரெண்டு பேரும் நெருக்கமா பழகிட்டு இருக்கோம். லவ் திலகம் லவ்!"

"செல்வி! தப்புப் பண்ணிட்டேம்மா. நல்லவேளை இந்த விஷயம் முதல்ல எனக்குத் தெரிஞ்சது. இதென்ன சின்ன விஷயம்னு நினைச்சியா? இந்த விஷயம் தேவருக்குத் தெரிஞ்சுதுன்னா உன்னை மட்டுமில்ல, உன்னை இப்படி வளர்த்ததுக்காக உங்கம்மாவையும் வெட்டிப் போட்டுடு வாரும்மா."

"சும்மா இரு திலகம். காதலிக்கிறது என்ன குத்தமா?"

"தேவரு ஒப்புக்க மாட்டாரும்மா. தன்னோட அந்தஸ்துக்குக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காத அந்தஸ்துல மாப்பிள்ளை பார்க்கச் சொல்லி தரகர்கள்கிட்டே அவரு சொல்லிக்கிட்டு இருக்காரு."

"அது அவர் விருப்பம். எனக்கு அந்தஸ்து வேணாம். அன்பு போதும். வாழப்போறது நான்தானே திலகம்?"

"யம்மாடி! இந்த விவகாரம் எங்கே போய் முடியும்னு நினைச்சாலே எனக்கு வயத்தை எல்லாம் கலக்குது.

வேண்டாம் செல்வி. கல்யாண விஷயத்தில உங்கப்பா சொல்றபடி நடந்துக்கறதுதான் நல்லது. இந்தப் பையனோட பழகறதை எல்லாம் நிறுத்திடும்மா.''

''திலகம்! உனக்கு என்ன தெரியும் காதலைப் பத்தி? அனுபவிச்சாத்தான் அதைப்பத்திப் புரியும். நான் முடிவு பண்ணியாச்சு. என் புருஷன் இந்த பாலாதான். அதை எப்படியும் சாதிச்சுக் காட்டுவேன். ஆனா ஒண்ணு... திலகம் இந்த விஷயத்தை எங்கப்பா, அம்மாகிட்டே சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடு.''

''செல்வி!''

''ஆமாம். சத்தியம் பண்ணிக் கொடு. நாங்க வேற சில யோசனைகள் வச்சிருக்கோம். அவசரப்பட்டு அப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சா எல்லாம் சிக்கலாகிடும்.''

''செல்வி, சத்தியமா என் வாயால சொல்ல மாட்டேன்மா. ஆனா எனக்கு உன்னை நினைச்சா கவலையா இருக்கும்மா. நீ நல்லா இருக்கணும்னுதான் நான் ஆசைப்படுவேன். ஆனா தேவர் எவ்வளவு பிடிவாதக்காரர்ன்னு உனக்குத் தெரியுமே. என்ன ஆகப்போகுதோ?''

''திலகம், எங்கப்பாவோட பிடிவாதத்தில் பாதி எனக்கிருக்காதா? நீ கவலைப்படாம இரு. எல்லாம் நல்லபடியா தான் நடக்கும்'' என்று திலகத்தின் தோளைத் தொட்டுச் சொன்னாள் செல்வி.

5

பாண்டித் தேவர் வீட்டு வாசல் திண்ணையில் பஞ்சாயத்து கூடியிருந்தது.

கை வைத்த நாற்காலியில் அமர்ந்து கால்மேல் கால் போட்டிருந்த பாண்டித் தேவர் மடியில் வைத்திருந்த வெற்றிலை டப்பா மேல் யோசனையுடன் தாளமிட்டார் ஒலியில்லாமல்.

திண்ணையில் பத்து, இருபது பேர் உட்கார்ந்திருக்க, வட்டமாக நூறு பேருக்கு மேல் நின்று கொண்டிருக்க ஒரு பக்கம் அழுதபடி அந்த தாவணி போட்டப் பெண் நின்றிருந்தாள். எதிர்புறம் நின்றிருந்த இளைஞனுக்கு நெற்றியில் போடப்பட்டிருந்த கட்டையும் மீறி லேசாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

''என்ன சொல்றே நாகப்பா?'' என்றார் பாண்டித் தேவர் காயம் பட்டவனைப் பார்த்து.

''அய்யா! சபையில எதிர்த்துப் பேசறதா நினைக்காதீங்க. பார்வதியோட அண்ணன் என்னை கம்பாலதான் அடிச்சாரு. அவரு அருவாளை எடுத்து என்னை வெட்டிப் போட்டாலும் சரிங்க, என் உசுரு போறதுக்கு முன்னாடி பார்வதிக்கு என் கையால தாலி கட்டிட்டுதான் சாவேன்.''

''ஓகோ! என்னம்மா பார்வதி, நீ என்ன சொல்றே?''

''எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது இந்த நாகப்பனோடதாங்க. எங்கண்ணன் எங்க ரெண்டு பேத்தையும் பிரிக்கிறதுக்கு பாடு படறாருங்க. என்னை தினம் அடிச்சு சித்ரவதை பண்றாரு. நியாயம் கேக்க வந்த அவரையும் அடிச்சுட்டாரு. அய்யா, நீங்கதான் எங்க ரெண்டு பேத்தையும் சேர்த்து வைக்கணும்'' என்றாள் பார்வதி கண்ணீருடன்.

அவள் அருகில் நின்று கொண்டிருந்த அவளின் அண்ணன் மன்னார்சாமி எதிர்புறம் நின்ற நாகப்பனை முறைத்துக் கொண்டிருந்தான்.

''மன்னாரு, அவனை அப்புறம் முறைக்கலாம். உன் தங்கச்சி சொல்றதைக் கேட்டியா? நீ என்ன சொல்றே?'' என்றார் பாண்டித்தேவர்.

''அய்யா, தாய்க்கு தாயா, தந்தைக்குத் தந்தையா இவளை சிறுசுலேர்ந்து தூக்கி வளர்த்தவனுங்க நானு. என் தங்கச்சி மேல எனக்கு எம்புட்டு பிரியம் இருக்கும். அவ நல்லா இருக்கணும்னு எனக்கு ஆசை இருக்காதா? இப்ப இத்தனை பேர் முன்னாடி என்ன பேச்சுப் பேசறா பாருங்க. இதுக்குக் காரணம் அவன்தாங்க. சிரிச்சுப் பேசி மயக்கிட்டான். ஆளும் வாட்ட சாட்டமா இருக்கானா, இவளும் மயங்கிட்டா. காலா காலத்தில் இவளுக்கு கல்யாணம் பண்ணி வைக்காதது என் தப்புதாங்க. இப்போ எங்க சொந்த அத்தை புள்ளை ரங்கராசுவுக்கு கட்டி வைக்கணும்னு நான் ஆசைப்படறேன். இவ பிடிவாதம் பிடிக்கிறா'' என்றான் மன்னார்சாமி.

''இரு. கொஞ்சம் பொறுமையா பதில் சொல்லு. எதுக்காக நாகப்பனை இவ கட்டிக்கக் கூடாதுன்னு சொல்றே?''

''அய்யா! தகுதின்னு ஒண்ணு இல்லீங்களா? எனக்கு சிறிசோ பெரிசோ சொந்தமா வீடு இருக்கு. காடு இருக்கு. நாலு உழவு மாடு இருக்கு. இந்த நாகப்பன்கிட்ட என்ன இருக்கு? கூலி வேலை பார்க்கறான். இவன் எப்படி என் தங்கச்சியை கஷ்டப்படாம காப்பாத்த முடியும்?''

''உன் அத்தைப் புள்ளை ரங்காவுக்கு வசதி எப்படி?''

''அவனுக்கென்னங்க குறைச்சல்? அஞ்சு மா நிலம் இருக்கு. வாழைத் தோப்பு இருக்கு. சொந்த வீடு இருக்கு. இதோ நிக்கிறானே, நீங்களே கேளுங்களேன். சொல்லு ரங்கராசு.''

கூட்டத்தில் ஓரமாக இருந்த ரங்கராசு சற்று முன்னால் வந்து, ''மன்னார்சாமி சொல்றதெல்லாம் வாஸ்தவம்தாங்க'' என்றான்.

பாண்டித்தேவர் சற்று நேரம் அமைதியாக வெற்றிலை மடித்துப் போட்டு மென்றபடி பார்வதி, நாகப்பன், ரங்கராசு மூவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''நாகப்பா, நீயும் பார்வதியும் மனசார பழகினீங்களா?' என்றார்.

''ஆமாங்க.''

''வேற எதுவும் தப்பு தண்டா செய்துடலையே...?''

''சத்தியமா இல்லைங்க. பேச்சு வார்த்தையோட சரிங்க.''

''ரங்கராசு, உனக்கு பார்வதியை கட்டிக்க இஷ்டம் இருக்கா?''

''நான் இஷ்டப்பட்டது உண்டுங்க. ஆனா பார்வதி மனசு நாகப்பனை விரும்புது.''

''பொல்லாத மனசு! என்ன தெரியும் இவங்களுக்கு? காதலிக்கிறாங்களாம்! சினிமாலயும், அதிலயும், இதிலயும் பார்த்துட்டு பேச்சுப் பேசறாங்க. எதாச்சும் அர்த்தம் இருக்குதா இவங்க பேச்சுல. தொண்டை நரம்பு புடைக்க முதல்ல நாகப்பன் ஒரு வார்த்தை சொன்னான் கவனிச்சீங்களா? அருவாளால வெட்டினாலும் உசிரு போறதுக்குள்ளே பார்வதி கழுத்தில தாலி கட்டுவானாம் கட்டிட்டு செத்துப் போய்டுவானாம். செத்துப் போய்ட்டா பிரச்சினை தீர்ந்துடுமா? இவன் கட்டுன தாலியை உடனே அறுத்து அவளை முண்டச்சியாக்கி மூலையில் உக்கார வச்சிடுவாங்க. சாதனையா இது? இந்த காதல் இருக்கே, அது இப்படித்தான் நாலையும் யோசிக்க விடாது. உணர்ச்சிகரமா பேச மட்டும் வைக்கும். அதனால...'' என்ற பாண்டித்தேவர் தன் அருகில் நின்று கொண்டிருந்த மருதுவை அழைத்து அவன் காதருகில் ஏதோ சொல்ல அவன் வீட்டுக்குள் சென்றான்.

பஞ்சாயத்து முழுக்க அவர் சொல்லப் போகும் தீர்ப்பை எதிர்பார்த்து அமைதியாகக் காத்துக் கொண்டிருந்தது.

''மன்னார்சாமியோட ஆதங்கத்தையும் யோசிச்சுப் பார்க்கணும். அப்பன், ஆத்தா இல்லாத பொண்ணைத் தூக்கி வளர்த்தவன். அவனுக்கு தன் தங்கச்சி மேல இல்லாத அக்கறை வேற யாருக்கும் வராது. தன்னை இத்தனை வருஷம் வளர்த்த அண்ணனை உதாசீனமாப் பேசி நேத்தைக்குப் பழக ஆரம்பிச்ச ஒருத்தன் பக்கம் சாய இவ துடிக்கிறான்னா அதுக்கு இந்த கருமாந்திரம் புடிச்ச காதல் தான் காரணம், வயசும் ஒரு காரணம். மன்னார்சாமி பார்த்து வெச்சிருக்கிற மாப்பிள்ளை முறைப் பையன் மட்டுமில்லை, வசதில குறைச்சல் இல்லாதவன். அதனால பார்வதியோட கல்யாண விஷயத்தில முடிவு எடுக்கற உரிமை அவளைவிட அவ அண்ணனுக்கு அதிகமா இருக்கிறதால...''

வீட்டுக்குள் இருந்து மருது ஒரு மஞ்சள் கயிற்றில் மஞ்சள் துண்டைக் கட்டி எடுத்து வந்து பாண்டித் தேவர் கையில் கொடுக்க...

''வாய்யா! ரங்கராசு! யோவ் உன் மாமன் பொண்ணுக்கு எல்லாருக்கும் முன்னாடி தாலி கட்டு. கொஞ்ச நாள் அழுவா. அப்புறம் எல்லாம் சரியாப் போய்டும்'' என்றவர் நாகப்பன் பக்கம் திரும்பி, ''இத பாரு, நீ இங்கேர்ந்து போய்டு. ஏதாச்சும் இனிமே இவங்க வாழ்க்கையில தலையிட்டே... தல இருக்காது'' என்றார்.

''இது அநியாயம்!'' என்று கத்தின நாகப்பனை இரண்டு மூன்று பேர் வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துச் செல்ல... அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்த பார்வதியின் கழுத்தில் தங்கராசு தாலியைக் கட்டினான்.

''கணேசன் கிட்ட போய் ஆயிரத்து ஒண்ணு வாங்கிட்டு வா, மொய் தரணும்'' என்றார் மருதுவிடம் பாண்டித் தேவர், தன் மீசையைத் தடவி விட்டபடி.

6

''எனக்கு வரவர பயம் அதிகமாகுதுங்க பாலா'' என்றாள் செல்வி.

பாலா வீசிக் கொண்டிருந்த பொறி கடலையை அந்த இரண்டு காக்கைகளும் அருகில் வந்து கொத்திக் கொண்டிருந்தன.

அந்த இடிந்த சர்ச்சின் உச்சியில் இருக்கும் சிலுவையின் நிழல் கூரையில்லாத இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகில் சுவரில் விழுந்து கொண்டிருந்தது.

''என்னங்க நான் பாட்டுக்கு சொல்லிக்கிட்டிருக்கேன்'' என்று அவன் தோளைப் பற்றித் திருப்பினாள் செல்வி.

''என்ன பயம் உனக்கு இப்போ?''

''நம்ம விவகாரம் எங்க வீட்டு வேலைக்காரி திலகத்துக்குத் தெரிஞ்சி போச்சி. ஆனா அவ யார்கிட்டயும் சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கா.''

''சரி. அப்புறம் என்ன பயம்?''

''நேத்து ஒரு பஞ்சாயத்துல எங்கப்பா ரொம்ப மோசமா ஒரு தீர்ப்பு சொல்லிட்டார். அதைக் கேட்டதுலேர்ந்து மனசு பிசையுதுங்க.''

''என்ன தீர்ப்பு சொன்னார்?''

''காதலிக்கிறது தப்பு, பெத்தவங்க பார்த்து வைக்கிறபடி கல்யாணம் நடக்கணும்னு சொல்லி பஞ்சாயத்தில பார்வதிங்

கிற பொண்ணுக்கு அவளோட காதலனை அப்புறப் படுத்திவிட்டு முறைப் பையனை விட்டு தாலி கட்டச் சொல்லிட்டாரு.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன அப்புறம்? முரட்டுத்தனமான தீர்ப்பு!''

''அந்த ஆசைப்பட்டக் காதலன் எப்படி சும்மா இருந்தான் செல்வி?''

''அவனை பஞ்சாயத்திலேர்ந்து தனியா இழுத்துக்கிட்டுப் போய்ட்டாங்க. எங்கப்பாவை எதிர்த்துக்கிட்டு என்ன செய்ய முடியும் பாலா? ஒரு வார்த்தை எதிர்ப் பேச்சுப் பேசினாலே நாக்கை இழுத்து வச்சி வெட்டிடுவாங்க.''

''சரி. அந்தப் பொண்ணு? அவ எப்படி தாலி கட்டிக்க சம்மதிச்சா?''

''அவ சம்மதத்தை யார் கேட்டாங்க? நான் மாடிலேர்ந்து பூரா கூத்தையும் பார்த்துக்கிட்டிருந்தேன். ஒருமரம் மாதிரி நின்னுக்கிட்டிருந்தா அவ.''

பாலா முகம் கறுத்துப் போனான்.

''பாலா'' அவன் தோளைத் தொட்டாள்.

''ம்?''

''ரொம்ப வில்லங்கமான வீட்டுப் பொண்ணை ஆசைப் பட்டுத் தொலைச்சிட்டமேன்னு யோசிக்கிறீங்களா பாலா?''

''செல்வி! என்ன பேச்சு இது? நீ யார், உன் அந்தஸ்து என்ன, உங்கப்பா யாரு இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்டா நான் உன் மேல ஆசை வெச்சேன்?''

பாலா ரெண்டு கைகளாலும் அவள் முகத்தை ஏந்திப் பிடித்து அவள் கண்களை உற்றுப் பார்த்தான்.

''உனக்கு ஒரு பழமொழி தெரியுமா செல்வி? கொண்டவன் சரியா இருந்தா கூரை மேல நின்னு சண்டை போடலாம்னு சொல்லுவாங்க.''

''அந்த மாதிரி?''

''நீ நம்ம காதல்ல கடைசி வரைக்கும் உறுதியா இருந்தா என்னால எந்த பிரச்சினையையும் சமாளிச்சி நம்ம கல்யாணத்தை நடத்திக் காட்ட முடியும்.''

''அப்போ உங்களுக்கு என் மேல சந்தேகமா?''

''அப்படியில்லை செல்வி. சில சமயம் காதலை பாசம் ஜெயிச்சிடறதுண்டு. உதாரணமா உங்கப்பாவும் அம்மாவும் 'நீ அவனை மறக்கலைன்னா நாங்க தூக்குல மாட்டிக்கு வோம்'னு சொன்னா அப்போ நீ என்ன செய்வே?''

''வேணாம்மா. நீங்க தூக்குல தொங்க வேணாம். நான் அவரை மறந்துடறேன்னு சொல்வேன்.''

''செல்வி!''

''கேளுங்க பாலா. அப்புறம் சொல்வேன். அவரை மறந்துட்டு எனக்கு வாழ்க்கை தேவையில்லை. நான் விஷம் குடிச்சிடறேன்னு சொல்வேன்.''

''செல்வி'' நெகிழ்ந்து போய் அவளை அணைத்துக் கொண்ட பாலா பரவசத்துடன் அவள் இரண்டு கன்னங்களிலும் நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டான்.

7

தோப்பு வீட்டில் ரிட்டுக் கச்சேரி சூடு பிடித்திருந்தது.

பாண்டித் தேவரைச் சேர்த்து ஏழு பேர் உட்கார்ந்து ஆடிக் கொண்டிருந்தார்கள். மருது யார் யாருடைய கிளாசில் மது

குறைந்துவிட்டது என்று பார்த்து அவரவர் ரகத்தை நிரப்பிக் கொண்டிருந்தான்.

தோப்பு வீட்டின் பின்புறம் அடுப்பு மூட்டி சுடச்சுட ஆம்லெட் தயாரித்துக் கொண்டிருந்தான் இன்னொரு வேலைக்காரன்.

வீட்டின் வாசலில் மூன்று கார்கள் நின்று கொண்டிருந்தன. அவற்றின் டிரைவர்கள் கூடியமர்ந்து பீடி குடித்துக் கொண்டு சினிமா, அரசியல் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

பாண்டித் தேவருக்கு சீட்டாட்டத்தில் அத்தனை சாமர்த்தியம் பற்றாது. ஜெயித்த நாட்கள் மிகக் குறைவு. ஆனாலும் தினம் இரவில் இப்படி பெரிய பெரிய மனிதர்களைத் தன் இடத்திற்கு வரவழைத்து செட்டப்பாக அமர்ந்து ஊர் கதை எல்லாம் பேசிக் கொண்டு சீட்டாடுவது மிக பிடித்துப்போன விஷயமாகி விட்டது.

''என்ன இன்னைக்கு எல்லாரும் ஆட்டத்திலேயே மும்முரமா இருக்கீங்க. எதையும் பேச மாட்டேங்கறீங்க?'' என்றார் பாண்டித்தேவர் தன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இருந்து எடுத்து ஒரு இழுப்பு இழுத்தபடி.

அவருக்கு மது அருந்தும்போது மட்டும் கண்டிப்பாக சிகரெட் தேவைப்படும். மற்ற நேரங்களில் அவசியப் படுவதில்லை.

''பார்வதி பொண்ணு விவகாரத்துல பஞ்சாயத்துலயே தாலி கட்டச் சொன்ன தீர்ப்பைப் பத்தி ஊர் பூரா பேசறாங்களாமே...'' என்றார் சங்கரலிங்கம்.

''என்ன பேசறாங்களாம்?''

''ரெண்டு விதமாவும் பேசறாங்களாம்.''

''ரெண்டு விதமான்னா எப்படி?''

''பெத்தவங்க, உரியவங்க சொல்றபடிதான் புள்ளைங்க கல்யாணம் பண்ணிக்கணும். அதனால தேவர் செஞ்சதுதான் சரின்னு கொஞ்ச பேரும், என்ன இருந்தாலும் மனசார ஆசைப்பட்ட சின்னஞ் சிறுசுகளைப் பிரிக்கலாமான்னு கொஞ்ச பேரும் பேசறாங்கன்னு சொன்னாங்க.''

''அப்படியா? ரெண்டு கருத்து ஊர்ல இருக்கிற மாதிரி என் காதுக்கு சேதி வரல்லையே...?''

''உங்ககிட்ட சொல்லுவாங்களா?''

''அது சரி. தீர்ப்பு தப்புன்னு முணுமுணுக்கிறவங்க இளவட்டமாத்தான் இருக்கும். புள்ளைங்க பெத்து கல்யாணத்துக்கு வச்சிருக்கிறவங்க யாரும் என் தீர்ப்பை தப்புன்னு சொல்ல மாட்டாங்க.''

''தேவர் சொல்றதும் ஒரு வகையில் நியாயம்தான். நம்ம காலத்துல ஒரு வயசுப் பொண்ணை நிமிர்ந்து பார்த்திருப் பமா? இப்ப என்னடான்னா கை கோர்த்துக்கிட்டு சுத்த றானுங்க. சினிமாவுக்குப் போய் ஜோட்டியடிக்கிறானுங்க. பெரிய டவுன்ல எல்லாம் ரொம்ப மோசமாப் போச்சு. கூச்சமில்லாம லாட்ஜுல ரூம் போட்டு கொட்டமடிக் கிறாங்க.''

''ஆமாம். நான்கூட ஒரு புஸ்தகத்துல படிச்சேன். பள்ளிக்கூடத்துக்குப் போற பொண்ணுங்ககூட ரொம்பப் பேர் கெட்டுப் போறாங்களாம். பதிமூணு வயசுப் பொண்ணு ஒருத்தி கர்ப்பம் கலைக்கறதுக்கு தன்கிட்டே வந்ததா ஒரு பொம்பளை டாக்டர் பேட்டியில் சொல்லிருக்காரு. நாடு அப்படிப் போய்கிட்டு இருக்கு.''

''ஆனா அரசாங்கம் என்னடான்னா பதினெட்டு வயசு பொண்ணுக்கு ஆனப்புறம் கல்யாணம் பண்ணிவையின்னு சொல்லுது. அந்த பதினெட்டு வயசு வரைக்கும் கண்ணாடி

சாமான் மாதிரி இல்லே இவங்களை பத்திரமாய் பார்த்துக்க வேண்டியிருக்கு?''

''சில விஷயங்கள்ல அந்தக் காலத்து ஆசாமிங்க ரொம்ப விவரம்தான். பொண்ணு சமைஞ்சி நின்னுட்டா ரொம்ப நாள் வீட்ல வச்சிக்கிறதில்லை. ரொம்ப சீக்கிரமே கல்யாணம் பண்ணி வெச்சிட்டாங்க. ஒண்ணுமில்லை. என் கல்யாணத் தப்போ என் பொண்டாட்டிக்கு பதினாலு வயசுதான். அவவயசுக்கு வந்து ஆறு மாசம்தான் ஆயிருந்ததாம்'' என்று சிரித்தார் அறுபத்தைந்து வயது ஜெயராம முதலியார்.

பாண்டித் தேவர் அந்த ரவுண்டு ஆட்டத்தில் ஆடாமல் சீட்டுக்களை கவிழ்த்துப் போட்டுவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

''என்ன தேவரே! எங்களை எல்லாம் பேசுங்கன்னு சொல்லிவிட்டு நீங்க சைலண்ட் ஆயிட்டீங்க. என்ன யோசனை?''

''இல்லை. என்னோட பொண்ணு ஞாபகம் வந்திச்சி. அவ ஆசைப்பட்டாளேன்னு டவுனுக்கு அனுப்பி ப்ளஸ் டூ வரைக்கும் படிக்க வெச்சேன். இப்போ வீணை கத்துக் கறேன்னு போய் வந்துக்கிட்டிருக்கா. படிப்பை முடிச்சி கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போவுது. நமக்குப் பொருத்தமா ஒரு இடம் அவளுக்கு அமையணுமேன்னு யோசனையா இருக்கு. தரகர்கள் வந்து சொல்ற இடங்கள் எனக்கு திருப்தி இல்லை.''

ஜெயராம முதலியார் கனைத்துக் கொண்டார், ''தேவரே, வேந்தன் தொட்டி அழகுத் தேவர்னு கேள்விப்பட்டிருக் கீங்களா?''

''கேள்விப்பட்டிருக்கேன். பெரிய இடம்னு சொன்னாங்க. அறிமுகம் இல்லை.''

''அவருக்கு ஒரேப் பையன். சண்முகத் தேவர்னு பேரு, பெரியவருக்கு உடம்புக்கு முடியறதில்லை. ரெண்டு தடவை ஹார்ட் அட்டாக் வந்துடுச்சி. வரவு, செலவெல்லாம் சண்முகத் தேவருதான். இருபத்தஞ்சி வயசுதான். கல்யாணத்துக்கு பொண்ணு தேடிக்கிட்டிருக்காரு. பையன் ராஜா மாதிரி இருப்பான். தேவர் உத்தரவு கொடுத்தா நம்ம வீட்ல பொண்ணு இருக்கிற சமாச்சாரத்தைச் சொல்லி பொண்ணு பார்க்க வர்றதுக்கு ஏற்பாடு பண்ணலாம்.''

''வேந்தன் தொட்டி அழகுத் தேவர்னு ரொம்ப பிரபலமா நான் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, அவருக்கு கல்யாண வயசில ஒரு பையன் இருக்காங்கிற விஷயமே நீங்க சொல்லித்தான் தெரியுது. நம்ம சம்பந்தின்னு சொல்லிக்க நல்ல தகுதியான இடம்தான் முதலியாரே, பேச்சு வார்த்தையை நீங்களே ஆரம்பிச்சிடுங்க...''

இவர்கள் பேசிக் கொண்டிருக்க... மருதுவேகமாக வந்து கொண்டிருந்தான். காதருகே குனிந்து மெதுவாகப் பேசினார்.

''அறிவு இருக்கா? இதில் ரகசியம் பேச என்னடா இருக்கு? வேந்தன் தொட்டிலேர்ந்து ஆள் விட்டுருக்காங்க. பெரிய சாவு ஒண்ணு விழுந்திருக்கு. வேந்தன் தொட்டில ராஜு தேவர்னு ரைஸ் மில் வச்சிருந்தார். அவர் தவறிட்டாராம். காலை எட்டு மணிக்கு எடுக்கறாங்களாம்'' என்றார் பாண்டித் தேவர்.

''அடடா! ராஜுத் தேவரா? நமக்கும் வேண்டியவர்தான். அவசியம் போயாகணும். அவருக்கு ரெண்டு வருஷம் முன்னாடி மூளைக்குள்ளே கட்டின்னு ஒரு ஆபரேஷன் செஞ்சாங்க, அப்பவே இது ரொம்ப நாள் தாங்காதுன்னு சொல்லித்தான் அனுப்பிச்சாங்க.''

''அப்ப முதலியாரே, காலையில ஆறரை மணிக்கு காரெடுத்துக்கிட்டு நான் உங்க வீட்டுக்கு வந்துடறேன்.

ரெண்டு பேருமா சேர்ந்து வேந்தல் தொட்டி போய்ட்டு வந்துரலாம்''என்றார் பாண்டித்தேவர்.

மறுநாள் காலை சாவு வீட்டில் கூட்டம் எக்கச்சக்கமாக இருந்தது. வீட்டு வாசலில் திடீர் பந்தல் போட்டு வாடகைக்கு நாற்காலி எடுத்துப் போட்டிருந்தார்கள்.

பாண்டித் தேவரும், ஜெயராம முதலியாரும் ஆளுக்கொரு பெரிய மாலையை எடுத்துச் சென்று போட்டு பாதம் தொட்டு வணங்கிவிட்டு வந்து நாற்காலியில் அமர்ந்தார்கள்.

உள்ளூர் பிரமுகர்களும், வெளியூர் பிரமுகர்களுமாக நிறையப் பேர் மாலைகளோடு வந்துபோட்ட வண்ணமிருந் தார்கள். விசாரித்து விசாரித்து வந்தவர்களுக்கெல்லாம் நுரை பொங்க காபி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தட்டுத் தட்டாக வெற்றிலை பாக்கு கைகள் மாறின.

தாரை, தப்பட்டை வாத்தியத்தோடு ஒரு கூட்டம் தூரத்தில் வந்தது. அந்தக் கூட்டத்தை பார்த்ததும் இங்கே அமர்ந் திருந்தவர்களில் பெரும்பாலோர் எழுந்து நின்று கொண் டார்கள்.

முதலியார் திரும்பிப் பார்த்து, ''அழகுத் தேவர் மரியாதை செலுத்தறதுக்காக வர்றார். உள்ளூர் வாசி இல்லையா? பெரிய சாவு வேற. அதனால அவரே வர்றார்'' என்றார். ''பக்கத்தில் பெரிய மாலையை தரையில படாம தூக்கிப் பிடிச்சிட்டு வர்றான் பாரு அவன்தான் சண்முகத் தேவர். அவர் பையன். நான் சொன்னனே. எப்படி இருக்கான் பாருங்க தேவரே!''

பாண்டித் தேவர் வியந்து போனார். அழகுத் தேவர் கரித் துண்டில் செய்த பொம்மை மாதிரி அத்தனைக் கறுப்பாக இருக்க, அதற்கு அப்படியே நேர்மாறாக சண்முகம் சிவப்பாக கருட்டை முடியோடு கட்டுமஸ்தான உடம்போடு ராஜா மாதிரிதான் இருந்தான்.

அழகுத் தேவரும் அவர் மகனும் வீட்டுக்குள் கூடத்தில் கிடத்தியிருந்த ராஜுத் தேவரின் சடலத்தில் மாலை வைத்து வணங்கிவிட்டு வெளியே வந்து பாண்டித்தேவருக்கு அருகில் நாற்காலிகள் காலியாக இருக்க, அங்கேயே வந்து அமர்ந்து கொண்டார்கள்.

முதலியார் பரஸ்பரம் இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''அடடா! பாண்டித் தேவரைப் பார்க்கணும்னு ரொம்ப நாளா ஒரு நினைப்பு உண்டு எனக்கு. இன்னைக்குத்தான் அமைஞ்சது'' என்று உவகையோடு கை குலுக்கினார் அழகுத் தேவர்.

''உங்களை சந்திச்சது எனக்குதான் பாக்யம்'' என்றார் பாண்டித் தேவர்.

''இருந்துட்டுப் போவுது. அபிராமபுரத்தில கோயில் திருவிழால உங்கப் பொண்ணு வீணை வாசிச்சதைக் கேட்டு மெய் மறந்து போய்ட்டேன். நானும், பையனும்தான் கோயில் திருவிழாவுக்கு அன்னைக்குப் போயிருந்தோம். யாரு, என்னன்னு விசாரிச்சா இந்த மாதிரி பண்ணைக்காடு பாண்டித் தேவர் பொண்ணுன்னு சொன்னாங்க. நீங்க வந்திருக்கிங் களான்னு பார்த்தேன். வரலை. உங்க சம்சாரம் துணைக்கு வந்திருந்தாங்க. வீட்டுக்குப் போனதும் பொண்ணுக்கு திருஷ்டி சுத்திப் போடுங்கம்மான்னு வாயாற வாழ்த்தினேன்'' என்று கடகடவென்றுப் பேசினார் அழகுத் தேவர்.

அபிராம புரம் திருவிழாவில் செல்வி வீணை வாசித்ததும், காமாட்சி துணையாகப் போனதும் பாண்டித் தேவருக்கு நினைவிருந்தது. அங்கே அழகுத் தேவர் வந்திருந்ததையோ பேசினதையோ காமாட்சி சொல்ல மறந்திருக்கிறாள். அதை எப்படிக் காட்டிக் கொள்ள முடியும்?

''என் சம்சாரம் வந்ததுமே சொன்னா. பெரியவங்க ஆசீர்வாதம் பெருமாளே ஆசீர்வதிச்ச மாதிரின்னு சொன்னேன். வெத்தலை போடறிங்களா?'' பாண்டித் தேவர் தனது வெற்றிலைப் பெட்டியை நீட்டினார்.

''போட்டுட்டாப் போச்சு'' என்று வாங்கிக் கொண்டார்.

''தம்பி எதுவுமே பேசலையே. என்ன படிச்சிங்க தம்பி?''

''பி.ஏ.'' என்றான் சண்முகத் தேவர்.

''மேல படிக்கிறேன்னுதான் சொன்னான். பண்ணையை, ஆயில் மில்லைப் பார்த்துக்கறதுக்கு ஆள் இல்லை. போதும்ப்பா எனக்கு வயசாய்டுச்சுன்னேன். சரின்னு பொறுப்பெடுத்துகிட்டான் அதிகமாப் பேசமாட்டான்.''

பிறகு அவர்கள் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சடலத்தை பாடையில் ஏற்றி சுடுகாட்டுக்குப் புறப்பட்ட போது எல்லோரும் இணைந்து பின்னால் சென்றார்கள். சுடுகாட்டுக்குப் போய் எரித்து விட்டு, குளத்தில் குளித்து விட்டு வந்ததும் விருந்து சாப்பாடு பிரமாதப்பட்டது.

சாப்பிட்டு முடித்து திண்ணையில் இருபது முப்பது பேர் ஜமுக்காளம் விரித்து அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு பல கதையும் பேசிக் கொண்டிருக்க.... அவர்களில் அழகுத் தேவரும், பாண்டித்தேவரும், சண்முகமும், முதலியாரும் இருந்தார்கள்.

''ஏதேதோ பேசிக்கிட்டிருக்கோம். சாவு வீட்டுக்கு வந்தா ஏதாச்சும் நல்ல பேச்சு பேசணும்னு சொல்லுவாங்க'' என்றார் யாரோ ஒருவர்.

''நான் பேசறேன்'' என்றார் பாண்டித்தேவர். ''எனக்கு கல்யாணத்துக்குப் பொண்ணு இருக்கா. எனக்கு அழகுத் தேவர் பையன் சண்முகத் தேவரை ரொம்பப் பிடிச்சிருக்கு.

அவங்களும் ஒரு பொது இடத்துல வச்சி என் பொண்ணைப் பார்த்திருக்காங்க. என் விருப்பத்தைச் சொல்லிட்டேன். அவங்களுக்கு இதில் சம்மதமிருந்தா இப்பவே பாக்கு வெத்தலை மாத்திக்க நான் தயாராக இருக்கேன்.''

அழகுத் தேவர் ஒரு விநாடி அதிர்ச்சியடைந்து உடனே தெளிவு பெற்றுத் தன் மகனைப் பார்க்க, அவன் அர்த்தத்துடன் சிரித்துக் கொள்ள...

''என்ன என் பையன் சிரிக்கிறானேன்னு பார்க்கிறீங்களா? அபிராமபுரம் கோயில் திருவிழால பாண்டித்தேவர் பொண்ணு வீணை வாசிச்சதைப் பார்த்தப்பவே எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போய் என் பையனைக் கேட்டேன். 'என்னடா, உனக்கு பொண்ணு பிடிச்சிருந்தா நான் விசாரிக்கிறேன்'னு சொன்னேன். சரிப்பான்னு அப்பவே தலையை ஆட்டிட்டான். ஆனா பாண்டித்தேவர் எனக்கு அறிமுகமில்லை. அவர் மனசுல என்ன கணக்கு வச்சிருக்கார்னு தெரியாதே. யார் மூலமா வார்த்தை சொல்லி விடலாம்னு ரெண்டு மாசமா மண்டையைப் போட்டுக் குழப்பிக்கிட்டிருந்தேன் நான். இன்னிக்கு அகஸ்மாத்தா ரெண்டு பேரும் சந்திச்சிருக்கோம். அது மட்டுமில்லாம என் மனசுல ஓடின மாதிரி அதே நினைப்பு அவர் மனசுலேயும் ஓடியிருக்கு பாருங்க! அவர் பொண்ணு செல்வியை என் பையனுக்கு கட்டி வைக்க எனக்கு பரிபூர்ண சம்மதம். நல்ல பேச்சு பேசினதுக்கு அடையாளமா வெத்தலை பாக்கு தட்டை மாத்திக்கலாம். முறையா நாள் பார்த்து நிச்சய தாம்பூலம் வெச்சுக்கலாம்'' என்ற அழகுத் தேவர் வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்து மரியாதையுடன் பாண்டித் தேவரிடம் நீட்ட.... அவர் வாங்கிக் கொண்டு பிறகு அதே மரியாதையுடன் இவரிடம் நீட்டினார்.

''ஒரு நல்ல பேச்சு பேசுங்கன்னு சொன்னேன். பாக்கு, வெத்தலையே மாத்திட்டீங்களே... ரொம்ப மனசுக்கு

நிறைவா இருக்கு'' என்றார் பேச்சைத் துவக்கி வைத்த பெரியவர்.

பாண்டித் தேவரின் முகத்தில் பெருமிதம் வழிந்து கொண்டிருந்தது.

8

பாலா முழுக்கை சட்டையணிந்து கைகளின் முனைகளில் உள்ள பட்டன்களையும் போட்டுக் கொண்டான். பேண்ட் அணிந்தே பழகிவிட்டதால், இடுப்பில் வேட்டி நழுவியது. சட்டையை உயர்த்தி பல்லால் பிடித்துக் கொண்டு வேட்டியை இறுக்கமாக மீண்டும் கட்டிக் கொண்டான்.

கண்ணாடி முன் நின்று மீண்டும் ஒரு முறை தலைவாரிக் கொண்டு சுவாமி மடத்திற்கு சென்று விபூதியும், குங்குமமும் நெற்றியில் வைத்துக் கொண்டான்.

சாத்தியிருந்த அறையை நோக்கி சலிப்புடன் சொன்னான், ''என்னம்மா இவ்வளவு நேரம் பண்றே? ராகு காலத்துக்கு முன்னாடி பாண்டித்தேவர் வீட்ல நாம இருக்கணும். சீக்கிரம் புறப்படுமா.''

ஒரு பைக்குள் மேஜை மேல் வாங்கி வைத்திருந்த பூ, பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு இவற்றை எல்லாம் எடுத்து வைத்தான்.

கதவைத் திறந்து கொண்டு அம்மா வெளியே வந்தாள். புதுப் புடவையின் மடிப்புகள் விறைத்துக் கொண்டு நின்றன. கண்ணாடி முன்பு நின்று கொண்டைக்கு ஊசிகள் செருகிக் கொண்டாள். நெற்றியில் விபூதி வைத்துக் கொண்டாள்.

''ஏண்டா, இந்த புதுப் புடவையை கட்டிக்கிட்டுதான் நான் வரணுமா? புசுபுசுன்னு இருக்கு பாரு. பழைய புடவை மாத்திட்டு வந்துடறேனே...''

''சும்மா இரும்மா நீ. உங்கிட்ட இருக்கிற எல்லா புடவையும் சாயம் போயி, நைஞ்சிப்போய்தான் இருக்கு. எவ்வளவு பெரிய இடத்தில் போய் சம்பந்தம் பேசப் போறோம்? கொஞ்சமாவது பளிச்சுன்னு இருக்க வேணாமான்னுதான் புதுப் புடவை வாங்கித் தந்தேன். போலாமா?''

''போகலாம்.''

''இரும்மா. அங்கே வந்து மென்னு முழுங்கக் கூடாது. நான் சொல்லிக் கொடுத்த மாதிரி தெளிவாப் பேசணும். ஒண்ணும் தலையை ஈவிட மாட்டாங்க.''

''எனக்கு என்னமோ கலக்கமா இருக்குதுப்பா.''

''ஒரு கலக்கமும் இல்லை. வா, போகலாம்.''

பாலாவும், அவன் அம்மாவும் வாசலுக்கு நடக்க, மூச்சு வாங்க மாடிப்படி ஏறி வியர்த்துப் போய் ஓடி வந்து நின்றாள் செல்வி.

பாலா அதிர்ந்து போய், ''என்ன செல்வி, நாங்க உங்க வீட்டுக்குத்தான் புறப்பட்டுக்கிட்டிருக்கோம். நீ என்ன இப்படி ஓடி வர்றே? என்னம்மா ஆச்சி என்ன?'' என்றான்.

ஓடிவந்த பதட்டத்தில் செல்விக்கு வார்த்தைகளே வரவில்லை. தடுமாறினாள்.

''முதல்ல இப்படி உட்காரு. அம்மா, ஒரு காபி போட்டு எடுத்துட்டு வாயேன்.''

அம்மா உள்ளே போக, நாற்காலியில் அமர்ந்த செல்வி உடனே குலுங்கி அழத் துவங்கினாள்.

''என்ன செல்வி இது? விபரத்தைச் சொல்லும்மா!''

''வேந்தன் தொட்டி அழகுத் தேவர் பையனுக்கு என்னை கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதா அப்பா வெத்தலை பாக்கு மாத்திட்டு வந்திருக்கார். வர்ற பதினேழாம் தேதி நாள் நல்லா இருக்கிறதால நிச்சயதார்த்தம்னு தனியா எதுவும் வெச்சுக்காம

நேரா முகூர்த்தமே வெச்சிக்கலாம்னு பேசி முடிவு பண்ணிட்டு வந்திருக்கார் பாலா.''

''பதினேழாம் தேதியா? இன்னிக்கு தேதி எட்டு. இன்னும் ஒம்போது நாள்லயா?''

''ஆமாம். நீங்க இன்னிக்கு அம்மாவோட பொண்ணு கேட்டு வரப்போறதாச் சொல்லிருந்தீங்களா, கல்யாணம் பேசி முடிவு பண்ணிட்டு வந்திருக்கிற இந்த சூழ்நிலையில நீங்க வந்தா பிரச்சினையாய்டுமேன்னுதான் நான் பதறிக் கிட்டு ஓடிவந்தேன்.''

''செல்வி, நீ என்ன சொன்னே?''

''எதுவும் சொல்லலை. வீணை கிளாஸ் போறேன்னு சொல்லிட்டு வேகமா வந்துட்டேன். பாலா, எனக்கு பயமா இருக்கு. நீங்க இல்லாம என்னால வாழவே முடியாது. என்ன செய்யப் போறீங்க பாலா?'' குமுறினாள் செல்வி.

அதிர்ச்சியின் தாக்கத்தில் இருந்து விடுபடாத பாலா மற்றொரு நாற்காலியில் தளர்வாக அமர்ந்தான்.

அவன் அம்மா காபி எடுத்து வந்து செல்விக்குக் கொடுக்க...

''அம்மா, நீ போய் பழைய புடவை கட்டிக்கலாம்மா. இவங்க வீட்டுக்கு சம்பந்தம் பேச போகவேணாம்மா'' என்றவன் செல்வி சொன்ன விவரத்தைச் சொல்ல, முகத்தில் வேதனை படர நின்றாள் அம்மா.

''அம்மா, நாங்க ரெண்டு பேரும் எப்படியும் கல்யாணம் பண்ணிக்கிட்டாகணும்மா. அதுக்கு என்ன வழின்னு சொல்லு.''

''பாலா, ஆசைப்படலாம் தப்பில்லை. ஆசைப்பட்டதை நிறைவேத்தியே தீரணுங்கற கட்டுப்பாடில்லாத வெறி கூடாதுப்பா. கல்யாணங்கிறது கறுப்புல ஆரம்பிக்கக் கூடாது. சந்தோஷமா நடக்க வேண்டிய ஒண்ணு. யார் யாருக்கு

முடிச்சுப் போடணும்னு பகவான் நினைக்கிறானோ அப்படித்தான் நடத்துவான். கல்யாணம் நிச்சயமான ஒரு பொண்ணுகிட்ட நீ பேசிக்கிட்டிருக்கிறதே தப்பு. நீ அவளை சீக்கிரம் அவ வீட்டுக்கு அனுப்பி வெச்சிடு''என்று விட்டுத் தனியறைக்குள் சென்றுவிட்டாள் அம்மா.

''செல்வி, அம்மா அந்தக் காலம். அவங்க சொல்றதைப் பெருசா எடுத்துக்காதே. இது நம்ம வாழ்க்கை. நாமதான் முடிவு செய்யணும்.''

''பாலா, நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி நடந்துக்க நான் தயார். இந்த நிமிஷத்திலேர்ந்து நீ உன் வீட்டுக்குப் போக வேணாம்- இங்கேயே இருந்துடுன்னு சொல்றீங்களா? நான் ரெடி.''

''இல்லை செல்வி, அது முறையா இருக்காது. நீ வீட்டுக்குப் போ. நாளைக்கு காலையில உன்வீட்டு வேலைக்காரி திலகத்தை துணைக்கு அழைச்சுக்கிட்டு கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலுக்கு வந்துடு. நான் தாலி, மாலை, சாட்சிக்கு ரெண்டு, மூணு ஃபிரெண்ட்சோட அங்கே வந்துடறேன். நாளைக்கு கோயில்ல வெச்சி நான் உனக்கு தாலி கட்டறேன். அப்புறம் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் போய் கல்யாணத்தைப் பதிவு செஞ்சுக்கலாம். அதுக்கப்புறம் யாரும் எதுவும் செய்ய முடியாது. உங்கப்பா கோபப்படுவார். 'நீ என் பொண்ணே கிடையாது. என் வீட்டு வாசலை மிதிக்காதேன்னு' சத்தம் போடுவார். அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சு பேரனோ, பேத்தியோ பொறந்தா எல்லாக் கோபமும் சரியாப் போய்டும். என்ன சொல்றே செல்வி?''

''சரிங்க. அப்படியே செய்யலாம். உங்களை அடையறதுக்காக நான் யாரோட கோபத்தையும் ஏத்துக்கத் தயார்.''

''நாளைக்கு நீ கோயிலுக்கு எப்படிப் புறப்பட்டு வருவே செல்வி. என்னன்னு சொல்லிட்டு வருவே. வீட்ல சந்தேகப் படாதபடிக்கு உன் பதில் இருக்கணும்.''

''அது நான் பார்த்துக்கறேன். எனக்கு கல்யாணம் நிச்சயமானா கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலுக்கு வர்றேன்னு வேண்டிக்கிட்டேன்னு சொல்லிட்டே புறப்பட முடியும். நம்ம விஷயம் எதுவும் அவங்களுக்கு சந்தேகம் எதுவும் வராது.''

''திலகத்துக்குக் கூட அங்கே புறப்படறப்போ எதுவும் சொல்ல வேணாம். கோயிலுக்கு வந்து தெரிஞ்சுக்கட்டும்.''

''சரி.''

''கண்களைத் துடைச்சுக்கிட்டு வீட்டுக்குப் போ செல்வி. அங்கே போய் கல்யாணம் நிச்சயமானா ஒரு பொண்ணு எப்படி சந்தோஷமா இருப்பாளோ, அப்படி சந்தோஷமா இயல்பா இரு. புரிஞ்சுதா?''

''வர்றேன் பாலா. நாளைக்கு காலையில கோயிலுக்கு வந்துடறேன்.''

''சரி எதில வருவே?''

''கார்லதான்.''

''சரி, வா. கார் டிரைவருக்கும் கோயிலுக்கு வந்தப்புறம் தான் அதிர்ச்சியா இருக்கப் போகுது. அதுக்கப்புறம் அவன் உங்கப்பாவுக்கு தகவல் சொன்னாக்கூட அவர் வந்து சேர்றதுக் குள்ளே நம்ம கல்யாணம் முடிஞ்சுடும்''என்றான் பாலா.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தெம்பாகப் புறப் பட்டாள் செல்வி.

9

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்த பாண்டித் தேவர் மருதுவைக் கூப்பிட்டு, ''தோப்பு வீட்டுக்கு

போன் போட்டு நான் வரலைன்னு சொல்லு. வந்திருக் கிறவங்களை ஆடிட்டுப் போகச் சொல்லு'' என்று கூறி விட்டு ஊஞ்சலில் அமர்ந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்தார்.

காமாட்சி வந்து தரையில் எதிரில் அமர்ந்து கொள்ள.. தூண் ஓரமாய் நின்ற செல்வியை பார்த்த பாண்டித்தேவர், ''போய் ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்துட்டு வந்து என் பக்கத்தில் உக்காரும்மா'' என்றார்.

செல்வி எடுத்துக் கொண்டு வந்து அவர் அருகில் அமர்ந்தாள்.

''நான் சொல்றதை எல்லாம் எழுது. நூறு பவுன் தங்க நகை! என்ன காமாட்சி, நூறு பவுன் போதுமில்லே?'' என்றார் பாண்டித் தேவர்.

''எத்தனை போட்டா என்னங்க? நாளைக்கு நமக்கப்புறம் நம்ம வீடு, தோட்டம், துறவு எல்லாமே நம்ம பொண்ணும், மாப்பிள்ளையும்தானே அனுபவிக்கப் போறாங்க?''

''இருக்கட்டும். கல்யாணம்னு வர்றப்ப ஊருக்கு முன்னால நம்ம கௌரவத்தை விட்டுக் கொடுக்காம செய்யணுமில்லே? எழுதிக்கோம்மா. ஒரு இருபத்தஞ்சு கிலோ வெள்ளி சாமான்.''

''இருங்க. நீங்க பாட்டுக்கு தங்கம், வெள்ளின்னு கிழே இறங்கிக்கிட்டேப் போறீங்களே. காதுக்கு, மூக்குக்கு, கழுத்துக்கு வைர செட் ஒண்ணு செஞ்சாகணும்.''

''வைர அட்டிகை வீட்ல இருக்கு. மத்ததெல்லாம் காரைக்குடி போய் நல்ல ஜாதி வைரமா பொறுக்கி செய்யச் சொல்லணும். மாப்பிள்ளைக்கு ஒரு அம்பாஸிடர் காரு கொடுக்கலாமான்னு யோசிக்கிறேன்.''

''நீங்க ஓட்டிக்கிடந்த பழைய வண்டியையா?''

''எவடி இவ! சீதனமா பழைய வண்டியை எவனாவது கொடுப்பானா? புது வண்டி வாங்கி கல்யாணப் பந்தல் வாசல்ல நிப்பாட்டிடறதில்லே? ஏன் செல்வி, உன்னைக் கேக்கணுமின்னு இருந்தேன். மறந்தே போய்ட்டேன். அபிராமபுரம் திருவிழால நீ வீணை வாசிச்சப்ப அழகுத்தேவர் ஆசீர்வாதம் செஞ்சாராமே. அப்போகூட நம்ம மாப்பிள்ளையும் இருந்தாராமே. முகம் ஞாபகம் வருதா உனக்கு?''

''இல்லைப்பா'' என்றாள்.

''அதெப்படிங்க ஒரு நிமிஷம் பார்த்ததை மனசில வச்சிக்க முடியும்? அதிலயும் சம்பந்திதான் நாலு வார்த்தை கிட்டே வந்துப் பேசிட்டுப் போனாரேயொழிய, மாப்பிள்ளை தூரத்திலயே நின்னுக்கிட்டிருந்தார்'' என்றாள் காமாட்சி.

''சரி. உனக்காவது முகம் ஞாபகம் இருக்கா?''

''எனக்கு நல்லா ஞாபகமிருக்குங்க. செகப்பா, சுருட்டை முடியா...''

''நம்ம செல்வி அவர் பக்கத்துல நின்னா பொருத்தம் எப்படி இருக்கும்?''

''இந்தப் பொண்ணுக்கு இந்த மாப்பிள்ளைதான் பொருத்தம்னு அத்தனை பேரும் சொல்வாங்க. நம்ம பொண்ணு ரொம்ப கொடுத்து வச்சவங்க.''

''இடமும் பெரிய இடம். நல்ல அந்தஸ்தான இடம். நல்ல மனுஷங்க. எனக்கு மனசுல எவ்வளவு திருப்தியா இருக்கு தெரியுமா? அதனாலதான் முகூர்த்த தேதியைக் கூட சட்டுபுட்டுன்னு பக்கத்தில இருக்கிற தேதியா முடிவு பண்ணிட்டேன்.''

''நீங்க பாட்டுக்கு ஒப்புக்கிட்டு வந்துட்டீங்க. எட்டு நாள்ல எப்படி இந்த கல்யாணத்துக்கான ஏற்பாட்டை எல்லாம் செய்யப் போறோம்னு நினைச்சா மலைப்பா இருக்குதுங்க.''

''யாருடி இவ? வரிஞ்சி கட்டிக்கிட்டு நீ நான்னு பந்தல் போடப் போறியா? அச்சுக் கோத்து நீ பத்திரிகை அடிக்கப் போறியா? காசை வீசியெறிஞ்சா வேலை பாட்டுக்கு நடந்துக்கிட்டிருக்கும் பாரு. ஆள் படைக்குப் பஞ்சமா நமக்கு?''

''அப்பா'' என்றாள் செல்வி, தயங்கி.

''என்னம்மா?''

''எனக்குக் கல்யாணம் நிச்சயமானா வர்றதா கும்பேஸ்வரர் கோயிலுக்கு வேண்டிக்கிட்டிருந்தேன். நாளைக்கு காலையில காரெடுத்துக்கிட்டு நானும், திலகமும் போய்ட்டு வந்துடட்டுமா?''

''போய்ட்டுவாம்மா. கோயிலுக்குப் போறதுக்கு நான் என்ன சொல்லப் போறேன்? என்னை விட்டுடு. எனக்கு நிறைய ஜோலி இருக்கு. உங்கம்மாவை வேணும்னா கூட்டிட்டுப் போ'' என்றார் தேவர்.

''எனக்கு ஆயிரம் ஜோலி இருக்குங்க. நெல்லு மூட்டையை மெஷினுக்கு அனுப்பி வைக்கணும். புளி சுத்தம் பண்ணனும். கல்யாணம்னா சும்மாவா இருக்கு. அதான் திலகத்தோட போறேன்னு சொல்றாளே, போய்ட்டு வரட்டும்'' என்று அம்மா சொன்னதும் நிம்மதியாக மூச்சு விட்டாள் செல்வி.

காலையில் தேவர் வேட்டி, சட்டையணிந்து திண்ணையில் அமர்ந்து இரண்டு பேருடன் பேசிக் கொண்டிருக்க உள்ளே போன் ஒலித்தது.

கணேசன் போன் எடுத்துப் பேசிவிட்டு வந்து அவரிடம் மரியாதையாகக் குனிந்து தகவலைச் சொல்ல, ''பேசிட்டிருங்க, வந்துட்டேன்'' என்று தேவர் வந்து போனை எடுத்துக் கொண்டு, ''சொல்லுடா'' என்றார்.

எதிர்முனையில் சொல்கிற விஷயங்களுக்கு 'ம்' 'ம்' என்று சொல்லிக் கொண்டே வந்துவிட்டு, ''அப்படின்னா பாண்டித் தேவர் சங்கதி என்னன்னு கொஞ்சம் சாம்ப்பிள் காமிச்சுட்டு வந்துடு. நான் பார்த்துக்கறேன்'' என்று வைத்தார். மறுபடி வாசலுக்கு வந்தமர்ந்து பேசத் துவங்கினார்.

திலகம் அர்ச்சனை கூடை, அபிஷேகத்திற்கு பால், பூமாலை என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு தொடர, பட்டுச் சேலை கட்டிக் கொண்டிருந்த செல்வி உள்ளே அம்மாவிடம் சொல்லிக் கொண்டு விட்டு வாசலுக்கு வந்தாள்.

''அப்பா கோயிலுக்குப் போய்ட்டு வந்துடறோம்.''

''சரிம்மா'' என்றார்.

திலகமும், செல்வியும் காரில் ஏறிக் கொண்ட பிறகு டிரைவர் அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்தபோது, ''ஏய்! கொஞ்சம் இருடா'' என்று எழுந்து கொண்டார் பாண்டித் தேவர்.

வாசலுக்கு வந்து நின்று கொண்டிருந்த மனைவியிடம், ''எனக்கு மத்தியானத்துக்கு மேலதான் ஜோலி இருக்கு. செல்வியோட நானும் கோயிலுக்கு போய்ட்டு வந்துடறேன் காமாட்சி'' என்றார்.

காருக்கு வந்து முன் சீட்டில் ஏறிக் கொண்டு, ''என்னமோ எனக்கும் கோயிலுக்கு வரணும் மாதிரி இருக்கு. நானும் வர்றேன்ம்மா. வண்டியை எடுடா'' என்றார் தேவர்.

பக்கென்றது செல்விக்கு.

''ஏன்ப்பா திடீர்னு? உங்களுக்கு வேலை இருந்தா பாருங்களேன்'' என்றாள் அவசரமாக.

''மத்தியானம் வந்து பார்த்துக்கறேன்ம்மா.''

கார் ஓடத் துவங்க செல்விக்கு வியர்க்கத் துவங்கியது. அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருந்தபோது, இப்படி அப்பாவே வந்து உட்காருவார் என்று நினைக்கவே இல்லை.

ஐயோ! இவரை எப்படி தவிர்ப்பது? இவரையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் எப்படி நுழைவது? அங்கே பாலா மாப்பிள்ளை கோலத்தில் திருமண ஏற்பாடுகளுடன், நண்பர்களுடன் காத்துக் கொண்டிருப்பாரே.

''செல்வி, என்ன ஒரு மாதிரியா இருக்கே?'' என்றார் திரும்பிப் பார்த்து தேவர்.

''ஒண்ணுமில்லேப்பா'' என்றாள்.

''முகமெல்லாம் இப்படி வேர்த்திருக்கு? என்னாச்சும்மா?''

''ஒண்ணுமில்லைப்பா'' என்றாள்.

''என்னடா திருட்டு கல்யாணம் பண்ணிக்கறதுக்காகப் புறப்பட்டுப் போறப்போ இடைஞ்சலா அப்பாவும் வந்துட்டாரேன்னு பார்க்கறியா செல்வி?''

அதிர்ந்து போனாள் செல்வி, ''அப்பா!''

''வண்டியை வீட்டுக்குத் திருப்புடா முண்டம்'' என்றார் டிரைவரைப் பார்த்து.

வெடவெடவென்று நடுங்கிப் போனாள் செல்வி.

''உனக்கு இவ்வளவு தூரம் தைரியம் வந்துடுச்சா செல்வி? ம்? ராத்திரி கோயிலுக்கு போகட்டுமான்னு கேட்டப்பவே சுருக்குன்னிச்சு. சாமிக்கு வேண்டிக்கிட்டிருக்கேன். எல்லாரும் போய்ட்டு வரலாம்னு நீ சொல்லியிருந்தா எனக்கு எந்த சந்தேகமும் வந்திருக்காது. எடுத்த எடுப்பிலேயே நானும் திலகமும் போய்ட்டு வந்துடறோம்னு சொன்னப்பவே

நெருடுச்சி. அதுவுமில்லாம இதுக்கு முன்னாடி எந்தக் காரணத்துக்காகவும், எந்தக் கோயிலுக்கும் நீ வேண்டிக் கிட்டதில்லை. என்னடா காரணமில்லாம எலி எட்டு முழ வேட்டி கட்டிக்கிட்டுப் போவுதேன்னு யோசிச்சேன். ராத்திரி நீ தூங்கினதுக்கப்புறம் உன்னோட பீரோவுல கொஞ்சம் ஆராய்ச்சி செஞ்சிப் பார்த்தா ஒரு பையன் போட்டோ கிடைச்சது. அதிகாலையிலயே கும்பகோணத்துக்கு நம்ம ஆளுங்களை அனுப்பி வெச்சேன் போட்டோவோட, கோயில்ல இந்தப் பையன் நிக்கிறானான்னு பாருங்க. என்ன விபரம்னு தெரிஞ்சு போன் செய்யுங்கன்னேன். போன் வந்திச்சு. அங்கே கல்யாண ஏற்பாட்டோட அவன் காத்துக் கிட்டிருக்கிறதா போன்ல நம்ம பசங்க சொன்னாங்க. பாண்டித் தேவர் பொண்ணை ஒருத்தன் மனசால நினைச்சாலே கையை வெட்டச் சொல்றவன் நான். அவன் என்னடான்னா ரகசியமா கல்யாணம் பண்ணிக்க துணிஞ்சிருக்கான். அதுவும் கல்யாணம் நிச்சயம் ஆன பொண்ணை, பையனை கொஞ்ச நாளைக்கு ஆஸ்பத்திரில இருக்கிற மாதிரி செஞ்சிட்டு வாங்கடான்னு போன்லயே உத்தரவு போட்டுட்டேன்'' என்று சிரித்தார் பாண்டித்தேவர்.

''அப்பா!'' அலறினாள் செல்வி.

அதற்குள் கார் மறுபடியும் வீட்டு வாசலுக்கு வந்து நிற்க, காரை விட்டு இறங்கின தேவர் செல்வியின் கையைப் பிடித்துத் தரதரவென்று வீட்டுக்குள் இழுத்துச் சென்று ஒரு அறைக்குள் நிறுத்தி பளார் என்று அறைந்தார்.

சுருண்டு கட்டிலில் விழுந்தாள் செல்வி.

காமாட்சியும், திலகமும் பதறிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

''என்னங்க இது? என்னங்க ஆச்சி?''

''உன் பொண்ணு கோயிலுக்குப் புறப்படலை. திருட்டுக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்குத்தான் புறப்பட்டா. நான் கொஞ்சம் உஷாரா இல்லைன்னா தாலியும் கழுத்துமாதான் வந்து நிப்பா!''

''ஏண்டி, என்னடி இதெல்லாம்? அப்பா சொல்ற தெல்லாம்...''

கண்ணைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் செல்வி.

''ஆமாம்மா. எனக்கு அப்பா ஏற்பாடு பண்ணியிருக்கிற கல்யாணத்துல இஷ்டமில்லை. நான் பாலாவை விரும் புறேன். அவரை கட்டிக்க நீங்க சம்மதிக்க மாட்டீங் கன்னு ரகசியமா கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச் சோம்.''

''இப்ப என்ன ஆச்சி?'' என்றார் பாண்டித் தேவர்.

''இப்ப தடுத்து நிறுத்தியிருக்கலாம்ப்பா. ஆனா நான் சொல்றேன். அவர் தான் என் புருஷன்.''

அவள் கூந்தலைக் கொத்தாகப் பிடித்து உயர்த்தி, பற்களை நெறித்து கோபமாக அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டார், ''இன்னொரு தடவை சொல்லு!''

''நீங்க என்னை அடிச்சாலும் சரி, கொன்னாலும் சரி, அவர்தான் என் புருஷன்.''

''யார்கிட்டே பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா செல்வி? பாண்டித் தேவர் வாக்கு கொடுத்தா அது மாறினதில்லை. வர்ற பதினேழாம் தேதி சண்முகத் தேவருக்கும், உனக்கும்தான் கல்யாணம். இதில மாத்தமே இல்லை. வீணா அடம் புடிக்காதே.''

''எனக்கு சண்முகத்தேவர் தாலி கட்டினா, அவர் கட்ற உடம்புல உசுரு இருக்காதுப்பா. அதை மட்டும் நீங்க ஞாபகத்தில் வச்சிக்கங்க.''

''எதிர்த்தாப் பேசறே நாயே!'' பாண்டித் தேவர் ஆத்திரம் அதிகமாகி காமாட்சியும், திலகமும் தடுக்கத் தடுக்க அவளை இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அறையத் துவங்கினார்.

10

கும்பகோணம், அந்த ஆஸ்பத்திரியின் தனியறையில் தலையில், நெற்றியில், தாடையில், கை, கால்களில் என்று ஒரு இடம் பாக்கியில்லாமல் ஏகப்பட்ட பேண்டேஜ்களுடன் படுத்திருந்த பாலாவுக்கு சலைன் சொட்டுச் சொட்டாக இறங்கிக் கொண்டிருந்தது.

அவன் அம்மா தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டிருக்க, ஸ்டூல் போட்டு அவன் அருகில் அமர்ந்தான் நண்பன்.

''கோபால், நீ சொல்றது நிஜம்தானா?'' என்று கரகரப்பாகக் கேட்டான் பாலா.

''ஆமாம். தேவர் வீட்டு வாசல்லயே பிரம்மாண்டமா பந்தல் போட்டுக்கிட்டு இருக்காங்க. ஊர் பூரா பத்திரிகை கொடுத்துட்டாங்க. கல்யாணம் நிச்சயமா நடக்குது பாலா.''

''இல்லை கோபால், கல்யாணம் நடக்கவே நடக்காது. என் செல்வி கண்டிப்பா ஒத்துக்கிட்டிருக்க முடியாது.''

''பாலா, நீயே கொஞ்சம் நிதானமா யோசிச்சுப் பாரு. பாண்டித் தேவரோட பிடிவாதம் உனக்கே தெரியும். அதை மீறி செல்வியால என்ன செய்ய முடியும்? உன்னை அடிச்ச மாதிரி அவளை பளார், பளார்னு அறைஞ்சிருப்பார். அம்மாவும் மத்தவங்களும் பொறுமையா எடுத்துச் சொல்லியிருப்பாங்க. எந்த விதத்திலயும் தனக்கு நடக்கற கல்யாணத்தை

நிறுத்த முடியாதுங்கற சூழ்நிலைல பாவம் அந்தப் பொண்ணு சம்மதிக்கிறதைத் தவிர வேற என்ன செய்ய முடியும்?''

''இல்லை. என் செல்வி அப்படி இல்லை. இந்தக் கல்யாணம் நடக்காது. நடக்கக் கூடாது. செல்வியை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டாகணும்.''

''உடம்பு பூரா பேண்டேஜ் பாலா. நீ மயக்கம் தெளிஞ்சு கண்ணு முழிக்கவே ரெண்டு நாளாச்சு. மறந்துட்டியா? பாண்டித் தேவர் ஆள் பலம் உள்ளவரு. ஊரே அவருக்குக் கட்டுப்படுது. கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டே நாள்தான் இருக்கிற இந்த சமயத்துல என்ன செய்ய முடியும்னு நினைக்கிறே பாலா?''

''முடியும்'' என்றான் நம்பிக்கையான குரலில் பாலா, ''பாண்டித்தேவருக்கு ஊர் வேணும்னா கட்டுப்படலாம். ஆனா சட்டம் கட்டுப்படாது.''

''என்ன சொல்றே நீ?''

''ஒரு பொண்ணுக்கு அவ விருப்பமில்லாம கட்டாயமா வற்புறுத்தி கல்யாணம் பண்ணி வைக்க முயற்சிக்கிறது சட்டப்படி குற்றம் கோபால். பண்ணைக்காடு கும்பகோணம் தாலுக்காவிலதானே வருது? ஒரு பேப்பர் எடு. நான் சொல்றதை எழுது, கையெழுத்துப் போடறேன்.''

அம்மா பதைத்துப் போனாள்.

''பாலா, நீ உசுரு பொழைச்சதே பெருசுன்னு நான் சந்தோஷப் பட்டுக்கிட்டிருக்கேன்ப்பா. அவங்க பெரிய இடம்ப்பா. வீணா மோதி பகையை வளர்த்துக்காதேப்பா. எனக்கு இருக்கிறது நீ ஒரே புள்ளைப்பா.''

''ஒண்ணும் ஆய்டாதும்மா. தைரியமா இருங்க. நீ பேப்பர் எடு கோபால்'' என்றான் ஆணித்தரமாக பாலா.

11

தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டு தன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள் செல்வி.

சற்றுத் தள்ளியிருந்த இரவு விளக்கையேப் பார்த்தாள். லேம்ப்ஷேடில் பட்டுத் தெறிக்கும் வெளிச்ச சிதறலில் நெளிநெளியாக ஒரு எல்லை வட்டம் இருந்தது.

அறைக்குள் வந்தாள் திலகம். அவள் அருகில் வந்து மூடியுடன் இருந்த எவர்சில்வர் டம்ளரைக் கையில் எடுத்து அது கனப்பதை உணர்ந்து மூடி திறந்து பார்த்து, ''என்ன செல்வி, பால் குடிக்கலையா இன்னும்? இந்தாம்மா, குடி'' என்றாள்.

''ச்ச்'' என்று வெறுப்பாக முகம் திருப்பிக் கொண்டாள்.

திலகம் அவள் அருகில் அமர்ந்து கொண்டாள். செல்வியின் கன்னங்களில் காய்ந்து போயிருந்த கண்ணீர் கோடுகளை உற்றுப் பார்த்தாள்.

''என்னம்மா இது. கல்யாணத்துக்கு ரெண்டு நாள் இருக்குது. இன்னும் இப்படி அழுதுகிட்டு இருந்தா எப்படிம்மா? மனசை மாத்திக்க வேணாமா?''

''எப்படி மாத்திக்க முடியும் திலகம்? வளையலா இருந்தா கழட்டி வீசிடலாம். மனசாச்சே. ஒவ்வொரு சம்பவமும் கல்லால செதுக்கின மாதிரி பதிஞ்சு போச்சே. எவ்வளவு பேசியிருப்போம். எவ்வளவு சிரிச்சிருப்போம். எவ்வளவு கனவு கண்டிருப்போம்?''

''நான்தான் உன்கிட்ட ஆரம்பத்திலேயே சொன்னனே, நம்ம குடும்பத்துக்கு இதெல்லாம் ஒத்து வராதுன்னு...''

''ஏன் ஒத்து வராது திலகம்?''

''தேவரோட வீம்பும், பிடிவாதமும் இந்த ஊரே அறிஞ்ச சங்கதி. சரியோ, தப்போ... நியாயமோ, அநியாயமோ அவர் ஒரு விஷயத்தில முடிவு எடுத்துட்டாருன்னா அதை நடத்தாம விட மாட்டார். அவருக்குப் பொண்ணாப் பொறந்துட்டு நீ காதல், கீதல்னு புலம்பலாமா செல்வி?''

''இது புலம்பல் இல்லை திலகம். உயிர் துடிப்பு! இது ஜ்ரம்!''

''எது வேணாலும் சொல்லிக்கம்மா. இப்போ கல்யாண ஏற்பாடுகள் நடந்துகிட்டிருக்கு. ஊர் முழுக்க பத்திரிகை வெச்சாச்சு. பந்தக்கால் நட்டு பந்தல் போட்டாச்சு. நாளைன்னைக்கு இந்த நேரம் உனக்கு முதல் ராத்திரி. இப்போ உக்கார்ந்து கண்டதையும் யோசிச்சா சரியா செல்வி?''

''எனக்கு வேற வழியே இல்லையா திலகம்?''

''தேவர் என்ன சொன்னாருன்னு ஞாபகம் இருக்கில்லே?''

''திலகம், அவர் தன் பொண்ணுக்கிட்டேப் பேசற மாதிரியா பேசினார்? ஜென்ம விரோதிகிட்டேப் பேசற மாதிரிதான் பேசினார். நாலே வரில நறுக்குத் தெறிச்சா மாதிரி சொல்லிட்டார். 'இத பாரும்மா, நீ மணமேடையில வந்து உக்காரலைன்னா நானும், உங்கம்மாவும் விஷம் குடிச்சுடுவோம்னு சொல்லப் போறதில்லை. இந்தக் காலப் பொண்ணுங்களுக்கு அம்மா, அப்பா செத்தாலும் பரவால்லை. காதல்தான் முக்கியம்னு தோணினாலும் தோணலாம். நீ இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா என்னோட வாக்கு தவறும். என்னோட வாக்கு தவற காரணமா இருக்கிற உன்னோட காதலன் பாலா உசுரோட இருக்கமாட்டான். அதை மனசில வச்சிக்கிட்டு முடிவெடு'ன்னு சொன்னாரே, மறந்துடுமா திலகம்?

ஒவ்வொரு வார்த்தையும் ஆணியடிச்ச மாதிரி மனசுல பதிஞ்சிருக்குது'' என்றாள் செல்வி.

''சரி, அவ்வளவு தூரம் தேவர் சொல்லிருக்கிறப்ப, நீ திரும்பத் திரும்ப மனசைப் போட்டு கசக்கிக்கறதில எதாச்சும் அர்த்தம் இருக்கா? தேவர் தன்னால முடியாத எதையும் சொல்றதில்லை. உன்னோட பாலாவை நம்ம ஆளுங்க அந்த அடி அடிச்சுப் போட்டாங்களே... ஒரு கேஸ் உண்டா? ஒரு விசாரணை உண்டா? அதனால அந்தத் தம்பியை மேல அனுப்பறது பெரிய விஷயமே இல்லை தேவருக்கு. ஒரு கண் ஜாடை காமிச்சாப் போதும். கச்சிதமா செஞ்சி முடிச்சிடுவாங்க. உன்னை ஆசைப்பட்டப் பாவத்துக்காக அநியாயமா அந்தத் தம்பி சாகணுமா செல்வி?''

''கூடாது திலகம். பாலா உயிரோட இருக்கணும். நல்லா இருக்கணும்.''

''அப்படின்னா நீ மனசை கல்லாக்கிக்கிட்டு முழு மனசோட இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக்கிறதுதான் நல்லது. வேற எந்த குறுக்கு வழியை யோசிச்சாலும் அது விபரீதத்திலதான் வந்து முடியும்.''

''இதையெல்லாம் யோசிக்கிறதாலதான் என்னால எந்த முடிவுக்கும் வர முடியலை திலகம்'' என்று செல்வி சொன்ன போது வீட்டின் வாசலில் ஒரு ஜீப் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

செல்வியும், திலகமும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க... அது போலீஸ் ஜீப் என்பது தெரிந்தது. அதிலிருந்து மிடுக்காக ஒரு உயர் போலீஸ் அதிகாரியும் இரண்டு கான்ஸ்டபிள்களும் மற்றும்... மற்றும்...

அது யார் பாலாவா?

செல்வியால் நம்பவே முடியவில்லை. உடம்பில், நெற்றியில் என்று அங்கங்கே சில பாண்டேஜ்களுடன் பாலாவும் அந்த போலீஸ் அதிகாரியுடன் இறங்குவதைப் பார்த்தாள்.

உடனே செல்வியும், திலகமும் அறையை விட்டு வெளியே கீழே வந்து திரைமறைவாக நின்று கூடத்தில் நடப்பதைப் பார்க்கத் துவங்கினர்.

ஊஞ்சலில் அமர்ந்திருந்த பாண்டித் தேவர் இவர்களைப் பார்த்து ஊஞ்சலின் ஆட்டத்தை நிறுத்தி இறங்கி நின்று கைகூப்பிவிட்டுப் புரியாமல் பார்த்தார். நாற்காலி காட்ட எஸ்.பி. மட்டும் அமர்ந்து கொண்டார்.

''வணக்கம் நான் எஸ்.பி. சபாபதி உக்காருங்க தேவரய்யா. உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன். நேர்ல சந்திக்கிற சந்தர்ப்பம் இல்லை.''

பாண்டித் தேவர் கை ஜாடை காட்டிவிட்டு முற்றத்தின் ஓரத்தில் இருந்த பள்ளத்தில் வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டு, வாய் கொப்புளித்து விட்டு வந்து எஸ்.பி.க்கு எதிரில் அமர்ந்து கொண்டார்.

''சொல்லுங்க. என்ன சமாச்சாரம்?''

''இவரை உங்களுக்குத் தெரியுமா?'' என்று பாலாவைக் காட்டிக் கேட்டார்.

''தெரியாதுங்க. என்னவாம்?''

''உங்கப் பொண்ணு செல்வியும், இவரும் மனசார நேசிக்கிறாங்களாம். நீங்க இவங்க ரெண்டு பேரும் பண்ணிக்க இருந்த கல்யாணத்தைத் தடுத்து இவரை ஆள்விட்டு அடிச்சிப் போட்டீங்களாம். அது மட்டுமில்லாம உங்கப் பொண்ணுக்கு அவளோட விருப்பத்தை மீறி கட்டாயக் கல்யாணம் செய்து

வைக்கப் பார்க்கறீங்களாம். எனக்கு நேரிடையா புகார் கொடுத்ததோட, புகார் நகலை ஐ.ஜி., டி.ஜி.பி. சீஃப் மினிஸ்டர் வரைக்கும் தந்தி மூலமா அனுப்பி வெச்சிருக்கார். அதனால இந்தப் புகார் மேல விசாரணை நடத்த வேண்டியது என் கடமையா இருக்குது. நீங்கன்றதால நானே நேர்ல வந்தேன். இந்தப் புகார்களைப் பத்தி நீங்க என்ன சொல்றீங்க?''

பாண்டித் தேவர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பாலாவை ஒரு தரம் பார்த்துவிட்டு சபாபதியைப் பார்த்தார்.

''ஒரு பொண்ணு அழகா இருந்தா வயசுப் பசங்க அந்தப் பொண்ணு மேல ஆசைப்படறது சகஜமில்லையா? என் பொண்ணை இவன் அந்த மாதிரிதான் ஆசைப்பட்டிருக்கணும். என் பொண்ணும் இவனை ஆசைப்பட்டதாகவும், இவனை கல்யாணம் பண்ணிக்க இருந்ததாகவும் சொல்றதெல்லாம் கற்பனைங்க சார். இதைவிட பெரிய வேடிக்கை நான் என் பொண்ணை கட்டாயப்படுத்தி இந்தக் கல்யாணத்தை நடத்தப் பார்க்கறேன்னு சொல்றதுதான்'' என்றார்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா உங்கப் பொண்ணைக் கொஞ்சம் கூப்புட முடியுமா சார்?''

''தாராளமா. செல்வி! யம்மாடி செல்வி! வாம்மா!'' என்று அழைத்தார் பாண்டித் தேவர்.

செல்வியும், அம்மாவும் சேர்ந்து அங்கு வந்து நிற்க...

''செல்வி, சார் ஏதோ உன்னைக் கேக்கணும்னு சொன்னாரு. பதில் சொல்லும்மா. நல்லா யோசனை பண்ணி பதில் சொல்லும்மா'' என்றார் பாண்டித்தேவர், 'நல்லா யோசனை பண்ணி' என்றதில் அழுத்தம் அதிகம் இருந்தது.

''ஏம்மா, இவரை உனக்குத் தெரியுமா?'' என்றார் சபாபதி.

''தெரியும் சார்'' என்றாள் செல்வி குனிந்த தலை நிமிராமல்.

''எப்படித் தெரியும்?''

''நான் வீணை கத்துக்கற அதே டீச்சர்கிட்டே இவர் புல்லாங்குழல் கத்துக்க வருவார். அப்பப் பார்த்திருக்கேன் பேசியிருக்கேன்.''

பாலா சற்றே புன்னகையைத் தன் உதடுகளில் தவழவிட்டு சற்று அலட்சியமாக பாண்டித் தேவரைப் பார்த்தான். 'இப்ப என்ன சொல்றீங்க?' என்று விசாரித்தது அந்தப் பார்வை.

''நீயும், இவரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிச்சீங்களா?''

செல்வி சற்று அமைதியாக இருந்தாள்.

''சொல்லும்மா. உண்மை எதுவா இருந்தாலும் தயங்காம சொல்லலாம்.''

''இல்லை சார்'' என்றாள் செல்வி. ''கூடப் படிக்கிற ஒரு சக மாணவியாதான் நான் இவரோடப் பழகினேன்.''

பாலா அதிர்ந்து போனான்.

பாண்டித்தேவர் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தார். 'இப்ப என்னடா சொல்றே?' என்று விசாரித்தது அந்தப் பார்வை.

''ரெண்டு பேரும் நேசிச்சதா இவர் சொல்றாரேம்மா?''

''அவர் மனசுல அப்படி ஒரு கற்பனையை வளர்த்துக்கிட்டா அதுக்கு நான் எப்படி சார் பொறுப்பாக முடியும்?''

''அப்போ நாளைன்னைக்கு நடக்கப் போற உன் கல்யாணத்தில உனக்கு சம்மதம்தானே?''

''பரிபூர்ண சம்மதத்தோடதான் என் அப்பா எல்லா ஏற்பாடுகளையும் செய்துகிட்டிருக்கார் சார்.''

நொறுங்கிப் போய் சிலையாக நின்றான் பாலா.

''இன்னும் ஏதாவது கேள்வி உண்டா சார்?'' என்றார் பாண்டித்தேவர்.

''இல்லை'' என்று எழுந்து கொண்டார் சபாபதி. ''புகார் மேல விசாரிக்க வேண்டிய கட்டாயத்திலதான் நான் வந்தேன். உங்களை எல்லாம் சங்கடப்படுத்த வேண்டியதாப் போச்சு. மன்னிச்சுடுங்க வர்றேன்.''

''பொய்யா புகார் கொடுக்கறவங்க மேலயும் கொஞ்சம் கடுமையா நடவடிக்கை எடுங்க எஸ்.பி. சார். நாங்க எல்லாம் மானத்துக்குக் கட்டுப்பட்டவங்க'' என்றார் பாண்டித் தேவர்.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனமாக எஸ்.பி. பின்னால் சென்று ஜீப்பில் ஏறிக் கொண்டான் பாலா.

செல்வி வேகமாகத் தன் அறைக்கு வந்து தலையணையில் முகம் புதைத்து அழத் துவங்கினாள்.

'பாலா! நீங்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்கிற ஒரேக் காரணத்திற்காகத்தான் நான் கூசாமல் பொய்களைச் சொன்னேன். எனக்கு சிறிதும் சம்மதமில்லாமல் மண மேடையில் அமரப் போவதும் அந்த ஒரே காரணத்திற் காகத்தான்.

அதைப் புரிந்து கொள்வீர்களா பாலா?

என்னை மன்னிப்பீர்களா பாலா?

மானசீகமாக அவனோடு பேசி அழுகையைத் தொடர்ந்தாள் செல்வி.

12

''அப்படியா சொன்னா?'' என்றான் நண்பன் கோபால்.

நாற்காலியில் மெதுவாக அமர்ந்து கொண்ட பாலா மௌனமாகத் தலையை மட்டும் அசைத்தான்.

''இவ்வளவுதான் பாலா ஒரு பணக்காரப் பெண்ணோட காதல்! தெரிஞ்சுக்கோ. இவங்களுக்கெல்லாம் ஆம்பளைங்க மனசைப் பந்தாடறது ஒரு பொழுதுப்போக்கு பாலா. பெரிய வசதியான இடம் அமைஞ்சதும் எப்படித் தூக்கி எறிஞ்சிட்டா பார்த்தியா?''

''என்னால இப்பக்கூட நம்பவே முடியலை கோபால். என் செல்வியா அப்படிச் சொன்னது? ஏதோ கனவு மாதிரிதான் இருக்குது.''

''அவ என்னடான்னா நீ யாரோ, நான் யாரோன்னு மூஞ்சில அடிக்காத குறையா சொல்லிட்டா. நீ இன்னும் என் செல்வி, என் செல்வின்னு சொல்லிக்கிட்டிரு எஸ்.பி. என்ன சொன்னாரு? அதைச் சொல்லு.''

''என்னைக் கண்டபடி திட்டினாரு. 'இல்லை சார், அவ என்னை காதலிச்சது உண்மைதான். இப்ப மாத்திப் பேசறான்னு' எவ்வளவோ சொன்னேன். அவர் நம்பறதா இல்லை. எதாச்சும் ஆதாரம் இருக்கான்னு கேக்கறாரு.''

''உன் கிட்டே இல்லையா?''

''இல்லை கோபால், எப்பவுமே நான்தான் அவளுக்கு காதல் கடுதாசி எழுதுவேன். அவ எனக்கு ஒரு பதில் லெட்டர் கூட எழுதினதில்லை. நேரில பேசறதோட சரி.''

''ஆரம்பத்திலேர்ந்தே ரொம்ப ஜாக்கிரதையாத்தான் இருந்திருக்கா.''

''இல்லை கோபால், அப்படின்னா அவ என்னை உண்மையா காதலிக்கலைன்னு சொல்றீயா?''

''அப்படிச் சொல்லலை பாலா. அவ உன்னை நூறு சதவிகிதம் உண்மையாவே காதலிச்சிருக்கலாம். ஆனா இப்போ வளமான ஒரு எதிர்காலம் கண் முன்னாடி அமையறப்போ நீ ரெண்டாம்பட்சம் ஆயிடறே.''

பாலா அமைதியாய் ஜன்னல் வழியாக தூரத்து மேகங்களை வெறித்தான்.

கோபால் அவன் அருகில் வந்து தோளில் கை வைத்து, ''கொஞ்சங் கூட ஈரம் இல்லாத அந்தப் பொண்ணுக்காக நீ உன் கண்ணை ஈரப்படுத்திக்கிறது பைத்தியக்காரத்தனம் பாலா. அவளை மறந்துடு. உருப்படியா வேற எதாச்சும் யோசி'' என்றான்.

''இப்பக்கூட அவ ஏதோ ஒரு திட்டத்தை மனசுல வச்சிக்கிட்டுதான் அப்படி சொன்னதா இருக்கக் கூடாதா கோபால்?''

''முட்டாள்தனமாப் பேசாதே பாலா. ஒக்கே. உன் பாய்ண்ட்டுக்கே வர்றேன். அவ உனக்கு துரோகம் செய்றதா இல்லைண்ணே வெச்சிக்கலாம். கொஞ்சம் யோசிச்சுப் பாரு. உங்க காதல் தெரிஞ்சதும் தேவர் என்ன செஞ்சார்? அவளை வீட்ல சிறை மாதிரி வைச்சார். உன்னை ஆளைவிட்டு அடிச்சார், நீயும் அவளை தனியா சந்திச்சுப் பேச முடியலை. அவளுக்கும் அந்த இடத்திலேர்ந்து வெளில வர வாய்ப்பில்லை. இப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறப்போ நீ போலீசோட அந்த வீட்டுக்குள்ளே போயிருக்கே. என்ன ஒரு அருமையான சந்தர்ப்பம் இது. செல்வி அந்த எஸ்.பி.கிட்டே 'நான் பாலாவைத்தான் நேசிக்கிறேன்'னு சொல்லியிருந்தா உங்க ரெண்டு பேர் கல்யாணத்தையும் எஸ்.பி.யே நடத்தி

வெச்சிருப்பாரே. யார் என்ன செய்ய முடியும்? பதினெட்டு வயசு ஆயிடுச்சிதானே அவளுக்கு?''

''ஆய்டுச்சி?''

''பின்னே? சட்டத்தைச் சொல்லிக் கூட தடுக்க முடியாது. ஆனா அவ அப்படியே மாத்தி சொல்லிட்டாளே... ஏன்? அவ அடியோட மாறிட்டா! அது தான் காரணம் இதோ பாரு... சும்மா தேவதாஸ் மாதிரி புலம்பிக்கிட்டிருக்கிறதில அர்த்தமில்லை.''

''என்னை வேற என்ன செய்யச் சொல்றே?''

''உனக்கு நில் இருந்தா எதாச்சும் செஞ்சி அவ கழுத்தில தாலியைக் கட்டு. அது ஆம்பளைக்கு அழகு!''

''புரியலையே. எப்படி நடத்தறதுன்னு புரியலையே. அவ மனசும் இப்போ புரியலையே.''

''இரு. யோசிக்கலாம்'' என்றான் கோபால், அந்த அறையின் குறுக்கில் மௌனமாக நடந்தபடி தீவிரமாக யோசிக்கத் துவங்கினான்.

13

நாகப்பன் வயலோரத்தில் இருந்த மர நிழலில் அமர்ந்திருந்தான். அருகில் ஓடிய சிறிய வாய்க்காலில் சலசலவென்று ஓடும் தண்ணீரைப் பார்த்து கொண்டிருந்தான்.

அப்போது ஓடி வந்தான் அந்த ஆள்.

''நாகப்பண்ணே! விஷயம் தெரியுமா? உங்களோட பிரச்சினையாகி மாமன் மகனுக்கு பஞ்சாயத்து தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கைப் பட்டுப் போனாளே பார்வதி...

இன்னிக்கு காலையில விஷம் சாப்புட்டு செத்துப் போய்ட்டாளாம்.''

''என்னடா நீ சொல்றே நீ?'' அதிர்ந்தான் நாகப்பன்.

''நிஜமாதாண்ணே. மன்னார்சாமி போய் போலீஸ்ல கையெழுத்து போட்டு உடம்பை எடுத்துட்டு வந்து வீட்ல போட்டாச்சு.''

நாகப்பனின் கண்களில் அவனையறியாமல் கண்ணீர் சுரந்தது.

எழுந்தான். சைக்கிளை வேகமாக மிதித்து பூக்கடைக்கு வந்து ஒருமாலை வாங்கிக் கொண்டு மன்னார்சாமி வீட்டை நோக்கி விரைந்தான்.

விதி பஞ்சாயத்து தலைவர் பாண்டித் தேவரின் தீர்ப்பு வடிவத்தில் வந்து நம்மைப் பிரித்துவிட்டது என்று என்னை நானே தேற்றிக் கொண்டு வந்தேனே பார்வதி...

நீயும் அப்படி சமாதானமாகி உன் மாமன் மகன் ரங்கராசுவுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பாய் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே பார்வதி...

ஏன் இப்படி நீயே உன் வாழ்க்கையை முடித்துக் கொண்டாய்?

மன்னார்சாமியின் சிறிய வீட்டின் வாசலில் பத்து இருபது பேர் கூடியிருந்தார்கள். சைக்கிளை நிறுத்தி மாலையுடன் வீட்டிற்குள் வந்தான் நாகப்பன்.

தலைமாட்டில் விளக்கு கொளுத்தி வைத்து கிடத்தப்பட்டிருந்த பார்வதியின் இணைத்துக் கட்டப்பட்ட பாதங்களில் மாலையை வைத்துவிட்டு மௌனமாக விலகி நின்றான்.

நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்த மன்னார்சாமி இவனிடம் வந்து, ''நாகப்பா! பணம் காசுதான் முக்கியம்னு உங்களை பஞ்சாயத்துல நிறுத்தி பிரிச்சி வெச்சேனே... இப்ப என்ன காரியம் பண்ணிட்டா பார்த்தியா? படிச்சுப் பாரு! என்ன எழுதி வெச்சிட்டு செத்திருக்கான்னு படிச்சுப் பாரு'' என்று சட்டைப் பையில் இருந்து க்சங்கிப் போன காகிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

நாகப்பன் அதைப் படித்துப் பார்த்தான்.

'அண்ணா, பஞ்சாயத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு கழுத்தில் தாலி வாங்கிக் கொண்டேன். ஆனால் என் மனசாட்சி ஒப்பவில்லை. மனமாற ஒருவரை மனம் முழுக்க நிரப்பிவிட்டு இன்னொருவருக்கு மனைவியாக வாழ என்னால்முடியவில்லை. என் கணவர் என் உடலைதான் சொந்தமாக்கிக் கொள்ள முடிகிறதேயொழிய என் மனதில் அவர் இல்லவே இல்லை. இது துரோகம் இல்லையா? என் குறுகுறுப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறதேயொழிய... குறையவில்லை. இதற்கு முற்றுப்புள்ளி என் மரணம்தான். எனவே தற்கொலை செய்து கொள்கிறேன். என் மனசாட்சியின் குறுகுறுப்பைத் தவிர என் தற்கொலைக்கு வேறு எதுவும், யாரும் காரணமில்லை - பார்வதி.'

நாகப்பன் கண்களில் இருந்து சரம் சரமாகக் கண்ணீர் உதிர்ந்தது.

''இப்படி இவ செய்வான்னு தெரிஞ்சிருந்தா உனக்கேக் கட்டி வெச்சிருப்பேனே நாகப்பா'' என்றான் மன்னார்சாமி. பதில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து விலகினான் நாகப்பன்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் மனதில் புதியதொரு வைராக்யம் உருவாகிக் கொண்டிருந்தது.

பார்வதி தன் கடிதத்தில் குறிப்பிடவில்லையே ஒழிய, இந்த தற்கொலைக்கு ஒரு முக்கியமான காரணம் தேவரின் பஞ்சாயத்து தீர்ப்புதான்.

பாண்டித் தேவர் இதற்கான தண்டனையை அனுபவித்தாக வேண்டும்.

நூறு பேர் முன்னால் அவர் அளித்த தீர்ப்பு அது! அதேப்போல நூறு பேருக்கு முன்னால் பாண்டித் தேவர் அவமானப்பட்டுத் தலை குனிந்து நிற்க வேண்டும்.

அவர் அவமானப்பட வேண்டுமென்றால்...

நாளைக்குக் காலையில் அவர் மகள் செல்விக்கும், சண்முகத் தேவருக்கும் நடக்கப் போகிற கல்யாணம் நடக்கக் கூடாது. அது நின்றாக வேண்டும்.

செல்வி - பாலாவை காதலிப்பதும், பாலாவை இவர் ஆள் வைத்து அடித்ததும், பாலா போலீசோடு வந்ததும், பாலாவை கொலை செய்து விடுவேன் என்று தேவர் மிரட்டி வைத்திருப்பதால் செல்வி போலீஸ் அதிகாரியிடம் நடக்க உள்ள திருமணத்தில் தனக்குப் பூரண சம்மதம் என்று மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொன்னதும்...

திலகம் மூலமாக எனக்குத் தெரியும். திலகத்திற்கு மனதின் பாரத்தைக் குறைக்க பேச்சுத் துணை நான் ஒருவன்தான். எதையும் அவள் மறைத்ததில்லை.

இப்போது இந்தச் சூழ்நிலையில் நாளைக்கு திருமணம் நிறுத்தப்பட்டு அதே மேடையில் செல்வியும் - பாலாவும் திருமணம் செய்து கொண்டால்... எப்படி இருக்கும்?

இதைவிட பெரிய அவமானம் தேவருக்கு இருக்க முடியாது. தேவரைப் பொறுத்தவரை அவமானம். செல்வியைப் பொறுத்தவரை நினைத்தபடி சந்தோஷத் திருமணம்.

இதை எப்படி சாதிப்பது? ஆனால் சாதிக்க வேண்டும். சாதிக்காவிட்டால் காதலுக்காக மருகி மருகி தற்கொலையே செய்து கொண்டுள்ள பார்வதியின் ஆத்மா சாந்தியடையவே அடையாது.

நாகப்பன் சைக்கிளை திலகத்தின் குடிசைக்கு முன்னால் நிறுத்தினான்.

உள்ளே குனிந்து வந்தான்.

அடுப்பில் காரியமாக இருந்த திலகம் திரும்பிப் பார்த்து, ''வா நாகப்பா'' என்றாள்.

''அக்கா. பார்வதி சமாச்சாரம் தெரியுமாக்கா?''

''இப்பதான் கேள்விப் பட்டேன் நாகப்பா.''

''இதை படிச்சுப் பாருங்கக்கா. பார்வதி கைப்பட எழுதியிருக்கா சாவறதுக்கு முன்னாடி..''

வாங்கிப் படித்த திலகம் கண் கலங்கி நின்றாள்.

''இதே மாதிரி நாளைக்கு தேவரோட பொண்ணும் ஒரு லெட்டர் எழுதி வெச்சிட்டு செத்துப் போறதில உங்களுக்கு சம்மதமாக்கா?''

அந்தக் கேள்வியால் தாக்குண்டு செயலிழந்து நின்றாள் திலகம்.

நாகப்பன் தன் எண்ணங்களை உணர்ச்சிப்பூர்வமாக சொல்லச் சொல்ல அவன் பேச்சில் உள்ள நியாயம் அவள் மனதில் மெதுவாகப் படரத்துவங்கி, அவன் சொல்வதே சரி என்று தீர்மானமாக உருவாகத் துவங்கியது.

''அதனால நான் சொன்ன யோசனையை செல்விகிட்டே சொல்லுங்கக்கா. சில விஷயங்களை சாதிக்கிறதுக்காக துணிஞ்சி சில சமயம் செயல்பட்டாகணும். நீங்க பக்குவமா எடுத்துச் சொல்லுங்க செல்விகிட்டே..''

''சொல்றேன். கண்டிப்பா சொல்றேன். நான் தோள்ல தூக்கிப் போட்டு வளர்த்த செல்வி நாளைக்கு இன்னொரு பார்வதியாயிடக் கூடாது. அவ சந்தோஷம் தான் முக்கியம். தேவரோட வாய் நாணயம் கெட்டால் பரவாயில்லை. அவ வாழ்க்கை கெடக் கூடாதுன்னு இப்போ தெளிவாப் புரிஞ்சு கிட்டேன் நான். சரி. நான் செல்விகிட்டே யோசனையைச் சொல்றேன். நாளைக்கு கல்யாணப் பந்தலுக்கு அந்த பாலா தம்பியை...''

''அழைச்சிட்டு வர வேண்டியது என் பொறுப்பு.''

''எப்படி நாகப்பா? அவனை உள்ளே விட மாட்டாங்க. தேவரோட ஆளுங்க இப்பலேர்ந்து கல்யாணப் பந்தலைச் சுத்தி ரோந்தடிக்கிறாங்க.''

''அதைப் பத்தி உங்களுக்கென்னக்கா? நாளைக்கு கல்யாணத்துக்கு பாலா வருவார். செல்வி கண்ல படற மாதிரி ஒரு இடத்தில உக்காந்துகிட்டு இருப்பார். துணிச்சலா நடந்துக்க வேண்டியதெல்லாம் செல்விதான்.''

''அதுக்கு நான் பொறுப்பு'' என்றாள் திலகம்.

14

''திலகம். நீதான் பேசிறயா இப்படி?'' என்றாள் ஆச்சரியத்துடன் செல்வி.

அவளின் அறையில் அவள் அருகில் நின்று கொண்டிருந்த திலகம் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''கொஞ்சம் மெதுவாகவேப் பேசலாம் செல்வி. உங்கப்பா எடுத்த முடிவுதான் சரிங்கிற மாதிரி அன்னைக்கு நான்தான் பேசினேன். இப்போ அது தப்புன்னு சொல்றதும் நான்தான்.''

''அதான் ஏன்னு கேக்கறேன்.''

''அன்னைக்கு பஞ்சாயத்துல வச்சி பார்வதிங்கிற பொண்ணுக்கு அவளோட மாமா மகனை விட்டுத் தாலி கட்டச் சொன்னாரே தேவர் ஞாபகமிருக்கா? அவ இன்னைக்கு விஷம் குடிச்சு செத்துப் போயிட்டாம்மா. என்ன எழுதி வெச்சிருக்கான்னு பாரு.''

நாகப்பன் கொடுத்த கடிதத்தை ஜாக்கெட்டுக்குள்ளிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

படித்து முடித்ததும் உடனே பாரமாகிப் போனது செல்விக்கு.

''அவ பஞ்சாயத்து தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு கல்யாணம் செய்துகிட்டா. நீ உன் காதலன் உயிரோட இருக்கணுமேன்னு கல்யாணத்துக்கு சம்மதிக்கிறே. நாளைக்கு இவளை மாதிரியே தானே உனக்கும் மனசாட்சி உறுத்தும்? என்னை எடுத்துக்கோ. சின்ன வயசுலயே முண்டைச்சியாகிட்டேன். மறு கல்யாணம் பண்ணிக்கச் சொன்னாங்க. மாட்டேன்னுட்டேன். ஏன்? கொஞ்ச நாள் வாழ்ந்தாலும் அதுல ஒரு சந்தோஷமும், நிறைவும் எனக்கு இருந்துச்சி. அவரோட ஞாபகத்தை மனசுல வச்சிக்கிட்டு இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறது தப்புன்னு எனக்குப் பட்டுச்சு. அந்த மாதிரி தானேம்மா நீயும்? எனக்கு கல்யாணம் ஆகிடுச்சி. உனக்கு ஆகலை. அதானே வித்தியாசம்? பேசினது, பழகினது, சிரிச்சதுன்னு அந்த பாலா தம்பியோட ஞாபகம் மனசுல இல்லாமப் போய்டுமா? அதோட இன்னொருத்தருக்கு உண்மையான பொண்டாட்டியா வாழ்க்கை நடத்தறது ரொம்ப கஷ்டம்மா. அவஸ்தை. அதனால நாளைக்கு உன் இஷ்டத்துக்கு விரோதமா கல்யாணம் நடக்கக் கூடாது செல்வி.''

''திலகம், இந்த நிலைமையில என்னை என்ன செய்யச் சொல்றே? நிச்சயமா பாலாவை எங்கப்பா தீர்த்துக் கட்டிடுவார். எந்த பாலாவுக்காக நான் இந்த கல்யாணத்தை நிறுத்தறேனோ, அந்த பாலா எனக்குக் கிடைக்காமல் போய்டுவார். இல்லைன்னா எப்பவோ நான் இந்த வீட்லேர்ந்து தப்பிச்சி என் பாலாகிட்டே போயிருப்பேன். அவர் உயிரை எடுத்துடுவேன்னு ஒரு பெரிய மிரட்டல் போட்டுட்டதாலதான் எதுவும் செய்ய முடியாம உக்காந்திருக்கேன்.''

''அவ்வளவுதானேம்மா? உன்னோட பாலாவுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. உங்கப்பா அவரை எதுவும் செய்யமாட்டார். நீ பாலாவை கல்யாணம் செய்துகிட்டா. ஆமாம், பாலா உனக்கு தாலி கட்டிட்டார்னு வை. அப்புறம் எந்த அப்பனும் தன் பொண்ணை விதவையாக்க ஆசைப்படமாட்டான்! நீ என் பொண்ணே இல்லைன்னு சொல்லலாம். என் மூஞ்சில் முழிக்காதேன்னு சொல்லலாம். ஆனா உன்னை விதவையாக்கறேன் பாருன்னு சொல்லமாட்டார்.''

''திலகம் நீ என்ன சொல்றே?''

''செல்வி. நாளைக்கு கல்யாணப் பந்தலுக்கு உன்னோட பாலாவும் வர்றார். அப்போ அந்த கல்யாணம் நிக்கணும். உங்க கல்யாணம் நடக்கணும். நடந்துட்டா அத்தனை பேர் முன்னிலையில் தேவர் எதுவும் செய்ய முடியாது செல்வி.''

''அது எப்படி நடக்கும்?''

''நடக்கும். நீ மனசு வச்சா. உனக்கு மட்டும் கொஞ்சம் துணிச்சல் வேணும் செல்வி. உன் ஒருத்தியாலதான் இப்போ இந்த சிக்கலுக்கு விடிவு காண முடியும். நீ என்ன செய்யணுமின்னா...''

திலகம் தன் யோசனையைச் சொன்னதும் செல்வி அதிர்ச்சியடைந்தாள்.

''அத்தனை பேர் முன்னாடியுமா?'' என்றாள்.

''என்ன தப்பு? உனக்கு பாலாவோட கல்யாணம் ஆகணும்னா இது ஒண்ணுதான் இப்போ வழி! தாலி உன் கழுத்துக்கு ஏறினப்புறம் எந்த கோபதாபத்தையும் சமாளிக்கிற தைரியம் வேணும். உங்க ரெண்டு பேருக்கும் ஒரு மகனோ, மகளோ பொறந்தா அவரோட கோபமெல்லாம் போய்டும். வம்ச வாரிசை பகைச்சுக்க மாட்டார். என்ன சொல்றே?''

''எனக்கு இப்பவே வெடவெடங்குது திலகம்.''

''மனசை கெட்டி பண்ணிக்கோ செல்வி. வைராக்யம் வச்சா ஒரு பொண்ணால சாதிக்க முடியாதது எதுவும் இல்லைம்மா.''

செல்வி அறையின் குறுக்கில் இரண்டு முறை நடந்து யோசித்து விட்டு திலகம் பக்கம் திரும்பி, ''திலகம், எனக்கு பாலா வேணும். நான் சாதிச்சுக்காட்டறேன்.'' என்றாள் உணர்ச்சிகரமாய்.

''நிஜமாதான் சொல்றீயா?'' என்றான் ஆச்சரியத்துடன் பாலா.

அவன் எதிரில் பவ்யமாக நின்றிருந்த நாகப்பன், ''தம்பி எந்த கோயில்ல வந்து சத்தியம் பண்ணச் சொல்றீங்களோ, செய்றேன். தேவரய்யா உங்களைத் தீர்த்துக் கட்டிடுவேன்னு மிரட்டி வச்சதாலதான் நீங்க நல்லா இருக்கணுமேன்னு போலீஸ் ஆபீசர் முன்னாடி எல்லாத்தையும் செல்வி மாத்தி சொல்லிட்டாங்களே ஒழிய... தினம் அவங்க அழுது துடிச்சிக்கிட்டுத்தான் இருக்காங்க'' என்றான்.

''நான் நினைச்சேன் நாகப்பா. என் ஃபிரெண்டுகூட அவளைத் தப்பாப் பேசினான். ஆனா நான் கடைசி வரைக்கும் நம்பலை. செல்வி ஏதோ ஒரு காரணத்தாலதான் அப்படி சொன்னான்னு எனக்குப் புரிஞ்சுது. அந்தக் காரணம் தான் புரியாம இருந்திச்சி.''

''தம்பி, நாளைக்கு கல்யாணப் பந்தலுக்கு நீங்க வரணும். மணமேடைக்குப் பக்கத்துல இருக்கிற நாற்காலியில் உக்காந்திருக்கணும். கல்யாணம் நிக்கிது. நீங்க செல்விக்கு தாலி கட்டறீங்க.''

''இருப்பா, எப்படி?எப்படி இதெல்லாம் நடக்கும்?''

நாகப்பன் தானும் திலகமும் பேசிய திட்டத்தை விவரித்து சொன்னதும் திருப்தியடைந்தான் பாலா.

''கண்டிப்பா செல்வி அப்படி துணிவாளா?''

''கண்டிப்பா''

''அப்ப சரி. நான் எப்படி உள்ளே வர்றது? தேவர் ஆளுங்க என்னைப் பார்த்தா புரட்டி எடுத்துடுவாங்களே...''

''நீங்க மாறு வேஷத்திலதான் வந்தாகணும். என் சித்தப்பன் திருவிழால நாடகம் போடறவன். அவன்கிட்டேர்ந்து ஒட்டுதாடி, ஒட்டு மீசை எல்லாம் வாங்கிட்டு வந்துடறேன்'' என்று ஆர்வமாகச் சொன்ன நாகப்பனை நன்றியுணர்வுடன் பார்த்தான் பாலா.

15

மறுநாள்.

பாண்டித்தேவரின் வீட்டு வாசலில் போடப்பட்டிருந்த பிரம்மாண்டமான கல்யாணப் பந்தலின் உள்புறத்தில் வெள்ளை வேட்டிகள் கட்டப்பட்டு, ஜிகினாப் பூக்களும்,

தோரணங்களும் அலங்கரித்திருந்தார்கள். ஆயிரத்துக்குப் மேற்பட்ட நாற்காலிகளில் சுற்றுப்பட்டு கிராமங்களில் உள்ள பெரிய மனிதர்களும், உறவினர்களுமாக வெள்ளை உடைகளில் அமர்ந்திருந்தார்கள்.

பாண்டித் தேவர் பிரதான வாசலில் நின்று வருகிறவர்களை கைகூப்பி வரவேற்றுக் கொண்டிருந்தார். பட்டு வேட்டி, பட்டுச் சட்டையணிந்து நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்திருந்தார்.

மணமேடை மல்லிகையும் ரோஜாவும் கொண்டு அற்புத மாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மணமகன் சண்முகத் தேவர் அமர்ந்து அக்னியில் நெய் வார்த்துக் கொண்டே புரோகிதர் சொல்லும் மந்திரங்களைத் திருப்பிச் சொல்லிக் கொண் டிருந்தான்.

புரோகிதர் அமர்ந்து அவர் வாய் உயரத்திற்கு வைக்கப் பட்டிருந்த மைக்கில் மந்திரங்களைச் சொல்ல பந்தல் முழுக்க வைக்கப்பட்டிருக்கும் லவுடு ஸ்பீக்கர்களில் அவை மற்ற பேச்சுக் குரல்களை அமுக்கிவிட்டு ஒலித்துக் கொண் டிருந்தது.

ஒருபுறம் சிறிய மேடையமைத்து நாதஸ்வரம் குழுவினர் பிரமாதப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

புரோகிதர் தனது வாட்ச்சில் நேரம் பார்த்துக் கொண்டு, ''பெண்ணை கூட்டிட்டு வாங்கோ!'' என்றார்.

சில நிமிடங்களில் மஞ்சள் நிற பட்டுப் புடவையில் முழு அலங்காரத்துடன் குனிந்த தலை நிமிராமல் மெதுவாக நடந்து வந்து மணமகன் அருகில் அமர்ந்தாள் செல்வி. அவள் அருகில் வந்த திலகம் அவளின் பின்னலை சரி செய்தபடி குனிந்து அவள் காதருகில், ''முதல் வரிசையில் ஏழாவதா மாறு வேஷத்தில் உக்காந்திருக்குது பாலா தம்பி'' என்றாள்.

செல்வி இயற்கையாக நிமிர்ந்து பார்ப்பது போல முதல் வரிசையில் பார்வையை ஓட்டினாள். ஏழாவது நாற்காலியில் சில்க் ஜிப்பா. வேட்டியில் முகத்தில் தாடி, மீசை ஒட்டி அடையாளம் மாறி அமைதியாகக் கைகட்டி அமர்ந்திருந்தான் பாலா.

இருவரின் கண்களும் ஒரே ஒரு வினாடி சந்தித்து விலகின.

''பொண்ணுக்கு அப்பாவைக் கூப்பிடுங்க'' என்றார் புரோகிதர்.

பாண்டித் தேவர் மிடுக்குடன் நடந்து வந்து மணமேடை அருகில் தனது கூட் ஷூவைக் கழற்றிவிட்டு மேலே ஏறிவந்தார்.

தாலி கட்டுவதற்கு முன்பாக நடைபெறும் சில சடங்குகள் முடிந்த பிறகு ஆசீர்வாதம் செய்ய மஞ்சள் பூசிய அரிசி வரிசை வரிசையாக எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

பிறகு புரோகிதரே எழுந்து மாங்கல்யத்தை ஒரு தட்டில் வைத்து பெரியவர்களிடம் கொண்டு சென்று நீட்டி, அவர்கள் ஆசீர்வதித்த பிறகு மேடைக்குத் திரும்பினார்.

மாங்கல்யத்தைக் கையில் எடுத்து அதை மணமகன் கையில் கொடுத்து விட்டு, மந்திரங்களைச் சொல்லத் துவங்கிய போது... அட்சதைகளை வீச எல்லோரும் தயாராக இருந்தபோது...

''ஒரு நிமிஷம் இருங்க'' என்று சண்முகத் தேவரை நோக்கி உரக்க சொன்ன செல்வி சட்டென்று மணமேடையை விட்டு எழுந்து சற்று முன்னால் வந்து நிற்க...

எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்து போய் பார்த்தார்கள்.

''எல்லாருக்கும் வணக்கம். இவ்வளவு பெரிய சபையில ஒரு கல்யாணப் பொண்ணு அதிகப் பிரசங்கித்தனமா

நடந்துக்கிறதா தயவு செஞ்சி யாரும் நினைக்கக் கூடாது. கொஞ்ச பேருக்கு மட்டும் தெரிஞ்ச ஒரு உண்மை உங்க எல்லாருக்கும் தெரியட்டும்னுதான் நான் பேசறேன்''என்றாள் செல்வி கணீரென்று.

''செல்வி! என்ன இதெல்லாம்? பேசாமப் போய் உக்காரு!'' என்றார் பாண்டித் தேவர் கோபமாக.

அவர் தோளில் கை வைத்து அழுத்தினார் அழகுத் தேவர், ''கொஞ்சம் இருங்க சம்மந்தி. உங்கப் பொண்ணு என்னதான் சொல்ல வருதுன்னு முதல்ல தெரிஞ்சுக்கலாம். நீ சொல்லும்மா'' என்றார்.

''நானும், பாலான்னு ஒருத்தரும் மனசார நேசிச்சோம். இது எங்க அப்பாவுக்குப் பிடிக்கலை. அவர் பார்த்து முடிவு செஞ்சிருக்கிற இந்த கல்யாணத்தில எனக்குக் கொஞ்சம்கூட சம்மதமில்லை. இந்த கல்யாணத்துக்கு நீ சம்மதிக்கலைன்னா உன்னோட காதலனை கொலை செஞ்சிடுவேன்னு இரக்கமே இல்லாம எங்கப்பா என்னை மிரட்டினாரு. அதனாலதான் எனக்கு வேற வழியில்லாம ஒப்புக்கிட்டேன். எங்கப்பா ஊருக்கு பஞ்சாயத்து தலைவர். அவரே இப்படி என் விருப்பத்துக்கு எதிரா நடந்துகிட்டா நான் யார்கிட்டே முறையிட முடியும்? இப்போ இந்த கல்யாணத்துக்கு எல்லா ஊர்லேர்ந்தும் பெரியவங்க, நியாயம் தெரிஞ்சவங்க வந்திருக்கீங்க. நீங்க நியாயம் சொல்லுங்க. விருப்பம் இல்லாம ஒரு கல்யாணத்தை நான் செஞ்சுக்க முடியுமா? அப்படி மீறி செஞ்சுக்கிட்டாலும் என்னால முழு மனசோட குடித்தனம் பண்ண முடியுமா? இந்த ஊர்ல விருப்பத்துக்கு எதிரா கட்டாயமா ஒரு கல்யாணத்தை பஞ்சாயத்துல வச்சி பார்வதிங்கிற பொண்ணுக்கு எங்கப்பாவே பண்ணி வெச்சார். என்ன ஆச்சு? உறுத்தல் தாங்காம அவ தற்கொலை பண்ணிக் கிட்டா. நாளைக்கு எனக்கும் தற்கொலை பண்ணிக்கணும்னு அதே மனநிலை வரலாமில்லையா?''

திருமணத்திற்கு வந்திருந்த அத்தனை பேரும் வாய்மூடி அமைதியாய் இருந்தார்கள். பாண்டித் தேவரின் கண்கள் சிவந்து கொண்டிருந்தன. நெற்றியோர நரம்புகள் துடித்தன.

''இந்த நியாயம் எங்கப்பாவுக்கும் புரியும். நிச்சயமா அவரோட அடி மனசில தான் கட்டாயப்படுத்தறது தப்புன்னு தெரியும். ஆனா அவருக்கு சொந்த முகம் இல்லை. 'பாண்டித் தேவர் வாக்கு கொடுத்தா மாற மாட்டார்' அப்படின்னு ஊர்ல ஒரு மதிப்புள்ள முகத்தை உருவாக்கி வச்சிருக்கார். அந்த முகம் அவமானப்பட்டுடக் கூடாதுங்கறதுதான் அவருக்கு முக்கியம். அவருன்னு இல்லை... எல்லாருமே நம்ம சொந்த முகத்தை பதுக்கி வச்சிட்டு வேற ஒரு வாடகை முகத்தை பூசிக்கிறோம். ஆனா அந்த வேஷத்தைத் தொடர எனக்கு விருப்பமில்லை. 'அப்பா வார்த்தைக்குக் கட்டுப்பட்டவ' அப்படின்னு ஒரு பேர் வாங்கறதுக்காக என் வாழ்க்கையைக் குலைச்சுக்க நான் தயாரில்லை. இந்தச் சபையில இருக்கிற நீங்க எல்லாம் சம்மதிச்சா இதே மணமேடையில என் மனசுக்குப் பிடிச்சவருக்கு வாழ்க்கைப்பட நான் ஆசைப்படறேன்'' என்றவள், ''மேல வாங்க'' என்று அழைத்தாள்.

பாலா மேடை மேல் ஏறி தனது தாடி, மீசையை விலக்கி விட்டு எல்லோருக்கும் கைகுவித்து வணங்கினான்.

உறைந்து போய் நின்ற பாண்டித் தேவரின் தோளில் கை வைத்து அழகுத் தேவர், ''உங்க பொண்ணு சொல்றதுதான் நியாயம்னு எனக்குப் படுதுங்க. அவ ஆசைப்பட்டவனோடயே இந்த கல்யாணம் நடக்கட்டும். சின்னஞ்சிறுசுகளை நீங்க பெருந்தன்மையோட ஆசீர்வதிக்கணும். இன்னும் ஏன் உக்காந்திருக்கே எந்திரிப்பா'' என்றதும்...

சண்முகத் தேவர் மாலையைக் கழற்றி வைத்து விட்டு மணமேடையை விட்டு எழுந்து தன் அப்பாவிடம் அருகில் வந்து நின்றான்.

பாண்டித் தேவர் அசையாமல் நின்றார். தன் மகளையும், பாலாவையும் இமைக்காமல் பார்த்தார்.

''என் பொண்ணுக்கு தனக்கு இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னு சொல்லி எந்திரிக்கிறதுக்கு உரிமை இருக்குன்னா... அதே மாதிரி உரிமை எனக்கும் இருக்கு. நான் பார்த்த மாப்பிள்ளையை விட்டுட்டு அவ எவனையோ கல்யாணம் பண்ணிக்கிறதைப் பார்த்துக்கிட்டு நிக்கணுமின்னு எனக்கு அவசியமில்லை'' என்று கூறிவிட்டு விருட்டென்று மேடையை விட்டு இறங்கி தன் வீட்டுக்குள் நடக்கத் துவங்கினார்.

''நீ உக்காரும்மா'' என்றார் அழகுத் தேவர் கண்களில் நீர் திரையிட நின்ற செல்வியைப் பார்த்து. ''எல்லா கோபத்தையும் அப்புறம் சரிப்படுத்திக்கலாம். முதல்ல உக்காரும்மா, தம்பி தாலியை வாங்கி கட்டுங்க. முகூர்த்த நேரம் முடியப்போவுது.''

பாலா தாலி கட்ட, அட்சதைகள் வந்து விழுந்தன.

பாண்டித் தேவர் விறுவிறுவென்று தன் வீட்டுக்குள் நடந்தவர் தனது தனியறைக்கு வந்தார். அலமாரியைத் திறந்தார். சாவி போட்டு உள்ளே இருந்த மற்றொரு மரக் கதவைத் திறந்து... உள்ளே வைத்திருந்த உறை போட்ட ரிவால்வரை வெளியில் எடுத்தார்.

உறையைக் கழற்றி வீசிவிட்டு விறுவிறுவென்று நேராக கல்யாணப் பந்தலுக்கு ஒருவித ஆக்ரோஷத்துடன் விரைந்தார்.

ரிவால்வரை பின்புறம் மறைத்தபடி மணமேடையில் ஏறினார் தேவர்.

அழகுத் தேவரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கி விட்டு எழுந்த செல்வியும், பாலாவும் அவரைப் பார்த்தார்கள்.

''போம்மா. உங்கப்பா கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்க'' என்றார் அழகுதேவர்.

''ஆசீர்வாதம் பண்ண வரலை பாண்டித் தேவர் கொடுத்த வாக்கு என்னைக்கும் தப்பாதுன்னு இவளுக்கும், ஊருக்கும் நிரூபிக்கிறதுக்காக வந்தேன். இத்தனை பேர் முன்னாடி எப்போ என்னை நிக்க வச்சி அவமானப்படுத்தினாளோ... அப்பவே இவ என் மக இல்லைன்னு ஆய்டுச்சி. அப்புறம் இவளைப் பத்தி நான் எதுக்குக் கவலைப்படணும். சண்முகத் தேவரோட இந்த கல்யாணம் நடக்கலைன்னா பாலாவை தீர்த்துடுவேன்னு என் பொண்ணுக்கு ஒரு வாக்கு கொடுத்திருந்தேன். அதை நிறைவேத்த வேணாமா?''

பின்புறம் வைத்திருந்த ரிவால்வர் பிடித்த கையை முன்புறம் எடுத்து நிமிர்த்தி பாலாவை நோக்கி பாண்டித் தேவர் கூட...

செல்வி அருகில் தின்றிருந்த திலகம் சட்டென்று பாலாவைத் தள்ளிவிட்டுக் குறுக்கில் பாய்ந்துவிட... அவளது வயிற்றில் பாய்ந்தது தோட்டா.

ரத்தம் பீறிட சரிந்து விழுந்தாள் திலகம்.

அதிர்ந்து போய் நின்றார் பாண்டித் தேவர்.

திலகம் கண்கள் செருக, ''தேவரய்யா, இப்பவும் உங்க வாக்கு தவறிடுச்சிய்யா. நான் போனாப் பரவால்லை. உங்க வாக்கு போனா பரவால்லை. இந்த சின்னஞ்சிறுசுக வாழ்க்கையை எதுவும் குலைச்சிடாதீங்கய்யா'' என்று கூறி விட்டுச் சரிந்தாள்.

பாண்டித் தேவர் ரிவால்வரைக் கீழே போட்டுவிட்டுத் தலை குனிந்து நின்றார் அமைதியாக.

39626
5710213